வெளியீடு 18-01-2006 Issued 18-01-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, செப்டம்பர் 22, 2005—தொகுதி 84 — எண் 2

Thursday, the 22nd September 2005 —Volume 84 — No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V2.11,31'P05
P05.84.2
152493

[Price Rs. 3.00

560
21.2-06

[library stamp] ...0008

22-9-2005

## உள்ளடக்கம்

பக்கங்கள்


**1. வினாக்கள்—விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் — 5-61

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1, 2 மற்றும் 3) — 72-255

**2. தகவல் கோரல்—**

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் — 256

**3. சிறப்புக் கவன ஈர்ப்பு—**

வைகை அணையிலிருந்து குடிநீர் திறந்துவிடல் — 257-260

**4. அறிவிப்பு—**

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் — 260

**5. கவன ஈர்ப்பு—**

(அ) திருவண்ணாமலை—திருக்கோவிலூர் மற்றும் ஆரணி—விழுப்புரம் சாலைகளைப் புதுப்பித்தல் — 261-268

(ஆ) வியாசர்பாடி இரயில்வே கீழ்ப்பாலத்திற்கு மேல் ஒரு மேம்பாலம் கட்டுதல் — 269-271

**6. அறிக்கைகள் அளித்தல்—**

(அ) மனுக்கள் குழு — 271

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு — 272

| | பக்கங்கள் |
|---|---|
| **7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) மதராஸ் பல்கலைக்கழகம் (தனிவகை முறைகள்) சட்டமுன்வடிவு, 2005 | 272-273 |
| (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 | 273-274 |
| **8. அரசினர் தீர்மானம்—** | |
| பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தல் | 274-277 |
| **9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** | |
| (அ) மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2005 | 277-314 |
| மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | 278,281,287, 292,299,311, 314-316, |
| திரு. துரைமுருகன் | 278-289, 295-297,309, 310,312 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 283,285, 291,292, 300 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 280, 287, 288,289,294, 295,296, 300-302,308, 310 |
| திரு. வி.கே. லட்சுமணன் | 289,290 |





| | பக்கங்கள் |
|---|---|
| **9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** *தொடர்ச்சி* | |
| (அ) மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2005—தொடர்ச்சி | |
| திரு. ஜி.கே. மணி | 290,291,292, 293,295, 297,300, 301,303, 308,309,312 |
| *திரு. ஆற்காடு நா. வீராசாமி | 292,293,294 |
| *மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | 292,293,296, 302,305,306, 307,309 |
| திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 297-300,312 |
| திரு. என். நன்மாறன் | 304 |
| திரு. ஜி. பழனிசாமி | 304, 305, 306, 307, 308,313 |
| திரு. எச். ராஜா | 311 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 312 |
| திரு. கே.என். இலட்சுமணன் | 313 |
| (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 | 315-316 |
| மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | 315-316 |
| **10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 317-323 |


53-131—1a

D
V211,31' P05
P05.86 '2

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
186283

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## புரட்டாசி 6, பார்த்திப — திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 செப்டம்பர் 22, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது*
*தூக்கங் கடிந்து செயல்"*

மனக் குழப்பமின்றித் தெளிவாக முடிவு செய்யப்பட்ட ஒரு செயலைத் தளர்ச்சியும், தாமதமும் இடையே ஏற்படாமல் விரைந்து நிறைவேற்ற வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 1, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**1—**

### அணை கட்டுதல்

***24429—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, ஆர். கோம்பை கிராமத்தில் குடகனாறு செல்லும் வறட்டாற்றின் குறுக்கே அணைக்கட்டு நிறுவப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 22

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதியில் ஆர். கோம்பை முதல் குடகனாறு செல்லும் வறட்டாற்றின் குறுக்கே அணை கட்டுகிற திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டுத் திட்டம் ஆய்வில் உள்ளது என்பதை அறிவித்தமைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அணைக்கட்டுத் திட்டமானது அரசு நிதியிழப்பு இல்லாமல் ஏற்படுத்த பழைய தோப்பூர் என்ற இடத்தில் அரசு நிலமும், ஆர். புதுக்கோட்டை என்ற இடத்தில் அரசு நிலமும் கூடுதலாக இருக்கின்றது. அந்த இடத்தில் விரைவாக அணை கட்டி முடித்துக்கொடுத்தால் குஜிலியம்பாறை ஒன்றிய விவசாயப் பெருமக்கள் பெரிதும் பயன் அடைவார்கள் என்பதை மீண்டும் ஒரு முறை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதியில் ஆர். கோம்பை கிராமத்தில் வறட்டாற்றின் குறுக்கே கண்மாய் அமைக்கும் இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூபாய் 409 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின்மூலம் சுமார் 200 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும். கிட்டத்தட்ட இத்திட்டத்தைச் செயலாக்க 20.86 ஏக்கர் பட்டா புன்செய் நிலங்களையும், 11.95 ஏக்கர் புறம்போக்கு நிலங்களையும் கையகப்படுத்த வேண்டும். இந்நிலங்களைக் கையகப்படுத்த ரூபாய் 7.70 இலட்சம் தேவை என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது. இத்திட்டத்திற்கு ஒரு ஹெக்டேருக்கு ஆகும் செலவு ரூபாய் 3.80 இலட்சம் ஆகும். எனவே, இத்திட்டத்திற்கு நபார்டு வங்கியின் கடனுதவி பெற இயலாத நிலை தற்போது உள்ளது. நீர் வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்-2-ஐ மேற்கொள்ள உலக வங்கியிடமிருந்து நிதியுதவி பெறுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு உலக வங்கியில் நிதி கிடைக்கப்பெற்றவுடன் இத்திட்டத்தின்கீழ் வறட்டாற்றின் குறுக்கே புதிய கண்மாய் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2005 செப்டம்பர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ஆண்டிவேல்.

**திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம், இது குடகனாறு, குடமுருட்டி இல்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு திட்டம் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே வேறு புதிய அணைக்கட்டுகள் கட்டுவதற்கான முயற்சிகள் அரசினால் மேற்கொள்ளப்படவிருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்வி போடவும், வினா எண் 2, திருமதி எஸ். ராஜம்மாள், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

2—

## பக்கிள் ஓடைத் திட்டம்

***74295—திருமதி எஸ். ராஜம்மாள்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி தொகுதி, தூத்துக்குடியில் பக்கிள் ஓடை தூர் வாரும் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி நகராட்சி பொறுப்பில் உள்ள பக்கிள் ஓடை தூர் வாரும் திட்டத்தினை நிறைவேற்றிட விரிவான மதிப்பீடு தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[2005 செப்டம்பர் 22

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முதல் மாநிலமாக இருக்க வேண்டும் என்கின்ற நோக்கத்தில் தினமும் 20 மணி நேரம் தொடர்ந்து பணியாற்றும் எங்கள் இதயதெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்கி என்னுடைய கேள்வியைத் தொடர்கிறேன். தூத்துக்குடி நகரில் பக்கிள் ஓடைத் திட்டம் விரைவாக நிறைவேற்றப்படுவதன் மூலம் தூத்துக்குடி நகரில் கழிவுநீர்ப் பிரச்சினை அறவே நீக்கப்பட்டுவிடும். மேலும், பொதுமக்களுக்கு சுகாதாரக் கெடுதியை ஏற்படுத்தும் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுவிடும். பக்கிள் ஓடைக் கழிவு நீரைக் கடலில் கொண்டு சென்றால் மீன் வளர்ப்புப் பாதிக்காது என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். இந்த ஓடையின் ஒரு கரையைப் பலப்படுத்தி சாலைகள் அமைக்கப்பட வேண்டும். எனவே, பக்கிள் ஓடையைத் தூர் வாரி இரு கரைகளையும் பலப்படுத்தி அவற்றின்மீது சாலைகள் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைப் பற்றியும், இக்கழிவுநீரைக் கடலில் கொண்டு சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைப் பற்றியும் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கிள் ஓடையானது பொதுப் பணித் துறையின் கீழுள்ள எந்தப் பாசன அமைப்பின்கீழும் வரவில்லை. இந்த ஓடையானது மழைநீர் வடிகாலாகவும், கழிவுநீர் வடிகாலாகவும் செயல்பட்டு வருகின்றது. இந்த ஓடை சுமார் 4 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஓடுகின்றது. இந்த ஓடை ஆரம்பத்தில் 2 மீட்டர் அகலத்திற்கும், கடலில் கலக்கும் இடத்தில் 7 மீட்டர் அகலத்திற்கும் உள்ளது. ஆரம்பத்தில் இவ்வோடையின் ஆழம் சுமார் அரை மீட்டர் ஆகும். கடலில் கலக்குமிடத்தில் இந்த ஓடையின் ஆழம் சுமார் 3 மீட்டர் ஆகும். இவ்வோடையைத் தூர் வாருவதற்காக 2005–2006 ஆம் ஆண்டு விலைப் பட்டியலின்படி திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. 31–08–2005 ஆம் நாளன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், தூத்துக்குடி நகராட்சியின் பராமரிப்பிலுள்ள பக்கிள் ஓடை நீர்ப்பாசன ஆதார அடிப்படையில் வராததாலும், சாக்கடையாகச் செயல்படுவதாலும், தூத்துக்குடி நகராட்சி செய்யவிருக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின்கீழ் சேர்த்து பக்கிள் ஓடை தூர்வாரும் பணியினைச் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், நகராட்சி



2005 செப்டம்பர் 22]

ஆணையருக்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய காலத்தில் தூத்துக்குடியில் உள்ள பக்கிள் ஓடையில் மழைநீர் வெள்ளமாகப் பெருக்கெடுத்து கடலில் ஓடி கலந்தது. ஆனால், சமீபகாலமாக மழை குறைவாக இருப்பதன் காரணமாக பக்கிள் ஓடையில் நீரோட்டமில்லை. தொகுதி மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் இந்தத் திட்டத்தின் முக்கியத்துவம் கருதி, இந்த ஆண்டில் நிறைவேற்றப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டவுடன் இப்பணியை நகராட்சியிலிருந்து செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட அதே கேள்வியைச் சார்ந்துதான் நான் உங்களிடத்திலே கேட்கின்றேன். தூத்துக்குடி நகரம் மீன் உற்பத்தி செய்கின்ற ஒரு பெரிய நகரம். இந்த ஓடை நீர், நேரடியாகக் கடலிலேபோய் வடியாததனாலே இந்த நகரத்திலே மிகப் பெரிய வாடை உள்ளது. சுற்றுச்சூழல் மிகப்பெரிய அளவிற்கு மாசுப்பட்டிருக்கிறது. அந்த நகரத்திலே இருக்கின்ற மக்கள் அத்தனைப் பேர்களும் நீண்டகாலமாக வைத்துவரும் கோரிக்கை இந்தக் கோரிக்கை. இடையிலேகூட நாங்கள் குழுவிலேபோய் பார்த்தபோது, அந்த நகராட்சி மூலமாக எங்களால் செய்யமுடியாது; எங்களிடம் நிதி ஆதாரம் இல்லை. எனவே, ஒரு சிறப்புத் திட்டத்தின்கீழே இதைக் கொண்டுவரவேண்டுமென்று அந்த மாவட்ட ஆட்சித் தலைவரே அன்றைக்கு வலியுறுத்தினார்கள். அந்த நகராட்சி நிர்வாகமும் அதைச் சொல்லியிருக்கிறது. ஆகையால், ஒரு சிறப்புத் திட்டத்தின்கீழ் இதை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பாரா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2005 செப்டம்பர் 22

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின் முக்கியத்துவம் கருதி, இத்திட்டத்தை சிறப்புத் திட்டமாக எடுத்து செய்வதற்கு அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் ஓடக்கூடிய பக்கிள் ஓடை என்பது திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடி வரக்கூடிய பாதையின் ஆரம்பத்தில் தொடங்குகிறது. அந்த ஓடை கடலிலே கலக்கும் வரை நான்கு கிலோ மீட்டர் தூரம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் கூடுதலாக இருப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. மழை நீர் கடந்த காலத்தில் சென்ற அந்தக் கால்வாயில் இப்பொழுது கழிவுநீர்தான் முழுமையாகப் போய்க்கொண்டிருக்கக்கூடிய காரணத்தினால், சுகாதாரச் சீர்கேடுகள் என்பது அதிகமாக இருப்பதால், நகராட்சியின் சார்பாகச் செய்யக்கூடிய அந்தத் திட்டத்தை, மாநில அரசாங்கமே நேரடியாக அமலாக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தினுடைய முக்கியத்துவம் கருதி இதனை அரசு சிறப்பினமாகக் கருதி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, திரு. ப. நீலகண்டன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

**3—**

### கருவூலக் கட்டடம்

***31451—திரு. ப. நீலகண்டன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகரில் புதிய கருவூலக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 22]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆற்காடு சார்நிலைக் கருவூலம் வட்டாட்சியரின் அலுவலகக் கட்டடத்தின் ஒரு பகுதியில் தனித்துச் செயல்பட்டு வருகிறது. இக்கட்டடம் நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இருப்பினும் 1,80,000 ரூபாய் செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கட்டடம் நன்கு பாதுகாப்பான நிலையில் தற்போது உள்ளது. அதற்குத் தேவையான இடம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருக்கின்றது. ஆனாலும், அதைப் புதுப்பிக்க வேண்டிய மதிப்பீடு இன்னும் பெறப்படாத நிலையில் தற்போது உடனடியாக அங்கு புதிய சார்நிலைக் கருவூலம் கட்டக்கூடிய நடவடிக்கை அரசிடம் இல்லை.

**திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டடம் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னது என்பதாலும், அதனுடைய மேற்கூரை ஓடுகளால் வேயப்பட்டுள்ளதாலும், அந்த ஓடுகள் பழுதடைந்துள்ள நிலையிலுள்ளதாலும், அங்கு குரங்குகளெல்லாம் வருகின்ற காரணத்தினாலும் இப்பொழுது அந்த வட்டாட்சியர் அலுவலகத்தின் ஒரு பகுதியில் அமைந்துள்ள இந்தக் கருவூலத்தில் இருக்கின்ற பதிவேடுகள் பாதுகாப்பின்றி, மழைக் காலங்களிலே சேதம் அடையும் நிலையில் உள்ளதாலும், மாண்புமிகு அமைச்சர் இதைப் புதிதாகக் கட்டித் தருவாரா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். அது குறித்து விரைவில் ஆய்ந்து பொதுப் பணித் துறை மூலமாக மதிப்பீடு பெற்று நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல இடங்களில் கருவூலக் கட்டடங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்து வரும் அம்மா அவர்கள் ஆட்சியில் இந்த வாடகைக் கட்டடங்களுக்குப் பதிலாக நிரந்தரமாகக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

[2005 செப்டம்பர் 22

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரக் கட்டடங்கள் எல்லா இடத்திற்கும் கட்டித் தர வேண்டுமென்றால் கோடிக்கணக்கில் செலவாகும். வாடகையில் நாம் எடுப்பதென்றால் மிகக் குறைந்த செலவிலேயே அது ஈடேறிவிடும். வாடகைக் கட்டடங்களில் இருப்பதில் தவறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நிறைய பகுதிகளில் இந்தக் கருவூலங்கள் எல்லாம் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எனது திருவெறும்பூர் தொகுதியிலும் வாடகைக் கட்டடத்தில் இந்தக் கருவூலம் இயங்கி வருகிறது. அதனுடைய முக்கியத்துவம் கருதியும் பாதுகாப்பு கருதியும் திருவெறும்பூரில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான கட்டடமாக இருந்தால் வாடகைக் கட்டடத்திலும் பாதுகாப்பைத் தர முடியும். அது சிரமமல்ல. வீண் செலவு அதிகம் தேவையில்லை என்ற அடிப்படையில் வாடகைக் கட்டடங்கள் ஆங்காங்கே எடுக்கப்படுகின்றன. தரமான வாடகைக் கட்டடங்களில், நல்ல வசதிகளோடு சேர்ந்த வாடகைக் கட்டடங்களில் அரசினுடைய அலுவலகங்களை அமைப்பதில் எந்தவொரு தவறுமில்லை. அது சிக்கன நடவடிக்கையாகக்கூட கருதப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் குந்தா என்ற புதிய தாலுகாவை தமிழக அரசு ஆரம்பித்திருக்கிறது. அதற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதில் கருவூலம் இல்லை. நாங்கள் கேட்பதெல்லாம் ஒரு மணி நேரமாவது அங்கு ஒரு கருவூல அலுவலகத்தைத் திறந்து வைக்க வேண்டும். ஏனென்றால், மக்கள் 34 கிலோ மீட்டர் தூரமுள்ள ஊட்டிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது – தயவுசெய்து ஒரு மணி நேரமாவது அங்கேயுள்ள கருவூலத்திற்கு அதிகாரிகள் வந்தால், அங்குள்ள ஆறு பேரூராட்சி, ஊராட்சி மக்களுக்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கருவூலம் அமைத்துத் தருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்



2005 செப்டம்பர் 22]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதி, தொலைதூரம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை அரசால் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எஸ். சந்திரசேகரன்.

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர், கருவூலத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையினை இங்கே வைத்திருக்கின்றார்கள். இந்த ஆற்காடு தொகுதியில் அமைந்திருக்கின்ற அந்தக் கருவூலமானது மிகவும் பழமை வாய்ந்த ஒரு கட்டடமாக இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் அதற்குப் புதிய கட்டடங்களைக் கட்ட வேண்டிய ஒரு அவசர நிலைமையும், அவசிய நிலைமையும் உருவாகியிருக்கின்றது என்பதைத் தெரிவிக்கின்ற அதே வேளையில், என்னுடைய இராணிப்பேட்டை தொகுதியில் அமைந்திருக்கின்ற கருவூலமும், வட்டாட்சியர் அலுவலகமும் ஒன்றாக இணைந்து அந்தக் கட்டடங்கள் மிகவும் பழமை வாய்ந்த கட்டடங்களாக இருக்கின்றன. இவற்றிற்குச் சிறப்பு நிகழ்வாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** கட்டடம் நூறாண்டு காலம் பழமை வாய்ந்தது. அதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே, புதிய கட்டடம் வேண்டுமென்ற பரிந்துரையை கருவூலக் கணக்குச் சிறப்பு ஆணையர் அரசுக்குத் தந்திருக்கிறார். நான் ஏற்கெனவே கூறினேன். இதுகுறித்து பொதுப் பணித் துறை மதிப்பீடு செய்து, அது அரசுக்கு வந்தவுடன் அது குறித்து நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருவூலங்களில் வருமானம் அரசுக்கு வரக்கூடிய அந்தத் துறைக்குச் சரியான கட்டடங்கள் இல்லை. குறிப்பாக, கருவூலங்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். மக்கள் அதிக அளவிலே செல்லக்கூடிய, புழங்கக்கூடிய இடமாக இருக்கிறது. ஆகவே, அனைத்து மாவட்டங்களில்

இருக்கின்ற, தாலுகாக்களில் இருக்கின்ற அனைத்துக் கருவூலங்களுக்கும் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**4—**

## தொடுதிரை கணினி

***33477—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களுக்கும் "குறை தீர்ப்போம்" என்ற தொடுதிரை கணினி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சட்டமன்றத் தொகுதியான ஆண்டிப்பட்டியில் "குறை தீர்ப்போம்" தொடுதிரை சாதனம் அமைக்கும் திட்டம் ஏற்கெனவே வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதைப்போலவே மற்ற சட்டமன்றத் தொகுதிகளிலும் இத்திட்டத்தை விரிவுபடுத்த இணையதள வசதியுடன் கூடிய கணினி மற்றும் இதர சாதனங்கள் தேவை. இதுவரை 144 சட்டமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களுக்கு அவர்களின் ஒப்புதலுக்கிணங்க சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஊரக வளர்ச்சித் துறைமூலம் கணிப்பொறி வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கணினிகளை இணையதள மற்றும் சிறப்பு மென்பொருள் அதாவது Special Software கொண்டு மேம்பாடு அடையச் செய்து "குறை தீர்ப்போம்" திட்டத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள அரசு பரிசீலிக்கும்.





முற்பகல் 10-15

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 144 சட்டமன்றத் தொகுதிகளுக்கு மட்டும் கணினி பொருத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். மொத்தம் 234 தொகுதிகள். மீதித் தொகுதிகளுக்கும் உடனடியாக அரசின் நிதியிலே கணினி பொருத்த, அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மற்ற தொகுதிகளுக்கும் இதை அரசின் நிதியிலேயே பொருத்தவேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஊரக வளர்ச்சித் துறைமூலம் தெளிவாகவே அரசால் உத்தரவு போடப்பட்டு இருக்கின்றது. அதாவது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒவ்வொருவரும் கணினியைப் பெற்றுக்கொள்ளலாம் என்று. எனவே, சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்கள் விருப்பத்திற்கிணங்க 144 சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. இன்னும்கூட நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களில், கணினியைப் பெறாதவர்கள் விண்ணப்பித்து, அவர்கள் பெற்றுக்கொள்ளலாம். இணைய தள வசதி மற்றும் மென்பொருள் அவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்து, "குறை தீர்ப்போம்" திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசும் தயாராக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதிலும் இன்னொன்று, TNSWAN - Tamil Nadu State Wide Area Network - மாநிலம் முழுவதும், முழுமையான அளவிற்கு ஒரு network ஏற்படும்போது, தமிழ்நாட்டில் எந்த மூலைமுடுக்கிலும், இணைய தள வசதியைக் கொண்டு எல்லோராலும், எல்லாத் துறைகளிலும் நேரடியாகத் தொடர்புகொள்ளக்கூடிய ஒரு வசதியை விரைவிலேயே செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்பாடு செய்து வருகின்றார்கள். முதற்கட்டமாக அதற்குரிய ஆய்வுப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல, ஆயிரம் கணினிகள் பஞ்சாயத்துகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்றன. Connect 2005 நிகழ்ச்சியிலே மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிப்புச் செய்திருக்கின்றார்கள். விரைவிலேயே 12,000 பஞ்சாயத்துகளுக்கு கணினிகள் வழங்கப்பட இருக்கின்றன. கணினிகள் வழங்கப்படும்போது, இந்த மென்பொருளைக் கொண்டு—ஸ்பெஷல் மென்பொருள், Special Software—இணைக்கும்போது, ஒவ்வொரு பஞ்சாயத்திலும்

அங்கிருக்கின்ற பொதுமக்கள்கூட, சுய உதவிக் குழுக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு தங்களுடைய குறைகளைத் தெரிவித்து அவர்கள் தீர்வு பெறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் இந்தக் "குறை தீர்ப்போம்" கணினி கொடுக்கப்படும் என்று அமைச்சர் அறிவித்தார்கள். சேலம் மாவட்டத்திலே இதுவரை 12 ஒன்றியங்களுக்கு அரசு வழங்கவில்லை என்பது தெரியுமா? அதேபோல, எடப்பாடி ஒன்றியம், கொங்கணாபுரம் ஒன்றியம், மகுடஞ்சாவடி ஒன்றியம் ஆகிய இடங்களில் என்னுடைய தொகுதியிலே இது வழங்கப்படவில்லை. உடனடியாக அரசு வழங்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பதிலைத் தவறாகப் புரிந்துகொண்டார்கள். ஏற்கெனவே ஆயிரம் பஞ்சாயத்துகளுக்கு அதாவது கிராமப் பஞ்சாயத்துகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் 12,000 பஞ்சாயத்துகளுக்குக் கணினிகள் வழங்கப்பட இருக்கின்றன. எனவே, 12,000 பஞ்சாயத்துகளுக்குக் கணினி வழங்கப்பட்டு, இதற்கு Special Software, மென்பொருள் கொடுக்கப்படும்போது நிச்சயமாக எல்லாப் பஞ்சாயத்துகளும் இந்த வசதியைப் பெறும். அப்போது நம்முடைய சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியில் உள்ள அனைத்துப் பஞ்சாயத்துகளுக்கும் கணினிகள் நிச்சயமாக வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நான் சொன்னதைப் புரிந்துகொள்ளவில்லை. என்னுடைய தொகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களிலும், அதேபோல சேலம் மாவட்டத்தில், இன்னும் 12 ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படவில்லை. 8 ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டும்தான் வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஆகையால், உடனடியாக என்னுடைய மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வழங்கப்படவேண்டும். குறிப்பாக, எடப்பாடி தொகுதியில்



இருக்கக்கூடிய எடப்பாடி ஒன்றியம், கொங்கணாபுரம் ஒன்றியம் மற்றும் மகுடஞ்சாவடி ஒன்றியத்திற்கு உடனடியாக வழங்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுதியாகச் சொல்கிறேன். Connect 2005 என்கிற நிகழ்ச்சி சமீபத்திலே சென்னையிலே நடைபெற்றது. Chennai Trade Centre-ல் நடைபெற்றது. ஆயிரம் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்றன. 12,000 கிராமப் பஞ்சாயத்துகளுக்கு இன்னும் வழங்கப்படவேண்டும். 12,000 கிராமப் பஞ்சாயத்துகளுக்குக் கணினி மற்றும் மென்பொருள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, அவற்றை வழங்கும்போது உங்களுடைய தொகுதிக்குட்பட்ட அத்தனை கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் கணினியும், கணினி சார்ந்த மென்பொருளும் நிச்சயமாகக் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இப்போது பஞ்சாயத்துகளுக்கு எல்லாம் கணினி வழங்கப்பட்டு இருக்கக்கூடிய நிலை பற்றி தெளிவாகக் குறிப்பிட்டார்கள். கணினி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தக் கணினியைப் பெற்று "குறை தீர்ப்போம்" என்கிற அந்த நியதியின் அடிப்படையிலே வந்திருக்கின்ற மனுக்கள், எவ்வளவு வந்திருக்கின்றன? எவ்வளவு குறைகள் இப்போது தீர்க்கப்பட்டிருக்கின்றன? துறை வாரியாக அப்படிப்பட்ட மனுக்களைப் பெறுவதற்கும், பதில் தந்தமைக்கும் ஏதாவது ஒரு மதிப்பீடு அமைச்சரிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவான விவரங்களைக் கேட்டிருக்கிறார்கள். ஒரு முன்னோடித் திட்டமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய தொகுதியிலே இது செயல்படுத்தப்பட்டது. இது வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டதன் காரணமாகத்தான் இந்தச் சூழ்நிலையை எல்லா தொகுதிகளிலும் விரிவுபடுத்த வேண்டும் என்கின்ற கருத்தின் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக, தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒவ்வொருவரும் கணினியைப்

[2005 செப்டம்பர் 22

பெற்றுக்கொள்ளலாம் என்கிற அடிப்படையிலே உத்தரவு வழங்கப்பட்டு, 144 சட்டமன்ற உறுப்பினர்கள் பெற்றார்கள். இப்போது இருக்கின்ற வசதியைக் கொண்டு நிச்சயமாகப் பொதுமக்களின் குறைகளை அந்தக் கணினியிலே சொல்ல முடியுமா என்றால் முடியாது. எனவே, அதற்கு ஒரு special software, ஒரு விசேஷமான மென்பொருள் நம்முடைய ELCOT மூலம் உருவாக்கப்பட இருக்கிறது. உருவாக்கப்பட்டு, அந்த 144 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்படவிருக்கிறது. எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய அலுவலகத்திலே வைத்துக்கொண்டு தங்களுடைய தொகுதி மக்கள் அந்தக் கணினியிலே தங்களுடைய குறைபாடுகளை நிச்சயமாக பதிவு செய்து அதற்குரிய எண்களை அவர்களுக்குக் கொடுத்து, பொதுப் பிரச்சினைகள் குறித்து அவர்கள் அறிந்துகொண்டு, நிச்சயமாக தொடர் நடவடிக்கையை அதன்மூலம் எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**5—**

## துணை நீதிமன்றம்

***43011—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டையில் துணை நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கந்தர்வக்கோட்டையிலே துணை நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலே கந்தர்வக்கோட்டை பகுதி



2005 செப்டம்பர் 22]

என்பது தாலுகாவினுடைய தலைமையிடமாகவும், ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைமையிடமாகவும், காவல் நிலையத்தினுடைய தலைமையிடமாகவும் செயல்பட்டு வருகின்றது. நிறைய வழக்குகள் இருக்கின்றன. மக்கள் தொகையும் மிக அதிகமாக இருக்கின்றது. தங்கள் வழக்குகளைத் தீர்த்துக்கொள்வதற்காக அவர்கள் மாவட்டத் தலைமையிடமான புதுக்கோட்டைக்கு வரவேண்டிய ஒரு சூழல் உள்ளது. ஆகையினாலே, அங்கே இருக்கக்கூடிய மக்களுடைய வசதிக்காக, வழக்குகளை விரைவில் தீர்ப்பதற்காக, நிர்வாக வசதிக்காக இனி வருங்காலங்களில் முன்னுரிமை அளித்து கந்தர்வக்கோட்டையிலே குற்றவியல் நீதிமன்றம் அல்லது உரிமையியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை ஏற்று வருங்காலத்தில் வழக்குகளுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப நீதிமன்றம் அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போதுள்ள நிலவரப்படி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், புதுக்கோட்டையில் 46 வழக்குகள், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், புதுக்கோட்டையில் 25 வழக்குகள் மட்டும் கந்தர்வக்கோட்டை பகுதியைச் சார்ந்த வழக்குகளாக இருப்பதால், போதுமான வழக்குகள் இல்லை. எனவே, நீதிமன்றம் அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சிவபெருமாள்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கடந்த ஆட்சிக் காலத்திலே கலவரப் பகுதியாக மாறி அங்குள்ள இளைஞர்கள்மீது அதிகமான வழக்குகள் தொடுக்கப்பட்டு, இரு தரப்பின் மீதும் வழக்குகள் தொடுக்கப்பட்டு, அவர்களுடைய அந்த வழக்குகள் இன்றும் முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது. அவர்கள் அந்த வழக்கு வாய்தாக்களுக்குச் செல்ல வேண்டுமானால் 30, 40 கிலோ மீட்டர் தூரம் உள்ள கோவில்பட்டிக்கு அல்லது விளாத்திகுளத்துக்கு அல்லது தூத்துக்குடிக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள வறட்சியின் காரணமாக அவர்கள் தாங்கள் சம்பாதிக்கின்ற பணம் அனைத்தையும் அந்த வழக்குகளுக்கே செலவு செய்யக்கூடிய நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

[2005 செப்டம்பர் 22

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதியிலே ஒரு துணை நீதிமன்றம் அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் என்பது மிக மிக முக்கியமானது. அந்த ஊரிலே அமைக்கப்படலாம். ஆனால், வழக்குக்காக 35 கிலோ மீட்டர் செல்வது என்பது ஒரு பெரிய விஷயம் அல்ல. அதுவும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, ஒரு Group-க்காக ஒரு நீதிமன்றம் அந்த ஊரிலே அமைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லவே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

முற்பகல் 10-25

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தாலுகாவினுடைய தலைநகரம். அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் ஏறக்குறைய 40 கிலோ மீட்டர் தூரம் உள்ள பட்டுக்கோட்டை பகுதிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை மாவட்டத்தினுடைய மாவட்ட நீதிபதி அவர்கள் பேராவூரணிக்கு வருகை தந்து அங்கே நீதிமன்றம் தொடங்குவதற்கான கட்டடங்களைக்கூட தேர்வு செய்தார்கள். ஆனால், அங்கே இதுவரை நீதிமன்றம் தொடங்கவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே அங்கே நீதிமன்றம் தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதில் எவ்வளவு வழக்குகள் உள்ளன என்ற விவரம் தற்போதைக்கு இல்லை. எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்து, அந்த வழக்குகளினுடைய தன்மை கருதி எதிர்காலத்திலே உண்மையாக வழக்குகள் அதிகமாக வாய்ப்பு இருக்குமானால் நம்முடைய உயர் நீதிமன்றம் நிர்ணயிக்கின்றபட்சத்தில் நிச்சயமாக அரசு இதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2005 செப்டம்பர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் என்பது தாலுகா தலைநகரம். ஆனால், அந்தத் தொகுதியிலே இருக்கின்ற மக்கள் காஞ்சிபுரம் நீதிமன்றத்திற்கும், திருவள்ளூர் நீதிமன்றத்திற்கும், பூந்தமல்லி நீதிமன்றத்திற்கும் என்று மூன்று நீதிமன்றங்களுக்கும் அலைக்கழிக்கப்படுகிறார்கள். ஆகவே, தாலுகா தலைநகரமாக இருக்கின்ற ஸ்ரீபெரும்புதூரில் அரசு ஒரு துணை நீதிமன்றம் அல்லது தாலுகா நீதிமன்றம் அமைக்க முன்வருமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த வினாவை எழுப்பியபோது விவரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதிலே என்ன ஒரு பிரச்சினை என்றால் வழக்குகள் அதிகமான அளவுக்கு ஸ்ரீபெரும்புதூரில் இல்லாததுதான். எனவே, வழக்குகள் அதிகமாக இருந்தால் நிச்சயமாக ஸ்ரீபெரும்புதூரிலே நீதிமன்றம் ஆரம்பிப்பது என்பது ஒரு பெரிய விஷயம் அல்ல. எனவே, அதை இன்னும்கூட தீவிரமாகப் பரிசீலித்து அந்த இடத்திலே அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா என்பது குறித்து அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தமிழகத்திலே எத்தனை துணை அல்லது சார்பு நீதிமன்றங்கள் அமைக்கின்ற திட்டம் அரசிடத்திலே இருக்கிறது. அப்படி திட்டம் இருந்தால், எனது உசிலம்பட்டி தொகுதியில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று உயர் நீதிமன்றத்திற்குப் பரிந்துரை சென்றிருக்கிறது. அது இந்த ஆண்டு நடைபெறுமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, constitution of new Courts and construction of new buildings இந்த இரண்டுமே முக்கியம் என்பதைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒவ்வோராண்டும் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றார்கள். ஏற்கெனவே நீதித் துறைக்குக் கட்டடங்கள் ஆண்டாண்டு காலமாகக் கட்டப்படாமல் இருந்ததொரு நிலையில் 100 கோடி ரூபாய்க்கு மேலே கட்டடங்கள் கட்டி ஒரு புதிய

[2005 செப்டம்பர் 22

வரலாற்றையே நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, கட்டடங்களை ஒரு பக்கம் நாம் கட்டிக்கொண்டிருக்கின்ற வேளையில் புதிய கோர்ட்டுகள் constitute செய்யப்பட வேண்டும்; அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளும் வந்துகொண்டிருக்கின்றன. எனவே, கோரிக்கைகள் வரும்போது அதிலே எந்த அளவிற்கு வழக்காடுபவர்கள் அந்த வழக்குக்காக எவ்வளவு தூரம் செல்கின்றார்கள், அந்த இடத்திலே எவ்வளவு வழக்குகள் institute செய்யப்படுகின்றன என்பதையெல்லாம் கணக்கில்கொண்டுதான் ஒவ்வோர் இடத்திலும் நீதிமன்றம் ஆரம்பிக்கப்படுகின்றது. இந்த வருடம் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் செஞ்சியிலே ஒரு துணை நீதிமன்றம் – சப்–கோர்ட் அமைப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதேபோன்று திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தொகுதியிலே ஒரு Chief Judicial Magistrate Court மற்றும் District Munsif Court அமைப்பதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதேபோன்று, திருவள்ளூர் மாவட்டத்தில் ஒரு மாவட்ட நீதிமன்றம் அமைப்பதற்கும் உத்தரவிட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, இந்த ஆண்டு புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உத்தரவிடப்பட்டிருக்கின்றது. எனவே, வருகின்ற 2006–2007 ஆம் நிதியாண்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே விரைவு நீதிமன்றங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற காரணத்தினால் வழக்கு விசாரணைகள் விரைவாக நடைபெறுகின்றன. தீர்ப்புகளும் விரைவாக வழங்கப்படுகின்றன. ஆனால், அதே வேகத்திலே, அதே விரைவாக மக்களுக்குத் தீர்ப்பின் நகல்கள் மட்டும் கிடைக்கப்பெறுவதில்லை. தீர்ப்பின் நகல்களுக்காக Copy application போட்டுவிட்டு மாதக் கணக்கிலே, வருடக் கணக்கிலே காத்திருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. காரணம், போதுமான அளவு தட்டச்சர்களும், stenographer-களும் இல்லை. அதேபோன்று, summon stage–லே... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.



2005 செப்டம்பர் 22]

வினா எண் 6, திரு. ப. அரசன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**6—**

**கடனுதவி**

***60766—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகளிர்க்கு கூட்டுறவு வங்கிகள்மூலம் கூடை முடைதல், பாய் முடைதல் போன்ற சிறு தொழில்கள் தொடங்க மானியத்துடன்கூடிய கடன் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடை முடைதல், பாய் உற்பத்தி செய்தல் போன்ற சிறு தொழில் தொடங்க மானியத்துடன்கூடிய கடன் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தில் இதுபோன்று எவ்வளவு கடன் வழங்கப்பட்டுள்ளது என்கிற விவரம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே இருக்கிறதா? அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004–2005 ஆம் ஆண்டில் 180 குழுக்கள் மற்றும் நபர்களுக்கு 216 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது என்கின்ற தகவலைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன். (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது கூட்டுறவு வங்கிகள் மூலம் கூடை முடைதல் போன்ற பணிகளுக்கு, மகளிருக்குக் கடன்

[2005 செப்டம்பர் 22

வழங்குவதாகக் குறிப்பிட்டார்கள். சுய உதவிக் குழுக்கள், நிறைய பகுதிகளிலே, இப்போது எல்லா மாவட்டங்களிலும் அதிகமான மகளிர்கள் அதிலே உறுப்பினர்களாகி, அவர்கள் இந்தக் கடனைக் கேட்டுக்கேட்டு, இப்போது தேசிய வங்கிகளுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். தேசிய வங்கிகள் அந்தப் பங்கைச் செய்துகொண்டிருக்கின்றன. அதேபோல, கூட்டுறவு வங்கிகளும் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குகிற திட்டத்தை நிறைவேற்றுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகள்தான் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடன்களை வழங்குவதிலே முன்னுரிமை எடுத்து, கூடுதலான அளவிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்கின்ற தகவலைச் சொல்லி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுடைய பங்கு மிகக் குறைவாக உள்ளது என்பதையும் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய உடமையாக்கப்பட்ட வங்கிகளைவிட கூட்டுறவு வங்கிகள் மூலமாகத்தான் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதிகமாக கடனுதவி கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், கூட்டுறவு வங்கிகளைவிட தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகத்தான் அதிகமாகக் கொடுப்பதாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே கிடைக்கின்ற சில குறிப்புகள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. ஆனாலும், கூட்டுறவு வங்கிகள் மூலமாக சுய உதவிக் குழுக்களுக்குக் கொடுக்கிற இந்தக் கடனில், மானியத் தொகை, மாநில அரசு எந்த விகிதாச்சாரத்தில் கொடுக்கிறது, மத்திய அரசாங்கம் எந்த விகிதாச்சாரத்தில் கொடுக்கிறது? அதேநேரத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் கொடுக்கின்ற அத்தனை மனுக்களுக்கும் கூட்டுறவு வங்கிகளிலே கடன் கொடுக்கப்படுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட திட்ட அலுவலர்கள் மூலமாகவும், TAHDCO அலுவலர்கள் மூலமாகவும் பரிந்துரை செய்யப்படுகின்ற கடன்கள் அனைத்திற்கும் எவ்வளவு சதவிகிதத்திற்கு கூட்டுறவு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்படுகிறதோ, அத்தனை சதவிகித அளவிற்கு கூட்டுறவு வங்கிகள் கடனை வழங்குகின்றன.



2005 செப்டம்பர் 22]

கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படுகின்ற கடன்களுக்கு மாநில அரசின்மூலம் சுழல் நிதி வழங்கும்போது, 10 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது என்கின்ற தகவலைச் சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, உட்காருங்கள். திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர் போன்ற பகுதிகளில் மூங்கில்கள் அதிகமாக இருக்கின்றன. அதன்மூலமாக காகித ஆலைகளையெல்லாம் அமைக்கலாம். மேலும், இங்கு உலகப் பிரசித்திபெற்ற மூலிகைகளெல்லாம் கிடைக்கின்றன. இதன்மூலம் வாசனைத் திரவியங்களையும், செண்ட் போன்றவற்றையும் உற்பத்திச் செய்யலாம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்பதெல்லாம், இந்த சுய உதவிக் குழுக்களுக்கு இன்னும் அதிகமான அளவிலே கடன்கள் தேவைப்படுகின்றன. இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக இந்தச் சிறு தொழில்களைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைக்க வேண்டும் என்பதற்காக, முதன்முதலில் இந்தியாவிலேயே திட்டம் வகுத்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தமிழகத்திலே, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், சிறப்பான முறையில் பேணிக் காத்து வருபவரும் தமிழக முதல்வர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் தமிழகத்தில், இலட்சக்கணக்கான மகளிர் சுய உதவிக் குழுக்கள், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய சிறப்பான வழிகாட்டுதலின்பேரில், இன்றைக்கு உருவெடுத்து, சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டு வருகிற நிலையில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக (மேசையைத் தட்டும் ஒலி)

[2005 செப்டம்பர் 22

எவையெவை நிறைவேற்றப்பட வேண்டுமோ—மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக நீங்கள் வருத்தப்படுவது என்பதுதான் எங்களுக்கு வேதனையாக இருக்கிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கியவர் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக முதன்முதலில் வங்கிகளில் கணக்குகள் தொடங்கப்பட வேண்டும் என்பதற்காகவும், தொடங்குவதற்கான உதவிகளைச் செய்தவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் என்கின்ற பதிலைச் சொல்லி அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம். (குறுக்கீடு)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த... (குறுக்கீடு)

**திரு. எ.வ. வேலு:** எந்த வருடம் தொடங்கப்பட்டது என்பதைச் சொல்லுங்கள். எவ்வளவு விகிதாச்சாரம் என்பதைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள், கேள்வி நேரத்தில் தங்களுடைய அனுமதி இல்லாமல் தானாக எழுந்து கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த முறையை நீங்கள்...

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம். (குறுக்கீடுகள்) உங்கள் கேள்விக்குப் பதில் சொல்லியாகிவிட்டது, உட்காருங்கள் வேலு.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கடன் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அது சிறந்த முறையிலே நடந்து வருகிறது. அந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் என்னென்ன குடிசைத் தொழில்கள் நடத்துவதற்கு இந்தக் கடன்கள் வழங்கப்படுகின்றன? என்னென்ன தொழில்கள் செய்வதற்கு இந்தக் கடன்கள் வழங்கப்படுகின்றன; உச்சபட்சமாக ஒரு குழுவிற்கு எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



2005 செப்டம்பர் 22]

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் சுயமாக கேன்டீன் நடத்துவது, ரொட்டி தயாரித்தல் மற்றும் பல்வேறு கிராமப்புறத் தொழில்கள், கூடை முடைதல் மற்றும் பல்வேறு சிறு தொழில்கள் செய்வதற்காக மானியம் வழங்கப்படுகிறது. கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமும் மற்றும் TAHDCO திட்டத்தின் மூலமும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பெண்களுக்கும், ஆதிதிராவிடப் பெண்கள் குழுவில் அங்கம் வகிப்பவர்களுக்கும், சேமிப்பைப் போன்று 1 மடங்கு முதல் 4 மடங்கு வரை கடன் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், ஒரு குழுவிற்கு தமிழக அரசு மானியமாக ரூபாய் 10,000 வழங்குகிறது. குழு பெறும் மொத்தக் கடனில் மானியம் ரூ.10,000—த்திற்கு வட்டி வசூல் செய்வதில்லை. இக்கடன் காசுக் கடன் என்பதால், சுழற்சி முறையில் குழு விரும்பும்போது, ஆண்டு முழுவதும் தொகையைத் திரும்பச் செலுத்தவும் மீண்டும் பெறவும் முடியும். வட்டி விகிதம் 9.5 சதவிகிதம் என்ற தகவலைச் சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் 1989 ஆம் ஆண்டு எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது தொடங்கப்பட்டது என்பதையும், இன்றைக்கு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மத்திய அரசாங்கத்தின் மூலமாகத்தான் நேரடியாக நிதிகள் கொடுக்கப்படுவதும், மாநில அரசாங்கம் அதை நிறைவேற்றுகின்ற நிலையிலேதான் இருக்கின்றது என்பதையும் இங்கே நான் சொல்லி, மேற்கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு என்ன தொழில்கள் செய்வதற்கு வழிகள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன். ஞ

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு கூடாது.

**திரு. இ. புகழேந்தி:** குற்றச்சாட்டு அல்ல, விளக்கம். This is only clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள். கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்வார்.

**திரு. இ. புகழேந்தி:** மேலும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இப்படிப்பட்ட சிறு தொழில்கள் தொடங்குவதற்கான வாய்ப்பு

[2005 செப்டம்பர் 22

நிலைகளை இந்த அரசு எவ்விதம் உருவாக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் தாமாக என்னென்ன தொழில்களைச் செய்வதற்கு முன் வருகிறார்களோ அத்தனைத் தொழில்களுக்கும் தமிழக அரசு, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய சிறந்த வழிகாட்டுதலில், கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கடனைப் பெற்றுக் கொடுப்பதற்கு தயார் நிலைமையில் இருக்கிறது என்கிற தகவலைச் சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மாநில சர்க்கார், மாவட்டத்திலே P.O. மூலமும், TAHDCO மூலமாகவும் ஒரு விழுக்காட்டை loan-ஆக வழங்கி, மானியம் வழங்குகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல்வேறு கருத்துகள் இன்று இதன்மீது ஏற்பட்டபோது, எந்த ஆண்டு சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன இந்தியாவில் என்ற கேள்விக்கு இதுவரையில் அமைச்சர் பதில் சொல்லவில்லை. மறைந்த தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் 1988 ஆம் ஆண்டு இந்தியாவிலே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்திலே இது போன்ற விவாதங்களை அனுமதிக்க முடியாது.

வினா எண் 7, திரு. கோவை தங்கம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. போளூர் வரதன்:** சார், கேள்வியைக் கேட்க விடுங்கள் சார். கேள்வியைக் கேட்க விடுங்களேன். இதிலே என்ன இப்போது பிரச்சினை?

**7—**

## நவீன சுகாதார வளாகம்

***45664—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 22]

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலை திருக்கோயிலுக்கு நவீன முறையில் சுகாதார வளாகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், மருதமலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலில் தற்போது ரூ.108 இலட்சம் செலவில் இராஜகோபுரம் மற்றும் வணிக வளாகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவுற்ற பின் திருக்கோயிலின் தோற்றத்தன்மை மாறிவிடும். அதன் பின்னர் தோற்றத்திற்கு ஏற்றார்போல் குளியலறை மற்றும் கழிவறை கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களின் தொகுதி தொண்டாமுத்தூர் தொகுதி. இந்தத் தொகுதியில் அருள்மிகு மருதமலை திருக்கோயில் அமைந்துள்ளது. அருள்மிகு மருதமலை திருக்கோயில் மிகவும் பிரசித்திப்பெற்ற திருக்கோயிலாகும். விசேஷ காலங்களில் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்லுகின்ற பகுதி. அப்பொழுது பொதுமக்களுக்குக் கழிப்பிட வசதி இல்லாததால், பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் அடிவாரத்திலே சமுதாயக் கூடம், குடிநீர்த் தொட்டி கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள். ஆனால், மேற்பகுதியிலே கட்டுவதற்கு விதி இல்லை என்பதால், அரசே பொறுப்பேற்று நவீன சுகாதார வளாகம் கட்டுவதற்கு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களும், திரு. எஸ்.ஆர்.பி.–யும் சேர்ந்தே கட்டியிருக்கலாம். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு முடி காணிக்கை செலுத்துமிடத்திற்குப் பின்புறமாக ஆண்களுக்கு 8 கழிவறைகளும், பெண்களுக்கு

8 கழிவறைகளும் மற்றும் 2 குளியல் அறைகளும் தற்சமயம் உள்ளன. இக்கழிவறைகளும், குளியலறைகளும் மகளிர் சுய உதவிக் குழுவினரால் இன்றைக்கு சேவை பக்தர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. கழிவறை வசதிகளை மேம்படுத்தவும் அவற்றைச் சீரமைக்கவும் 4 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிதாகக் கழிவறைகள் கட்டுவதற்கும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வால்பாறை சட்டமன்றத் தொகுதி, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஏழையெளிய கூலித் தொழிலாளர்கள் மிகுந்திருக்கின்ற தொகுதி. வால்பாறையிலேயே அருள்மிகு சுப்பிரமணிய திருக்கோயில், வால்பாறை முடீஸ் அருள்மிகு சுப்பிரமணிய திருக்கோயில், சேத்துமடை அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் திருக்கோயில், வேட்டைக்காரன்புதூர் அளுக்குச் சாமியார் திருக்கோயில் போன்ற கோயில்களிலும் கழிப்பிட வசதி செய்துதர வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், இதற்கெல்லாம் தனிக் கேள்வி போட வேண்டும். திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே இருக்கின்ற மருதமலை ஆண்டவர் திருக்கோயிலைப் போல அதற்கு அருகிலே இருக்கின்ற வெள்ளியங்கிரி ஆண்டவர் கோயில், பேரூர் பட்டீஸ்வரர் ஆலயம் போன்ற கோயில்கள் எல்லாம் வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்களாகும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாவற்றுக்கும் தனிக் கேள்வி போடுங்கள். வினா எண் 8, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**8—**

### சத்துணவுக் கூடங்கள்

***19157—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





ஆர்.கே. நகர் தொகுதி, 5-வது வட்டத்தில் உள்ள 10 சத்துணவுக் கூடங்களின் மேற்கூரை, சுற்றுச் சுவர் ஆகியவற்றைப் பழுது பார்த்து, தேவையான சமையல் பாத்திரங்களை வாங்கித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.கே. நகர் தொகுதி, 5-வது வட்டத்தில் உள்ள 12 சத்துணவு மையங்களில், மைய எண் 1, 2, 26, 27, 29 மற்றும் 30 ஆகிய ஆறு மையங்கள் 2003-2004 மற்றும் 2004-2005 நிதியாண்டுகளில் பழுது பார்க்கப்பட்டு நல்ல நிலையிலும், மீதமுள்ள 6 மையங்கள், மைய எண் 25, 31, 32, 33, 34 மற்றும் 35 ஆகியவை 2004-2005 ஆம் நிதியாண்டில் பழுது பார்க்கப்பட்டு நல்ல நிலையிலும் செயல்பட்டு வருகின்றன. மேலும், பள்ளி சத்துணவு மையங்களுக்கு சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்களுக்குத் தேவையான பாத்திரங்கள் வழங்கப்படவும் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி அனுமதிக்கப்பட்ட நாள் 2002 ஆம் ஆண்டு. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் ரூபாய் 4 கோடி செலவில் சத்துணவுக் கூடங்கள் மற்றும் அங்கன்வாடிகளுக்குத் தேவையான பாத்திரங்களை வழங்கி இருப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதே நேரத்தில் சத்துணவுக் கூடங்களில் பழுதுபார்க்கும் பணிகளுக்கு மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சிப் பகுதிகளுக்கு நடப்பு ஆண்டில் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாநகராட்சிகளில் உள்ள ஒவ்வொரு மையத்திலும் அரசு சார்பாக பழுது பார்க்கும் பணி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தற்போது, இந்த ஆண்டும் பல்வேறு மையங்கள் பழுது பார்க்கும் பணியினை மேற்கொண்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் பள்ளிகளில் அமைந்துள்ள சத்துணவு மையங்களில் ஏற்கெனவே சமைப்பதற்குப் புதிய அலுமினிய பாத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றது என்று கூறியிருந்தேன். ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசின் சார்பாக 50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகின்றது. இந்தத் தொகை

[2005 செப்டம்பர் 22

மூன்று துறைத் தலைவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர், உலக வங்கி உதவிபெறும் குழந்தைகள் வளர்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆகியவர்களிடம் பிரித்துக் கொடுக்கப்பட்டு, 2002–2003 ஆம் ஆண்டு ரூபாய் ஒரு கோடியும், 2003–2004 மற்றும் 2004–2005 ஆம் ஆண்டில் ஆண்டு ஒன்றுக்கு 50 இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம் அரசு 2 கோடி ரூபாய் வழங்கியுள்ளது என்பதனையும், நடப்பு ஆண்டில் 2005–2006 ஆம் ஆண்டுக்கு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

முற்பகல் 10–45

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிஞ்சு மழலைகள் பயன்பெறும் இந்த அங்கன்வாடிகள் ஆஸ்பெஸ்டாஸ்–கல்நார் கட்டடங்களாக இருந்தவை கடந்த 4 ஆண்டுகளில் அம்மா அவர்களின் நடவடிக்கையால் இன்று சிமெண்ட்–கான்கிரீட் தளங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. இந்த அங்கன்வாடிகளில் பயன்பெறுகின்ற மழலைகளுக்குக் கோடைக்காலங்களில் ஏற்படுகின்ற சிரமங்களைக் கருத்தில்கொண்டு, அந்த அங்கன்வாடிக் கட்டடங்களுக்கு மின் வசதி செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மையங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இங்கு கேள்வி எழுப்பி இருக்கின்றார், கோரிக்கையாக வைத்துள்ளார். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஏற்கெனவே ஒருசில மையங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதியிருக்கின்ற மையங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் இருக்கின்ற சத்துணவுக் கூடங்களில், சமையல் செய்வதற்கு, விறகு சேகரிப்பதிலே அதன் பொறுப்பாளர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். ஆகவே, இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற முன்னேற்றத்தின் அடிப்படையில் சமையலுக்காக, சமையல் எரிவாயுவைப் பயன்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை அரசு ஏற்படுத்த முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.



2005 செப்டம்பர் 22]

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கையைப் பற்றி ஏற்கெனவே என்னிடம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். நான் இதைப்பற்றி மாண்புமிகு அம்மா அவர்களிடம் எடுத்துக்கூறி, அரசு சிந்திக்கும் என்று நான் ஏற்கெனவே கூறியிருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பேரவைத் தலைவர் அவர்களே, விறகு அடுப்பில் சமைத்த உணவைச் சாப்பிட்டால் அது உடம்பிற்கு மிகவும் நல்லது என்று பெரியவர்கள் சொல்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமின்றி, இன்றைக்குத் தமிழ்நாட்டிற்கு வழங்கப்படும் சமையல் எரிவாயுவின் ஒதுக்கீட்டை மத்திய அரசு மிகவும் அதிக அளவில் குறைத்திருக்கிறது. ஏற்கெனவே சமையல் எரி வாயு வழங்கப்பட்டு வந்த இல்லங்களுக்கெல்லாம் இன்றையதினம் கேஸ் சிலிண்டர் வழங்க முடியவில்லை. ஆகவே, மத்திய அரசு, சமையல் எரிவாயுவின் ஒதுக்கீட்டை அதிகரித்தால் நிச்சயமாக சத்துணவு மையங்களில் சமையல் எரிவாயு பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் இயங்கக்கூடிய சத்துணவுக்கூடங்கள், அங்கன்வாடிகள் பழுதுபார்க்கப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் சில சத்துணவுக்கூடங்களுக்கு, அங்கன்வாடிகளுக்கு மின் வசதி செய்து கொடுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினரது மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்படக்கூடிய சத்துணவுக்கூடங்களுக்கு மின் வசதி செய்து கொடுக்கப்படுகிறது. அதற்கான மின் கட்டணங்களை அங்கே பணியாற்றக்கூடிய ஊழியர்கள்தான் கட்டுவதாகச் சொல்கிறார்கள் அல்லது அங்கே இருக்கக்கூடிய பொது நல அமைப்புகள் மூலமாகக் கட்டப்படுவதாகத் தகவல் என்பது இருக்கிறது. சத்துணவுக்கூடங்களுக்கு, அங்கன்வாடிகளுக்கு மின் வசதி செய்து

கொடுக்கும்போது, அதற்கான மின் கட்டணங்களை அரசே கட்டுவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல் நகராட்சியில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மையங்களின் மின் வசதிக்கான அந்தத் தொகையை நகராட்சியே செலுத்துகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த மையம் என்று கூறினால் அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. கே.டி. பச்சைமால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**9—**

## ஆரம்பச் சுகாதார நிலையம்

***70908—திரு. கே.டி. பச்சைமால்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, குருந்தன்கோடு அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் குருந்தன்கோடு ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் குளச்சலில் வட்டம் சாரா மருத்துவமனை 38 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, குருந்தன்கோடு ஆரம்பச் சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

முற்பகல் 10–50

**திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகின்றேன். குளச்சல் தொகுதிக்குட்பட்ட குருந்தன்கோடு அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் சுமார்



200 புற நோயாளிகள் தினமும் மருத்துவச் சிகிச்சைப் பெற்றுச் செல்கின்றனர். இந்த ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்காக, இந்தப் பகுதியில் உள்ள ஊர்ப் பொதுமக்களும் அங்கேயிருக்கின்ற பூவை பாதுகாவல் சங்கமும் சுமார் 1 ஏக்கர் 32 சென்ட் நிலத்தை அரசுக்கு இலவசமாக அளித்துள்ளனர். இந்தப் பகுதியிலுள்ள ஏழையெளிய மக்களின் நலன் கருதி குமரி மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியைப் பெற்றுத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை வருகின்ற ஆண்டிலாவது அரசு அமைத்துத் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற உடனே இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்திலே முதன்முதலாக கிராமப் பகுதியிலுள்ள மக்களுக்கு நல்ல வாழ்க்கை அமைய வேண்டும், அவர்களுடைய நோய் குணமாக வேண்டுமென்ற எண்ணத்திலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் இதுவரையிலும் 106 அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், தமிழகம் இன்றையதினம் சுகாதாரத் துறையிலே முன்னோடியாக இருப்பதற்கு முதல் அடித்தளம் என்னவென்றால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணம். கிராம மக்கள் நல்ல வசதி அடைய வேண்டும் என்பதற்காகத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) எந்த அரசும் செய்யாத சாதனையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராம மக்களுக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று வருகின்ற நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கத்திற்குரிய தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சியில் மக்கள் நோய்நொடியின்றி வாழ்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, அதிலும்

[2005 செப்டம்பர் 22

குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலே 100 கோடி ரூபாய்க்கும் அதிகமாகச் செலவு செய்து மருத்துவமனையை அமைத்துத் தந்து அந்தப் பகுதி மக்களுடைய ஒட்டுமொத்த நல்ல எண்ணத்தையும் மக்கள் நல்வாழ்வுத் துறை பெற்றிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது என்று கருதுகிறேன். அதன் அடிப்படையிலே கிராமப்புற மக்களுடைய சுகாதாரம் மேம்பட வேண்டுமென்கிற அடிப்படையில் பல்வேறு நல்ல திட்டங்களை நிறைவேற்றி வருகின்ற சூழ்நிலையில் என்னுடைய தொகுதிக்குட்பட்ட முஞ்சிறை ஊராட்சிக்கு உட்பட்ட ஆறுதேசம் ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. கிட்டத்தட்ட 200, 300 வெளிநோயாளிகள் வந்து செல்கிறார்கள். அதிகமான கிராமச் சூழ்நிலையிலே இருக்கின்ற பகுதி என்கின்ற காரணத்தினாலே, அந்தப் பகுதி மக்களுடைய வாழ்வு வளம் பெற வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தின் அடிப்படையில் ஆறுதேசம் பகுதியிலே இருக்கக்கூடிய ஆரம்பச் சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர அரசு முன்வருமா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று வருகின்ற நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குருந்தன்கோடு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் தற்போது இருக்கின்ற படுக்கைகள் எத்தனை? போதுமான மருத்துவர்கள் இருக்கின்றார்களா? ஏனென்றால், அந்த மாவட்டத்திலே, இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்ததற்குப் பின்னால் பல பகுதிகளில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டு அதனுடைய தரம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால், போதுமான மருத்துவர் இல்லாத ஒரு பஞ்சம் இருந்து கொண்டேயிருக்கிறது. அதை நிவர்த்தி செய்கின்ற வகையில் இந்த குருந்தன்கோடு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குப் போதுமான



2005 செப்டம்பர் 22]

மருத்துவர்களை நியமிக்கவேண்டும். அதுபோன்று ஆறுதேசத்தை பொறுத்தமட்டில், அங்கே ஒரே ஒரு மருத்துவர்தான் இருக்கின்றார். பெண் மருத்துவர் அங்கே தேவை. அந்த வகையில் போதுமான மருத்துவர்களைத் தந்து, இடைக்கோடு ஆரம்பச் சுகாதார நிலையத்தை உடனே திறந்து போதுமான மருத்துவர்களைத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே தமிழகத்திலே உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று உத்தரவிட்டு அந்த அடிப்படையிலே கிட்டத்தட்ட 2,232 மருத்துவர்களை உடனடியாக நியமிக்க வேண்டுமென்றும் அவர்களை சர்வீஸ் கமிஷன்–தமிழ்நாடு தேர்வாணையத்தின்மூலமாக தேர்வு செய்ய வேண்டுமென்றும், அந்த இடைப்பட்ட காலங்களிலே அவர்களைத் தற்காலிகமாக நியமிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டிருந்தார்கள். அந்த அடிப்படையிலே நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையை ஏற்று, பல்வேறு மாவட்டங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்தத் தேர்வு நடந்து, இப்போது பல இடங்களிலே— குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல் சில இடங்களிலே—மருத்துவர்கள் இல்லாத அந்தக் குறையை நீக்க வேண்டுமென்பதற்காக அவர்களுக்கு ஒரு வேலைவாய்ப்பு என்ற திட்டத்தின் அடிப்படையிலே வேலைகள் கொடுக்கப்படுகின்றன. மீண்டும் அவர்கள் அந்த வேலைக்குச் செல்வதற்கு வசதியை ஏற்படுத்துவதற்காக, இன்னும் இரண்டு வாரங்களுக்குள்ளாக எங்கெங்கு மருத்துவர்கள் இல்லையோ, அந்த இடங்களுக்குச் செய்தித்தாள்கள் மூலமாக விளம்பரத்தை அளித்து, அங்கே இருக்கக்கூடிய மருத்துவர்களையும் தேர்வு செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. அ. நடராஜன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

[2005 செப்டம்பர் 22

10—

## மாணவர் விடுதி

***59853—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் பேரூராட்சிப் பகுதியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி , ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய விடுதிகள் தொடங்கும் திட்டம் பரிசீலனையில் தற்போது இல்லை.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான குத்தாலத்தில் மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், உதவி பெறும் பள்ளிகள் ஏராளமாக உள்ளன. தொலைதூரத்திலிருந்து ஆதிதிராவிட மாணவர்கள் கல்வி கற்க வருகின்றார்கள். அவர்கள் தங்கிப் படிப்பதற்கு மாணவர் விடுதி இல்லாமல் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். இந்தியாவிலேயே தமிழகத்தில் உள்ள மாணவர்களை தலைசிறந்த மாணவர்களாக உருவாக்க வேண்டும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வித் துறையில் பல்வேறு அதிரடித் திட்டங்களைத் தந்துகொண்டிருக்கின்ற இந்த வேளையில் ஆதிதிராவிட மாணவர் நலன் கருதி மாணவர் விடுதியை அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய விடுதிகள் பகுதி–2 திட்டத்தின்கீழ் தேவை மற்றும் நிதி நிலைமைக்கேற்ப திறக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பகுதி–2 திட்டத்தில் சென்னையில் முதுகலைப் பட்டப் படிப்பு பயிலும் மாணவியர்களுக்காக ஒரு விடுதியும், கரூர் நகரத்தில் பட்டப் படிப்பு பயிலும் மாணவியர்களுக்காகச் சிறப்பு இனமாக ஒரு விடுதியும், அதேபோல் நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் கல்லூரி மாணவியருக்காக ஒரு விடுதியும் திறக்கப்பட்டு, தற்போது இத்துறையின்கீழ் 1,078 ஆதிதிராவிடர் நல விடுதிகளும், 26 பழங்குடியினர் நல விடுதிகளும் இயங்கி வருகின்றன. இவற்றில் 574 விடுதிகள் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்தன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இந்த விடுதிகளுக்கு அனைத்து நவீன வசதிகளுடன்கூடிய அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டதன்பேரில் தற்போது 302 விடுதிகளுக்கு அரசுக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதி விடுதிகளுக்குக் கட்டடப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இதற்கு ஆகும் செலவு, ஒரு விடுதிக்கு ரூபாய் 31.50 இலட்சம் என்ற மதிப்பீட்டில் சுமார் ரூபாய் 180.81 கோடி ஆகும். இந்த விடுதிகளில் சுமார் 79,500 மாணவ, மாணவியர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். இவர்களுக்கு உணவுக் கட்டணமாகச் சுமார் 40 கோடி ரூபாய் ஒரு ஆண்டுக்குச் செலவு ஆகிறது.





மேலும், 1,078 விடுதிகள் அனைத்திற்கும் சமையல் எரிவாயு இணைப்பு வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்கள் கல்வியில் உயர வேண்டும் என்கிற சீரிய நோக்கோடு, ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இந்தியாவிலேயே முதன் முதலாக இலவச சைக்கிள் திட்டம், மாணவ, மாணவியர்களுக்கு, பிளஸ் 1, பிளஸ் 2 மாணவியர்களுக்கு இலவச சைக்கிள் திட்டத்தைக் கொண்டு வந்து, (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 4 ஆண்டுகளில் 2,05,000 மாணவிகள் சைக்கிள் வாங்கி பயன்பெற்றுள்ளார்கள்.

இந்த ஆண்டில் அதேபோல் மாணவியர்களுக்கு 50,000 சைக்கிள்களும், 1,00,000 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாளன்று (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் சைக்கிளை வழங்கி வருகிறார்கள். இதற்காக மொத்தம் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இலவச சைக்கிள் திட்டத்திற்கு மட்டும் 60 கோடி ரூபாய் ஆகிறது. கிட்டத்தட்ட 2,50,000 மாணவியர்களும், 1,00,000 மாணவர்களும் பயன்பெறுகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு படிக்கின்ற மாணவ, மாணவியர்கள் உயர் கல்விக்கு இதுவரையிலும் மற்ற ஆட்சிகளில் வாங்கி வந்த கல்விக் கடனை மாண்புமிகு அம்மா அவர்கள் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்கள் கல்வியில் உயர வேண்டும், அவர்களுடைய கஷ்டத்தைப் போக்கவேண்டும் என்கிற சீரிய நோக்கோடு உயர் கல்விபெற முழு மானியத்தை அறிவிப்பு செய்து, கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட 18.7 கோடி ரூபாய் செலவில் 28,000 மாணவ, மாணவியர்கள் பயன்பெற்றுள்ளார்கள்.

இப்படி பல்வேறு வகைகளில், எந்த ஆட்சியிலும் நடைபெறாத, எந்த முதலமைச்சரும் கொண்டு வராத திட்டங்களைக் கொண்டு வந்து (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிற்கே முன்னோடி முதலமைச்சராக விளங்குகிறார்கள். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்கள் கல்வியில் தரம் உயர்வு பெற்று வருகிறார்கள். இலவச சைக்கிள் திட்டத்தின் மூலமாக கல்வியிலும் உயர்வு பெற்றிருக்கிறார்கள், உடல் நலத்தோடு சுகாதாரத்திலும் நல்லமுறையில் அவர்கள் வளர்ந்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கோரிய கோரிக்கை, புதிய விடுதிகள் தொடங்கவேண்டும் என்றும், அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். கண்டிப்பாக— முறையாக நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு செல்வோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று மறுபரிசீலனை செய்யப்படும் என்று சொன்னதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 11, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.





11—

## துணை மின் நிலையம்

***51226—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் 110 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரில் 110 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்தில் சுமார் 50 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றனர். மேலும், வர்த்தக நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள், அரசு மருத்துவமனை, இவை தவிர சீர்காழி நகரைச் சுற்றிலும் புதிய நகரங்களும் உருவாகி வருகின்றன. அதிக அளவில் விவசாய பம்ப் செட்டுகளும் அமைந்திருக்கின்றன. அதனால் குறைந்தழுத்த மின்சாரம் ஏற்படுவதைத் தவிர்த்திடவும், நகர் முழுவதும் சீரான மின்சாரம் வழங்குவதற்கு ஏதுவாகவும், சீர்காழி நகரில் 110 கே.வி. துணை மின் நிலையத்தை இந்த ஆண்டே அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி பகுதிக்குத் தற்போது வைத்தீஸ்வரன் கோயில் 110/11 கிலோ வாட் மின் நிலையத்திலிருந்தும், அதேபோல அரசூர் 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்தும் மின்சாரம்

வழங்கப்பட்டு வருகிறது. இப்போது சீர்காழி பகுதிக்குத் தேவையான அளவிற்கு, இன்றைக்குக் குறைவில்லாத மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், சீர்காழி பகுதிக்கு 3 எம்.வி.ஏ. அளவிற்கு மின்சாரம் தேவைப்படுகிறது. அந்த அளவிற்கு, அங்கே போதிய அளவிற்குத் தேவையான மின்சாரம் இந்த இரண்டு துணை மின் நிலையங்களிலிருந்தும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பெரிய அளவிலே, புதிய மின் இணைப்புக்கான விண்ணப்பங்கள் அந்தப் பகுதியிலே நிலுவையில் இல்லை. அதனால், வருங்காலத்தில் ஏதாவது தேவை ஏற்படும் என்று சொன்னால், அந்தப் பகுதிக்குக் கூடுதல் மின் தேவை ஏற்படுகின்றபட்சத்தில், அதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி நகரில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைத்திட இயலவில்லை என்றாலும், வருகின்ற நிதியாண்டிலாவது 33 கே.வி. துணை மின் நிலையத்தை சீர்காழி நகர மக்களுக்காக அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி பகுதிக்குத் தேவைப்படுகின்ற அளவிற்கு பக்கத்திலிருக்கின்ற வைத்தீஸ்வரன் கோயில் துணை மின் நிலையம், 110/11 கிலோ வாட் துணை மின் நிலையத்திலிருந்து அங்கே மின்னூட்டிகள், feeder என்று சொல்லக்கூடிய மின்னூட்டிகள் 1 மற்றும் 2-ன்மூலம் மின் விநியோகம் செய்யப்படுகிறது. அதிலிருந்து அந்த மின் மாற்றியினுடைய திறன் 10 எம்.வி.ஏ. அதிலே இப்போது இருக்கின்ற தகுதியின் அளவு 9.33 அளவு அங்கே மின்சாரம் வருகிறது. அதேபோல, மின்னழுத்தச் சீராக்கமும், அந்தப் பகுதியிலே பொதுவாக 6 முதல் 9 சதவிகிதம் இருக்கவேண்டும். அந்த வகையிலே அந்தச் சீராக்கம், அந்தத் துணை மின் நிலையத்திலே 6.9 சதவிகிதமும், 6.7 சதவிகிதமும் இருக்கிறது. ஆகவே, அங்கு மின்னழுத்தக் குறைவிற்கு வாய்ப்பில்லை. அதேபோல, அரசூர் 33/11 துணை மின் நிலையத்திலிருந்தும் அங்கே மின்சாரம் வழங்கப்படுகிறது. அதனுடைய உச்சபட்ச அளவு 7.62 எம்.வி.ஏ. ஆகும். அந்த அளவிற்கும் அங்கே மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அதோடு மட்டுமல்ல; அந்த அரசூர் துணை மின் நிலையத்தினுடைய மின்னூட்டியின் சீராக்கம்கூட 0.5 சதவிகிதம் அங்கே இருக்கிறது.





எனவே, இங்கேயிருக்கின்ற புள்ளி விவரக் கணக்கின்படி, அங்கே குறைவான மின்னழுத்தம் இருப்பதற்கு வாய்ப்பில்லை. அதோடுமட்டுமல்ல, கூடுதல் தேவை கேட்டு அங்கே விண்ணப்பங்கள் எதுவும் வரப்பெறவில்லை. எனவே, இன்னும் வருங்காலத்தில் நான் ஏற்கெனவே சொல்லியதுபோல, கூடுதல் தேவைக்காக விண்ணப்பங்கள் வருமேயானால், அதுகுறித்து நிச்சயமாக அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, திரு. கு. அன்பழகன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**12—**

### கால்நடை மருத்துவமனை

***20471—திரு. கு. அன்பழகன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, செம்பட்டியில் கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) - ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை தொகுதி, செம்பட்டி அருகில் 2 கி.மீ. தூரத்தில் சமத்துவபுரத்தில் ஒரு கால்நடை கிளை நிலையமும், 6 கி.மீ. தூரத்தில் ஜம்புரிதிக்கோட்டையில் மற்றொரு கால்நடை கிளை நிலையமும், 3 கி.மீ. தூரத்தில் ஆத்தூரில் ஒரு கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. இவைமூலம் அளிக்கப்பட்டுவரும் சிகிச்சைப் பணிகள் செம்பட்டி கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளன. ஆதலால், செம்பட்டி கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை தொடங்க தற்போது வாய்ப்பில்லை என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எறும்பு முதல் எண்ணாயிரம் ஜீவஜந்துகளுக்கும் படி அளக்கிற பரமசிவனையும் மிஞ்சி, இன்றைக்குத் தமிழகத்தை ஆண்டு

[2005 செப்டம்பர் 22

கொண்டிருக்கிற எங்களுடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில், என்னுடைய நிலக்கோட்டை தொகுதியில் செம்பட்டியைச் சுற்றி சுமார் 35 கிராமங்கள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பக்கத்திலே கால்நடை மருத்துவமனைகள் அதிகமாக இருக்கின்றன, அந்த மருத்துவமனை போதுமென்று சொன்னார்கள். ஆனால், செம்பட்டியிலே அந்த மருத்துவமனை இருக்கவேண்டும். தென் மாவட்டங்களிலே கூடுகிற மாட்டுச் சந்தைகளைவிட, செம்பட்டியில்தான் பெரிய வாரச் சந்தை, மாட்டுச் சந்தை கூடுகிறது. ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமையன்று சுமார் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் விற்பனைக்கு வருகின்றன. ஆகவே, அதன் சிறப்புக் கருதி செம்பட்டியிலே கால்நடை மருத்துவமனையை அமைக்க நம்முடைய தங்கத் தலைவியினுடைய ஆட்சியிலே மீண்டும் பரிசீலனை செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்க மாநில திட்டக் குழுவால் விதிக்கப்பட்ட தடை இன்னும் அமலில் உள்ளதால், புதிய கால்நடை கிளை நிலையங்கள் ஏற்படுத்த தற்போது வாய்ப்பில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய செம்பட்டி கிராமம் சிறப்புப்பெற்ற கிராமம் என்பதாலும், வாரச் சந்தை அந்த இடத்திலே வாரா வாரம் கூடி வருவதாலும், நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய செம்பட்டி கிராமத்திலே புதியதாக ஒரு கால்நடை கிளை நிலையம் இந்த நிதியாண்டில் கட்டிக் கொடுப்பதற்கு, நம்முடைய இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆலோசனையின்பேரில் செய்து கொடுக்கப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், சிங்காநல்லூர் கால்நடை மருந்தகம் தனியார் வாடகைக் கட்டடத்திலே இயங்குவது சம்பந்தமாக சொல்லப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்கள். இப்போது வரை அது கட்டப்படவில்லை என்பது அமைச்சருக்கும், அரசுக்கும்



2005 செப்டம்பர் 22]

தெரியுமா? மீண்டும் அதைக் கட்டித் தருவதற்கான ஏற்பாடு இனிமேலாவது செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே எந்த ஒரு மாநில முதல்வரும் செய்யாத அற்புதமான அரிய திட்டமான இமாலய சாதனையைப் படைத்திருக்கின்ற முதல்வர் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). இன்று ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திற்கும் சுமார் 19.50 இலட்சம் ரூபாய் செலவிலே, இந்த ஆண்டு 90 புதிய கால்நடை மருந்தகங்கள் கட்டுவதற்கு நம்முடைய அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அந்தவகையிலே, வருகின்ற நிதியாண்டில், நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச்சென்று, சிங்காநல்லூர் தொகுதியில் கால்நடை மருந்தகம் கட்டுவதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அனுப்பானடி, கீரைத்துரை ஆகிய இடங்களில் இயங்கி வருகிற கால்நடை மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவதற்கு அரசு முன் வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நம்முடைய அம்மாவினுடைய அரசு தமிழகத்தில் 306 கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தியிருக்கின்றார்கள். அந்தவகையிலே மீண்டும் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு இன்னும் அதிக அளவிலே கால்நடை கிளை நிலையங்களைக் கால்நடை மருந்தகங்களாக மாற்றுவதற்குக் குறிப்பு வைத்திருக்கின்றேன். நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கும் நல்ல முறையிலே பதில் கிடைக்கின்ற வகையிலே அவருடைய ஊரிலேயும் கால்நடை கிளை நிலையம் மருந்தகமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து கொடுப்பார்கள் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 செப்டம்பர் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**13—**

**கூட்டுறவுச் சங்கம்**

***74538—திரு. ஜி.கே. மணி:***

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பென்னாகரம் வட்டத்தில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக தாலுகாவின் தலைமையிடமான பென்னாகரத்திலேயே தலைமைக் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருவதால் புதியதாக ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம் அமைக்க வாய்ப்பில்லை என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) எழாது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு பிரிக்கப்படாத நிலையில் இருந்த தருமபுரி மாவட்டந்தான் தமிழகத்திலே மிகமிக பின்தங்கிய மாவட்டம். தற்போது கிருஷ்ணகிரியை பிரித்த பிறகு அதிலும் வளர்ச்சி பெறாத ஒரு மாவட்டமாக தருமபுரி மாவட்டம் இருந்து கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, என்னுடைய பென்னாகரம் தொகுதி விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற விவசாயக் கூலிகளே நிறைந்த பகுதி. வேறு எவ்வித தொழில் வசதியும் இல்லாத ஒரு பரந்துபட்ட பகுதி. குறிப்பாக அங்குள்ள மக்கள் இன்று தொடர்ந்து மழை குறைந்து வருகின்ற காரணத்தினாலே கர்நாடகாவில் குறிப்பாக பெங்களூர் மாநகரத்திற்கும், ஆந்திர மாநிலத்திற்கும் தினமும் கூலிவேலைக்குச் சென்று வரக்கூடிய அவல நிலை இருக்கின்ற



2005 செப்டம்பர் 22]

காரணத்தாலேதான் ஒரு ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் போதாது என்ற நிலையிலும், அதுவும் குறிப்பாக முழுமையாக செயல்படாத நிலையில் இருக்கின்ற காரணத்தினால் இப்படிப்பட்ட பின்தங்கிய பகுதிகளின் மக்கள் வாழ்க்கைத் தரம் முன்னேறுவதற்கு இன்னும் நிறைய கூட்டுறவுச் சங்கங்களைத் துவக்கி ஆடு வளர்ப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 71 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இதில் பென்னாகரம் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் உட்பட 9 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டுகளில் நிலவிய வறட்சியின் காரணமாக ஆடு வளர்ப்பிற்கான மேய்ச்சல் நிலங்கள் போதுமானதாக இல்லாததாலும், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வங்கிகளில் ஏற்கெனவே வழங்கப்பட்ட கடனை உறுப்பினர்கள் முறையாக திருப்பிச் செலுத்தாத காரணத்தால் வங்கிகள் நிதியுதவி செய்ய முன்வராத காரணத்தாலும், உறுப்பினர்களுடைய ஆடு வளர்ப்புச் சங்க ஈடுபாட்டில் போதிய ஆர்வம் இல்லாததாலும் சங்கங்களைச் செயல்பட வைக்க வாய்ப்பில்லாமல் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆடு வளர்க்கப் போதிய வசதிகள் இல்லை, மேய்ச்சல் தரை இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால், பென்னாகரம் தொகுதியைப் பொறுத்தவரையிலே குன்றுகளும், சிறுமலைகளும் மேய்ச்சல் நிலங்களும் கொண்ட பரந்துபட்ட பகுதி. வாய்ப்பு இருக்கிறது. வேறு தொழிலுக்கு வாய்ப்பில்லாத காரணத்தினாலேதான் அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து இந்த ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களைத் துவக்கி அவர்கள் வாழ்க்கையிலே உயர்வதற்கு, வாழ்வதற்கு மீண்டும் அரசு இந்த வாய்ப்பினை உருவாக்கித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று நிச்சயமாக இந்த நிதி ஆண்டில் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 செப்டம்பர் 22

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, டாக்டர் தே. குமாரதாஸ், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.

**14—**

## இரப்பர் கழகம்

***30227—டாக்டர் தே. குமாரதாஸ்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நட்டத்தில் இயங்கும் இரப்பர் கழகம் வனத் துறையில் இணைக்கப்படுமா?

(ஆ) இதற்காகும் மொத்தச் செலவு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கும் இரப்பர் கழகத்தை வனத் துறையில் இணைக்கும் உத்தேசம் தற்சமயம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது வணக்கத்திற்குரிய அம்மா அவர்களுடைய ஆட்சியில், கன்னியாகுமரி மாவட்டத்தில் விளைகின்ற இரப்பர், உற்பத்தியாகின்ற இரப்பருக்காக அந்த மாவட்டத்திலே இரப்பர் தொழிற்சாலை வேண்டும் என்று வெகுநாளைய கோரிக்கை இருந்து வந்தது. அந்த மாவட்டத்திலே இருக்கிற அந்த இரப்பர் மரத் தொழிலாளர்கள் எப்போதும் போராட்டம் நடத்தி அரசுக்கு அதிகமான செலவுகளை ஏற்படுத்தி வருகின்ற காலகட்டத்தில் முந்தைய ஆட்சியில் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்காத சூழ்நிலை ஏற்பட்டு, தொழிலாளர்கள் பல பேர் போராட்டங்கள் நடத்தி வந்த சூழ்நிலையை மாற்றி, இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே தொழிலாளர்களுக்குக் கோரிக்கையே இல்லாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி, இரப்பர் கழகத்திலே அளவு கடந்த இலாபம் ஈட்டுகின்ற சூழ்நிலையை எய்தி இருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். அதே நேரத்திலே இரப்பர் தொழிற்சாலையை அந்தப் பகுதியிலே அமைக்கப்படவேண்டுமென்கின்ற கோரிக்கையோடு, அந்தப் பகுதியில்



2005 செப்டம்பர் 22]

இன்னும் இரப்பர் அதிகமாக பயிரிடக்கூடிய பகுதிகள் இருக்கின்றன. எனவே, இப்போதுள்ள சூழ்நிலையில் அது நல்ல நிலையில் இருக்கின்ற காரணத்தினால், பயிரிடப்படவேண்டிய பகுதிகளிலே புதிதாக பயிர்செய்து இரப்பர் அதிகமாக உற்பத்தி செய்வதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடத்திற்கு 100 ஹெக்டேரில் இரப்பர் கன்று பயிரிடப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலித்து அதிக ஹெக்டேர் நிலத்தில் பயிரிடுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அந்தப் பகுதியிலே அதிகமாக இரப்பர் பயிரிடுவதன்மூலம் அரசுக்கு அதிகமான வருமானம் வருவதோடு மட்டுமல்லாமல், அதிகமான கூலித் தொழிலாளர்களுக்கு, இரப்பர் — பால் வெட்டுகின்ற மரம் வெட்டுகின்ற தொழிலாளர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பும் கிடைக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியினை சொல்லி இன்னும் பயிரிட வேண்டிய பகுதிகளில் அதிகமாக, வேகமாக பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கு ஏற்ப இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அதிக ஹெக்டேர் நிலப்பரப்பில் இரப்பர் மரக் கன்றுகளைப் பயிரிட தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமசந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வஸ்ரீ காமராஜர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த நேரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது இரப்பர் கழகம். அதிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குச் சட்டபூர்வமான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த உயர்திரு எம்.ஜி.ஆர். அவர்கள் அதை ஒரு கழகமாக மாற்றி இன்று மூவாயிரத்திற்கு அதிகமான பணியாளர்கள்

[2005 செப்டம்பர் 22

பணியாற்றி கொண்டிருக்கின்றார்கள். அந்தக் கழகத்தை மேலும் அபிவிருத்திபடுத்துவதற்கு, இரப்பர் வாரியத்தில் இன்று ஒரு ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு தமிழக அரசிடம் 100 ஏக்கர் இடத்தை கேட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த முறையிலே அவர்களுக்கு 100 ஏக்கர் நிலத்தை இந்த அரசு வழங்கி, மேலும் இந்த இரப்பர் கழகத்தை நல்ல ஒரு தொழில் ஸ்தாபனமாக மாற்றி, மேலும் அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா, அதற்கான திட்டம் அரசிடம் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் நட்டத்தில் இயங்கி வந்த அரசு இரப்பர் கழகம் இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய சீர்திருத்த நடவடிக்கையால் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது. மேலும், இந்த அரசு இரப்பர் கழகம் அம்மா அவர்களுடைய ஆலோசனையின் பேரில் நல்லவிதமாகச் செயல்பட்டு வருவதன் பயனாக இன்றைக்குத் தொழிலாளர்கள் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, சரியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**15—**

### பல்தொழில்நுட்பப் பயிலகம்

***7332—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி ஒன்றியத்தில், பல்தொழில்நுட்பப் பயிலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 22]

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி ஒன்றியத்தில், புதிய பல்தொழில்நுட்பப் பயிலகம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவரும் கல்வியறிவு பெற வேண்டும் என்பதற்காகப் பள்ளி மாணவ மாணவியர்க்கு, இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கி, கல்விக் கண் திறந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், மிகவும் பின்தங்கிய பகுதியாகும்; அங்கே தொழில் வளம் இல்லாத காரணத்தால், சுயமாகத் தொழில் செய்கின்ற வாய்ப்பைப் பெறுவதற்கு அடித்தளமாகப் பல்தொழில்நுட்பப் பயிலகம் ஒன்றை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பல்தொழில்நுட்பப் பயிலகம் ஆரம்பிக்க வேண்டுமென்றால், நில மதிப்பு நீங்கலாக, ரூபாய் 10 கோடி செலவாகிறது. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற விருதுநகர் மாவட்டத்திலே, 4 அரசு உதவி புரிகின்ற பல்தொழில்நுட்பப் பயிலகங்களும், 5 சுய நிதி அடிப்படையிலே செயல்படுகின்ற பல்தொழில்நுட்பப் பயிலகங்களும் செயல்பட்டு வருகின்றன. அந்த 9 பல்தொழில்நுட்பப் பயிலகங்களிலே, 2,750 மாணவர்களைச் சேர்ப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டில், அந்த 2,750 மாணவர்களிலே, 2,132 மாணவர்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். காலியாக உள்ள இடங்களிலே சேர்ப்பதற்கு, 618 மாணவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, புதிதாகப் பல்தொழில்நுட்பப் பயிலகம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 16, திரு. ராதாரவி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

[2005 செப்டம்பர் 22

**16—**

### சலுகைகள்

***31118—திரு. ராதாரவி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைப் போல சலுகைகளை வழங்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திலே பணியாற்றும் பணியாளர்களுக்கு, அரசு ஊழியர்களுக்குத் தருகின்ற அத்தனைச் சலுகைகளும் தரப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 17, திரு. டி. மணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**17—**

### படகு கட்டும் தளம்

***34900—திரு. டி. மணி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் பகுதியிலுள்ள படகு கட்டும் தளம் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதனைச் சீரமைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.



2005 செப்டம்பர் 22]

(ஆ) சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தில் புதிதாக உட்கட்டமைப்பு வசதிகள், இரண்டாம் கட்ட விரிவாக்கத் திட்டத்தின்கீழ், ரூ. 19.10 கோடி செலவில் ஏற்படுத்தித் தர உத்தேசிக்கப்பட்டு, திட்ட மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு, தொழில்நுட்ப ஒப்புதலுக்காக பெங்களூர், சைசெப் இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவற்றில் பழுதடைந்த படகு கட்டும் தளத்தினைச் சீரமைப்பதும் அடங்கும். இந்நிலையில், கடந்த 26-12-2004 அன்று ஏற்பட்ட சுனாமி பேரழிவின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தினைச் சீரமைக்கும் பொருட்டு, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, ரூ. 72 இலட்சம் ஒப்பளித்துள்ளது. அத்தொகையைக் கொண்டு, சேதமடைந்த உட்கட்டமைப்பு வசதிகளின் பழுது நீக்கும் பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுள் மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள பழுதடைந்துள்ள படகு கட்டும் தளம் சீரமைக்கும் பணியும் அடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னமுட்டத்தில் இருக்கின்ற பழைய மீன்பிடித் தளம் என்பது, பழுதடைந்து சில ஆண்டுகள் ஆகிவிட்டன. ஏற்கெனவே, சுனாமி தாக்குதல் என்பது, கடந்த ஆண்டிலே நடந்தது. அதற்கு முன்னாலே, இது பழுதடைந்தது சம்பந்தமாக இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது. ஆனால், முறையாக அது செய்யப்படவில்லை. எனவே, இப்போது எடுத்துக் கொண்டிருக்கின்ற திட்டத்தின் அடிப்படையில், விரைந்து செயல்பட்டு, அந்த வட்டாரத்தில் இருக்கின்ற மீனவ மக்களுக்குப் பயன்படுகின்றவகையிலே, அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதன்படி, ரூ.72 இலட்சம் மதிப்பிலே, Wharf wall கட்டுகின்ற தளத்தை repair செய்வதற்காக, 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, அதற்கென்று ரூ. 11.53 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. அதற்கென்று அமைக்கப்பட்டிருக்கின்ற lighting arrangements, toilet provision, drainage, water supply, improvement to roads போன்றவற்றிற்கெல்லாம் மொத்தமாக 72 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அதிலே ரூ. 28.84 இலட்சம், இதுவரைக்கும் செலவழிக்கப்பட்டுள்ளது. பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 செப்டம்பர் 22

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகம் சம்பந்தமாக அந்த மாவட்டத்திலே இருக்கின்ற மீன்பிடி அல்லது அந்தத் துறையைச் சார்ந்த A.D. Office-லே அந்த விவரங்களைக் கேட்டால், அவர்கள் சொல்வதற்குத் தயாராக இல்லை. எங்களுக்குத் தெரியாது என்று சொல்லிவிடுகிறார்கள். அந்த நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய மீனவ மக்களினுடைய பிரச்சினைகள் சம்பந்தமாக, எதுவானாலும் சரி, அந்த மாவட்டத்திலே நாங்கள் தொடர்புகொண்டு கேட்கின்றபோது, பதிலைச் சொல்ல வேண்டியவர்கள், வழிகாட்டுதலைச் சொல்லவேண்டியவர்கள் அவர்கள். அவர்கள் தெரியாது என்று சொல்லிவிட்டால் அது எப்படி நியாயமாக இருக்கும்? அந்த வகையிலே நிச்சயமாக இந்த அரசு சில முடிவுகளை எடுத்திருக்கிறது. அது பாராட்டக்கூடிய விஷயம். அந்த வகையிலே அது விரைந்து செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தகவலைக் கூறி இருக்கின்றார்கள். நேற்றுகூட மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், 2, 3 boat-களை அந்தப் பகுதியிலே பிடித்து வைத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். அந்த மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களோடு தொடர்புகொண்டு நானும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் அந்த boat-களை விடுவிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, உடனே அவை விடுவிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் எந்தத் தகவலாக இருந்தாலும், என்னிடம் தொலைபேசியிலே தொடர்புகொண்டு சொன்னால்கூட அந்த அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கி உங்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொடுக்கலாம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமசந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னமுட்டம் பகுதியை விஸ்தரிப்பதற்கு அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கினார்கள். அதற்கு நன்றி. இந்தப் பகுதியிலே சுனாமியால் பாதிக்கப்பட்ட படகுகள்



2005 செப்டம்பர் 22]

அறவே நொறுக்கப்பட்டிருக்கின்றன. அந்த மீனவ மக்களுக்கு அடுத்த மாதத்திலேயே இந்தப் படகுகளைக் கட்டிக் கொடுத்து, அவர்களுக்கு வாழ்வு ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் துவங்க முடியும் என்று அரசால் கருதப்படுகிறதா? அதற்கான நடவடிக்கைகள் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தகவலைக் கூறி இருக்கின்றார்கள். அதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரைக்கும் உங்கள் எல்லோருக்குமே தெரியும். கடந்த 26–12–2004 அன்று சுனாமி பேரழிவு ஏற்பட்டபோது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சில தலைவர்களெல்லாம் சுனாமி நடந்ததற்குப் பிறகும் போகாத நேரத்தில், 3 தடவைகளுக்கு மேலாக சென்று அந்த பாதிக்கப்பட்ட மக்களிடம் நேரடியாகச் சென்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்திருக்கின்றார்கள். அதன் தொடர்ச்சியாக மீனவப் பெருமக்களுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் தொடர்ந்து செய்து கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**18—**

## குடிநீர் விநியோகம்

***23635—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பேரூராட்சிக்கு ஈலாடா நீர்த்தேக்கத்திலிருந்து குடிநீர் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி சிறப்பு

[2005 செப்டம்பர் 22

சிற்றூராட்சிக்கு ஈலாடா நீர்த்தேக்கத்திலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இந்நீர்த்தேக்கத்திலிருந்து நீராதாரமாகக் கொண்ட குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தகிரி, தாலுகா தலைநகரமாக இருக்கிறது. இங்கு வசிக்கும் மக்களுக்கு வாரத்திற்கு ஒரு முறைதான் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஈலாடா நீர்த்தேக்கத்தில் போதுமான தண்ணீர் இருக்கிறது. எனவே, இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் வழங்குகின்ற வகையில் இத்திட்டத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தகிரி சிறப்பு சிற்றூராட்சியிலே 53 குடியிருப்புகளில் முன்பு நிறைவேற்றப்பட்ட ஈலாடா நீர்த்தேக்கத் திட்டத்தின்மூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதில் 48 குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள 5 குடியிருப்புகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 57 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மீதமுள்ள 5 குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் குடிநீர் வழங்குவதற்கு ஒரு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் 118.97 இலட்சம் ரூபாயில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, நாள் ஒன்றுக்கு மொத்தம் 8 இலட்சத்து 70 ஆயிரம் லிட்டர் குடிநீர் வழங்கப்படும். இதன்மூலம் மீதம் இருக்கின்ற பகுதி மக்களுக்கும் 70 லிட்டர் குடிநீர் வழங்குவதற்குண்டான வழிகள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர்த் திட்டம் அபிவிருத்திச் செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இத்திட்டத்தை 3 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கண்காணிப்புப் பொறியாளர் உடனடியாக செய்து கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். 3 ஆண்டுகள் ஆகியும் இந்தத் திட்டம் இன்னும் துவக்கப்படவில்லை. எனவே, அரசு விரைந்து செயல்பட்டு இத்திட்டத்தை நிறைவேற்றி, கோத்தகிரி மக்களுக்குத்



2005 செப்டம்பர் 22]

தினமும் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11–30

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகம் முழுவதும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதிலே மிகவும் ஆர்வம் கொண்டு வழங்கிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்துவதற்கு, அரசு முனைப்போடு செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 19, திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**19—**

### மின்சார சுடுகாடு

***37517—திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியில் மின்சார சுடுகாடு அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மாநகராட்சியில் மின்சார சுடுகாடு அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் இந்தக் காலகட்டத்தில் நெல்லை மாநகராட்சியினுடைய ஜனத்தொகை கிட்டத்தட்ட 4–1/4 இலட்சம் இருக்கின்றது. அங்கே சுடுகாடு என்ற பெயரால், தாமிரபரணி ஆற்றங்கரை ஓரமாக பல சுடுகாடுகள் இருக்கின்ற காரணத்தால், அங்கே எரிக்கப்படுகின்ற காரணத்தால் சுற்றுப்புறச் சூழ்நிலை

பாதிக்கப்படுகின்றது. ஏற்கெனவே மாநகராட்சியிலிருந்து இதற்கு 78 இலட்சம் ரூபாய் மதிப்பீடு போடப்பட்டு, உலக வங்கியினுடைய கடனைப் பெறுவதற்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இதை இந்த அரசு, சுற்றுப்புறச்சூழலை அனுசரித்தும், மக்களுடைய சிரமங்களைத் தவிர்க்கின்ற வகையிலேயும், பல்வேறு பிரச்சினைகள் இந்தப் பகுதியிலே இருப்பதால், இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் சுற்றியுள்ள கிராமங்களை எல்லாம் சேர்த்துப் பார்த்தால்கூட, மாதம் ஒன்றுக்கு இறப்பு சதவிகிதம் சற்றேறத்தாழ 400, 500 பேர் என்று மாநகராட்சியிலே மட்டும் இருக்கின்றது. சுற்றுப்புறக் கிராமங்கள் என்று வரும்போது அதிகமான எண்ணிக்கை இருக்கின்றது. இந்தச் சுற்றுப்புறச்சூழலை மனதில் வைத்து இந்த மாநகராட்சியினுடைய மிக அவசியமான இந்த மின்சார சுடுகாடு என்பது மிகத் தேவை என்பதையும் அறிந்து, இதை இந்த அரசு அமைக்க முன்வருமா என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாநகராட்சியின் மொத்த மக்கள் தொகை 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 4 இலட்சத்து 11 ஆயிரத்து 831 ஆகும். இம்மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகள் மக்கள்தொகைக்கு ஏற்ப போதுமானதாக உள்ளன. ஆகவே, இங்கே மாநகராட்சிப் பகுதியிலே 12 இடுகாடுகளும், 5 சுடுகாடுகளும், ஒரு கல்லறையும், 3 மயானங்களும், ஒரு மையவாடியும் உள்ளன. இவை இந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்குப் போதுமான அளவாக இருக்கின்றது. இவற்றிற்குப் போதுமான பாதை வசதிகளும் உள்ளன. மேலும், இவற்றில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை. இவற்றில் சில இடங்களில் மட்டும் சுற்றுச்சுவர்கள் கட்டப்பட்டு பாதுகாப்பாக உள்ளன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே, அங்கே கண்டிப்பாக மின்சார சுடுகாடு தேவை என்ற நிலை வருமானால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது அதுகுறித்து சிந்தித்துச் செயல்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லி அமர்கின்றேன்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சுற்றுப்புறச்சூழலின் அடிப்படையில்தான், அந்த மக்களுடைய சுகாதாரத்தின் அடிப்படையில்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். இந்தமாதிரி சுடுகாடுகள் என்பது பல அங்கே இருப்பது உண்மைதான் என்றாலும்கூட, அங்கே சுற்றுப்புறச்சூழல் கடுமையாகப்





பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசு அறியுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சென்னை போன்ற பகுதியிலே மின்சார சுடுகாடு இருக்கிற காரணத்தால், இன்றைக்குப் பல்வேறு ஏழையெளிய மக்கள்கூட செலவினங்களைக் குறைத்து அவர்களுடைய ஈமக்கிரியைகளை நடத்துவதற்கான வசதி வாய்ப்புகளைச் சென்னை மக்கள் பெற்றிருப்பதுபோல, வளர்ந்துவருகிற நெல்லை மாநகராட்சியிலும் அந்த மக்கள் பெற வேண்டும். இன்றைக்கு தாமிரபரணி ஆற்றினுடைய ஓரத்தில், குடிநீர் வருகிற அந்த ஆற்றின் ஓரத்தில்தான் இந்த சுடுகாடுகள் எல்லாம் அமைந்திருக்கின்றன என்பதை அமைச்சர் அறிந்திருப்பார் என்று கருதுகிறேன். ஆகவே, வளர்ந்து வருகிற இந்தக் காலகட்டத்தில் கண்டிப்பாக இந்த மின்சார சுடுகாடு இந்தப் பகுதிக்கு தேவை என்பதை அந்தப் பகுதியினுடைய மக்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் மிகப் பழமையான கிருஷ்ணாம்பேட்டை சுடுகாடு உள்ளது. அந்தப் பகுதியில் மின்சார எரியூட்டு மயானம் அமைக்க வேண்டுமென்று நான் கோரிய நேரத்தில், அதற்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட திட்ட மதிப்பீடு தேவைப்படுகிறது, எனவே, எரிவாயு மூலமாக அந்தப் பகுதியிலே எரியூட்டு மயானம் அமைக்கலாம் என்று அதிகாரிகள் கூறினார்கள். அதற்கான, 30 இலட்சம் ரூபாயை என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நான் அளித்து வந்தேன். ஆனால், அதனுடைய திட்ட மதிப்பீடு 60 இலட்சம் ரூபாய் என்று சொல்கிறார்கள். எனவே, என்னுடைய விருப்பத் திட்டத்தின் அடிப்படையிலே பணம் இல்லாத காரணத்தால், முன்னுரிமை திட்டத்தின் அடிப்படையில் உள்ள பணத்தை அதற்குப் பயன்படுத்துவதற்கு அரசு சிறப்பு அனுமதி வழங்குமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–35

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாநகராட்சியிலே, எந்தவிதத்திலும் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படவில்லை. அந்த மயானங்கள் அமைந்திருக்கின்ற பகுதிகள் மூலமாக எந்தவிதமான பாதிப்பும் இல்லை. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே வளர்ந்து வருகின்ற காலத்திலே அங்கே ஒரு மின்சார

[2005 செப்டம்பர் 22

மயானம் அமைப்பதற்கு உண்டான முயற்சியை மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உசேன் அவர்கள் கேட்டுக் கொண்டதுபோல, அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதிக்குத் தேவையான விதிவிலக்குகளை எல்லாம் இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்து, அந்தப் பகுதியிலே அத்தியாவசியத் தேவை என்னவோ அதைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே அதற்கு விதிவிலக்கு அளிப்பதற்கு உண்டான முயற்சியை மேற்கொள்வார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள பல நகராட்சிகளில் பல ஏக்கர் நிலங்கள் சுடுகாடுகளாக இருக்கின்றன. அவற்றை மின்சார சுடுகாடுகளாக, எரி வாயு சுடுகாடுகளாக மாற்றினால் பல ஏக்கர் நிலங்கள் மீதப்படும். பல நகராட்சிகளிலே அரசு கட்டடங்கள் கட்டுவதற்கு இடம் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, இதைத் தமிழகம் முழுவதும் செயல்படுத்தினால், அரசு நிலமும் மீட்கப்படும் என்கின்ற அந்த நோக்கத்தோடு அதை அமல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது இதுகுறித்து சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 20, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

**20—**

### நீர்வழி விளையாட்டு பயிற்சி மையம்

***42284—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 22]

செங்கல்பட்டு குளவாய் ஏரியில் நீர்வழி விளையாட்டு பயிற்சி மையம் அமைக்கும் திட்டத்தினை அரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு குளவாய் ஏரியில் நீர்வழி விளையாட்டு பயிற்சி மையம் அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு குளவாய் ஏரி மிகப் பரந்த இடமாக இருக்கிறது. அதிலே ஆண்டு முழுவதும் தண்ணீர் நிரம்பி இருக்கிறது. அதிலே நீர்வழி மூலம் பல்வேறு பயிற்சிகளையும், பல்வேறு நீச்சல், படகுப் போட்டிகள் நடத்துவதற்கும், அதற்கான வீரர்களைத் தயார் செய்வதற்குமான இடமாக அது அமையும். எனவே, அங்கே நீர்வழி விளையாட்டுப் பயிற்சி மையத்தை அமைக்க அரசு மீண்டும் பரிசீலிக்குமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர்வழி விளையாட்டுக்கு மோட்டார் பொருத்த வேண்டியிருக்கிறது. அதனால் மீன் வளம் பாதிக்கப்படும் என மீன் வளத் துறை அதற்குத் தடை விதித்துள்ளது. எனவே, குளவாய் ஏரியில் நீர்வழி விளையாட்டுப் பயிற்சி மையம் அமைக்க வாய்ப்பு இல்லை என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) என்ன ஆறுமுகம், கேளுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இயந்திரப் படகுகள் மூலம் பயிற்சியைச் சொல்லிக் கொடுக்க முடியாவிட்டாலும்கூட, கைத்துடுப்புப் படகுகள் மூலம் அளிக்கலாம் மற்றும் நீச்சல் கற்றுத் தருவதற்கும் அங்கே வாய்ப்புகள் இருக்கின்றன. அதையாவது செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதற்குத் தனி வினா எழுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

[2005 செப்டம்பர் 22

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல்கள் 1, 2 மற்றும் 3)@

## (முதல் பட்டியல்)

**1—**

### சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 36081—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி—புதுப்பேட்டை வழியாக திருப்பத்தூர் செல்லும் பிரதான சாலை பழுதடைந்து இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது திருப்பத்தூர்—நாட்ராம்பள்ளி சாலையாகும். இது கி.மீ.0/0—14/8 நீளம் கொண்ட மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையில் மிகவும் பழுதடைந்த பகுதியான கி.மீ.7/6—8/4, 9/0—10/4 மற்றும் கி.மீ.12/0—13/0 வரை சீர்செய்ய ரூ.10.30 இலட்சத்திற்கு 2003-2004-க்கான முதலமைச்சரின் காலமுறை புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் எடுத்து பணி முழுவதும் முடிக்கப்பட்டுவிட்டது.

**2—**

### சாலை வசதி

**வினா எண் 36091—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர்—தருமபுரி செல்லும் நெடுஞ்சாலையில் காக்கங்கரை ஏரி சாலை குறுகலாக உள்ளதால் அடிக்கடி சாலை விபத்து ஏற்பட்டு உயிர்சேதம் ஏற்படுவது அரசுக்கு தெரியுமா?

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2005 செப்டம்பர் 22]

(ஆ) ஆம் எனில், மேற்படி சாலை ஏரிக்கரை விரிவுபடுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் பெயர் "ஒகேனக்கல்—பெண்ணாகரம், தருமபுரி—திருப்பத்தூர்" எனப்படும் மாநில நெடுஞ்சாலையாகும். இதன் மொத்த நீளம் 108.20 கி.மீ. ஆகும். இச்சாலையில் கி.மீ.92/8—101/8 வரையிலான ஒருவழிப் பாதையாகவும், இதன் மற்ற பகுதிகள் இடைநிலை வழிப்பாதையாகவும், இருவழிப்பாதையாகவும் உள்ளது. இச்சாலையில் ஒருவழிப் பாதையான கி.மீ.92/8—101/8ல் காக்கங்கரை ஏரிப்பகுதி கி.மீ.95/8—96/6 வரையுள்ள 800 மீட்டர் நீளம் கொண்டதாகும். மேலும், இதில் ஏரிக்கரையை அகலப்படுத்தும் பணிக்கு கி.மீ.90/750 முதல் 92/850 வரை உறுதிப்படுத்தல் பணிக்கு உத்தேச மதிப்பீடாக ரூ. 480 இலட்சம் ஆகிறது. இப்பணி அரசின் எந்தத் திட்டத்திலும் இடம்பெறவில்லை. இருப்பினும், வருங்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை வழங்கி இப்பணியினைப் படிப்படியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**3—**

### சாலையை நேர் செய்தல்

**வினா எண் 41682—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், பேராம்பட்டு ஏரிக்கரை சாலை நேர் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது நெடுஞ்சாலைத் துறையால் மாவட்ட முக்கியச் சாலையாக பராமரிக்கப்பட்டு வரும் திருப்பத்தூர்—சிங்காரப்பேட்டை

[2005 செப்டம்பர் 22

சாலை (கி.மீ.0/8—16/4) ஆகும். இச்சாலையை கி.மீ.1/2—2/7 மற்றும் 5/5—16/3 வரை மேம்பாடு (உறுதிப்படுத்தும்) செய்யும் பணியானது மத்திய சாலை நிதித் திட்டத்தில் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. இச்சாலையின் ஏரிக்கரைப் பகுதியில் அமைந்துள்ள சாலைப் பகுதியை நேர்செய்யும் திட்டம் ஏதுமில்லை.

4—

### சாலையைப் புதுப்பித்தல்

**வினா எண் 41695—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, ஆத்தூர்குப்பம் ஊராட்சியில் களர் கிராமம்—ஜங்கலாபுரம் வழியாகச் செல்லும் தார்ச் சாலையை புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது ஜோலார்பேட்டை—நாட்றாம்பள்ளி சாலை முதல் ஜங்கலாபுரம் சாலை எனும் 3.00 கி.மீ. (கி.மீ.0/0—3/0) நீளமுடைய அரசு மாவட்ட இதர சாலையாகும். இச்சாலை ஒருவழித்தட அகலம் கொண்ட தார்ச்சாலையாகும். இச்சாலை முதலமைச்சர் காலமுறை புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் ரூ.8.10 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு தார்ச்சாலை புதுப்பிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

5—

### சாலைகளைச் சீரமைத்தல்

**வினா எண் 53181—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 22]

(அ) விளாத்திகுளம் தொகுதிக்குட்பட்ட அருப்புக்கோட்டை, பாளையங்கோட்டை, பருவக்குடி, கோவில்பட்டி, எட்டயபுரம்—வேம்பார் சாலைகளைச் சீரமைக்க ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் தொகுதிக்குட்பட்ட, பாளையங்கோட்டை—அருப்புக்கோட்டை சாலையில் பழுதடைந்த பகுதிகளில் சுமார் 4.58 கி.மீ. மற்றும் 6.00 கி.மீ. நீளமுள்ள பகுதிகள் 2003-2004 ஆம் ஆண்டு சிறப்பு பழுதுபார்த்தல் திட்டத்தின்கீழ் பணி மேற்கொள்ளப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

பருவக்குடி—கோவில்பட்டி—வேம்பார் சாலையில் பழுதடைந்த பகுதிகளில் சுமார் 6.7 கி.மீ. நீளமுள்ள பகுதிகளை 2003-2004 ஆம் ஆண்டு சிறப்புப் பழுதுபார்த்தல் திட்டத்தின்கீழ் பணி மேற்கொள்ளப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. இச்சாலையில் சுமார் 26 கி.மீ. மற்றும் 14.10 கி.மீ. நீளமுள்ள பகுதிகளை மேம்பாடு செய்ய தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பரிசீலனையில் உள்ளது.

6—

### சாலையைச் சீரமைத்தல்

**வினா எண் 61874—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, பருவக்குடி—வேம்பார் சாலையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கோவில்பட்டி தொகுதிக்குட்பட்ட கி.மீ.39/2 முதல் 56/100 வரையிலான இருவழித் தடச் சாலையில், கி.மீ.39/2—41/0 பகுதி

2003-2004 ஆம் ஆண்டு பழுதுற்ற சாலைப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. மீதமுள்ள கி.மீ.41/0—57/0 வரையிலான பகுதியை 2004-2005 ஆம் ஆண்டிற்கான மத்திய சாலை நிதியின்கீழ் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**7—**

## கிளைச் சாலை

**வினா எண் 61880—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, எட்டயபுரம் பேருந்து நிலையத்திலிருந்து தூத்துக்குடி பை—பாஸ் சாலை வரையுள்ள சாலையை தேசிய நெடுஞ்சாலை 45-'பி'க்கு கிளைச் சாலையாக மாற்றி, சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள எட்டயபுரம் பேருந்து நிலையத்திலிருந்து தூத்துக்குடி புறவழிச் சாலை வரையுள்ள சாலைகளின் நீளம் குறைவாக உள்ளதால், இச்சாலைகளை தேசிய நெடுஞ்சாலை கிளைச் சாலைகளாக மாற்றும் பிரேரணை எதுவும் பரிசீலனையில் இல்லை.

**8—**

## நியாய விலைக் கடைகள்

**வினா எண் 34005—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு நகரில் இயங்கும் நியாய விலைக் கடைகள் எத்தனை?

(ஆ) மொத்தமாக எவ்வளவு குடும்ப அட்டைகள் உள்ளன?





**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

| | | |
|---|---|---|
| (அ) | செங்கல்பட்டு நகரில் இயங்கும் நியாய விலைக் கடைகள் மொத்தம் .. | 224 |
| (ஆ) | குடும்ப அட்டைகள் மொத்தம் .. | 1,26,676 |

**9—**

## ஏ.டி.எம். வசதி

**வினா எண் 52871—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கியில் ஏ.டி.எம். வசதி ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கியில் ஏ.டி.எம். வசதி ஏற்படுத்தும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) எழவில்லை.

**10—**

## கடன் உதவி

**வினா எண் 57328—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 22

தமிழகத்தில் சுய உதவிக் குழுக்களுக்கு கூட்டுறவு வங்கிகள்மூலம் கடன் வழங்குவதற்கு என்னென்ன தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தேசிய வங்கியின் மறுநிதி உதவித் திட்டத்தின்கீழ், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலம் கடன் வழங்கப்பட்டு வருகின்றன. தேசிய வங்கியின் தெளிவுரையின்படி, மகளிர் சுய உதவிக் குழுக்கள் கூட்டுறவு வங்கிகள்மூலம் கடன் உதவி பெற கீழ்க்கண்ட தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:

1. 10 முதல் 20 வரை ஒத்த பொருளாதார நிலைமை, ஒத்த கருத்து மற்றும் ஒத்த மனநிலை கொண்ட 18 முதல் 60 வயதுக்குட்பட்ட மகளிர் ஒன்றிணைந்து சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்தலாம்.

2. குழுவின் உறுப்பினர்கள் தங்கள் சக்திக்கேற்ப சேமிப்பு நிதிக்கு பணம் செலுத்தி, குழு தொடங்கி 2—3 மாதங்கள் கழித்து அந்த சேமிப்புப் பணத்தில் இருந்து சிறு சிறு கடன்களை தங்கள் உறுப்பினர்களுக்கு அளிக்க வேண்டும். மேலும், வங்கியில் சேமிப்புக் கணக்கு தொடங்கி குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் (குறைந்தபட்சம் இருவர்) குழுக் கணக்கை நிர்வகிக்க வேண்டும்.

3. சுய உதவிக் குழு தங்கள் குழுவின் உறுப்பினர்கள் விவரங்கள் சேமிப்பு மற்றும் கடன் விவரங்கள், வாராந்திரக் கூட்ட முடிவுகள் ஆகியவற்றிற்கான உரிய கணக்கு மற்றும் புத்தகங்களைப் பராமரிக்க வேண்டும்.

4. சுய உதவிக் குழுவின் வயது 6 மாதமான பின், சுய உதவிக் குழுவின் செயல்பாடு திருப்திகரமாக இருக்கும்பட்சத்தில் வங்கியில் இருந்து கடன் பெறலாம். சுய உதவிக் குழுவின் சேமிப்பைப் போன்று நான்கு மடங்கு வரை வங்கியில் இருந்து கடன் பெறலாம்.

5. சுய உதவிக் குழுவின் பெயரில் வழங்கப்படும் இக்கடனை, குழு தனது உறுப்பினர்களுக்குப் பல்வேறு தேவைகளுக்காக தங்களது முடிவின்படி கடன் வழங்கலாம். இக்கடனை 36 மாதங்களுக்குள் திருப்பிச் செலுத்தலாம். சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் இக்கடன்களுக்கு பிணையம் தேவையில்லை.



2005 செப்டம்பர் 22]

6. சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்குவதற்கான தகுதியை நிர்ணயிக்க தேசிய வங்கியினுடைய தெளிவுரையின்படி மதிப்பெண்கள் வழங்கப்பட்டு, குழுவின் செயல்பாடு மதிப்பீடு செய்யப்பட்டு வங்கிக் கடன் அளிக்கப்படுகிறது.

**11—**

## கட்டடத்தைப் புதுப்பித்தல்

**வினா எண் 59165—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், நெப்பத்தூர் ஊராட்சியில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கக் கட்டடம் பழுதடைந்துள்ளதைப் புதுப்பித்துக் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நெப்பத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி 1962 ஆம் ஆண்டு கட்டப்பட்டு சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதன் மதிப்பீடு ரூ.10,000/- ஆகும். கட்டடம் ஓரளவு பழுதடைந்து இருந்தாலும், பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளது. வங்கி கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருகிறது. மேலும், வங்கி ஆதாரக் குறைவு, நிதி சமமின்மை மற்றும் குவிப்பு நட்டத்தில் செயல்படுவதால் புதிய கட்டடம் கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. ஆனால், இதன் அருகில் செயல்பட்டு வரும் திருவாலி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கலைக்கப்பட்டுவிட்டபடியால், அதன் விவகார எல்லையில் உள்ள தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு நெப்பத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிமூலம் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நெப்பத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் விவகார எல்லையை திருவாலி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் விவகார எல்லையுடன் விஸ்தரிக்கவும், அதன்படி நல்ல நிலையில் உள்ள திருவாலி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்

கட்டடத்திற்கு இவ்வங்கியின் அலுவலகத்தை மாற்றவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**12—**

## குடும்ப அட்டைகள்

**வினா எண் 60769—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, காட்டுபிராமணவயல், தீயத்தூர், திருப்புனவாசல், கோட்டைப்பட்டினம், அடம்பூர், கரகத்திகோட்டை, மணமேல்குடி, மீமிசல், விளனூர், பொன்பேத்தி ஆகிய கிராமங்களில் வேளாண் வங்கிகளில் "எச்" முத்திரை குத்தப்பட்ட குடும்ப அட்டைகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதிக்குட்பட்ட காட்டுபிராமணவயல், தீயத்தூர், திருப்புனவாசல், கோட்டைப்பட்டினம், அடம்பூர், கரகத்திகோட்டை, மணமேல்குடி, மீமிசல், விளனூர் மற்றும் பொன்பேத்தி ஆகிய கிராமங்களில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் நியாய விலைக் கடைகளில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளில் முறையே *48, 36, 66, 177, 43, 117, 462, 435, 39* மற்றும் *43* குடும்ப அட்டைகளில் "எச்" முத்திரை பதியப்பட்டது. மேற்கண்ட குடும்ப அட்டைகள் அனைத்திற்கும் "எச்" முத்திரை நீக்கம் செய்யப்பட்டுவிட்டது.

**13—**

## குடும்ப அட்டைகள்

**வினா எண் 60780—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அம்பலவானேந்தல், கண்டனிவயல், தினையாகுடி, நிலையூர், ஆவுடையார்கோவில், கொடிவயல், விஜயபுரம்,



அரசர்குளம், மாங்குடி, பத்தரசன்கோட்டை, உலகளந்தான்வயல், ஆயங்குடி, பெருங்காடு, காரக்கோட்டை வேளாண் கூட்டுறவு வங்கிகளில் "எச்" முத்திரை குத்தப்பட்ட குடும்ப அட்டைகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதிக்குட்பட்ட அம்பலவானேந்தல், கண்டனிவயல், தினையாகுடி, நிலையூர், ஆவுடையார்கோவில், கொடிவயல், விஜயபுரம், அரசர்குளம், மாங்குடி, பத்தரசன்கோட்டை, உலகளந்தான்வயல், ஆயங்குடி, பெருங்காடு மற்றும் காரக்கோட்டை ஆகிய ஊர்களில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நடத்தும் நியாய விலைக்கடைகளில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளில் முறையே *72, 33, 39, 29, 333, 53, 53, 466, 190, 17, 46, 87, 41* மற்றும் *294* குடும்ப அட்டைகளில் "எச்" முத்திரை பதிக்கப்பட்டது. தற்சமயம் மேற்கூறிய குடும்ப அட்டைகளில் "எச்" முத்திரை நீக்கம் செய்யப்பட்டுவிட்டது.

**14—**

## விற்பனை நிலையங்கள்

**வினா எண் 65119—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்தாவது ஐந்தாண்டு திட்டப் பணிகளில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் சில்லறை மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் எத்தனை ஏற்படுத்தப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், பின்வரும் மூன்று மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன:

[2005 செப்டம்பர் 22

(1) காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிமிடெட், வையாவூர் சாலை, காஞ்சிபுரம் வட்டம்.

(2) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, திருக்கழுக்குன்றம்.

(3) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, காயிரம்பேடு கிராமம், செங்கல்பட்டு வட்டம்.

**15—**

## அரிசி வழங்குதல்

**வினா எண் 66708—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், வடபூதனம் கிராமத்தில் 600 குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வடபூதனம் கிராமத்தில் உள்ள 600 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களுக்கு உரிமையுள்ள அளவுக்கு மீறி அரிசி வழங்கமாட்டோம் என மறுத்து விட்டனர். பின், தற்போது கேட்பதால் சிறப்பினமாகக் கருதி அரிசி வழங்க நடவடிக்கை எடுக்கும்படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**16—**

## தையல் இயந்திரம்

**வினா எண் 36634—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் ஏழை கூலித் தொழிலாளர்களுக்குத் தையல் இயந்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?



2005 செப்டம்பர் 22]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் ஆதரவற்ற விதவை, ஆதரவற்ற மகளிர் சமூகத்திலும், பொருளாதாரத்திலும் பின்தங்கிய உடல் அளவில் ஊனமுற்ற பெண்கள், உடல் ஊனமுற்ற ஆண்கள் ஆகியவர்களில் தையல் தெரிந்தவர்களுக்கு மட்டுமே தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகிறது. ஏழை கூலித் தொழிலாளர்களில் தையல் தெரியாதவர்களுக்கு வழங்க இயலாது.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**17—**

## தையல் இயந்திரம் வழங்குதல்

**வினா எண் 49796—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் இரண்டு வருடமாக விதவைப் பெண்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும் இன்னும் தையல் மிஷின் வழங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் 2003—2004 ஆம் ஆண்டில் ஊனமுற்ற ஒருவருக்கும், விதவை ஒருவருக்கும், கணவனால் கைவிடப்பட்ட ஒருவருக்கும் மற்றும் 16 ஏழைப் பெண்களுக்கும் சேர்த்து 19 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

[2005 செப்டம்பர் 22

18—

## முதியோர் உதவித் தொகை

**வினா எண் 59985—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002, 2002-2003, 2003-2004 ஆம் ஆண்டுகளில் அறந்தாங்கி, மணமேல்குடி மற்றும் ஆவுடையார்கோவில் தாலுகாக்களில் வழங்கப்பட்ட முதியோர் உதவித் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

2001-2002, 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட முதியோர் உதவித் தொகை பற்றிய விவரம் பின்வருமாறு:—

| ஆண்டு | அறந்தாங்கி ரூ. | மணமேல்குடி ரூ. | ஆவுடையார்கோவில் ரூ. |
|---|---|---|---|
| 2001—2002 | 30,75,200 | 13,73,400 | 13,00,800 |
| 2002—2003 | 30,99,800 | 14,24,200 | 12,96,200 |
| 2003—2004 | 31,30,400 | 13,95,800 | 12,04,800 |

19—

## முதியோர் இல்லம்

**வினா எண் 64067—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில் முதியோர் இல்லம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் முதியோர் இல்லம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

20—

## குழந்தைகள் நலக் காப்பகம்

**வினா எண் 66815—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகராட்சியில் குழந்தைகள் நலக் காப்பகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமூக நலத் துறையின் மூலம் பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகத் திட்டம் மாநில அரசு நிதி உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கி வருகின்றன. அவ்வாறான 141 குழந்தைகள் காப்பகங்களுக்கு அரசு மானிய உதவி அளித்து வருகிறது. இந்நிலையில், சீர்காழி நகராட்சியில் பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகங்கள் நடத்த தொண்டு நிறுவனம் ஏதேனும் முன்வந்தால் அந்நிறுவனத்தின் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

21—

## கூடுதல் தளவாட சாமான்கள்

**வினா எண் 71971—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டு வளர்ச்சித் துறையில் பயனாளிகளுக்கு தளவாடச் சாமான்கள் வழங்குவதை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

தளவாடச் சாமான்கள் பயனாளிகளுக்கு கிரியா ஊக்கித் திட்டத்தின் மூலம் மானியமாக வழங்கப்படுகின்றன. மல்பரித் தோட்ட அளவின் தேவைக்கு ஏற்ப போதுமான வகையில் பட்டு விவசாயிகளுக்குத் தளவாடச் சாமான்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசின் நிதி ஒதுக்கீட்டினைக் கருத்திற்கொண்டு அதற்கு ஏற்ற வகையில் தளவாடச் சாமான்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தவிர, நடப்பு ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டத்தில் 30 பயனாளிகளுக்குத் தளவாடச் சாமான்கள் கொள்முதல் செய்து வழங்கிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**22—**

## பணிப் பாதுகாப்பு

**வினா எண் 62248—திரு கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி இரத்து செய்யப்பட்டால் குறித்த தரம் (நார்ம்ஸ்) ஏற்படுத்தி செய்பவர்களுக்கு பணிப் பாதுகாப்பு வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உள்ள பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் உடல் நலன் பாதுகாப்பு மற்றும் நல வசதிகள் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் கிடைக்கப்பெறும் வகையில் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையினால் 1948 ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் விதிகளின்மூலம் செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால், தொழிற்சாலைகள் பல்வேறு காரணங்களுக்காக மூடப்படுமேயானால், அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணிப் பாதுகாப்பு குறித்து இத்துறையினரால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாது.



**23—**

## பிரமலைக் கள்ளர் மறுவாழ்வுத் திட்டம்

**வினா எண் 37790—திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிரமலைக் கள்ளர் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் இச்சமுதாயத்தினருக்காக ஆண்டொன்றுக்கு அரசு செய்யும் செலவு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பிரமலைக் கள்ளர் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் இச்சமுதாயத்தினருக்காக ஆண்டொன்றுக்கு அரசு செய்யும் செலவு குறித்த விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | ஆண்டு | கள்ளர் சீரமைப்புப் பணிக் களுக்கான செலவினம் | கள்ளர் சீரமைப்பு விடுதி களுக்கான செலவினம் | உதவித் தொகை மற்றும் உணவுக் கட்டணத் தொகை | மொத்தம் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2001—2002 | 19.92 | 6.11 | 0.85 | 26.88 |
| 2 | 2002—2003 | 18.15 | 6.53 | 1.85 | 26.53 |
| 3 | 2003—2004 | 17.59 | 7.33 | — | 24.92 |

மேலும், இதைத் தவிர பிரமலைக் கள்ளர் இனத்தவருக்காக தேனி மாவட்டம், உத்தமபாளையத்திலும், திருச்சி மாவட்டம் குழுளூரிலும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் துவங்க ரூ.50.00 இலட்சம், கல்வி உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்க ரூ.35.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.85.00 இலட்சம் 2001—2002 ஆம் நிதியாண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. பிரமலைக் கள்ளர்களின் மறுவாழ்வுத் திட்டங்களுக்குப் பொதுவாக ஆண்டொன்றுக்கு ரூ.25.00 கோடிக்குக் குறையாமல் அரசு செலவு செய்கிறது.

[2005 செப்டம்பர் 22

24—

## கடன் வசதி

**வினா எண் 62817—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிறுபான்மையினருக்கு சுயதொழில் தொடங்கிட வழங்கிய கடன் தொகை எவ்வளவு?

(ஆ) எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிறுபான்மையினருக்கு சுயதொழில் தொடங்கிட ரூ.110.38 இலட்சம் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 283 பயனாளிகளுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

25—

## கடன் தொகையை உயர்த்துதல்

**வினா எண் 62842—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகம், சிறுபான்மையினர் சுயதொழில் தொடங்கிட வழங்கும் கடன் தொகையை ரூ.50,000/-ஆக உயர்த்தி வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் சிறுபான்மையினர் சுய தொழில் தொடங்கிட



2005 செப்டம்பர் 22]

தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் தனி நபர் கடன் திட்டத்தின்கீழ் ரூபாய் ஒரு இலட்சம் வரை கடன் வழங்குகிறது.

26—

## ஏரிகளைப் பாதுகாத்தல்

**வினா எண் 20546—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் உள்ள ஏரிகளை நிலமாக மாற்றி பயிர் செய்வதை அகற்றி ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்குப் பயன்பட அரசு உதவி செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) திருப்பத்தூர் வட்டம், நாட்ராம்பள்ளி தொகுதிக்குட்பட்ட உள்வட்ட கிராமங்களிலுள்ள ஏரிகளில் நீர் தேங்கும் வாய்ப்பு உள்ளதால் கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்த வாய்ப்பு இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

27—

## கால்நடை கிளை நிலையம்

**வினா எண் 41506—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதியில் காரணமின்றி நரியனேரிக்கு மாற்றிய கால்நடை கிளை நிலையத்தை மீண்டும் கந்திலி கிராமத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் மருந்துகள், உறைவிந்து கருவூட்டல், உபகரணங்கள் மற்றும் அறையணிகள் ஆகியவை வழங்கி ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிலும் மற்றும் அருகில் உள்ள மூன்று கிராமங்கள் உள்ளிட்ட பகுதியில் செயல்படத்தக்க வகையில் கால்நடை விரிவாக்க அலுவலர்களுக்கான நடமாடும் கால்நடை மருந்தகம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வந்தது. ஆதலால், கந்திலி கிராமத்தில் செயல்பட்டு வந்த கால்நடை கிளை நிலையம் கால்நடை ஆய்வாளருடன் நரியனேரிக்கு மாற்றப்பட்டது. கந்திலியில் தற்பொழுது கால்நடை ஆய்வாளர் பதவியோ அல்லது கால்நடை உதவி மருத்துவர் பதவியோ காலியாக இல்லை. தற்பொழுது எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் பணியாற்றி வந்த கால்நடை விரிவாக்க அலுவலர்கள் மீண்டும் தாய்த்துறைக்குத் திரும்ப அழைக்கப்பட்டு விட்டனர். எனவே, நரியனேரிக்கு மாற்றிய கால்நடை கிளை நிலையத்தை மீண்டும் கந்திலி கிராமத்திற்கு மாற்ற தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.

**28—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 50629—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருநகர் ஊராட்சியில் உள்ள துணை கால்நடை மருத்துவமனையில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, திருநகர் ஊராட்சியில் உள்ள கால்நடை கிளை நிலையத்திற்கு ஆழ்குழாய் கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட தற்போது அரசிடம் கருத்துரு ஏதும் இல்லை.

(ஆ) எழாது.



2005 செப்டம்பர் 22]

**29—**

### பவளப் பாறை

**வினா எண் 36669—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி கடல் ஓரத்தில் உள்ள இடமான சிலவைத் துறை, தடுவைக் குளம் பகுதிகளில் பவளப் பாறை உடைப்பு தொடர்ந்து நடந்து வருவது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி கடல் ஓரத்தில் உள்ள சிலவைத் துறை, தடுவைக் குளம் பகுதிகளில் பவளப் பாறை உடைப்பு ஏதும் தொடர்ந்து நடந்து வரவில்லை. அவ்வாறு நடக்காதவாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வன சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு தணிக்கை செய்யப்பட்டு வரப்படுகிறது. ஆனால், தற்சமயம் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மேல்முறையீட்டு மனு எண் 723/724/725, 23—4—2004—ல் பெறப்பட்ட சாதகமான ஆணைகளை வைத்துக் கொண்டு வியாபாரிகள் தீவுப் பகுதிகளில் உள்ள பவளப் பாறைகளைச் சேகரித்து வனச்சிப்பந்திகளை அச்சுறுத்தி வலுக்கட்டாயமாக ஏற்றி எடுத்துச் செல்ல எத்தனித்து வருகின்றார்கள். இது தொடர்பாக இராமநாதபுரம் வன உயிரினக் காப்பாளர், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரையும், காவல் துறை கண்காணிப்பாளரையும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

[2005 செப்டம்பர் 22

30—

## கிளை அலுவலகம்

**வினா எண் 67206—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் சுற்றுச்சூழல் துறை அலுவலகத்தின் கிளை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறையில் சுற்றுச்சூழல் துறை அலுவலகத்தின் கிளை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுச்சூழல் துறை இயக்ககம் தற்பொழுது சென்னையில் மட்டும் இயங்கி வருகிறது. இதற்கு மாவட்ட அளவில் அலுவலகங்கள் இல்லை.

31—

## புதிய அலுவலகக் கட்டடம்

**வினா எண் 64674—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில், வட்ட கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திற்குப் புதிய அலுவலகக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களுக்கு அரசு வாயிலாக அலுவலகக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை.



2005 செப்டம்பர் 22]

32—

## ஐ.டி.ஐ. அமைத்தல்

**வினா எண் 65582—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், பழநி ஆண்டவர் மில்ஸ் கூட்டுறவு சங்க இடத்தில் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் மூலம் ஐ.டி.ஐ. அமைக்க அனுமதி வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) உடுமலை வட்டம், பழநி ஆண்டவர் மில்ஸ் கூட்டுறவு சங்க இடத்தில் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் மூலம் ஐ.டி.ஐ. அமைக்க அனுமதி கோரும் முன்மொழிவுகள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

33—

## கட்டட வசதி

**வினா எண் 65230—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், மேட்டுதாங்கல் ஊராட்சியில் புதியதாக மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், மேட்டுதாங்கல் ஊராட்சியில் அமைந்துள்ள த.பி.டி 622 மேட்டுதாங்கல் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்குச் சொந்தமாக அடிமனை ஏதும் இல்லை. சங்கத்தில் சொந்தக் கட்டடம் கட்ட போதுமான நிதி ஆதாரங்களும் இல்லை. சட்டமன்ற உறுப்பினர் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்து தந்தால் அரசு புறம்போக்கு நிலத்தினைப் பெற்று அதில் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும்.

**34—**

## பெண் பீடித் தொழிலாளர்கள்

**வினா எண் 54538—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எவ்வளவு பெண்கள் பீடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்?

(ஆ) எந்த மாவட்டத்தில் பெண் பீடித் தொழிலாளர்கள் அதிகம்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 2,00,778 பெண்கள் பீடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில்தான் பெண் பீடித் தொழிலாளர்கள் அதிகமாக உள்ளனர்.

**35—**

## நாடக மேடை

**வினா எண் 3060—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 22]

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், குறவகுடி பஞ்சாயத்து, வின்னகுடியில் நாடக மேடை கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், குறவகுடி பஞ்சாயத்தில் நாடக மேடை கட்ட ஆகும் செலவு ரூ.1.50 இலட்சம். குறவகுடி பஞ்சாயத்தில் போதிய நிதி வசதி இல்லை. மேலும், நாடக மேடை கட்ட பங்குத் தொகை செலுத்த பொதுமக்கள் யாரும் முன்வரவில்லை. எனவே, குறவகுடி பஞ்சாயத்து, வின்னகுடியில் நாடக மேடை கட்டித் தர தற்சமயம் வாய்ப்பில்லை.

**36—**

## பயணிகள் நிழற்குடை

**வினா எண் 5635—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, முத்தரசன்குப்பத்தில் பயணிகள் நிழற்குடை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, முத்தரசன்குப்பம் கிராமத்தின் நிதிநிலை சரியில்லாததால், மேற்கண்ட கிராமத்தில் பேருந்து பயணியர் நிழற்குடை இப்போது அமைத்துத் தர இயலாது.

37—

## பேருந்து நிழலகம்

**வினா எண் 8371—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், நெய்குப்பை ஊராட்சி, அன்னுகுடி கிராமத்தில் பேருந்து நிழலகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியம், நெய்குப்பை ஊராட்சியில் 2003-2004 ஆம் ஆண்டு மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.30,000/— மதிப்பீட்டில் பேருந்து நிழற்குடை கட்டி முடிக்கப்பட்டு விட்டது.

38—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 10823—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, கோவள்ளி கோம்பைக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, கோவள்ளி கோம்பை குடியிருப்பிற்கு தற்போது 7 கையிறைப்பான்கள் மற்றும் சிறு மின்விசை திட்டம்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது பரிசிலனையில் இல்லை.

39—

## சமுதாய நலக் கூடம்

**வினா எண் 13601—திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதியில் உள்ள உக்கரத்தில் திருமண மண்டபம், குளியலறை மற்றும் கழிவறை சரி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியம், உக்கரம் ஊராட்சி, உக்கரத்தில் ரூ.3.15 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய நலக் கூடம் கட்டப்பட்டுள்ளது. இதுதான் திருமண மண்டபமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் குளியலறை மற்றும் கழிவறை சரிசெய்யப்பட்டுள்ளது.

40—

## சமுதாய நலக் கூடம்

**வினா எண் 14152—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் ஊராட்சியில் ஒரு சமுதாயக் கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் ஊராட்சியின் நிதிநிலை சரியில்லாததால், காடாம்புலியூர் ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைத்துத் தர இப்போது இயலாது.

**41—**

**மயான வசதி**

**வினா எண் 15645—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், மும்முடிக்குப்பம் ஆதி திராவிட மக்களுக்கு மயான வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், மும்முடிக்குப்பம் ஆதி திராவிடர் மற்றும் வேட்டைக்கார இன பகுதிக்கும் சேர்த்து மயான பூமி அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**42—**

**பேருந்து நிறுத்தம் மற்றும் நிழற்குடை**

**வினா எண் 15721—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 22]

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், ரங்காபுரம் கிராமத்தில் பேருந்து நிறுத்தம் மற்றும் பயணியர் நிழற்குடை ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ரங்காபுரம் கிராமத்தில் 2004-2005 ஆம் ஆண்டில் ராஜ்ய சபா உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் பயணியர் நிழற்குடை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**43—**

**சமூகக் கூடம்**

**வினா எண் 15730—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், கம்மவார்பாளையம் கிராமத்திற்கு சமூக நலக் கூடம் வேண்டும் எனக் கேட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது சமூக நலக் கூடம் கட்டித் தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நுங்கம்பாக்கம் ஊராட்சியில் கம்மவார்பாளையம் கிராமத்திற்கு சமூக நலக் கூடம் அமைப்பதற்கு, சமூக நலக் கூடம் கட்டும் பணி நடைமுறையில் இல்லை என்பதால், மேற்படி கிராமத்திற்கு சமூக நலக் கூடக் கட்டடம் கட்டித் தர இயலவில்லை.

[2005 செப்டம்பர் 22

**44—**

## நாடக மேடை

**வினா எண் 19225—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், மேக்கிழார்பட்டி ஊராட்சி, மேக்கிழார்பட்டி மெயின் தெருவில் நாடக மேடை கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், மேக்கிழார்பட்டி ஊராட்சி, மேக்கிழார் மெயின் தெருவில் நாடக மேடை கட்டிக் கொடுக்க தற்போது வாய்ப்பு இல்லை.

**45—**

## புதிய குழாய் தொடரமைப்பு

**வினா எண் 19981—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, எச்சூர் மதுரா மலைவையாவூர் கிராமத்தில் ஆற்று நீர் வழங்க புதிய குழாய் தொடரமைப்பு (பைப் லைன்) போட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் ஒன்றியத்தைச் சேர்ந்த எச்சூர் மழலயாவூர் (மலைவையாவூர்) குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்



2005 செப்டம்பர் 22]

தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டத்தின்மூலம் அத்தியாவசியத் தேவைகளுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. இக்குடியிருப்பின் மொத்த மக்கள் தொகை 380 ஆகும். இக்குடியிருப்பிற்குக் கூடுதல் குடிநீர் வழங்கும் பொருட்டு, ஆற்று நீர் வழங்கும் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்ததில், இக்குடியிருப்பு ஆற்றிலிருந்து சுமார் 17 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளதால், ஆற்று நீர் வழங்க இயலாத நிலை உள்ளது. எனினும், இக்குடியிருப்பிற்குத் தற்போது செயலில் உள்ள குடிநீர்த் திட்டத்துடன் ஒரு சிறு மின்விசைத் திட்டமும் செயலாக்கப்பட்டு போதிய அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**46—**

## நூலகம்

**வினா எண் 21689—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி ஊராட்சியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் நூலகம் தினந்தோறும் திறந்து பொது மக்கள் படிக்க வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி ஊராட்சியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் நூலகம் பொதுமக்கள் படிப்பதற்கு வசதியாக கன்னந்தேரி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் தினந்தோறும் காலை 10-00 மணி முதல் மதியம் 1-00 மணி வரை திறந்து வைக்கப்படுகிறது.

[2005 செப்டம்பர் 22

47—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 21875—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், ஏலகிரி ஊராட்சி, சென்ராயன் கொட்டாய் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், ஏலகிரி ஊராட்சி, சென்ராயன் கொட்டாய் குடியிருப்பின் தற்போதைய மக்கள் தொகை 103 ஆகும். இக்குடியிருப்பில் ஒரு கையிறைப்பான் திட்டம் செயலில் உள்ளது. மேலும், கமலநத்தம் குடியிருப்பின் குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பிற்கு தற்போது செயலில் உள்ள திட்டமே போதுமானதாகும்.

48—

## நிழற்குடை

**வினா எண் 22610—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தனக்காகுளம் ஊராட்சி, கோலியான்குளம் வடக்குப் பகுதியில் பயணிகள் நிழற்குடை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சியில் நிதி வசதி இல்லாததால், திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தனக்காகுளம் ஊராட்சி, கோலியான்குளம் வடக்குப் பகுதியில் நிதிப் பற்றாக்குறை காரணமாக தற்போது பயணிகள் நிழற்குடை கட்ட இயலாது.

49—

## பயணிகள் நிழற்குடை

**வினா எண் 22611—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தனக்காகுளம் ஊராட்சி, கோலியான்குளம் நக்கனேரி விலக்கு பகுதியில் பயணிகள் நிழற்குடை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சியில் நிதி வசதி இல்லாததால், தனக்காகுளம் ஊராட்சி, கோலியான்குளம் நக்கனேரி விலக்கு பகுதியில் பயணிகள் நிழற்குடை கட்ட இயலாது.

50—

## பயணிகள் நிழற்குடை

**வினா எண் 22622—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தனக்காகுளம் ஊராட்சி, நக்கனேரி பேருந்து நிறுத்தத்தில் சாலையின் இருபுறமும் பயணிகள் நிழற்குடை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சியில் நிதி வசதி இல்லாததால், திருநெல்வேலி மாவட்டம், தனக்காகுளம் ஊராட்சி, நக்கனேரி பேருந்து நிறுத்தத்தில் சாலையின் இருபுறமும் பயணிகள் நிழற்குடை கட்ட இயலாது.

**51—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 25778—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, கூத்தப்பாடி கிராமத்தில் குடிநீர் கஷ்டம் அதிகமாக இருப்பதால், இங்கு கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் ஒன்றியம், கூத்தப்பாடி ஊராட்சி, கூத்தப்பாடி கிராமத்திற்கு 11 கையிறைப்பான்கள் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. தற்போதைய மக்கள் தொகைக்கு செயலில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியே போதுமானதாகும். எனவே, அங்கு கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு இல்லை.



2005 செப்டம்பர் 22]

**52—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 25788—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி, மாங்கரையில் போதுமான குடிநீர் வசதியில்லாமல் இருப்பதால், கூடுதலாக இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், மாங்கரை ஊராட்சி, மாங்கரை குடியிருப்பின் தற்போதைய மக்கள் தொகை 1,753 ஆகும். இக்குடியிருப்பில் 10 கையிறைப்பான்கள் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப் பம்பு திட்டம் ஆகியவை மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, மேற்குறிப்பிட்ட குடியிருப்பிற்குக் கூடுதலாக மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கத் தேவையில்லை.

**53—**

**படிப்பகம் கட்டுதல்**

**வினா எண் 29728—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுரைக்காய்பட்டி ஊராட்சி, ரணசூரணநாயக்கர்பட்டியில், ஆதி திராவிடர் தெருவில் படிப்பகம் கட்டும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், சுரைக்காய்பட்டி ஊராட்சி, ரணசூரணநாயக்கர்பட்டியில், ஆதி திராவிடர் தெருவில் படிப்பகம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.*

**54—**

**மகளிர் சுய உதவிக் குழுக்கள்**

**வினா எண் 32953—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் எத்தனை மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன?*

*(ஆ) 2002 ஆம் ஆண்டு எத்தனை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்கப்பட்டுள்ளன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 62 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. 2002 ஆம் ஆண்டில் 23 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ. 16.10 இலட்சம் வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.*

**55—**

**பேருந்து நிழற்கூடம்**

**வினா எண் 36029—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





*(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், தி.கவுண்டம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட திடுமல்புதூர் மாரியம்மன் கோயில் பேருந்து நிறுத்தத்தில் பேருந்து நிழற்கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை. வரும் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றால், முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும்.*

**56—**

**அங்காடிக்குக் கட்டட வசதி**

**வினா எண் 39836—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*அறந்தாங்கி தொகுதி, புண்ணிவயல் அங்காடிக்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*கடைகள் கட்டி வாடகைக்கு விட போதிய நிதி வசதி ஊராட்சியில் இல்லை என்பதால், புண்ணிவயல் ஊராட்சியில் கடைகள் கட்ட தற்போது திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.*

**57—**

**வணிக வளாகம்**

**வினா எண் 40605—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 22

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், அகணி ஊராட்சி, அகணி கடைவீதியில் வணிக வளாகம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், அகணி கடைவீதியில் வணிக வளாகம் கட்ட தற்பொழுது நடைமுறையில் உள்ள திட்டங்களில் வழிவகை இல்லை. எனவே, இப்பணியை செய்துத் தர இயலாது.

**58—**

**சமுதாயக் கூடங்கள்**

**வினா எண் 40810—திரு. பெ. வாசுதேவன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ஊராட்சி மன்றங்களில் சமுதாயக் கூடங்கள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சி அமைப்புகளின் நிதிநிலைக்கேற்பவும், சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளுக்கு ஏற்பவும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களின்கீழ், அடிப்படை வசதிகளுக்கேற்ப சமுதாயக் கூடங்களை அந்தந்த ஊராட்சி அமைப்புகளே கட்டிக் கொள்ள வழிவகைகள் உள்ளன.



2005 செப்டம்பர் 22]

**59—**

**சலவை நிலையம்**

**வினா எண் 41452—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, தும்மக்குண்டு ஊராட்சியில் உள்ள ஏகாலிகளுக்கு சலவை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2005-2006 ஆம் நிதி ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

**60—**

**பொது நூலகம்**

**வினா எண் 48105—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், உத்தங்குடி ஊராட்சியில் பொது நூலகம் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உத்தங்குடி ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய நிதிகளில் இருந்து இந்த வேலையினை எடுத்துச் செய்ய நிதி வசதி இல்லை.

**61—**

### சீரணி அரங்கம்

**வினா எண் 48263—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி. மோகனூர் ஊராட்சி ஒன்றியம், தோளூர் ஊராட்சியில் சீரணி அரங்கம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மோகனூர் ஊராட்சி ஒன்றியம், தோளூர் ஊராட்சி, தோளூர் கிராமத்தில் சீரணி அரங்கம் கட்டுவதற்கு வரும் நிதி ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் மேற்படி பணி நிறைவேற்றப்படும்.

**62—**

### சமுதாய நலக் கூடம்

**வினா எண் 48336—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், திருப்பைஞ்ஞிலி ஊராட்சியைச் சேர்ந்த ட்டி.ஈச்சம்பட்டி மற்றும் கீழ்வங்காரம் கிராமங்களில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், திருப்பைஞ்ஞிலி ஊராட்சியைச் சேர்ந்த ட்டி.ஈச்சம்பட்டி மற்றும்



கீழ்வங்காரம் கிராமங்களில் நிதி வசதி இல்லாததால், மேற்கண்ட கிராமங்களில் சமுதாய நலக் கூடம் கட்டித் தர இயலாது.

**63—**

### சமுதாய நலக் கூடம்

**வினா எண் 48345—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, கோட்டத்தூரில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிதி நிலைமை சரியில்லாததால், முசிறி தொகுதி, கோட்டத்தூரில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தர இயலாது.

**64—**

### சமுதாய நலக் கூடம்

**வினா எண் 48351—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், ட்டி.புத்தூர் ஊராட்சியில் ஆதி திராவிடர் பகுதியில் சமுதாய நலக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், தண்டலைபுத்தூர் ஊராட்சியில் போதிய நிதி வசதியில்லாததால், தண்டலைபுத்தூர்

186285

[2005 செப்டம்பர் 22

ஊராட்சி ஆதி திராவிடர் பகுதியில் சமுதாய நலக் கூடம் கட்டித் தர இப்போது இயலாது.

**65—**

### குமாரசாமிபாளையத்தில் சமுதாயக் கூடம்

**வினா எண் 48454—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஒன்றியம், குமாரசாமிபாளையத்தில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், குமாரசாமிபாளையத்தில் 2003-2004 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு சமுதாயக் கூடக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**66—**

### பல்லபுரத்தில் சமுதாயக் கூடம்

**வினா எண் 49683—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி ஒன்றியம், பல்லபுரம் கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) லால்குடி ஊராட்சி ஒன்றியத்தில் பல்லபுரம் கிராமத்தில் சமுதாயக் கூடம் வரும் நிதியாண்டில் (2005-2006) சட்டமன்ற உறுப்பினர் வளர்ச்சித் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் வளர்ச்சித் திட்டம் மற்றும் இதர திட்டத்தின்கீழ் ரூ. 6.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**67—**

### சமுதாயக் கூடம்

**வினா எண் 51565—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், 10.கிள்ளியூர் ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், 10.கிள்ளியூர் ஊராட்சியில் சமுதாயக் கூடம் அரசு நிதியில் கட்டுவதற்கு விதிகளில் வழிவகை இல்லை.

**68—**

### கட்டட வசதி

**வினா எண் 51781—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 22

(அ) பேரணாம்பட்டு பேரூராட்சியைச் சேர்ந்த 1-வது மற்றும் 15-வது வார்டில் மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு பேரூராட்சிப் பகுதியில் மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்ட அரசு விதிமுறைகள் இல்லை. மேலும், ஊராட்சிப் பகுதியில் மட்டுமே இதுபோன்ற பணிகளைச் செய்ய இயலும்.

**69—**

## கட்டட வசதி

**வினா எண் 51929—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், அரசூர் ஊராட்சி, திருச்சிற்றம்பலம், அரசூர், காட்டூர் ஊராட்சியில் சுப்பையாபுரம், எடமணல் ஊராட்சியில் வருஷபத்து, சோதியக்குடி ஊராட்சியில் மடப்புரம் ஆகிய இடங்களில் உள்ள ஆதி திராவிடர் தெருவில் மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அரசூர் ஊராட்சியில் திருச்சிற்றம்பலம், அரசூர், காட்டூர் ஊராட்சிகளில் சுப்பையாபுரம், எடமணல் ஊராட்சியில் வருஷபத்து, சோதியக்குடி



2005 செப்டம்பர் 22]

ஊராட்சியில் மடப்புரம் ஆகிய இடங்களில் உள்ள ஆதி திராவிடர் தெருவில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுவிற்கு 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுகளில் கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது. மேலும், ஓர் ஊராட்சிக்கு ஒரு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் மட்டுமே கட்டித் தரப்படுவதால், மேற்கண்டுள்ள இடங்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்டித் தர இயலாது.

**70—**

## கட்டட வசதி

**வினா எண் 51935—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பூங்குடி ஆதி திராவிடர் மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதிரிவேளூர் ஊராட்சியில் கீழ் தெருவில் 2002-2003 ஆம் ஆண்டு எஸ்ஜி.ஆர்.ஒய். திட்டத்தின்கீழ் மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்கள் ஓர் ஊராட்சிக்கு ஒன்று மட்டுமே கட்டிக் கொடுக்கப்பட்டு வருவதால், மாதிரிவேளூர் ஊராட்சி, பூங்குடி மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்டித் தர இயலாது.

**71—**

## மாங்கனாம்பட்டில் சமுதாயக் கூடம்

**வினா எண் 52297—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 22

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆணைக்காரன்சத்திரம் ஊராட்சி, மாங்கனாம்பட்டில் மக்கள் வசிக்கும் பகுதிக்குச் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆணைக்காரன்சத்திரம் ஊராட்சி, மாங்கனாம்பட்டில் மக்கள் வசிக்கும் பகுதிக்குச் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களில் வழிவகை இல்லை. எனவே, இப்பணியினைச் செய்து தர இயலாது.

**72—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 53100—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஒன்றியம், குன்னிப்பாளையம் கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், மணப்பள்ளி ஊராட்சி, குன்னிப்பாளையம் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டில் 2003-2004 ஆம் ஆண்டில் சமுதாயக் கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.



2005 செப்டம்பர் 22]

**73—**

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 53116—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, பரமத்திவேலூரில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிதிநிலை சரியில்லாததால் கபிலர்மலை தொகுதி, பரமத்திவேலூர் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்க இயலாது.

**74—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 53728—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் ஊராட்சியில் பெரியதாக ஒரு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் ஊராட்சியில் நிதிநிலை சரியாக இல்லாததால், அர்த்தநாரிபாளையம் ஊராட்சியில் பெரியதாக ஒரு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க இயலாது.

[2005 செப்டம்பர் 22

75—

## சமுதாயக் கூடம்

**வினா எண் 53935—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், கீழமூவர்க்கரை மீனவர் கிராமத்திற்குச் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள திட்டங்களில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க வழிவகை இல்லாததால், இப்பணியினைச் செய்து தர இயலாது.

76—

## மின் விளக்கு வசதி

**வினா எண் 55217—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், நாங்கூர் ஊராட்சி, கன்னியாகுடி ஊராட்சி, பெருமங்கலம் ஊராட்சி, திருவாலி ஊராட்சி, எடக்குடி வடபாதி ஊராட்சியில் சூரிய சக்தியைக் கொண்டு கிராம எரிசக்தி திட்டத்தின்கீழ் மின் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி ஒன்றியம், நாங்கூர் ஊராட்சியில் சூரிய ஒளியைக் கொண்டு கிராம எரிசக்தி திட்டத்தின்கீழ் 5 சூரிய விளக்குகள் ஊராட்சி



2005 செப்டம்பர் 22]

நிதி கணக்கு 1-ல் இருந்து அமைத்திட திட்ட அலுவலருக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், கன்னியாகுடி, பெருமங்கலம், திருவாலி, எடக்குடி, வடபாதி ஆகிய ஊராட்சிகளில் இப்பணியினைச் செய்திட போதுமான நிதி வசதி இல்லாததால் செய்து தர இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

77—

## மின் விளக்கு அமைத்தல்

**வினா எண் 55226—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், புதுத்துறை ஊராட்சியில், கொண்டல் ஊராட்சி, திருப்புங்கூர் ஊராட்சி மற்றும் 73 திருநகரி ஊராட்சிகளில் சூரிய எரிசக்திமூலம் கிராம எரிசக்தி திட்டத்தின்கீழ் மின் விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி ஒன்றியம், புதுத்துறை, கொண்டல், திருப்புங்கூர் மற்றும் 73 திருநகரி ஊராட்சிகளில் சூரிய எரிசக்தியைக் கொண்டு கிராம எரிசக்தி திட்டத்தின்கீழ் மின் விளக்குகள் அமைத்திட மேற்கண்ட ஊராட்சிகளின் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லை. எனவே, இப்பணியினைச் செய்து கொடுக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

78—

## நெற்களம்

**வினா எண் 55464—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 22

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், வேள்வரை தொழவங்கனூர், ஆலத்தூர், வெளிவயல், கொன்னமங்கலம், குருத்திரன்கோட்டை, கத்தரிக்காடு கிராமம் மற்றும் அத்தாணியில் சிமெண்ட் நெற்களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிக்கு ஒரு நெற்களம் அமைக்கும் திட்டப்படி, வேள்வரை தொழவங்கனூர், ஆலத்தூர், வெளிவயல், கொன்னமங்கலம், குருத்திரன்கோட்டை, கத்தரிக்காடு கிராமம் மற்றும் அத்தாணி கிராமங்களில் உள்ள ஊராட்சிகளில் நெற்களம் அமைக்கப்பட்டுள்ளது.

**79—**

## நெற்களம் அமைத்தல்

**வினா எண் 55566—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், விளானூர், அமரடக்கி, குஞ்சனூர், சித்தக்கூர், ஒக்குர், எழுநூற்றிமங்கலம், பாதரக்குடி, ஏனாதி, திருப்புவனவாசல் கிராமங்களில் உள்ள ஊராட்சிகளில் நெற்களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிக்கு ஒரு நெற்களம் அமைக்கும் திட்டத்தின்படி, விளானூர், அமரடக்கி, குஞ்சனூர், சித்தக்கூர், ஒக்குர், எழுநூற்றிமங்கலம், பாதரக்குடி, ஏனாதி, திருப்புவனவாசல் கிராமங்களில் உள்ள ஊராட்சிகளில் நெற்களம் அமைக்கப்பட்டுள்ளது.



2005 செப்டம்பர் 22]

**80—**

## நெற்களம்

**வினா எண் 55575—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், அரியாமறைக்காடு கிராமம், மேல்மங்கலம் தெற்கு, இடையன்காடு பிள்ளைவயல் மற்றும் வன்னியபிள்ளை வயலில் சிமெண்ட் நெற்களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிக்கு ஒரு நெற்களம் அமைக்கும் திட்டத்தின்படி, அரியாமறைக்காடு, மேல்மங்கலம் தெற்கு, இடையன்காடு பிள்ளைவயல் மற்றும் வன்னியபிள்ளை வயல் கிராமங்களில் உள்ள ஊராட்சிகளில் நெற்களம் அமைக்கப்பட்டுள்ளது.

**81—**

## சிமெண்ட் நெற்களம்

**வினா எண் 55581—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், தாழனூர், கூடலூர், இறையான்மங்கலம், பெரியகோட்டூர், களபம் மற்றும் கரூரில் சிமெண்ட் நெற்களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிக்கு ஒரு நெற்களம் அமைக்கும் திட்டத்தின்படி, தாழனூர், கூடலூர், இறையான்மங்கலம், பெரியகோட்டூர், களபம் மற்றும் கரூர் கிராமங்களில் உள்ள ஊராட்சிகளில் சிமெண்ட் நெற்களம் அமைக்கப்பட்டுள்ளது.

[2005 செப்டம்பர் 22

82—

## சிமெண்ட் நெற்களம்

**வினா எண் 55591—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், அரசர்குளம் கிழக்கு, நெய்வத்தரி கிராமம், மேற்பனைக்காடு தெற்கில் பெரியாளூர் கிழக்கு, பூவற்றக்குடி கிராமம், ஆமாஞ்சி, விடத்திரான்வயல், ஆலங்குடி, பாத்தினி கிராமங்களில் சிமெண்ட் நெற்களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிக்கு ஒரு நெற்களம் கட்டுவது என்ற அரசின் திட்டத்தின்படி, அரசர்குளம் கிழக்கு, நெய்வத்தரி, மேற்பனைக்காடு, தெற்கு பெரியாளூர் கிழக்கு, பூவற்றக்குடி, ஆமாஞ்சி, விடத்திரான்வயல், ஆலங்குடி, பாத்தினி கிராமங்களில் உள்ள ஊராட்சிகளில் நெற்களம் அமைக்கப்பட்டுள்ளது.

83—

## சிமெண்ட் நெற்களம்

**வினா எண் 55600—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியத்தில் உலகவந்தான்வயல், சங்கரத்தி, வீராண்டான் கிராமம், பள்ளத்திவயல் ஆகிய இடங்களில் சிமெண்ட் நெற்களம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிக்கு ஒரு நெற்களம் அமைக்கும் திட்டத்தின்படி உலகவந்தான்வயல், சங்கரத்தி, வீராண்டான், பள்ளத்திவயல் கிராமங்களில் உள்ள ஊராட்சிகளில் நெற்களம் அமைக்கப்பட்டுள்ளது.



2005 செப்டம்பர் 22]

84—

## சிமெண்ட் நெற்களம்

**வினா எண் 55604—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோயில் ஒன்றியம், காசாவயல், தொண்டைமானேந்தல், குன்னூர், கீழச்சேரி, வீரமங்கலம், குண்டகவயல், பெருநாவலூர், நரிக்குடி, விளானூர், தச்சமல்லி, கல்லேந்தல் ஆகிய இடங்களில் சிமெண்ட் நெற்களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிக்கு ஒரு நெற்களம் அமைக்கும் திட்டத்தின்படி, காசாவயல், தொண்டைமானேந்தல், குன்னூர், கீழச்சேரி, வீரமங்கலம், குண்டகவயல், பெருநாவலூர், நரிக்குடி, விளானூர், தச்சமல்லி, கல்லேந்தல் கிராமங்களில் உள்ள ஊராட்சிகளில் சிமெண்ட் நெற்களம் அமைக்கப்பட்டுள்ளது.

85—

## சிமெண்ட் நெற்களம்

**வினா எண் 55759—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், மஞ்சக்கரை வடக்கு, கீழக்குடி கழுகுமனை, திருவங்கூர், தோப்புவயல், கூகனூர் மற்றும் சித்தக்கன்னியில் சிமெண்ட் நெற்களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிக்கு ஒரு நெற்களம் அமைக்கும் அரசின் திட்டப்படி மஞ்சக்கரை வடக்கு, கீழக்குடி, கழுகுமனை, திருவங்கூர், தோப்புவயல்,

[2005 செப்டம்பர் 22

கூகனூர் மற்றும் சித்தக்கன்னி கிராமங்களில் உள்ள ஊராட்சிகளில் சிமெண்ட் நெற்களம் அமைக்கப்பட்டுள்ளது.

**86—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 55912—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், செம்மங்குடி ஊராட்சி, வில்வராயன்நத்தம் ஆதி திராவிட மக்கள் வசிக்கும் இடத்தில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், செம்மங்குடி ஊராட்சி, வில்வராயன்நத்தம் ஆதி திராவிடர்கள் வசிக்கும் இடத்தில் சமுதாயக் கூடம் கட்டுவதற்குத் தற்போது திட்டம் ஏதும் இல்லை.

**87—**

**சிமெண்ட் நெற்களம்**

**வினா எண் 56041—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், சிறுமருதூர் மற்றும் வாட்டாத்தூரில் சிமெண்ட் நெற்களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிக்கு ஒரு நெற்களம் கட்டுவது என்ற திட்டத்தின்படி, சிறுமருதூர் மற்றும் வாட்டாத்தூரில் சிமெண்ட் நெற்களம் அமைக்கப்பட்டுள்ளது.

**88—**

**மின் விளக்கு**

**வினா எண் 56284—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புளியந்துறை ஊராட்சி, காட்டூர் ஊராட்சி, புதுப்பட்டினம் ஊராட்சி, பழையபாளையம் ஊராட்சியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடத்திற்கு சூரிய ஒளிமூலம் (சோலார் சிஸ்டம்) மின் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கொள்ளிடம் ஒன்றியம், புளியந்துறை, காட்டூர் ஊராட்சி, புதுப்பட்டினம் மற்றும் பழையபாளையம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்களுக்கு சூரிய ஒளியைக் கொண்டு மின் விளக்கு அமைத்திட மேற்கண்ட ஊராட்சிகளின் நிதி வசதி போதுமானதாக இல்லை என்பதால், சூரிய ஒளியைக் கொண்டு மின் விளக்கு அமைத்துக் கொடுக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**89—**

## சூரிய ஒளி விளக்கு

**வினா எண் 56297—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், உமையாள்பதி ஊராட்சி, அகரவட்டாரம் ஊராட்சி, ஆரப்பள்ளம், ஆச்சாள்புரம், திருக்கருகாவூர், வடகால், கடவாசல், கடைக்கால், வினாயகநல்லூர், திருமுல்லைவாசல், எடமணல் மற்றும் பன்னங்குடி ஊராட்சிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்களுக்கு சூரிய ஒளிமூலம் (சோலார் சிஸ்டம்) சூரிய விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், உமையாள்பதி, அகரவட்டாரம், ஆரப்பள்ளம், ஆச்சாள்புரம், திருக்கருகாவூர், வடகால், கடவாசல், திருமுல்லைவாசல், எடமணல் மற்றும் பன்னங்குடி ஊராட்சி மற்றும் நல்ல வினாயகபுரம் ஊராட்சி, கடைக்கால் வினாயகநல்லூர் ஆகிய இடங்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்களுக்கு சூரிய ஒளிமூலம் மின் விளக்கு அமைத்திட மேற்கண்ட ஊராட்சிகளின் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லையாதலால், சூரிய ஒளிமூலம் மின் விளக்கு அமைத்துக் கொடுக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**90—**

## மின் விளக்கு அமைத்தல்

**வினா எண் 56351—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மகாராஜபுரம் ஊராட்சி, கொடியம்பாளையம் ஊராட்சி, முதலைமேடு ஊராட்சி, ஆலாலசுந்தரம் ஊராட்சி, பச்சமாதானம் ஊராட்சி மற்றும் அளக்குடி ஊராட்சிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடத்திற்கு சூரிய ஒளியின்மூலம் மின் விளக்கு அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கொள்ளிடம் ஒன்றியம், மகாராஜபுரம் ஊராட்சி, கொடியம்பாளையம், முதலைமேடு, ஆலாலசுந்தரம், பச்சமாதானம் மற்றும் அளக்குடி ஆகிய ஊராட்சிகளின் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்களுக்கு சூரிய ஒளிமூலம் மின் விளக்கு அமைத்திட மேற்கண்ட ஊராட்சிகளின் நிதி வசதி போதுமானதாக இல்லை என்பதால், சூரிய ஒளியைக் கொண்டு மின் விளக்கு அமைத்துக் கொடுக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**91—**

## சூரிய ஒளி விளக்கு

**வினா எண் 56363—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சி, ஒதவந்தான்குடி ஊராட்சி, மாதானம் ஊராட்சி, கூத்தியப்பேட்டை ஊராட்சி மற்றும் சோதியக்குடி ஊராட்சியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடத்திற்கு சூரிய ஒளி (சோலார் சிஸ்டம்) மூலம் சூரிய ஒளி விளக்கு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு, ஒதவந்தான்குடி, மாதானம், கூத்தியப்பேட்டை மற்றும் சோதியக்குடி ஊராட்சிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்களுக்கு சூரிய ஒளிமூலம் மின் விளக்கு அமைத்துக் கொடுக்க மேற்கண்ட ஊராட்சிகளின் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லை என்பதால் சூரிய ஒளி விளக்கு அமைத்துக் கொடுக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**92—**

**தொலைக்காட்சிப் பெட்டி**

**வினா எண் 56508—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கொண்டல் ஊராட்சி, புங்கனூர் ஊராட்சி, நிம்மேலி ஊராட்சி, பட்டவிளாகம் ஊராட்சி, பூம்புகார் ஊராட்சி, காவிரிப்பூம்பட்டினம் ஊராட்சி மற்றும் நாங்கூர் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடத்தில் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கொண்டல் ஊராட்சி, புங்கனூர் ஊராட்சி, நிம்மேலி ஊராட்சி, பட்டவிளாகம் ஊராட்சி, பூம்புகார் ஊராட்சி, காவிரிப்பூம்பட்டினம் ஊராட்சி, நாங்கூர் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்



2005 செப்டம்பர் 22]

கட்டடத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைத்திட தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களில் வழிவகை இல்லை. எனவே, இப்பணியினைச் செய்து தர இயலாது.

**93—**

**நிழற்குடை**

**வினா எண் 57816—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள பன்னிமேடு 3 நெம்பர் பாடி பேருந்து நிற்கும் இடத்தில் நிழற்குடை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள பன்னிமேடு 3 நெம்பர் பாடி பேருந்து நிற்கும் இடத்தில் நிழற்குடை ஏற்கெனவே கட்டப்பட்டு, பொது மக்கள் கடந்த ஓராண்டு காலமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

**94—**

**பயணிகள் நிழற்கூடம்**

**வினா எண் 58206—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, கோதூர் ஊராட்சி, கே.கொளந்தாபாளையம் அரசினர் பள்ளி அருகே பயணியர் நிழற்கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கோதூர் ஊராட்சி, கே.கொளந்தாபாளையம் அரசினர் மேல்நிலைப் பள்ளி அருகில் அதிக அளவில் பயணிகள் வர வாய்ப்பு இல்லாததால் நிழற்கூடம் அமைக்கத் தேவை ஏற்படவில்லை.

**95—**

## பயணிகள் நிழற்குடை

**வினா எண் 61066—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், கலபம், தச்சமல்லி, தீயத்தூர் ஆகிய பகுதிகளில் பயணிகள் நிழற்குடை கட்டித் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், கலபம், தச்சமல்லி, தீயத்தூர் ஆகிய பகுதிகளில் பயணிகள் நிழற்குடை கட்டித் தரும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**96—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 63020—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 22]

(அ) முசிறி ஒன்றியம், கோட்டாத்தூர் ஊராட்சி, கரட்டாம்பட்டி ஊராட்சி, கரட்டாம்பட்டி ஆகிய இடங்களில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2005-2006 ஆம் நிதியாண்டில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றால் இப்பணி மேற்கொள்ளப்படும்.

**97—**

## நிழற்குடை

**வினா எண் 63222—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் ஊராட்சியில் பேருந்து நிற்கும் இடத்தில் நிழற்குடை கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் ஊராட்சியில் பேருந்து நிற்கும் இடத்தில் நிழற்குடை அமைக்கத் தேவையான இடம் இல்லாததால், அர்த்தநாரிபாளையம் ஊராட்சியில் பேருந்து நிற்கும் இடத்தில் நிழற்குடை கட்டித் தர இயலாது.

[2005 செப்டம்பர் 22

**98—**

### சமுதாயக் கூடம்

**வினா எண் 63665—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, கொண்டல் ஊராட்சி ஆதிதிராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி தொகுதி, கொண்டல் ஊராட்சி ஆதிதிராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் அமைத்துக் கொடுக்க தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களில் வழிவகை இல்லை. எனவே, இப்பணியினைச் செய்து தர இயலாது.

**99—**

### சமுதாயக் கூடம்

**வினா எண் 64084—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, காட்டூர் ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், காட்டூர் ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்டித் தர தற்போது நடைமுறையில் உள்ள திட்டப் பணிகளில் வழிவகை இல்லை.

**100—**

### பேருந்து நிலையம்

**வினா எண் 64372—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மீமிசல், திருப்புனவாசல், கரூர், நாகுடி, ஆவுடையார்கோவில் ஆகிய இடங்களில் பேருந்து நிலையம் கட்டித் தரும் கருத்துரு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் தவிர ஏனைய மீமிசல், திருப்புனவாசல், கரூர், நாகுடி ஆகிய இடங்களில் நிதிப் பற்றாக்குறைக் காரணமாக பேருந்து நிலையம் அமைக்க திட்டம் ஏதும் இல்லை.

[2005 செப்டம்பர் 22

## (இரண்டாவது பட்டியல்)

**1—**

### சாலையைப் புதுப்பித்தல்

**வினா எண் 43441—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர்-மூக்கனூர் சாலையைப் புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் சுமார் 5.70 கி.மீ. நீளச் சாலையை முதலமைச்சரின் காலமுறை, சாலை பழுதுபார்ப்புத் திட்டம் 2003-2004-ல் மேற்கொள்ளப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளது. கி.மீ.15/0 – 19/0 வரை பேருந்துப் போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் இல்லாத சாலைகளை மேம்பாடு செய்யும் திட்டத்தில் செயலாக்க ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. கி.மீ.0/4 – 2/4, 3/4–4/0, 7/0–8/0 வரை தற்போது மேம்பாடு செய்யப்பட்டு வருகிறது. இப்பணிகளை விரைவில் செய்து முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2—**

### கணினி பயிற்சி மையம்

**வினா எண் 65272—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரத்தில் கணினி பயிற்சி மையம் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களில் தனியார் நிறுவனங்கள் கணினி பயிற்சி மையங்கள் நடத்தி வருகின்றன. ஒட்டப்பிடாரத்தில் அரசு கணினிப் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**3—**

### புதிய கட்டடம்

**வினா எண் 65124—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், தோக்கியம் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், தோக்கியம் ஊராட்சியில் உள்ள தோக்கியம் நியாய விலைக் கடை, கந்திலி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில், 386 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் முழுநேரக் கடையாகும். கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு தற்போதைய திட்டங்களின்கீழ் வழிவகை செய்யப்படவில்லை.

[2005 செப்டம்பர் 22

4—

## கட்டட வசதி

**வினா எண் 66393—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், எண் 2 கரியமாணிக்கத்தில் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், கரியமாணிக்கம் நியாய விலைக் கடை கிளியநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில், 882 குடும்ப அட்டைகளுடன் முழு நேரக் கடையாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. வாடகைக் கட்டடத்தில் செயல்படும் கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்குச் சொந்த கட்டடம் கட்ட அரசு திட்டங்களின்கீழ் தற்போது வழிவகை செய்யப்படவில்லை.

5—

## கட்டட வசதி

**வினா எண் 66395—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், சாத்தனூர் கிராமத்தில் பொது விநியோக கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், சாத்தனூர் கிராமத்தில் செயல்படும் நியாய விலைக் கடை ஒரு பகுதி நேரக் கடையாகும். மேற்படி கடையில் 229 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. பகுதி நேரக் கடை அமைக்க ஊர் மக்கள் இலவசக் கட்டட வசதி செய்து தர வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதால், அரசு திட்டங்களின்கீழ் பகுதி நேரக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வழிவகை இல்லை.

6—

## புதிய கட்டடம்

**வினா எண் 66397—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், புளவழம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் திண்ணனூரில் அமைந்துள்ள நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், திண்ணனூர் நியாய விலைக் கடை புளவழம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படவில்லை. மேற்படி நியாய விலைக் கடை புலிவலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படுகிறது. இக்கடை 857 குடும்ப அட்டைகளுடன் முழு நேரக் கடையாக ஊராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தில் இலவசமாகச் செயல்படுவதால் அரசு திட்டங்களின்கீழ் சொந்தக் கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

[2005 செப்டம்பர் 22

7—

## கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 56684—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வினாயகுடியிலுள்ள அய்யனார் கோயிலை புதிதாகக் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், வினாயகுடி அருள்மிகு அய்யனார் திருக்கோயில் இலாகா கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயில் புதுப்பிக்கும் பணிக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் ரூ.25,000/- அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் திருக்கோயில் திருப்பணி வேலைகள் துவங்கப்பட்டு 55% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

8—

## தூர்வாரும் பணி

**வினா எண் 66801—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் வட்டம், திருவெள்ளரையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீபுண்டரீகாட்சப் பெருமாள் கோயில் குளத்தை தூர் வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் வட்டம், திருவெள்ளரையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீபுண்டரீகாட்சப் பெருமாள் திருக்கோயிலுக்கு 4 திருக்குளங்கள் உள்ளன. (1) ஸ்வஸ்திக் குளம் தொல்பொருள் துறையின் கண்காணிப்பில் உள்ளதால் அதன் மூலம் தூர் வார நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (2) சிங்கர் குளம் மற்றும் (3) தாமரைக் குளம் தற்போது வறண்டு இருப்பதால் தண்ணீர் வரத்துக்கு வாய்க்கால் வசதி இல்லை. (4) சுனை குளத்தில் உள்ள நீர் தினசரி நைவேத்யம் தயாரிக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்தண்ணீர் கோடை காலத்தில் வற்றியதும் தூர் வார நடவடிக்கை எடுக்கப்படும்.

9—

## இளம் பெண்களுக்கானத் திட்டம்

**வினா எண் 37438—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில், கிஷோரி சக்தி யோஜனா வளர் இளம் பெண்களுக்கான திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்காடு தொகுதியில், கிஷோரி சக்தி யோஜனா வளர் இளம் பெண்களுக்கானத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. குறிப்பிடப்பட்ட சில மாவட்டங்களில் மைய அரசால் தேர்வு செய்யப்பட்ட 37 திட்டப் பகுதிகளில் மட்டுமே இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஊட்டச் சத்து, சுகாதாரம், கல்வி, சட்ட உரிமை, வீட்டைப் பராமரித்தல் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு ஆகியவற்றில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த 11–15 வயதிலான

[2005 செப்டம்பர் 22

வளர் இளம் பெண்களுக்கு 2 நாள் பயிற்சி முகாம் மற்றும் 16–18 வயது வரையுள்ள வளர் இளம் பெண்களுக்குத் தொழிற் கல்விப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென ஒவ்வோர் ஆண்டும் ரூ.40.15 இலட்சம் மைய அரசு நிதியில் இருந்து அளிக்கப்பட்டு வருகிறது.

**10—**

## அங்கன்வாடி மையம்

**வினா எண் 61667—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், கடையாத்துப்பட்டி, சிலோன் காலனியில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு அங்கன்வாடி மையம் தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

புதிதாக அங்கன்வாடி மையம் ஆரம்பிப்பதற்கு மக்கள் தொகை 1,000 இருக்க வேண்டும். இக்கிராமத்தில் 608 பேர் மட்டுமே உள்ளனர். மேலும், இக்கிராமத்தில் உள்ள பயனாளிகள் தற்போது அருகில் உள்ள வானக் குடியிருப்பு அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருவதாலும், மக்கள் தொகை குறைவாக உள்ளதாலும் தனியாக அங்கன்வாடி மையம் ஆரம்பிக்க இயலாத நிலை உள்ளது.

**11—**

## குடிசைத் தொழில்கள் விரிவாக்கம்

**வினா எண் 59070—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் கடந்த 2002–2003 ஆம் ஆண்டில் குடிசைத் தொழில்கள் விரிவாக்கம் ஏற்பட அரசு எடுத்துள்ள நடவடிக்கையின் விவரம் என்ன?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் கடந்த 2002–2004 ஆம் ஆண்டில் குடிசைத் தொழில்கள் விரிவாக்கம் ஏற்படுத்த 276 குடிசைத் தொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 1,177 நபர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளார்கள். 2002–2003–ல் அனைத்து பஞ்சாயத்து யூனியன்களிலும் தொழில் ஊக்குவிப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, குடிசைத் தொழில் வாய்ப்புகள் மற்றும் வங்கிக் கடன் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

**12—**

## கயிறு உற்பத்தித் தொழில்

**வினா எண் 60125—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் கயிறு உற்பத்தித் தொழில் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் கயிறு உற்பத்தித் தொழில் தொடங்க திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**13—**

## பட்டா வழங்குதல்

**வினா எண் 41853—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, மாரியம்மன் கோயில் நிலத்தினை (உடுமலை நகரத்தில் உள்ள) ஆதிதிராவிட மக்களுக்கு பட்டா வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**14—**

## உதவித் தொகை

**வினா எண் 49124—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆதிதிராவிடர் மாணவ-மாணவியருக்குக் கிடைக்க வேண்டிய அரசு உதவித் தொகை சரியான முறையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மாணவ-மாணவியர்களுக்குக் கல்வி உதவித் தொகைகள் சரியான முறையில் வழங்கப்பட்டு வருகின்றன.

**15—**

## பள்ளிகளில் மழைநீர் சேகரிப்புத் தொட்டி

**வினா எண் 57866—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொண்டல் ஊராட்சியில் உள்ள அரசினர் ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆதிதிராவிடர் நல



தொடக்கப் பள்ளிகளில் மழை நீர் சேகரிப்புத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொண்டல் ஊராட்சியில் உள்ள அரசினர் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி மற்றும் தொடக்கப் பள்ளியில் மழை நீர் சேகரிப்புத் தொட்டி அமைக்கப்பட்டு, நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது.

**16—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 59233—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் மலையாண்டி பட்டணம், நெல்லித்துறை ரோடு, எம்.ஜி.ஆர். காலனி மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி வட்டம், கோட்டூர் கிராமம், க.ச. 81/3.பி. காலையில் 2.02.5 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தி 140 மனையிடங்கள் ஏற்படுத்தி 108 மனையிடங்களுக்கு ஏற்கெனவே பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதி உள்ள 32, மனையிடங்களில் கோட்டூர் மலையாண்டி பட்டணம், நெல்லித் துறை ரோடு, எம்.ஜி.ஆர். காலனியில் இருந்து 17 விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலனையில் இருந்து வருகின்றன.

[2005 செப்டம்பர் 22

17—

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 59234—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் மலையாண்டிபட்டணம், காமராஜ் வீதி, நெல்லித்துறை ரோட்டில் குடியிருக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி வட்டம், கோட்டூர் கிராமம், க.ச. 81/3.பி. காலையில் 2.02.5 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 140 மனையிடங்கள் அமைக்கப்பட்டு ஏற்கெனவே 108 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதி உள்ள 32 மனையிடங்களுக்கு கோட்டூர் மலையாண்டிபட்டணம் நெல்லித்துறை ரோட்டில் காமராஜ் வீதி, திருவள்ளூர் காலனி, நேரு வீதி, மதுரைவீரன் கோயில் வீதி ஆகிய பகுதிகளில் இருந்து 82 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதில் தகுதியின் அடிப்படையில் 32 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட உள்ளது. மேற்படி 82 விண்ணப்பங்களில் 3 விண்ணப்பங்கள் காமராஜ் வீதியில் இருந்து பெறப்பட்டு வீட்டுமனைப் பட்டா பெற தகுதி இல்லாமையால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

18—

## பட்டா வழங்குதல்

**வினா எண் 59788—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 22]

உடுமலை ஒன்றியம், செல்லிப்பட்டி கிராமத்தில் ஆதிதிராவிடர் நில ஆர்ஜிதத்தில் 20 நபர்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

உடுமலை வட்டம், ஜல்லிப்பட்டி கிராமம் க.ச. 107/1பி2 மற்றும் 120/1பி2 காலைகளில் 2.02.5 ஹெக்டேர் நிலம் ஆதிதிராவிடர் வீட்டு மனைக்கு கையகப்படுத்தப்பட்டு, கையகப்படுத்தப்பட்ட இடத்தில் 153 மனையிடங்கள் ஏற்படுத்தப்பட்டு, 131 பயனாளிகளுக்கு ஏற்கெனவே பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதியுள்ள 22 காலி மனையிடங்களுக்கு தகுதிவாய்ந்த 12 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு 1-10-2004-ல் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதியுள்ள மனையிடங்களுக்கும் விண்ணப்பங்கள் வரப்பெறும்போது தகுதியின் அடிப்படையில் பட்டாக்கள் வழங்கப்படும்.

19—

## பட்டா வழங்குதல்

**வினா எண் 59789—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை ஒன்றியம், குறிச்சிக்கோட்டை ஊராட்சி, ராமேகவுண்டன்புதூரில் குடியிருக்கும் 10 நபர்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலை வட்டம், குறிச்சிக்கோட்டை கிராமம் க.ச. 67/1 மற்றும் க.ச. 67/16 ஆகிய காலைகளில் 0.90.5 ஹெக்டேர் நிலம் ராமேகவுண்டன்புதூரில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் பொருட்டு கையகப்படுத்தப்பட்டு, அவ்விடத்தில் 67 மனையிடங்கள்

அமைக்கப்பட்டு, 58 நபர்களுக்கு 12-12-1998ல் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதியுள்ள 9 மனையிடங்களுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. மேற்படி விண்ணப்பங்களின் பேரில் விசாரணை மேற்கொண்டு தகுதியின் அடிப்படையில் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**20—**

## பட்டா வழங்குதல்

**வினா எண் 62033—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், ராகல்பாலி ஊராட்சி, கிருஷ்ணாபுரம் பகுதி ஆதிதிராவிடர்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், ராகல்பாலி ஊராட்சி, கிருஷ்ணாபுரம் பகுதியில் உள்ள ஆதிதிராவிட மக்கள் வீட்டுமனைப் பட்டா கோரும் விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

**21—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 63404—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை நகரத்தில் வி.எஸ்.எஸ். காலனியில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

உடுமலை நகரம், வி.எஸ்.எஸ். ஆதிதிராவிட குடியிருப்பில் உபரியாக வசிக்கும் ஆதிதிராவிட குடும்பங்களுக்கு உடுமலை வட்டம் மற்றும் நகரத்தில் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் தேவையான அளவிற்கு நிலம் கையகம் செய்து வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**22—**

## புதிய வகுப்பறைக் கட்டடங்கள்

**வினா எண் 63784—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு அரசினர் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, காரைமேடு அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிக்கு இரண்டு கூடுதல் புதிய வகுப்பறைகள் ரூ.6.60 இலட்சத்தில் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்து 23–8–2004 அன்று ஆணை பிறப்பித்து தற்போது கட்டடப் பணி நடைபெற்று வருகிறது.

**23—**

## மானிய கடன் உதவி

**வினா எண் 22453—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 22

(அ) பேராவூரணி தொகுதியில் சலவைத் தொழிலாளர்களுக்கும், மருத்துவர்களுக்கும் அரசு மூலமாக வழங்கப்படும் இலவசக் கருவிகள், மானியக் கடன் உதவி போதுமானதாக இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் அதிகப்படுத்தித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச முடி திருத்துவோர் கைப்பெட்டி மற்றும் கல் உடைக்கும் கருவிகள் வழங்கும் திட்டங்கள் 2002–2003 ஆம் ஆண்டு முதல் கைவிடப்பட்டு விட்டன. சலவையகம் மற்றும் முடிதிருத்தகம் அமைக்க தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் வாயிலாக கடன் உதவி வழங்கப்படுவதால், அரசு மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்கும் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீட்டினை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை. பேராவூரணி தொகுதியில் சலவையகம்/முடி திருத்தகம் மற்றும் நடமாடும் சலவையகம் அமைக்க கடன் உதவி கோரி மனுக்கள் ஏதும் பெறப்படவில்லை.

**24—**

## இலவச தையல் இயந்திரங்கள் வழங்குதல்

**வினா எண் 41542—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்கு தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 2001–2002 மற்றும் 2002–2003 ஆம் ஆண்டுகளில் பயனடைந்தோர் எவ்வளவு?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்கு இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் 2002–2003 ஆம் ஆண்டு முதலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2002–2003 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 20 தையல் இயந்திரங்களில் ஒன்று ஏற்காடு தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

**25—**

## இலவச சலவைப் பெட்டி

**வினா எண் 47062—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி ஒன்றியம், சொரக்காயில்நத்தம் ஊராட்சியில் உள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு இலவச சலவைப் பெட்டி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி ஒன்றியம், சொரக்காயில்நத்தம் ஊராட்சியில் இருந்து இலவச சலவைப் பெட்டி கோரி மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை. மேற்படி ஊராட்சியில் இருந்து சலவைப் பெட்டி வழங்கக் கோரி மனுக்கள் வந்தால் பரிசீலிக்கப்படும்.

**26—**

## கூடுதல் கட்டட வசதி

**வினா எண் 55379—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, கல்லூத்து பெருமாள்பட்டி, அரசு கள்ளர் மாணவர் விடுதிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, கல்லூத்து பெருமாள்பட்டி, கள்ளர் சீரமைப்பு மாணவர் விடுதிக்கு 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.31.50 இலட்சம் செலவில் அரசுக் கட்டடம் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையால் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**27—**

**இலவச சலவைப் பெட்டி மற்றும் சவரக் கருவிகள்**

**வினா எண் 62356—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் சலவைப் பெட்டிகளும், சவரக் கருவிகளும் இலவசமாக வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதிக்கு சவரக் கருவிகள் வேண்டி வரப்பெற்ற விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு சவரக் கருவிகள் உரிய நபர்களுக்கு தகுதி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன. சலவைப் பெட்டிகள் இருப்பில் இல்லை. சலவைப் பெட்டிகள் வரப்பெற்றவுடன் வழங்கப்படும்.





**28—**

**கருவூட்டல் நிலையம்**

**வினா எண் 50636—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் உள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் கால்நடை செயற்கை முறை கருவூட்டல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி நகரில் உள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்திலேயே கால்நடைகளுக்குத் தேவையான செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால், தனியாக கால்நடை செயற்கை முறை கருவூட்டல் நிலையம் அமைக்க அவசியமில்லை.

(ஆ) எழாது.

**29—**

**இலவச சிகிச்சை முகாம்கள்**

**வினா எண் 65424—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள கால்நடைகளுக்குத் தீவிர இலவச சிகிச்சை முகாம்கள் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதியில் சங்கராபுரம் மற்றும் ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 14 இலவச சிகிச்சை முகாம்களும், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தில் 13 இலவச சிகிச்சை முகாம்களும் (மொத்தம் 27 முகாம்கள்) நடத்தப்பட்டன.

**30—**

## மருத்துவ ஊர்திகள்

**வினா எண் 65425—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையில் உள்ள கால்நடை மருத்துவமனையில் நடமாடும் மருத்துவ ஊர்திகள் பழுதடைந்துள்ளதை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை நடமாடும் கால்நடை மருந்தக வாகனம் தற்போது இயங்கி வருகிறது.

**31—**

## வாகை மரங்கள் ஏலம்

**வினா எண் 48854—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில், வனத் துறையில் வாகை மரங்கள் முறையாக ஏலம் விடப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதியில், வனத் துறையில் வாகை மரங்கள் இல்லாததால் ஏலம் விடப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**32—**

## சிறுத்தைப் புலி

**வினா எண் 50475—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர், சிதம்பரம் பூங்காவில் உள்ள மிருகக் காட்சி சாலைக்கு வால்பாறையில் இருந்து சிறுத்தைப் புலி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இயற்கைச் சூழலில் வாழும் வன உயிரினங்களைப் பிடித்து மிருகக் காட்சி சாலைகளுக்கு வழங்குவது வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம், 1972-ன்படி தடைசெய்யப்பட்டுள்ளதால், கோவை வ.உ.சி. பூங்காவிற்கு தற்போது சிறுத்தைப் புலி வழங்க நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் இல்லை.

**33—**

## முள் வேலி

**வினா எண் 59795—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 22

(அ) உடுமலை ஒன்றியம், கல்லாபுரம் ஊராட்சி, காட்டுப் பகுதி மலைவாழ் மக்கள் பகுதியைச் சுற்றி முள் வேலி (மின் வேலி) அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உடுமலை ஒன்றியம், கல்லாபுரம் ஊராட்சி, காட்டுப் பகுதி மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதியானது இந்திரா காந்தி வன உயிரின உய்விடத்துக்குள் அமைந்துள்ள செட்டில்மென்ட் பகுதியைச் சுற்றி மின் வேலி அமைக்க சுமார் ரூ.10.00 இலட்சம் செலவாகும். வரும் நிதியாண்டில் இதற்கென நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் அல்லது ஒதுக்கப்படும் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு வனத் துறை மூலம் மேற்படி பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**34—**

## தேக்குமரக் கன்றுகள்

**வினா எண் 63837—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஊராட்சியில் உள்ள நாட்டுக்கன்னி மயிலார், சீவவொளி வாய்க்கால் மற்றும் முல்லையாம்பட்டினம் வாய்க்கால் கரையில் தேக்குமரக் கன்றுகள் நட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஊராட்சியில் உள்ள நாட்டுக்கன்னி மயிலார், சீவவொளி வாய்க்கால் மற்றும்



2005 செப்டம்பர் 22]

முல்லையாம்பட்டினம் ஆகியவற்றில் தேக்குத் தோட்டம் உற்பத்தி செய்யும் அளவிற்கு மண் வளமையாக இல்லை. சற்று உப்பு கலந்துள்ளதால் தேக்கு வளர்க்க இயலாது. எனவே, இப்பகுதியில் தேக்குமரக் கன்றுகள் நடும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**35—**

## நிவாரணம்

**வினா எண் 64064—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் உருளிக்கல் பகுதியில் வீடுகளையும் கடைகளையும் யானை இடித்துத் தள்ளி விட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில். அது குறித்து எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேதமடைந்த கட்டடங்கள் டாடா டீ நிர்வாகத்தினருக்குச் சொந்தமானவை. சேதாரம் குறித்து நிவாரணம் கோரி உரிய விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படாததால் மேல் நடவடிக்கை ஏதும் தொடரப்படவில்லை.

**36—**

## வனப் பகுதியில் பயிரிடுதல்

**வினா எண் 65218—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, டாப் சிலிப் வனப் பகுதியில் காட்டாமணக்கு, சர்க்கரைக் கிழங்கு மற்றும் மரவள்ளிக் கிழங்கு பயிரிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, டாப் சிலிப் வனப் பகுதி வன உயிரினங்கள் அதிகம் வாழும் வன உயிரின உய்விடம் மற்றும் தேசிய பூங்கா பகுதிகள் என்பதால் காட்டாமணக்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு மற்றும் மரவள்ளிக் கிழங்கு பயிரிட சாத்தியமில்லை. எனவே, இத்தகைய திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**37—**

## மூலிகைச் செடிகளைப் பயிரிடுதல்

**வினா எண் 65440— திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலையிலுள்ள வனப் பகுதிகளில் பெருமளவில் மூலிகைச் செடிகளைப் பயிர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) கல்வராயன் மலையில் வனப் பகுதியில் பெருமளவில் மூலிகைச் செடிகளைப் பயிர் செய்யும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.





**38—**

## கட்டடங்களைச் செப்பனிடுதல்

**வினா எண் 65831—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டத்தில் கரட்டூர் வனப் பகுதி குடியிருப்பு கட்டடங்களைச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், உடுமலை வட்டம், கரட்டூர் பகுதியில் உள்ள வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர் குடியிருப்பு, 1930–31 ஆம் ஆண்டில் ரூ. 2,132/– செலவில் கட்டப்பட்ட கட்டடம் ஆகும். இக்குடியிருப்புகள் தற்போது மோசமாகி பராமரிக்க இயலாத நிலையில் இருப்பதால் அவற்றை இடித்து விட்டு புதிதாக குடியிருப்பு கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) இக்குடியிருப்பைக் கட்டுவதற்கு சுமார் ரூ.10.00 இலட்சம் நிதி தேவைப்படும். கட்டடப் பணிக்கு ஒதுக்கப்படும் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு 2005–2006 நிதியாண்டில் புதிதாகக் கட்டடம் கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**39—**

## நிவாரண உதவி

**வினா எண் 66476—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறை தேயிலைத் தோட்ட பெண் தொழிலாளியை கரடி அடித்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு உதவி புரிய முன்வருமா?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கரடியால் தாக்கப்பட்டவர்களுக்கு வனத் துறை மூலம் நிவாரணம் வழங்க வழிவகை இல்லை.

**40—**

**நிவாரண உதவி**

**வினா எண் 66477—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, கஜமுடியில் யானை அடித்து பெண் முடீஸ் மருத்துவமனையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருமதி ராஜேஸ்வரி என்ற தற்காலிக பெண் தொழிலாளி 9–12–2004 அன்று யானையால் தாக்கப்பட்டு அவரது இடுப்பில் சிறிய காயம் ஏற்பட்டு முடீஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு குணமாகி 1–1–2005 அன்று வீடு திரும்பி நல்ல நிலையில் உள்ளார்.

**41—**

**உதவித் தொகை**

**வினா எண் 66478— திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 22]

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, மாணிக்க எஸ்டேட்டில் குடியிருந்த பெண்ணை யானை மிதித்துக் கொன்றுவிட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு வழங்கும் உதவித் தொகை எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 6–10–2004 அன்று காட்டு யானை தாக்கி இறந்த திருமதி அழகாத்தாள் என்பவரின் வாரிசுதாரர்களுக்கு 25–2–2005 அன்று கோவையில் நடைபெற்ற விழாவின்போது ரூ.1 இலட்சம் கேட்பு வரைவோலையாக வழங்கப்பட்டுள்ளது.

**42—**

**குடியிருப்புப் பகுதிகளைச் சீரமைத்தல்**

**வினா எண் 67141—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை வட்டத்தில் பழுதடைந்துள்ள வனத் துறை அலுவலகம், குடியிருப்புப் பகுதிகளைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், உடுமலை வனச் சரகத்தில் 2004–2005 ஆம் நிதியாண்டில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.1.00 இலட்சம் நிதியில், அமராவதி மற்றும் உடுமலை சரக அலுவலகக் குடியிருப்புக் கட்டடம் பராமரிக்கும் பணிகள் தலா ரூ.50,000/– வீதம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், 11 குடியிருப்புகள் மற்றும் ஓர் தணிக்கைச் சாவடி குறித்த பராமரிப்புப் பணிகள்

[2005 செப்டம்பர் 22

2005–2006 ஆம் நிதியாண்டில் கூடுதலாக ஒதுக்கப்படும் நிதியில் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**43—**

## சமூக நலக் கூடங்கள்

**வினா எண் 50495—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் குடிசைப் பகுதி மாற்று வாரியங்களுக்குச் சொந்தமான சமூக நலக் கூடங்கள் எத்தனை?

(ஆ) அவற்றின் மூலம் கிடைக்கும் ஆண்டு வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியங்களுக்குச் சொந்தமான சமூக நலக் கூடங்கள் மற்றும் அவற்றின் மூலம் கிடைக்கும் ஆண்டு வருமானம் பற்றிய விவரம் பின்வருமாறு:

| வ.எண் | கோட்டம்/பிரிவு | மொத்த எண்ணிக்கை | ஆண்டு வருமானம் (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | அண்ணா நகர் கோட்டம் | 3 | 6,60,000 |
| 2 | கே.கே. நகர் கோட்டம் | 7 | 9,42,200 |
| 3 | பெசன்ட் நகர் கோட்டம் | 2 | 14,66,975 |
| 4 | நந்தனம் கோட்டம் | 3 | 86,130 |
| 5 | வேலூர் வீட்டு வசதிப் பிரிவு | 1 | 30,000 |
| 6 | மதுரை வீட்டு வசதிப் பிரிவு | 2 | 33,250 |
| 7 | திருநெல்வேலி வீட்டு வசதிப் பிரிவு | 3 | 5,000 |
| 8 | சேலம் வீட்டு வசதிப் பிரிவு | 1 | 21,000 |
| 9 | திருச்சி வீட்டு வசதிப் பிரிவு | 1 | 53,400 |
| 10 | டாக்டர் ஜெ ஜெயலலிதா நகர் கோட்டம் | – | – |
| 11 | ராமநாதபுரம் வீட்டு வசதிப் பிரிவு | – | – |
| 12 | ஈரோடு வீட்டு வசதிப் பிரிவு | – | – |
| 13 | ஓசூர் வீட்டு வசதிப் பிரிவு | – | – |
| 14 | தஞ்சாவூர் வீட்டு வசதிப் பிரிவு | – | – |
| 15 | விழுப்புரம் வீட்டு வசதிப் பிரிவு | – | – |
| 16 | கோயம்புத்தூர் வீட்டு வசதிப் பிரிவு | 4 | 1,400 |
| | கூட்டுத் தொகை | 27 | 32,99,355 |





தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் சமூக நலக் கூடங்கள் மூலம் கிடைக்கும் ஆண்டு வருமானம்:

| | | | |
|---|---|---|---|
| 1 | தாண்டவராயபிள்ளை சத்திரம் | 1 | 38,000 |
| 2 | கண்ணகி நகர் | 1 | 4,500 |
| | மொத்தம் | | 42,500 |

**44—**

## புதுக் காலனியில் சாலை அமைத்தல்

**வினா எண் 63250—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 22

ஈரோடு தொகுதி, கொல்லம்பாளையம் வீட்டு வசதித் திட்டத்தில் காலியாக உள்ள வீட்டு மனைகளைப் பிரித்து பொதுமக்களுக்கு விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

கொல்லம்பாளையம் வீட்டு வசதித் திட்டப் பகுதியில் காலியாக வீட்டுமனைகள் ஏதும் இல்லை.

**45—**

## விட்டுமனைகள்

**வினா எண் 63586—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான விற்கப்படாத நிலங்களை விற்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான விற்கப்படாத வீட்டு மனைகளை விற்க வாரியம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது:

1. விலை குறைத்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
2. தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஊழியர்கள் மூலம் விற்பனைக் குழு அமைக்கப்பட்டு பொதுமக்களிடம் திட்டத்தின் விவரங்களை விவரித்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
3. மனைகளை வாங்கியவர்கள் முழுப் பணத்தையும் செலுத்தி இருந்தால், உடனே கிரயப் பத்திரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



2005 செப்டம்பர் 22]

4. ஒருவருக்கு ஒரு மனைக்கு மேல் ஒதுக்கீடு செய்யக் கூடாது என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டுள்ளது.
5. வெளிமாநிலத்தவர்களும் ஒதுக்கீடு பெறும் வகையில் நிபந்தனைகள் தளர்த்தப்பட்டுள்ளன.
6. "முதலில் வருவோருக்கு முதலில் ஒதுக்கீடு" என்ற நிபந்தனையின் பேரில் ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன.

**46—**

## நூலகம்

**வினா எண் 64607—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, கரூர் பூவை மாநகர், திருப்புவனவாசல், சிங்கவனம் ஆகிய இடங்களில் நூலகம் அமைத்துத் தரும் கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, கரூர் பூவை மாநகர், திருப்புவனவாசல் மற்றும் சிங்கவனம் ஆகிய இடங்களில் நூலகம் திறக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. சிங்கவனம் என்ற இடத்தில் மக்கள் தொகை 502 மட்டும் உள்ளது என்பதால் இவ்விடத்தில் பகுதி நேர நூலகம் அமைத்துத் தரும் சாத்தியக்கூறு இல்லை. அறந்தாங்கி தொகுதி, கரூர் பூவை மாநகர் மற்றும் திருப்புவனவாசல் ஆகிய இடங்களில் பொதுமக்கள் ஒத்துழைத்து பகுதி நேர நூலகம் திறக்க கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவு செய்தால் அவ்விடங்களில் பகுதி நேர நூலகங்களைத் திறக்க இயலும்:

1. நூலகம் இயங்க வாடகை இல்லா இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.
2. சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலி மனை இலவசமாக நூலக ஆணைக் குழுவிற்கு பத்திரப் பதிவு செய்து வழங்கப்பட வேண்டும்.

[2005 செப்டம்பர் 22

3. தலா ரூ.1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாக சேர வேண்டும்.

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ.15/- மற்றும் ஆண்டு சந்தா ரூ.5/- ஆக மொத்தம் ரூ.20/- வீதம் செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

5. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் இலவசமாக வழங்க வேண்டும்.

**47—**

## புதிய கட்டடம்

**வினா எண் 45726—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, மடவாமேடு கூட்டுறவு அங்காடிக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்த ஆண்டில் கட்டடம் கட்ட திட்டம் ஏதும் இல்லை.

**48—**

## இலவச தொகுப்பு விடுகள்

**வினா எண் 57795—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, பழையாறு மீனவர்கள் அனைவருக்கும் இலவச தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, பழையாறு மீனவர்களிடமிருந்து இலவச வீடுகள் கட்டி வழங்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. எனவே, அங்கு வீடுகள் கட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**49—**

## புதிய கட்டடம்

**வினா எண் 57796—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சி, பழையாறில் உள்ள கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சி, பழையாறில் உள்ள கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருவது குறித்த திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

**50—**

## அத்தியாவசியப் பொருட்கள்

**வினா எண் 63759—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் ஊராட்சி, கொட்டாய்மேடு மீனவர்களுக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் அத்தியாவசியப் பொருட்களை வழங்க அரசு முன்வருமா?

[2005 செப்டம்பர் 22

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மீனவர்களுக்கு, மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் நியாய விலைக் கடை மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் ஊராட்சி, கொட்டாய்மேடு மீனவர்களுக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கக் கோரி உரிய முன்மொழிவு பெறப்பட்டால் அதனை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

**51—**

**மீன் உலர்த்தும் களம்**

**வினா எண் 63760—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் ஊராட்சி, கொட்டாய்மேடு மீனவர் கிராமத்தில் மீன் உலர்த்தும் களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**52—**

**விடுகளைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 64519—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 22]

அறந்தாங்கி தொகுதி, பொன் நகர் மற்றும் ஆளவஞ்சிக்காட்டில் உள்ள மீனவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகளைப் பழுதுபார்த்துத் தரும் கருத்துரு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, பொன் நகர் மற்றும் ஆளவஞ்சிக்காட்டில் உள்ள மீனவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகளைப் பழுதுபார்த்துத் தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**53—**

**விடுகளைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 64524—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, புதுக்குடி–தெற்கு கிராம மீனவர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகளைப் பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, புதுக்குடி–தெற்கு கிராம மீனவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகளைப் பழுதுபார்க்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**54—**

**நிலங்கள் வழங்குதல்**

**வினா எண் 64530—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில் உள்ள முத்துக்குடா கிராமம் மற்றும் அரசநரிப்பட்டினம் கிராமத்தில் உள்ள மீனவர்களுக்கு மீன் பண்ணைகள் தொடங்க அரசு புறம்போக்கு நிலங்களை வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில் உள்ள முத்துக்குடா கிராமம் மற்றும் அரசநரிப்பட்டினம் கிராமத்தில் உள்ள மீனவர்களுக்கு மீன் பண்ணைகள் தொடங்க அரசு புறம்போக்கு நிலங்களை வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**55—**

## நிலங்களைக் குத்தகைக்கு வழங்குதல்

**வினா எண் 64536—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில் உள்ள அய்யம்பட்டினம், கோபாலபட்டினம், ஆர்.புதுப்பட்டினம் மற்றும் தெற்கு புதுக்குடி கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு மீன் பண்ணைகள் துவங்க அரசு புறம்போக்கு நிலங்களைக் குத்தகைக்கு வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில் உள்ள அய்யம்பட்டினம், கோபாலபட்டினம், ஆர்.புதுப்பட்டினம் மற்றும் தெற்கு புதுக்குடி கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு மீன் பண்ணைகள் துவங்க அரசு புறம்போக்கு நிலங்களைக் குத்தகைக்கு வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**56—**

## நிலங்களைக் குத்தகைக்கு வழங்குதல்

**வினா எண் 64540—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் உள்ள பொன்னகரம், வடக்கு அம்மாபட்டினம் மற்றும் கட்டுமாவடி கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு மீன் பண்ணைகள் துவங்க அரசு புறம்போக்கு



நிலங்களைக் குத்தகைக்கு வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதியில் உள்ள பொன்னகரம், வடக்கு அம்மாபட்டினம் மற்றும் கட்டுமாவடி கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு மீன் பண்ணைகள் துவங்க அரசு புறம்போக்கு நிலங்களைக் குத்தகைக்கு வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**57—**

## கடன் வசதி

**வினா எண் 64543—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் உள்ள அலமஞ்சிக்காடு, முத்துக்குடா, அரசநரிப்பட்டினம், ஆர்.புதுப்பட்டினம் மற்றும் கோபாலபட்டினம் கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு மீன் பண்ணைகள் தொடங்க கடன் வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதியில் உள்ள அலமஞ்சிக்காடு, முத்துக்குடா, அரசநரிப்பட்டினம், ஆர்.புதுப்பட்டினம் மற்றும் கோபாலபட்டினம் கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு மீன் பண்ணைகள் தொடங்க கடன் வசதி செய்து தரும் திட்டம் ஏதும் இல்லை.

**58—**

## கடன் வசதி

**வினா எண் 64548—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 22

அறந்தாங்கி தொகுதியில் உள்ள அய்யம்பட்டினம், ஜெகதாப்பட்டினம், தெற்கு புதுக்குடி, கோட்டைப்பட்டினம் மற்றும் வடக்கு புதுக்குடி கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு மீன் பண்ணைகள் தொடங்க கடன் வசதி செய்து தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதியில் உள்ள அய்யம்பட்டினம், ஜெகதாப்பட்டினம், தெற்கு புதுக்குடி, கோட்டைப்பட்டினம் மற்றும் வடக்கு புதுக்குடி கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு மீன் பண்ணைகள் தொடங்க கடன் வசதி செய்து தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**59—**

## கடன் வழங்குதல்

**வினா எண் 64553—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் உள்ள பொன்னகரம், அந்தோணியார்புரம், வடக்கு அம்மாபட்டினம் மற்றும் கட்டுமாவடி கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு மீன் பண்ணைகள் தொடங்க கடன் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதியில் உள்ள பொன்னகரம், அந்தோணியார்புரம், வடக்கு அம்மாபட்டினம் மற்றும் கட்டுமாவடி கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு மீன் பண்ணைகள் தொடங்க கடன் வழங்க திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**60—**

## ஆய்வுக் கூடம்

**வினா எண் 64844—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 22]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, பழையாறு மற்றும் திருமுல்லைவாசலில் கெண்டை மீன் குஞ்சு உற்பத்தியைப் பெருக்க, மீன் விந்தணுக்கள் குளிர் பதனிடும் ஆய்வுக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, பழையாறு மற்றும் திருமுல்லைவாசல் உவர் நீர்ப் பகுதி என்பதால், கெண்டை மீன் குஞ்சு உற்பத்தியைப் பெருக்கச் செய்வது சாத்தியமில்லை என்பதால், மீன் விந்தணுக்கள் குளிர் பதனிடும் ஆய்வுக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**61—**

## மீன் வளர்ப்பு

**வினா எண் 65400—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, டலபட்டி, ஊராங்கனி மற்றும் புதுப்பட்டு ஊராட்சிகளில் உள்ள ஏரிகளைத் தூர் வாரி மீன் வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**62—**

## மீன் வளர்ப்பு

**வினா எண் 65403—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், க.செல்லம்பட்டு கிராமம், மாதவச்சேரி ஊராட்சி மற்றும் கரடிசித்தூர் கிராமத்தில் உள்ள ஏரிகளைத் தூர் வாரி, ஆழப்படுத்தி மீன் வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு எதுவும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

**63—**

**மீன் வளர்ப்பு**

**வினா எண் 65406—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னசேலம் தொகுதி, ஏ.வாசுதேவனூர் ஊராட்சியில் உள்ள ஏரிகளைத் தூர் வாரி, ஆழப்படுத்தி மீன் வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு எதுவும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

**64—**

**மீன் வளர்ப்புப் பண்ணை**

**வினா எண் 65462—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதியில் உள்ள மூக்கனேரியைத் தூர் வாரி, ஆழப்படுத்தி மீன் வளர்ப்புப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**65—**

**மிதவைப் படகுகள்**

**வினா எண் 65784—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீன்வளத் துறையின் மூலம் உள்நாட்டு நீர்நிலைகளுக்கு வாங்கப்பெற்ற 100 மிதவைப் படகுகள் தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டத்திற்கு வழங்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

மீன்வளத் துறையின் மூலம் உள்நாட்டு நீர்நிலைகளுக்கு 100 மிதவைக் கூடுகள் வாங்கப்பெற்றன. அவை கடலூர், தர்மபுரி, தேனி, திருச்சி, திருவண்ணாமலை, திருவள்ளூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**66—**

**உயர் ரக மீன்கள்**

**வினா எண் 65827—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை வட்டம், திருமூர்த்தி, அமராவதி அணைகளில் உயர் ரக மீன்கள் வளர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

உடுமலை வட்டம், அமராவதி, திருமூர்த்தி நீர்த்தேக்கங்களில் உயர் ரக கெண்டை மீன்களான கட்லா, ரோகு, மிர்கால் ஆகியவை அதிகமாக இருப்பு செய்து வளர்க்கப்பட்டு வருகின்றன.

[2005 செப்டம்பர் 22

**67—**

### மீன் உற்பத்தி

**வினா எண் 67210—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள ஆழியாறு அணையில், விறால், கட்லா, ரோகு, பொம்மீன், மிருகால் போன்ற மீன்களையும் பரம்பிக்குளம் மற்றும் சோலையாறு அணைகளில் சில்வர் மீன் மற்றும் பில்லுகெண்டை போன்ற மீன்கள் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள ஆழியாறு அணையில், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் விறால், கட்லா, ரோகு, மிருகால் மற்றும் சாதாக் கெண்டை போன்ற மீன்களின் உற்பத்தியினை 60 டன் இலக்கு நிர்ணயித்து உற்பத்தி செய்து வருகிறது. சோலையாறு அணையில் பொம்மீன் வளர்ப்பு மேற்கொள்ள மேற்படி மீன்குஞ்சு உற்பத்தி நிலையம் ஏற்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

**68—**

### சமுதாயக் கூடம்

**வினா எண் 67274—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கீழமூவர்க்கரை, சாவடிகுப்பம், மேலமூவர்க்கரை, கொடியம்பாளையம் தீவு மற்றும் தொடுவாய் மீனவ மக்களுக்கு சமுதாயக் கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கீழமூவர்க்கரை, சாவடிகுப்பம், மேலமூவர்க்கரை, கொடியம்பாளையம் தீவு மற்றும் தொடுவாய் மீனவ மக்களுக்கு சமுதாயக் கூடம் அமைப்பது குறித்த திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.





**69—**

### சமுதாயக் கூடம்

**வினா எண் 67279—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், மடத்துக்குப்பம், நாயக்கர்குப்பம், ஓடைகொட்டாய்மேடு, மடவாமேடு, கூழையார் கிராமம் மற்றும் திருமுல்லைவாசல் மீனவர் கிராமங்களுக்கு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், மடத்துக்குப்பம், நாயக்கர்குப்பம், ஓடைகொட்டாய்மேடு, மடவாமேடு, கூழையார் கிராமம் மற்றும் திருமுல்லைவாசல் மீனவர் கிராமங்களுக்குச் சமுதாயக் கூடம் கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**70—**

### ஸ்ரீவிசாலாட்சி நூற்பாலை

**வினா எண் 63089—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 29-4-2003-லிருந்து மதுரை மாவட்டம், ஸ்ரீவிசாலாட்சி நூற்பாலை தொழிலாளர்களுக்குக் கடந்த எட்டு மாத காலமாக லே-ஆப், அளித்து விட்டதால் இந்த ஆலையை இயக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2-5-2003 முதல் இயங்காமல் உள்ள ஸ்ரீவிசாலாட்சி ஆலையில் பணிபுரிந்த அனைத்துத் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தால் லே-ஆப் வழங்கப்பட்டுள்ளது. நிர்வாகமும், மின் கட்டணத்தைப் பெருமளவில் செலுத்தி விட்டது. மீதமுள்ள தொகையைச் செலுத்தி நிர்வாகம் ஆலையை மீண்டும் நடத்த முயற்சித்து வருவதால், இந்த ஆலையை இயக்க அரசு முன்வரவேண்டிய அவசியம் ஏதும் எழவில்லை. தொழிலாளர் நலத் துறையினரால் அவ்வப்போது நிர்வாகத்திடம் தொடர்புகொண்டு இயக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், மீண்டும் 450 தொழிலாளர்களுக்கும் திரும்ப வேலை வழங்க உள்ளதாக நிர்வாகம் தெரிவித்துள்ளதாலும், தற்போது எவ்வித பிரச்சினையும் எழவில்லை. நிர்வாகம் அளித்த வாக்குறுதிப்படி ஆலையைத் திறந்து நடத்தும் வரை, தொழிற்சங்கங்களை அமைதிகாக்குமாறும், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் ஏதும் ஏற்படாதவாறும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**71—**

## அடி பம்பு அமைத்தல்

**வினா எண் 8314—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், நத்தகுழி கிராமத்திற்கு ஒரு அடி பம்பு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்தைச் சார்ந்த நத்தகுழி கிராமத்தில் 2002-2003-ம் நிதியாண்டில் சிறு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.



2005 செப்டம்பர் 22]

**72—**

## வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

**வினா எண் 35088—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதியில், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் எவ்வளவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன?

(ஆ) இதற்காக அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதியில், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 25 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக அரசு செலவிட்ட தொகை ரூ.14.20 இலட்சம் ஆகும்.

**73—**

## குடிநீர் வசதி

**வினா எண் 37351—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில், 2003-2004-ம் ஆண்டில் கல்வியில் பின்தங்கிய சிறுபான்மையினர் பகுதிக்கான முனைப்புத் திட்டத்தின்கீழ் குடிநீர் வசதிகள் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கல்வியில் பின்தங்கிய சிறுபான்மையினர் பகுதிக்கான முனைப்புத் திட்டம் என்று ஏதும் இல்லை.

**74—**

## நிதி ஒதுக்கீடு

**வினா எண் 37901—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001–2002 ஆம் நிதி ஆண்டில் எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திற்குத் தமிழக அரசு சம்பூர்ண கிராமிய ரோஜ்கார் யோஜனா திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கியது?

(ஆ) எத்தனை பணிகள் மேற்கொள்ளப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முந்தைய ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டம் மற்றும் வேலைவாய்ப்பு உதவி அளிப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் 2001–2002 ஆம் ஆண்டில் முதல் தவணை நிதி வழங்கப்பட்டு, திட்டம் செயலாக்கப்பட்டுவந்த நிலையில், அதே ஆண்டின் பிற்பகுதியில் மேற்படி திட்டங்களும் ஒன்றிணைக்கப்பட்டு, சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டம் என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, அவ்வாண்டின் இரண்டாவது தவணை நிதி, புதிய திட்டமான சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின் பெயரில் வழங்கப்பட்டது.

2001–2002 ஆம் நிதி ஆண்டில் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திற்குத் தொகை ரூ.14,20,572/– ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தம் 25 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.



2005 செப்டம்பர் 22]

**75—**

## நிதி உதவி

**வினா எண் 37903—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2002–2003 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திற்கு சம்பூர்ண கிராம ரோஜ்கார் வளர்ச்சித் திட்டத்திற்கு அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2002–2003 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திற்கு சம்பூர்ண கிராம ரோஜ்கார் வளர்ச்சித் திட்டம் பகுதி–1-ன் மூலம் ரூ.417.517 இலட்சமும், பகுதி–2-ன் மூலம் ரூ.393.447 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.810.964 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

**76—**

## கட்டட வசதி

**வினா எண் 39554—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, குன்றாண்டார்கோவில் ஒன்றியம், பாப்புடையான்பட்டி ஊராட்சியில் செயல்படும் நியாயவிலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, குன்றாண்டார்கோவில் ஒன்றியம், பாப்புடையான்பட்டி ஊராட்சியில் செயல்படும்

[2005 செப்டம்பர் 22

நியாயவிலைக் கடை, பகுதி நேர அங்காடியாதலால், தற்போது செயல்படுத்தப்படும் எந்த ஒரு திட்டத்தின்கீழும் இப் பகுதிநேர அங்காடிக்கு நியாயவிலைக் கடை கட்டடம் கட்டித் தர வழிவகை இல்லை.

**77—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 40078—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், செம்பாட்டூர் ஊராட்சி, செம்பாட்டூரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், செம்பாட்டூர் ஊராட்சியைச் சேர்ந்த செம்பாட்டூர் குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் 3/2004 முதல் மக்கள் பயனில் உள்ளது.

**78—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 40105—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் ஒன்றியம் தெம்மாவூர் ஊராட்சி, நெய்வேலி கிராமத்தில் தண்ணீர் தட்டுப்பாடு நீங்கிட சிறு மேல்நிலைத் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குன்றாண்டார்கோவில் ஒன்றியம், தெம்மாவூர் ஊராட்சியைச் சார்ந்த நெய்வேலி குடியிருப்பிற்கு தற்போது பயனில் உள்ள 2 கையிறைப்பான்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்பிற்கு வரும் நிதியாண்டுகளில், முன்னுரிமை அடிப்படையில் திட்டம் செயல்முறைக்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**79—**

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 43903—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கொந்தளம் ஊராட்சி, வெங்கமேட்டுப்புதூர் கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், கொந்தளம் ஊராட்சி, வெங்கமேட்டுப்புதூரில் விளையாட்டு மைதானம் அமைக்க சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கொந்தளம் ஊராட்சி மன்றத் தலைவரால் கபிலர்மலை சட்டமன்ற உறுப்பினர் அவர்களை நேரில் அணுகப்பட்டு வருகிறது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றதும், விளையாட்டு மைதானம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2005 செப்டம்பர் 22

80—

## கடன் உதவி

**வினா எண் 44206—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி மற்றும் எடப்பாடி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மொத்த மகளிர் மன்றங்கள் எத்தனை?

(ஆ) இவற்றில் எத்தனை மன்றங்களுக்கு அரசு சிறுதொழில் செய்ய கடன் வழங்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி மற்றும் எடப்பாடி ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் முறையே 120 மற்றும் 106 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இவற்றில் சிறுதொழில் துவங்க மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 70 குழுக்களுக்கு ரூ.61.72 இலட்சம் நிதியும், எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 56 குழுக்களுக்கு ரூ.16.755 இலட்சம் நிதியும் அரசு கடனாக வழங்கியுள்ளது.

81—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 44341—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதி, எண் 2, கரியமாணிக்கம் ஊராட்சி, செந்தாமரைக்கண், பி.நகர் பகுதியில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினை தீர, கொள்ளிடம் கிணற்றில் நீரிறைப்பு இயந்திரம் பொருத்தி 1,500 மீட்டர் தூரம் குழல் குழாய் (பைப் லைன்) அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

முசிறி தொகுதி, எண் 2, கரியமாணிக்கம் ஊராட்சி, செந்தாமரைக்கண், பி.நகர் பகுதி சிறுகாம்பூர் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்புக்கு எண் 2, கரியமாணிக்கம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் 2.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலைத் தொட்டி அமைக்கப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் செந்தாமரைக்கண், பி.நகர் பகுதிக்கும் பகிர்மானக் குழாய் அமைத்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதிக்குப் புதியதாக திட்டம் அமைக்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

82—

## புதிய ஆழ்குழாய்க் கிணறு

**வினா எண் 44343—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், பூனாம்பாளையம் ஊராட்சி, வடக்கிபட்டி கிராமக் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், பூனாம்பாளையம் ஊராட்சி, வடக்கிபட்டி குடியிருப்புக்கு ஏற்கெனவே அங்குள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதியதாக திட்டம் செயல்படுத்தத் தேவை இல்லை.

83—

### ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 44420—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை தொகுதி, சோளிங்கர் ஒன்றியம், பெரியமிட்டூர் மற்றும் முத்தரசிகுப்பம் கிராமங்களில் ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், சோளிங்கர் ஒன்றியத்தைச் சேர்ந்த விண்ணம்பள்ளி ஊராட்சியில் உள்ள பெரியமிட்டூர் குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. தற்போது வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஆழ்துளைக் கிணறு அமைத்து கையிறைப்பான் பொருத்தப்பட்டுள்ளது. கூடுதல் குடிநீர் வசதிக்கு உள்ளாட்சி அமைப்பு கையிறைப்பான் பொருத்தப்பட்டுள்ளது.

இதே ஒன்றியத்தைச் சார்ந்த முத்தரசிகுப்பம் ஊராட்சியில் உள்ள முத்தரசிகுப்பம் குடியிருப்பிற்கு 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, கூடுதல் ஆழ்துளைக் கிணறு அமைப்பது பரிசீலனையில் இல்லை.

84—

### அங்காடிகளுக்குக் கட்டடம்

**வினா எண் 45043—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், அதவத்தூர், வெள்ளூர், இடையாறு, வேட்டலூர் மற்றும் மங்களநாடு ஆகிய இடங்களில் உள்ள அங்காடிகளுக்கு கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலை சரியில்லாததால், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், அதவத்தூர், வெள்ளூர், இடையாறு, வேட்டலூர் மற்றும் மங்களநாடு ஆகிய இடங்களில் உள்ள அங்காடிகளுக்குக் கட்டடம் தற்போது கட்டித் தர இயலாது.

85—

### அங்காடிக் கட்டடம்

**வினா எண் 45169—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அமரசிம்மேந்திரபுரம், அரசர்குளம், கீழ்பாதி கிராமங்களில் அங்காடிக் கட்டடம் கட்டித் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நிதிநிலை சரியில்லாததால், அறந்தாங்கி தொகுதி, அமரசிம்மேந்திரபுரம், அரசர்குளம், கீழ்பாதி கிராமங்களில் அங்காடிக் கட்டடம் கட்டித் தர இயலாது.

86—

### சாலைகளைச் செப்பனிடுதல்

**வினா எண் 50522—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 22

(அ) சேலம் மாநகராட்சி, சந்தைப்பேட்டை முதல் செவ்வாய்ப்பேட்டை மயானம் வரை உள்ள சாலை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அச்சாலை எப்போது செப்பனிடப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். சேலம் மாநகராட்சி, சந்தைப்பேட்டை முதல் செவ்வாய்ப்பேட்டை மயானம் வரையுள்ள சாலையின் அடித்தளம் களிமண்ணாக இருப்பதால் பராமரிப்பு மேற்கொண்டாலும் சாலை அடிக்கடி பழுது அடைகின்றது. எனவே, மண் பரிசோதனை செய்யப்பட்டு ரூ.19.45 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**87—**

## விளையாட்டு கருவிகள்

**வினா எண் 50788—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகர், சிதம்பரம் பூங்காவிற்கு கூடுதல் விளையாட்டுக் கருவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகர், சிதம்பரம் பூங்காவில் தற்போது விளையாட்டுத் திடல் உள்ளது. இதில் பொதுமக்களுடன் சிறுவர் சிறுமியர் வந்து சென்று விளையாட போதுமான இடவசதியும், விளையாட்டுக் கருவிகளும் உள்ளன. கூடுதலாக விளையாட்டுக் கருவிகள் பொருத்த இடவசதி இல்லை. புதிய விளையாட்டுக் கருவிகள் வாங்க உத்தேசம் இல்லை.



2005 செப்டம்பர் 22]

**88—**

## மின் விளக்கு வசதி

**வினா எண் 52492—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதிரிவேலூர் ஊராட்சி, மாதானம் ஊராட்சி, குன்னம் ஊராட்சி மற்றும் கூத்தியப்பேட்டை ஊராட்சிகளில் சூரிய சக்தியைக் கொண்டு கிராம எரிசக்தித் திட்டத்தின்கீழ் மின் விளக்கு அமைப்பதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதிரிவேலூர் ஊராட்சி, மாதானம் ஊராட்சி, குன்னம் ஊராட்சி மற்றும் கூத்தியப்பேட்டை ஊராட்சிகளில் சூரிய சக்தியைக் கொண்டு கிராம எரிசக்தித் திட்டத்தின்கீழ் மின் விளக்குகள் அமைத்திட மேற்கண்ட ஊராட்சிகளில் நிதி வசதி போதுமானதாக இல்லை என்பதால் சூரிய சக்தியைக் கொண்டு மின் விளக்கு அமைக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**89—**

## கிராம எரிசக்தித் திட்டம்

**வினா எண் 52496—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கொடியம்பாளையம் ஊராட்சி, கீழமாத்தூர் ஊராட்சி, கடவாசல் ஊராட்சி மற்றும் கோபாலசமுத்திரம் ஊராட்சிகளில் சூரிய சக்தியைக் கொண்டு கிராம

[2005 செப்டம்பர் 22

எரிசக்தி திட்டத்தின்கீழ் மின் விளக்கு அமைப்பதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கொடியம்பாளையம் ஊராட்சி, கீழமாத்தூர் ஊராட்சி, கடவாசல் ஊராட்சி மற்றும் கோபாலசமுத்திரம் ஊராட்சியில் சூரிய சக்தியைக் கொண்டு கிராம எரிசக்தித் திட்டத்தின்கீழ் மின் விளக்கு அமைத்திட மேற்கண்ட ஊராட்சிகளில் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லை என்பதால் சூரிய சக்தியைக் கொண்டு மின் விளக்கு அமைக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**90—**

## முழு எழுத்தறிவுத் திட்டம்

**வினா எண் 53035—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்குத் தொகுதியில் உள்ள மாநகராட்சிப் பள்ளிகளில் முழு எழுத்தறிவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சியில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் அனைவருக்கும் கல்வித் திட்ட இயக்ககத்தின் மூலமாக முழு எழுத்தறிவுத் திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2005 செப்டம்பர் 22]

**91—**

## சல்லடை அமைத்தல்

**வினா எண் 54151—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகர், 5–வது பகுதி, அழகாபுரம், பெரியபுதூர், முருகாரன்காடு பகுதியில் உள்ள கிணற்றைத் தூர் வாரி சல்லடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகர், 5–வது பகுதி, அழகாபுரம், பெரியபுதூர், முருகாரன்காடு பகுதியில் உள்ள கிணற்றினைத் தூர் வாரி சுத்தம் செய்து சுற்றுச் சுவர் அமைத்து சல்லடை அமைக்க ரூ.75,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மேல் நடவடிக்கையில் உள்ளது.

**92—**

## சல்லடை ஏற்படுத்துதல்

**வினா எண் 54163—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகர், 12–வது பகுதி, மணக்காடு அரச மரத்தடியில் உள்ள பொது கிணற்றைத் தூர் வாரி சல்லடை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சி, 12–வது பகுதி, மணக்காடு அரச மரத்தடியில் உள்ள பொதுக் கிணற்றைத் தூர் வாரி சல்லடை ஏற்படுத்தும் பணி

[2005 செப்டம்பர் 22

மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று வரும் நிதியாண்டில் (2005–2006) மேற்கொள்ளப்பட உள்ளது.

**93—**

## மின் விளக்கு

**வினா எண் 55201—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், காட்டூர் ஊராட்சி, ஆரப்பள்ளம் ஊராட்சி, அரசூர் ஊராட்சி மற்றும் எடமணல் ஊராட்சியில் சூரிய சக்தியைக் கொண்டு கிராம எரிசக்தித் திட்டத்தின்கீழ் மின் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கொள்ளிடம் ஒன்றியம், காட்டூர், ஆரப்பள்ளம், அரசூர் மற்றும் எடமணல் ஆகிய ஊராட்சிகளில் சூரிய சக்தியைக் கொண்டு கிராம எரிசக்தி திட்டத்தின்கீழ் மின்விளக்கு அமைத்திட மேற்படி ஊராட்சிகளின் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லாததால், கிராம எரிசக்தித் திட்டத்தின்கீழ் அவ்விடங்களில் மின் விளக்கு அமைக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**94—**

## மின் விளக்கு

**வினா எண் 55205—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 22]

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், நிம்மேலி ஊராட்சி, அகணி ஊராட்சி, கதிராமங்கலம் ஊராட்சி, மங்கைமடம் ஊராட்சி, பெருந்தோட்டம் ஊராட்சி, தென்னாம்பட்டினம் ஆகிய ஊராட்சிகளில் சூரிய சக்தியைக் கொண்டு கிராம எரிசக்தித் திட்டத்தின்கீழ் மின் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி ஒன்றியம், நிம்மேலி, அகணி, கதிராமங்கலம், மங்கைமடம், பெருந்தோட்டம், தென்னாம்பட்டினம் ஆகிய ஊராட்சிகளில் சூரிய சக்தியைக் கொண்டு கிராம எரிசக்தித் திட்டத்தின்கீழ் மின் விளக்குகள் அமைத்திட மேற்கண்ட ஊராட்சிகளின் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லாததால், இப்பணியினைச் செய்திட இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**95—**

## மின் விளக்கு

**வினா எண் 55222—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், வள்ளுவக்குடி ஊராட்சி, கற்கோவில் ஊராட்சி, ஆதமங்கலம் ஊராட்சி, புங்கனூர் ஆகிய ஊராட்சிகளில் சூரிய சக்தியைக் கொண்டு கிராம எரிசக்தித் திட்டத்தின்கீழ் மின் விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி ஒன்றியம், வள்ளுவக்குடி ஊராட்சி, கற்கோவில், ஆதமங்கலம், புங்கனூர் ஆகிய ஊராட்சிகளில் சூரிய சக்தியைக் கொண்டு கிராம எரிசக்தித் திட்டத்தின்கீழ் மின் விளக்கு அமைத்திட மேற்கண்ட ஊராட்சிகளில் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லாததால், இப்பணியினைச் செய்து கொடுக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**96—**

**கிராம எரிசக்தி திட்டம்**

**வினா எண் 55230—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆர்ப்பாக்கம் ஊராட்சி, ஆலங்காடு ஊராட்சி, எருக்கூர் ஊராட்சியில் சூரிய சக்தியைக் கொண்டு கிராம எரிசக்தித் திட்டத்தின்கீழ் மின் விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கொள்ளிடம் ஒன்றியம், ஆர்ப்பாக்கம் ஊராட்சி, ஆலங்காடு ஊராட்சி, எருக்கூர் ஊராட்சியில் சூரிய சக்தியைக் கொண்டு கிராம எரிசக்தி திட்டத்தின்கீழ் மின் விளக்கு அமைத்திட மேற்கண்ட ஊராட்சிகளில் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லாததால், சூரிய சக்தியைக் கொண்டு கிராம எரிசக்தித் திட்டத்தின்கீழ் மேற்கூறிய ஊராட்சிகளில் மின் விளக்கு அமைக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.



2005 செப்டம்பர் 22]

**97—**

**மின் விளக்கு வசதி**

**வினா எண் 56376—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், நெப்பத்தூர் ஊராட்சி, காரைமேடு, காத்திருப்பு, செம்பதனிருப்பு, வானகிரி, மேலையூர், இராதாநல்லூர், திருவெண்காடு, மணிக்கிராமம் மற்றும் திருவாலி ஊராட்சிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடத்திற்கு சூரிய ஒளி மூலம் (சோலார் சிஸ்டம்) மின் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி ஒன்றியம், நெப்பத்தூர், காரைமேடு, காத்திருப்பு, செம்பதனிருப்பு, வானகிரி, மேலையூர், இராதாநல்லூர், திருவெண்காடு, மணிக்கிராமம் மற்றும் திருவாலி ஆகிய ஊராட்சிகளின் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்களுக்கு சூரிய ஒளியைக் கொண்டு மின் விளக்கு அமைத்திட மேற்கண்ட ஊராட்சிகளின் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லை என்பதால் இப்பணியினைச் செய்திட இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**98—**

**சூரிய ஒளிமூலம் மின் விளக்கு**

**வினா எண் 56386—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 22

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கற்கோவில், கீழ்சட்டநாதபுரம், மங்கைமடம், அத்தியூர், பெருந்தோட்டம், புதுத்துறை, விளந்திடச்சமுத்திரம், வள்ளுவக்குடி மற்றும் கொண்டல் ஊராட்சியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடத்திற்கு சூரிய ஒளி மூலம் (சோலார் சிஸ்டம்) மின் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி ஒன்றியம், கற்கோவில், கீழ்சட்டநாதபுரம், மங்கைமடம், அத்தியூர், பெருந்தோட்டம், புதுத்துறை, விளந்திடச்சமுத்திரம், வள்ளுவக்குடி மற்றும் கொண்டல் ஊராட்சிகளின் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்களுக்கு சூரிய ஒளியைக் கொண்டு மின் விளக்கு அமைத்திட. மேற்கண்ட ஊராட்சிகளின் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லை. எனவே, இப்பணியினைச் செய்திட இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**99—**

## மின் விளக்கு

**வினா எண் 57025—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வேட்டங்குடி ஊராட்சி, கூழையூர் மீனவர் கிராமத்தில் சூரிய சக்தியைக் கொண்டு கிராம எரிசக்தித் திட்டத்தின்கீழ் மின் விளக்கு எரியச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, வேட்டங்குடி ஊராட்சி, கூழையூர் மீனவர் கிராமத்தில் கிராம எரிசக்தியைக் கொண்டு மின் விளக்கு அமைத்திட



2005 செப்டம்பர் 22]

வேட்டங்குடி ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததால் இப்பணியினைச் செய்ய இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**100—**

## அபிவிருத்திப் பணிகள்

**வினா எண் 57264—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பொறியியல் பிரிவில் நடைபெற்று வரும் அபிவிருத்திப் பணிகளைக் கண்காணிக்கவும், தரத்தை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் நடைபெற்று வரும் மாநகராட்சி கட்டடப் பணிகள், சாலைகள், மழைநீர் வடிகால், பாதாளச் சாக்கடை, தெரு விளக்கு, குடிநீர் விநியோகம் போன்ற வளர்ச்சிப் பணிகள் யாவும், மாநகராட்சியின் பொறியியல் பிரிவில் உள்ள 18 இளம் உதவிப் பொறியாளர்கள் பொதுப் பணியினையும், 5 இளம் உதவிப் பொறியாளர்கள் குடிநீர்ப் பணியினையும், பகுதி பொறியாளர் மூலம் தொழில்நுட்பப் பணியாளர்கள் அன்றாடம் கவனித்து வருகின்றனர். மேற்கண்ட பணிகள் உதவி நிர்வாகப் பொறியாளர், நிர்வாகப் பொறியாளர் மற்றும் மாநகராட்சிப் பொறியாளரால் ஆய்வு செய்யப்படுகின்றன.

இப்பணிகளின் மாதிரிகள் எடுக்கப்பட்டு அரசு ஆய்வுக் கூடத்திலும், பிரதான பொறியியல் கல்லூரி ஆய்வுக் கூடங்களிலும் சோதனை செய்யப்பட்டு தரம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

[2005 செப்டம்பர் 22

## (மூன்றாம் பட்டியல்)

1—

### ஊக்கத் தொகை

**வினா எண் 52730—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் சிறுசேமிப்பு வசூலில் உள்ளாட்சி மன்றங்களுக்கான ஊக்கத் தொகையை அதிகரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதியமைச்சர்:**

(அ) உள்ளாட்சி மன்றங்களுக்கான ஊக்கத்தொகை சென்ற ஆண்டைவிட உள்ளாட்சி மன்றங்கள் கூடுதல் சிறுசேமிப்பு வசூல் செய்வதன் அடிப்படையில் வழங்கப்படுகின்றது. சிறுசேமிப்பு வசூல் அடிப்படையில் ஏற்காடு உள்ளாட்சி மன்றத்திற்கு நிதி மாவட்ட ஆட்சியரால் பிரித்து வழங்கப்படுகிறது.

(ஆ) வினா எழவில்லை.

2—

### கடன் வசூல் செய்தல்

**வினா எண் 53750—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அம்மாபேட்டை ப்பி.ஏ.சி.பி. (PACB) வங்கிப் பணியாளர்கள் கடன் பெற்றுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கடனை வசூல் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இவ்வங்கியில் பணியாளர்கள் தாம் பெற்ற கடன்களை உரிய தவணைகளில் செலுத்தி வருகின்றனர். மேலும் தவணை தவறிய நிலுவை ஏதும் இல்லை. எனவே, இதில் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

3—

### கட்டட வசதி

**வினா எண் 67534—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்ட கூட்டுறவு துணைப் பதிவாளர் மற்றும் இணைப் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் அலுவலகம் ஈரோட்டில் நெ.68, கன்னையன் லேஅவுட், திருநகர் காலனியில் அமைந்துள்ள தனியார் கட்டடத்தில் ரூ.13,600/- (ரூபாய் பதிமூன்றாயிரத்து அறுநூறு மட்டும்) மாத வாடகையிலும் மற்றும் ஈரோடு சரக துணைப் பதிவாளர் அலுவலகம் ஈரோட்டில் நெ.60, இரண்டாவது மாடி, திருவேங்கடசாமி தெருவில் அமைந்துள்ள தனியார் கட்டடத்தில் ரூ.7,500/- (ரூபாய் ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) மாத வாடகையிலும் இயங்கி வருகிறது. ஈரோடு மண்டல இணைப் பதிவாளர் அலுவலகம் மற்றும் ஈரோடு சரகத் துணைப் பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இதுவரை நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. தற்போதுள்ள நிதி நெருக்கடியில் மேற்படி அலுவலகங்களுக்கு அரசு செலவில் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

4—

### நெல் கொள்முதல் நிலையம்

**வினா எண் 69016—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்மாபுரம், கருவேப்பிலங்குறிச்சி ஆகிய பகுதிகளில் அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

மத்திய அரசின் உத்தரவின்படி தமிழகத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் முகவராக தமிழகத்தில் 1-10-2002 முதல் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ் (Decentralised Procurement System) நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. விருத்தாச்சலம் தாலுக்கா பகுதியில் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை ஏதும் பெறப்படாத நிலையிலும், மாவட்ட ஆட்சியரால் கம்மாபுரம், கருவேப்பிலங்குறிச்சி ஆகிய ஊர்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க பரிந்துரைக்கப்படாத நிலையினாலும், அவ்வூர்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவில்லை. விருத்தாச்சலம் வட்ட செயல்முறை கிடங்கில் நெல் கொள்முதல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. இனி எதிர்வரும் அறுவடைக் காலங்களில் விவசாயிகளிடமிருந்து கோரிக்கையும், மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையும் பெறப்பட்டால், கம்மாபுரம் மற்றும் கருவேப்பிலங்குறிச்சி ஆகிய ஊர்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க பரிசீலனை செய்யப்படும்.

5—

### திருமண மண்டபம்

**வினா எண் 21320—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி, நஞ்சுண்டேஸ்வரர் ஆலய நிலத்தில் திருமண மண்டபம் கட்ட அரசு பரிசீலிக்குமா?



(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சர்வே எண் 508/5-ல் உள்ள 2.47 ஏக்கர் நிலத்தில், பொது மக்களின் நலன் கருதி திருக்கோயில் உபரி நிதி முதலீடு மூலம் மதிப்பீடுகள் தயாரித்து புதியதாக திருமண மண்டபம் கட்ட இந்து சமய அறநிலையத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6—

### ஆக்கிரமிப்பினை அகற்றுதல்

**வினா எண் 36710—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி பழைய விளாங்குடியிலுள்ள அழகர் கோயில் கட்டுப்பாட்டுக்குள்ளிருக்கும் பெருமாள் கோயில் கோட்டைச் சுவருக்குள் அடங்கிய இடத்தில் ஆக்கிரமிப்புச் செய்துள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமயநல்லூர் தொகுதி, மதுரை வடக்கு வட்டம், விளாங்குடியில் அரசு புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ள கருமாரியம்மன் கோயில் (முன்னர் பெருமாள் கோயில் என்று இருந்தது) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஒரு சிறிய கோயிலாகும். இக்கோயிலின் ஆக்கிரமிப்பினை, வருவாய்த் துறையினர் மூலம் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2005 செப்டம்பர் 22

7—

## விரைவு நீதிமன்றங்கள்

**வினா எண் 38283—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலயங்களின் நலன் கருதி, வருவாய் நீதிமன்றங்களில் விரைவு நீதிமன்றங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகம் முழுவதுமுள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களின் நிலக்குத்தகை நிலுவைத் தொகைகள் வசூலிப்பது தொடர்பான வழக்குகளை விசாரிக்கவும், குத்தகைதாரர்களை வெளியேற்றவும் தனித் துணை ஆட்சியர் தலைமையில் வருவாய் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, திருவாரூர், கடலூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும், வருவாய் அமர்வு நீதிமன்றங்கள் மன்னார்குடி, கும்பகோணம் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. மன்னார்குடி, கும்பகோணம் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள வருவாய் நீதிமன்றங்களைப் புத்தாக்கம் செய்வதற்கான செயற்குறிப்பு பரிசீலனைக்குப் பின்னர் நிராகரிக்கப்பட்டது. எனவே, தற்போது வருவாய் நீதிமன்றங்களில் விரைவு நீதிமன்றங்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

8—

## வாடகையை உயர்த்துதல்

**வினா எண் 56538—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 22]

(அ) கோயம்புத்தூர் அருள்மிகு பேரூர் பட்டீஸ்வரன் திருக்கோயில், மருதமலை திருக்கோயில், கோணியம்மன் திருக்கோயில் மற்றும் தண்டுமாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் கடை நடத்துபவர்கள் குறைந்த வாடகையைச் செலுத்தி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வாடகையை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேற்கூறிய நான்கு திருக்கோயில்களின் கடைகளுக்கும் மற்றும் கட்டடங்களுக்கும் கீழ்க்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

(1) மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக 14 கடைகள் உள்ளன. இக்கடைகள் ஆண்டுதோறும் ஒவ்வொரு பசலிக்கும், பொது ஏலம் விடப்படுகிறது. பொது ஏலத்தின் மூலம் விடப்படுவதால் குறைந்த வாடகை என்ற பிரச்சினையும், வாடகை உயர்த்தும் பிரச்சினையும் எழவில்லை.

(2) பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக 16 கடைகள் உள்ளன. மேலும் இராஜகோபுரத்தின் தென்புறம் உள்ள காலியிடத்தில் பூக்கடை நடத்திக்கொள்ளும் இடமும் மாத வாடகையின் பேரில் வருடா வருடம் வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. மேற்படி கடைகள் ஏலம்/டெண்டர் மூலம் விடப்பட்டு வருகிறது. கடைகள் பொது ஏலத்தின் மூலம் வாடகைக்கு விடப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் தொகைக்கு ஏலம் சென்றுள்ளது.

(3) கோவை அருள்மிகு கோணியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமாக எட்டு கட்டடங்கள் உள்ளன. வாடகை பாக்கிக்காகவும் இராஜகோபுரம் கட்ட இடம் திருக்கோயிலுக்குத் தேவை என்பதால், மேற்படி கட்டடங்களின் வாடகைதாரர்கள்மீது வழக்குகள் தொடரப்பட்டு ஆறு கட்டடங்கள் நீதிமன்றத்தின் மூலம் திருக்கோயில் வசம் சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது. மீதி இரண்டு கட்டடங்களைக் கையகப்படுத்த நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

(4) கோவை அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான ஆறு கடைகளுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு அதன்படி வாடகை வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி கடைகளுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை அரசாணையின்படியும் விதிமுறைகளின்படியும் திருத்திய வாடகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கூறியவாறு குறைந்த வாடகையின்றி நியாய வாடகைதான் வசூலிக்கப்பட்டு வருகிறது.

**9—**

## அருள்மிகு மாரியம்மன் கோயில்

**வினா எண் 62459—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையிலுள்ள நெடுங்குன்றா செட்டில்மெண்ட், வில்லோனி பகுதியிலுள்ள அருள்மிகு மாரியம்மன் கோயிலில் மண்டபமும், கோபுரமும் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, நெடுங்குன்றா செட்டில்மெண்ட் வில்லோனி பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் தேயிலைத் தோட்ட மக்களால் கட்டப்பட்டுள்ளது. கோயிலுக்கு மண்டபமும், கோபுரமும் சுமார் ரூ.2/- இலட்சம் செலவில் கட்டப்பட வேண்டும். திருக்கோயிலுக்கு நிதிவசதியில்லை என்பதுடன் இத்துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத காரணத்தினால், இலாகா மற்றும் அரசு நிதி உதவி திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.





**10—**

## அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் கோயில்

**வினா எண் 62460—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையிலுள்ள அருள்மிகு ஸ்ரீகாளியம்மன் கோயிலைச் சீர்படுத்தி செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, கக்கன் காலனியிலுள்ள அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் திருக்கோயில் இலாகா ஆளுகையின்கீழ் இல்லாத சிறிய திருக்கோயில். இத்திருக்கோயில் கட்ட ஆரம்பித்து, தற்போது நிதிவசதியில்லாத காரணத்தினால், மேற்படி கோயிலை கட்டி முடிக்க இயலவில்லை. இத்திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் காலனி பகுதியில் உள்ளது. 2004-2005 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியிலுள்ள கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணி நிதியுதவி திட்டத்தின்கீழ் இத்திருக்கோயில் இடம் பெறாததால், நடப்பு நிதியாண்டில், இத்திட்டத்தின்கீழ் பட்டியல் கோரும் சமயத்தில் பரிந்துரைக்கப்படும்.

**11—**

## திருமண மண்டபம்

**வினா எண் 62714—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறை முடிஸ் பகுதியிலுள்ள இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மூலமாக திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறை முடிஸ் பகுதியிலுள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இதுவரை இலாகாவின் ஆளுகையின்கீழ் கொண்டு வரப்படாத போதிய நிதி வசதியில்லாத சிறிய ஆலயமாகும். எனவே, இங்கு திருமண மண்டபம் கட்டித் தர இயலாத நிலை உள்ளது. மேலும், இத்திருக்கோயில் ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதியிலுள்ள கிராமத் திருக்கோயிலாக இருப்பதால், 2004-2005 ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்யும் நிதியுதவி திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு, ரூ.25,000/- நிதி வழங்கி, தற்போது திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**12—**

**பூங்கா அமைத்தல்**

**வினா எண் 62715—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையிலுள்ள கருமலை பாலாஜி திருக்கோயிலைச் சுற்றிலும் பூங்கா அமைத்து விரிவுபடுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறை கருமலை, அருள்மிகு பாலாஜி திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில், மேலும், இத்திருக்கோயிலைச் சுற்றியுள்ள காலியிடத்தில் ஏற்கெனவே பூங்கா அமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருவதாலும், இதனை விரிவுபடுத்தப் போதிய இடவசதி இல்லாததாலும் பூங்காவை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.





**13—**

**நந்தவனம்**

**வினா எண் 65793—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டத்திலுள்ள ஏழுமலையான் கோயில் பகுதியில் நந்தவனம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலை வட்டம், மானுப்பட்டி கிராமத்திலுள்ள அருள்மிகு ஏழுமலையான் திருக்கோயில் அடிவாரத்திலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவில் வனப் பகுதியில் இருப்பதாலும், வனவிலங்குகள் அதிக நடமாட்டம் உள்ள பகுதியாக இருப்பதாலும், சனிக்கிழமை மட்டுமே பூஜை நடைபெறுவதாலும், மற்ற நாட்களில் பக்தர்கள் செல்வது இல்லை என்பதாலும், திருக்கோயிலில் யாரும் தங்குவது கிடையாது. இங்கு நந்தவனம் அமைத்து பராமரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதால், நந்தவனம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**14—**

**அன்னதானத் திட்டம்**

**வினா எண் 66362—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, திருக்கோயில்களில் வழங்கும் அன்னதான திட்டத்தில், தாழ்த்தப்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் உள்ள கோயில்கள் எத்தனை சேர்க்கப்பட்டுள்ளன?

(ஆ) அதன் விவரம் என்ன?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அன்னதான திட்டத்தில் கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள கோயில்கள் எதுவும் சேர்க்கப்படவில்லை.

**15—**

**சத்துணவுக் கூடம்**

**வினா எண் 10346—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சி பேரூராட்சிக்கு உட்பட்ட 15-வது வார்டில் உள்ள தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் அரசு அமைத்து தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் 2-வது தொகுதியைச் சார்ந்த கன்னங்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட 15-வது வார்டு பகுதி, தாமரை நகர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி சத்துணவு மையம், சேலம் சூரமங்கலம், கோல்டன் சிட்டி அரிமா சங்கத்தினர் மூலமாக முழுமையாக கட்டப்பட்டது. தற்போது அந்தச் சத்துணவு மையம் செயல்பட்டு வருகிறது.

**16—**

**மகளிர் சுய உதவிக் குழுக்கள்**

**வினா எண் 41940—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் எத்தனை?



2005 செப்டம்பர் 22]

(ஆ) அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மொத்தம் 744 சுய உதவிக் குழுக்கள் செங்கற்பட்டு தொகுதியில் செயல்படுகின்றன.

(ஆ) 407 நபர்களுக்கு ரூ.112.59 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**17—**

**அங்கன்வாடி மையம்**

**வினா எண் 60283—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, நாம்பாக்கம் ஊராட்சி அகத்தீஸ்வர மங்கலம் கிராமத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு தொகுதி, நாம்பாக்கம் ஊராட்சி அகத்தீஸ்வர மங்கலம் கிராமத்தில் 1-12-2004 முதல் புதிய அங்கன்வாடி மையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**18—**

**அங்கன்வாடி கட்டடம்**

**வினா எண் 61668—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், சாட்டியக்குடி ஊராட்சி மற்றும் வெளியாத்தூர் கிராமத்தில் அங்கன்வாடி கட்டடம் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

இல்லை. மத்திய அரசிடம் இருந்து புதிய அங்கன்வாடி கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. ஆகவே, அங்கன்வாடி கட்டடம் கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**19—**

**குழந்தைகள் நல காப்பகம்**

**வினா எண் 66811—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம் மற்றும் கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி வாரியாக குழந்தைகள் நலக் காப்பகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) சமூக நலத் துறையின் மூலம் பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகத் திட்டம் மாநில அரசு நிதி உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கி வருகின்றன. அரசு அவ்வாறான 141 குழந்தைகள் காப்பகங்களுக்கு மானிய உதவி அளித்து வருகிறது. சீர்காழி தொகுதியில் சீர்காழி ஒன்றியம் மற்றும் கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி வாரியாக பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகங்கள் நடத்த தொண்டு நிறுவனம் ஏதேனும் முன்வந்தால் அந்நிறுவனத்தின் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.





**20—**

**குழந்தைகள் நலக் காப்பகம்**

**வினா எண் 66813—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள, வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சியில் குழந்தைகள் நலக் காப்பகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமூக நலத் துறையின் மூலம் பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகத் திட்டம், மாநில அரசு நிதி உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கி வருகின்றன. அரசு அவ்வாறான 141 குழந்தைகள் காப்பகங்களுக்கு மானிய உதவி அளித்து வருகிறது. சீர்காழி தொகுதியில் வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சியில் புதியதாகப் பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகங்கள் நடத்த தொண்டு நிறுவனம் ஏதேனும் முன்வந்தால் அந்நிறுவனத்தின் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**21—**

**குழந்தைகள் நலக் காப்பகம்**

**வினா எண் 66814—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள, எடுக்கூர் பஞ்சாயத்தில் குழந்தைகள் நலக் காப்பகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) சமூக நலத் துறையின் மூலம் பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகத் திட்டம் மாநில அரசு நிதி உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கி வருகின்றன. அரசு அவ்வாறான 141 குழந்தைகள் காப்பகங்களுக்கு மானிய உதவி அளித்து வருகிறது. சீர்காழி தொகுதியில் எடுக்கூர் பஞ்சாயத்தில் பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகங்கள் நடத்த தொண்டு நிறுவனம் ஏதேனும் முன் வந்தால் அந்நிறுவனத்தின் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**22—**

## கடன் நிலுவைத் தொகை

**வினா எண் 23543—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் காதி கிராமத் தொழில் உதவி இயக்குநர் அலுவலகம் மூலமாக வழங்கப்பட்ட தனிநபர் கடன்கள் காலங்கடந்த நிலுவைத் தொகை ரூ. 2000-2001 ஆம் ஆண்டு இறுதியில் ரூ.42,32,101/- உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) பாக்கித் தொகையை வசூல் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(இ) எவ்வளவு தொகை இதுவரை வசூலிக்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் வசூல் குழுவை வைத்து நிலுவைத் தொகையினை வசூலிக்க சிறப்பு நடவடிக்கை, மேற்கொண்டு வருகிறது.



2005 செப்டம்பர் 22]

(இ) இதுவரை ரூ.11.71 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**23—**

## கதர் விற்பனை அங்காடிகளை நவீனப்படுத்துதல்

**வினா எண் 26780—திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற துணி விற்பனையகங்களுக்கு இணையாக கதர் விற்பனை அங்காடிகளை அழகுபடுத்தி விற்பனையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1999-2000 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ் நவீனப்படுத்தும் பணிக்காக ரூ.47,50,000/- ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.22.50 இலட்சம் மதிப்பீட்டில் (கதரங்காடி ஒன்றுக்கு ரூ.0.75 இலட்சம் வீதம்) நவீனப்படுத்த தெரிவு செய்யப்பட்ட 30 கதரங்காடிகளில் திருப்பூர், அவினாசி, வெள்ளக்கோவில், காங்கேயம், சேலம், ஏற்காடு, கோபி, சத்தியமங்கலம், ஆனைமலை, ஊட்டி, வேலூர், திருவண்ணாமலை, தர்மபுரி, பொன்னேரி, குற்றாலம், நாகர்கோவில், திருச்சி காலனி அலகு மற்றும் கும்பகோணம் ஆகிய 18 கதர் அங்காடிகளில் நவீனப்படுத்தும் பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 12 கதரங்காடிகளில் நவீனப்படுத்தும் பணி முடிக்கப்படவுள்ளது.

1999-2000 பகுதி-2 திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட தொகையில் எஞ்சிய ரூ. 25 இலட்சத்தில் குறளகம் கட்டடத்தில் உள்ள சென்னை பிரதான கதரங்காடியில் நியான் விளக்கு மற்றும் எலக்ட்ரானிக் டிஸ்பிளே ரூ. 5 இலட்சம் செலவில் பொருத்தப்பட்டுள்ளது அதேபோல் அண்ணாசாலையிலுள்ள கதரங்காடியை ரூ. 5 இலட்சம் செலவில் நவீனப்படுத்தும் பணி முடிவுற்றுள்ளது. மீதமுள்ள ரூ.15 இலட்சத்தில் 70% பணி பிரதான கதர் அங்காடியில் முடிவுற்றுள்ளது.

2001-2002 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 6.24 இலட்சத்தில் சென்னை பிரதான கதரங்காடியை நவீனப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், கோயம்புத்தூர் பிரதான

[2005 செப்டம்பர் 22

கதரங்காடியினை நவீனப்படுத்துவதற்காக மும்பை கதர் ஆணைக் குழுவிடம் ரூ.2.38 இலட்சம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. தொகை கிடைத்தவுடன் நவீனப்படுத்தப்படும் பணி தொடங்கப்படும்.

**24—**

## கடன் வசதி

**வினா எண் 36072—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி மூலம் 2002-2003 ஆம் ஆண்டு வரை எத்தனை சிறு தொழில் நிறுவனங்களுக்கு கடன் வசதி அளிக்கப்பட்டுள்ளது?

(ஆ) அவற்றின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாய்கோ வங்கி என அழைக்கப்படும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி, தனது 25 கிளைகள் மூலம் சிறுதொழில் மற்றும் குறுதொழில் முனைவோர் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுவரும் 109 நிறுவனங்களுக்கு 1-4-1994 முதல் 31-3-2003 வரையிலான 9 ஆண்டு காலத்தில், இயந்திரங்கள் வாங்குதல், நடைமுறை மூலதனம், கட்டடம் கட்டுதல் ஆகிய இனங்களுக்கு ரூ.191.30 இலட்சம் அளவுக்கு கடன் அனுமதித்து வழங்கியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | வருடம் | சிறுதொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை. | கடனுதவி வழங்கப்பட்ட தொகை ரூ. இலட்சத்தில். |
|---|---|---|---|
| 1 | 1994-95 | 53 | 98.41 |
| 2 | 1995-96 | 20 | 38.42 |
| 3 | 1996-97 | 14 | 21.26 |
| 4 | 1997-98 | 15 | 19.93 |
| 5 | 1998-99 | — | — |
| 6 | 1999-2000 | 1 | 1.27 |
| 7 | 2000-2001 | 4 | 9.81 |
| 8 | 2001-2002 | 2 | 2.20 |
| | மொத்தம் : | 109 | 191.30 |



2005 செப்டம்பர் 22]

மேலும் நடப்புக் கணக்கு தொடங்கியுள்ள சிறுதொழில் மற்றும் குறுதொழில் நடத்தும் 504 பயனாளிகளுக்கு மிகைப்பற்றுக் கடன் (overdraft) ரூ. 434.33 இலட்சம் வரை வழங்கப்பட்டுள்ளது.

**25—**

## சிறு தொழில் மையங்கள்

**வினா எண் 52067—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள 400 சிறு தொழில் செய்யும் மையங்களை ஒரே இடத்தில் இடமாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவையிலுள்ள 400 சிறு தொழில் செய்யும் மையங்களை ஒரே இடத்தில் இடமாற்றம் செய்ய வேண்டுமானால் அதற்கு ஒரு தொழிற்பேட்டை நிறுவ வேண்டும். தொழிற் கூட்டுறவு அமைப்பில் ஏற்கெனவே 3 தொழிற்பேட்டைகள் உள்ளன. அவை முறையே;

1. சக்தி கூட்டுறவு தொழிற்பேட்டை
2. சேரன் கூட்டுறவு தொழிற்பேட்டை
3. அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டை.

இவற்றில் சக்தி மற்றும் சேரன் தொழிற்பேட்டைகளில் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க இடவசதி இல்லை. அறிஞர் அண்ணா தொழிற்பேட்டையில் 550 அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால், அதற்கு ஏற்கெனவே உறுப்பினர்கள் நிதி ஆதாரம் திரட்டித் தந்துள்ளனர். மேலும் இந்தத் தொழிற்பேட்டை செயல்பட தொடங்க தோராயமாக ஓராண்டு ஆண்டு காலம் பிடிக்கும். எனவே, தொழிற்பேட்டை தயார் நிலைக்கு வரும்பொழுது போதிய இடவசதி இருந்தால் சிறு தொழில் அலகுகளுக்கு இடமளிக்க வாய்ப்பு ஏற்படும். ஆனால், தற்பொழுது இதற்கான வாய்ப்பில்லை. இந்நிலையில் கோவை மாவட்டத்தில் உள்ள சுமார் 400 பவுண்டரி சிறு தொழில் நிறுவனங்களை ஒரே இடத்தில் இடமாற்றம் செய்ய அரசுக்கு தற்பொழுது உத்தேசமில்லை.

மேலும், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) சார்பில் கோவையில் உள்ள 400 சிறு தொழில் செய்யும் மையங்களை ஒரே இடத்தில் இடமாற்றம் செய்யும் பிரேரணை ஏதும் பரிசீலனையில் இல்லை.

தற்போது கோவை மாவட்டத்தில் உள்ள சிட்கோ தொழிற்பேட்டைகளின் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

| வ. எண். | தொழிற்பேட்டை | தொழிற் கூடங்கள் | தொழிற் மனைகள் | ஒதுக்கீடு செய்யப்பட்டவை | | காலியாக உள்ள கூடங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | கூடங்கள் | மனைகள் | கூடங்கள் | மனைகள் |
| 1 | குறிச்சி | 181 | 6 | 181 | 6 | — | — |
| 2 | திருப்பூர் | 40 | 6 | 40 | 6 | — | — |
| 3 | கணபதி பாளையம் | 30 | 53 | 25 | 4 | 5 | 49 |
| 4 | குடிமங்கலம் | 30 | — | 29 | — | 1 | — |
| 5 | மலுமிச்சம்பட்டி | 42 | 76 | 42 | 76 | — | — |





**சிட்கோவில் மேம்படுத்தப்பட்ட தனியார் தொழிற்பேட்டை**

| வ. எண். | தொழிற்பேட்டை | தொழிற் கூடங்கள் | தொழிற் மனைகள் | ஒதுக்கீடு கூடங்கள் | ஒதுக்கீடு மனைகள் | காலியாக கூடங்கள் | காலியாக மனைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | முதலி பாளையம் 1&2 | 157+32=189 | — | 157+32=189 | — | — | — |
| 2 | செட்டி பாளையம் | 37 | — | 37 | — | — | — |
| 3 | வடுகு பாளையம் (பல்லடம்) | 12 | — | 9 | — | 3 | — |

மேலும், கோவை மாவட்டத்தில் சுமார் 570 பவுண்டரி தொழிற்சாலைகள் உள்ளன. இவை கோவை மாவட்டத்தில் பீளமேடு, தண்ணீர் பந்தல், கணபதி, விளாங்குறிச்சி, சரவணம்பட்டி மற்றும் குறிச்சி போன்ற இடங்களில் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. இவற்றில் சுமார் 167 பவுண்டரி தொழிற்சாலைகள் கோவை உள்ளூர் திட்டக் குழுமத்தால் (Local Planning Authority) அறிவிக்கப்பட்ட குடியிருப்பு பகுதியில் (Residential Area) இயங்கி வருகின்றன.

மேற்கூறிய தொழிற்சாலைகள், கோவை குறு மற்றும் சிறிய வார்ப்பட தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம் COSMAFAN (The Coimbatore Tiny and Small Foundry Owners' Association) என்னும் சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ளனர். மேற்படி சங்கம் கோவை மாவட்டம், பல்லடம் தாலுகா, அரசூர் கிராமத்தில் சுமார் 150 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி அதில் சிறிய முதலீட்டிலுள்ள சுமார் 200 பவுண்டரி தொழிற்சாலைகளை நிறுவ உத்தேசித்துள்ளது. மேற்படி 150 ஏக்கரில் சுமார் 120 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தினை தற்பொழுது கிரயம் செய்துள்ளது. இது குறித்து நகர் ஊரமைப்பு இயக்குநர் தனது அறிக்கையில் கோயம்புத்தூர் Tiny and Small Foundry Association செயலாளர் அவர்கள் 29-10-2003-ல் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டப் பகுதி, பல்லடம் வட்டம், அரசூர் கிராமம் நில அளவை எண் 502 முதல் 563 வரை உள்ள விவசாய புஞ்சை நிலத்தை சிறப்பு மற்றும் இடர்தரும் தொழிற் பகுதியாக கோவை முழுமைத் திட்டத்தில் மாற்றம் செய்ய வேண்டி கோரிக்கை மனு சமர்ப்பித்திருந்தார் என்றும் கோவை உள்ளூர் திட்டப் பகுதிக்கான மறு ஆய்வு முழுமைத் திட்ட அறிக்கையில் மேற்படி குழுமங்கள் சிறப்பு மற்றும் இடர்தரும் தொழிற் பகுதியாக உத்தேசம் செய்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி கோயம்புத்தூர் மறு ஆய்வு முழுமைத் திட்டம் அரசின் இணக்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட உள்ளது என்றும், இந்த முழுமைத் திட்டத்திற்கு

அரசின் இணக்கம் மற்றும் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் மேற்படி இடங்கள் தொழிற் பகுதியாக நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேற்படி சங்கம் கோவை மாவட்டம், அவினாசி தாலுகாவில் மாணிக்கப்பாளையம் எனும் கிராமத்தில் சுமார் 60 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தும் பொருட்டு 50 ஏக்கர் நிலத்தினை கிரயம் செய்துள்ளது. இந்த நிலத்தில் சுமார் 50 முதல் 60 பவுண்டரிகளை நிறுவ உத்தேசித்துள்ளது. இந்த நிலம் ஏற்கெனவே நகர் மற்றும் ஊரகத் துறை இயக்குனரகத்தால் தொழிற்சாலை பகுதி (Industrial Area) என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு இடங்களையும் COSMAFAN சங்கமானது தனது உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட தொகையிலிருந்து சொந்த செலவில் கிரயம் செய்து பவுண்டரி தொழிற்பேட்டையினை நிறுவ உள்ளது. மேற்கூறிய இடங்களை முழுமையாக கிரயம் செய்த பின்னர் COSMAFAN சங்கமானது அவ்விடத்திற்கு சுற்றுச்சூழல் தாக்கம் பற்றிய ஆய்வினை (Environmental Impact Assessment Study) மேற்கொண்டு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு அறிக்கையினை சமர்ப்பிக்க உள்ளது. மேற்படி அறிக்கை பெறப்பட்ட பின்பு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அது தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**26—**

## செங்கல் தொழிற்கூடம்

**வினா எண் 65661–திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, அத்தாணி பகுதியில் கூட்டுறவு முறையில் செங்கல் தயாரிக்கும் சிறு தொழிற்கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.





**27—**

## பனைப் பொருள் தொழில் தொடங்க பயிற்சி

**வினா எண் 66483–திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் பனைப் பொருட்கள் தயாரிக்கும் தொழில் தொடங்க பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை, மலைப் பகுதியில் அமைந்துள்ளது. மேலும், அங்கு பனைப் பொருட்கள் கிடைப்பது அரிது. எனவே, வால்பாறையில் பனைப் பொருட்கள் தயாரிக்கும் தொழில் தொடங்க பயிற்சி அளிக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**28—**

## சாலை வசதி

**வினா எண் 6981–திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, சுப்பிரமணியசாமி திருக்கோயில் பின்புறம் வசிக்கும் அருந்ததியர் குடும்பங்களுக்கு முறையாக மயான வசதி மற்றும் சாலை வசதி செய்ய அரசின் திட்டம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

திருத்தணி வட்டம் எண் 17 அமிர்தாபுரம் கிராமத்தில் புல எண்கள் 129/24 மற்றும் 126/6பி-ல் 0.70.0 ஹெக்டேர் நிலத்தில் அருந்ததியர் மக்கள் வசித்து வருகிறார்கள். இவர்களுக்கு ச.எண் 143/3பி 1-ல் 12.0 ஏர்ஸ்

மயான வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும் புல எண் 129/36இல் 0.10.0 நிலத்தில் மயான பாதை வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. மேற்படி கிராம அருந்ததியர் மக்கள் திருத்தணி நகருக்கு குமாரகுப்பம் வழியாக வருவதற்குப் போதுமான சாலை வசதிகளும் உள்ளன.

**29—**

## பள்ளிகளில் அடிப்படை வசதிகள்

**வினா எண் 43981–திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியிலுள்ள மலைவாழ் மாணவ, மாணவியர் பயன்பெறும்வகையில் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்காடு தொகுதியிலுள்ள மலைவாழ் மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட பள்ளிகள் ஒவ்வொன்றிலும் ரூ.4.5 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன:—

1. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, நெய்யமலை
2. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சின்னமதூர்
3. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வெள்ளக்கடை
4. பழங்குடியின உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளி, செம்மநத்தம்.

**30—**

## பட்டதாரி ஆசிரியர் நியமனம்

**வினா எண் 59751–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சீர்காழி தொகுதி, மாதானம் ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளியில் கணிதம் பட்டதாரி ஆசிரியரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், மாதானம் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில் கணிதப் பாடம் பயிற்றுவிக்க ஒரு இளநிலை பட்டதாரி ஆசிரியர் 9-8-2004-ல் நியமிக்கப்பட்டுள்ளார்.

**31—**

## வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்

**வினா எண் 62695–திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் 1989 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வன்கொடுமை நிகழ்வு நடந்ததாகப் புகார் வரப்பெற்றவுடன் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் உடனே வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது. தவிர மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளரிடமிருந்து குற்ற நிகழ்வு தொடர்பாக ஆவணங்கள் வரப்பெற்றவுடன் அந்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு குற்றத்தன்மைகேற்ப பாதிக்கப்பட்டவர்களுக்கு தீருதவித் தொகையும் வழங்கப்படுகிறது. 2004-05 ஆம் ஆண்டில் கோவை மாவட்டத்தில் தீருதவித் தொகையாக ரூ.11,32,015/-க்கு மேல் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 123 நபர்களுக்கு மேல் பயனடைந்துள்ளனர்.

32—

## ஆதிதிராவிடர் நல விடுதிகள்

**வினா எண் 65174—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர் மலை தொகுதி, மோகனூர் மற்றும் பாலப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் மாணவ/ மாணவியர் விடுதிகள் நடப்பாண்டில் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

33—

## ஆசிரியர்கள் நியமனம்

**வினா எண் 67238—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில் உள்ள சின்கோனா அரசு ஆதிதிராவிடர் நலப் பள்ளிக்குப் போதுமான ஆசிரியர்கள் நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள சின்கோனா அரசு ஆதிதிராவிட நலப் பள்ளியின் 2004-2005 ஆம் கல்வி ஆண்டில் மாணவ/மாணவியர் எண்ணிக்கை 87 ஆகும். இப்பள்ளியில் ஒரு தலைமை ஆசிரியர் மற்றும் ஒரு உதவி ஆசிரியை என இரண்டு ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அரசு ஆணை (பல்வகை) எண் 525, பள்ளிக் கல்வித் துறை, நாள் 29-12-1997-ல் உத்தரவிடப்பட்டுள்ள மாணவர் ஆசிரியர் விகிதாச்சாரப்படி



இப்பள்ளியில் இரண்டு ஆசிரியர்களே பணிபுரிய இயலும். அதன்படி இப்பள்ளியில் ஒரு தலைமை ஆசிரியர் மற்றும் ஒரு ஆசிரியர் என இரண்டு பேர் பணி புரிகின்றனர்.

34—

## காய்கறி உற்பத்தி

**வினா எண் 58004—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் அதிகமாக காய்கறிகளை உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் அதிகமாக காய்கறிகளை உற்பத்தி செய்ய தோட்டக்கலை துறையினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் மத்திய சார்புத் திட்டத்தில், ஒருங்கிணைந்த பழப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ.10,200/-ம் ஒருங்கிணைந்த வாசனைப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ. 13,500/-ம் மாநிலத் திட்டமான ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.19,837/-ம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், சுய உதவிக் குழுக்கள் மூலமாக காய்கறி விதைகளை (வீரிய இரகங்கள்) விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2003-2004 ஆம் ஆண்டில் வெண்டை விதைகள் உள்ளிட்ட காய்கறி விதைகள் சுமார் ரூ.17,020/- செலவில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமும், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் ரூ.3,992/- செலவில் விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும், மத்திய சார்புத் திட்டங்களில், வெண்டை செயல் விளக்கத்திடல் அமைக்க ரூ.2,437/- செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

35—

## அக்ரோ இன்ஜினியரிங் சொசைட்டி

**வினா எண் 62776—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 22

(அ) உடுமலை வட்டத்தில் அக்ரோ இன்ஜினியரிங் சொசைட்டியில் நடந்த முறைகேடுகள் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு மையத்தில், வட்டார மேலாளராக திரு. ஜி. கந்தசாமி, பணியாற்றியபொழுது அம்மையத்திற்கு நிதியிழப்பு ஏற்படும்வகையில் 1994-95 ஆம் ஆண்டில் அவர் இழைத்த சில கடும் முறைகேடுகள், தணிக்கையாளரின் தனியறிக்கை மூலம், வேளாண்மைப் பொறியியல் பணிகளின் பதிவாளர் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இது குறித்து நடவடிக்கை, அரசு அளவில் ஏதும் இல்லை.

(ஆ) அதன்மீது, திரு. ஜி. கந்தசாமி, வட்டார மேலாளர்மீது அக்ரோபெட் நிர்வாகத்தால் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, "பணி மூப்பு நிலையில் இறக்கம்" என்ற தண்டனை வழங்கப்பட்டது. மேலும் அன்னாரிடம் விசாரணை நடத்தி, விசாரணை அறிக்கையின் அடிப்படையில் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 பிரிவு 87-ன் கீழ் திரு. ஜி. கந்தசாமிமீது தண்டத் தீர்வை நடவடிக்கை தொடரப்பட்டு, அன்னாரிடமிருந்து ரூ. 74,742.25/-ஐ வசூலிக்க 5-7-1999-ல் ஆணையிடப்பட்டது. அதன் அடிப்படையில், அவரிடமிருந்து, இதுவரை ரூ. 56,559.40 வசூலிக்கப்பட்டு, இன்னும் ரூ. 18,182.85 வசூலிக்கப்பட வேண்டியுள்ளது. 30-11-2004 உடன், அக்ரோபெட் நிறுவனம் மூடப்பட்டதன் காரணமாக அதன் அனைத்துப் பணியாளர்களும் பணி நீக்கம் செய்யப்பட்டுவிட்டனர். திரு. ஜி. கந்தசாமிக்கு, இணையத்தால் வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவை, இழப்பீட்டுத் தொகை போன்ற இனங்களிலிருந்து அவர் செலுத்த வேண்டிய மீதித் தொகை வட்டியுடன் வசூலிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இவை தவிர, வேறு முறைகேடுகள் ஏதும் உடுமலைப்பேட்டை வேளாண்மைப் பொறியியல் மையத்தில் நடைபெற்றதாக இத்துறையின் கவனத்திற்கு இதுகாறும் கொண்டு வரப்படவில்லை.

**36—**

## வேளாண்மைப் பொறியியல் துறை பிரிவு அலுவலகம்

**வினா எண் 66225—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 22]

(அ) சீர்காழி தொகுதியில், வேளாண்மைப் பொறியியல் துறை பிரிவு அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகம் ஒவ்வொரு வருவாய்க் கோட்ட தலைமையிடத்திலும் உள்ளது. அதன்படி சீர்காழியை உள்ளடக்கிய மயிலாடுதுறை வருவாய் கோட்டத்திற்கான உபகோட்டம் மயிலாடுதுறையில் உள்ளது. மேலும், சீர்காழியில் பாசனப் பகுதி மேன்மைத் திட்டம் உதவி செயற் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அலுவலகம் ஒன்று இயங்கி வருகிறது. வேளாண்மைப் பொறியியல் துறை குறித்த விவரங்களை விவசாயிகள் இங்கு அறிந்து கொள்ள இயலும். எனவே, சீர்காழியில் வேளாண்மைப் பொறியியல் துறையின் பிரிவு அலுவலகம் தனியே அமைக்க அரசு விதிமுறைகளில் ஏதுவாக இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**37—**

## காலிப் பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 66226—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழியில் உள்ள வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கீழ்க்கண்ட பணியிடங்கள் உள்ளன:—

| | |
|---|---|
| 1. விற்பனைக்கூட கண்காணிப்பாளர் | ஒரு பணியிடம் |
| 2. மேற்பார்வையாளர் | ஒரு பணியிடம் |
| 3. இளநிலை உதவியாளர் | ஒரு பணியிடம் |
| 4. களக்கண்காணி | ஒரு பணியிடம் |
| 5. அலுவலக உதவியாளர் | இரண்டு பணியிடங்கள் |
| 6. காவலர் | ஒரு பணியிடம் |
| 7. உதவி வேளாண்மை அலுவலர் | ஒரு பணியிடம் |

மேற்காணும் பதவிகளில் வரிசை எண் 7-ல் உள்ள வேளாண்மை உதவி அலுவலர் பணியிடம் மட்டுமே 6-6-2001 முதல் காலியாக உள்ளது. மற்ற பதவிகளில் உரிய பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். இந்த உதவி வேளாண்மை அலுவலர் பணியிடத்திற்குப் போதிய வேலை இல்லாத காரணத்தால், இப்பணியிடத்தினைப் பூர்த்தி செய்திடத் தேவையில்லை எனக் கருதி பூர்த்தி செய்யப்படவில்லை.

**38—**

## உளுந்து பயிரிடுதல்

**வினா எண் 67428—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் உளுந்து பயிரிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதியில் 2004-2005 ஆம் ஆண்டில் 42 எக்டேர் பரப்பளவில் உளுந்து பயிரிடப்பட்டது. 2005-2006 ஆம் ஆண்டில் பயறு கிராமங்கள் அமைக்கும் திட்டம் மூலம் 100 எக்டேர் பரப்பளவில் உளுந்து பயிரிட விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**39—**

## கால்நடை மருத்துவமனையை செப்பனிடுதல்

**வினா எண் 21738—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், இருப்பாளியிலுள்ள கால்நடை மருத்துவமனைக் கட்டடம் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?



(ஆ) ஆம் எனில், செப்பனிட நடப்பாண்டில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். இருப்பாளியிலுள்ள கால்நடை மருந்தகக் கட்டடத்தை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட நிதியிலிருந்து பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**40—**

## சுற்றுச் சுவர்

**வினா எண் 48960—திரு. டி. பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சமயநல்லூர் ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குச் சுற்றுச் சுவர் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சமயநல்லூர் ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குச் சுற்றுச் சுவர் அமைத்துத் தருவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**41—**

## நடமாடும் ஆய்வுக்கூட வசதி

**வினா எண் 49426—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடமாடும் கால்நடை ஆய்வுக்கூட வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடமாடும் கால்நடை ஆய்வுக் கூட வசதி செய்து தருவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழாது.

**42—**

**நடமாடும் கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 56982—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரிலும் மற்றும் கொள்ளிடம் ஒன்றியத்திலும் நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைத்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் 5 கி.மீ. தூரத்தில் வைத்தீஸ்வரன் கோயில் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. கொள்ளிடம் ஒன்றியம், கொள்ளிடத்தில் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. இவை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சைப் பணிகள் சீர்காழி மற்றும் கொள்ளிடம் பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளன. மேலும், புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க விதிக்கப்பட்ட தடை ஆணை இன்னமும் அமலில் உள்ளதால், சீர்காழி நகரிலும் மற்றும் கொள்ளிடம் ஒன்றியம் பகுதிகளில் நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.



2005 செப்டம்பர் 22]

**43—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 65264—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, காளியாபுரம் மற்றும் சோமந்துறை ஊராட்சிகளில் கால்நடை மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, காளியாபுரம் மற்றும் சோமந்துறை ஆகிய இடங்களில் தற்போது கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், காளியாபுரம், கால்நடை கிளை நிலையத்திற்கு அருகில் வேட்டைக்காரன்புதூர் கால்நடை மருத்துவமனையும், சோமந்துறை கால்நடை கிளை நிலையத்திற்கு அருகில் மலையாண்டிப்பட்டினம் கால்நடை மருந்தகமும் இயங்கி வருகின்றன. இவை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சைப் பணிகள் அப்பகுதியில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளன. எனவே, காளியாபுரம் மற்றும் சோமந்துறை கால்நடை கிளை நிலையங்களைக் கால்நடை மருத்துவமனையாக மாற்ற தற்போது வாய்ப்பில்லை.

**44—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 65397—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியம், பெரியக்கோட்டை ஊராட்சியில் இயங்காமல் உள்ள கால்நடை மருத்துவமனையை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை தொகுதி, பெரியக்கோட்டையில் கால்நடை கிளை நிலையம் மட்டுமே உள்ளது. அக்கிளை நிலையத்தில் கால்நடை ஆய்வாளர் நிலை-I பணியிடம் நிரப்பப்பட்டு அக்கால்நடை கிளை நிலையம் தற்போது இயங்கி வருகிறது.

**45—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 65415—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, மூங்கில்துறைப்பட்டு நகர், இரங்கப்பனூர், பாலப்பட்டு ஊராட்சிகள் மற்றும் சின்ன சேலம் தொகுதி, ஏ. வாசுதேவனூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மூங்கில்துறைப்பட்டு நகருக்கு 6 கி.மீ. தூரத்தில் மேல்சிறுவளூர் கால்நடை மருந்தகமும், 7 கி.மீ. தூரத்தில் ஈருடையாம்பட்டு கால்நடை கிளை நிலையமும், வானாபுரம் கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. இரங்கப்பனூர் கிராமத்திற்கு 1 கி.மீ. தூரத்தில் புதுப்பட்டு கால்நடை கிளை நிலையம் உள்ளது. பாலப்பட்டுக்கு 6 கி.மீ. தூரத்தில் மேலப்பழங்கர் கால்நடை கிளை நிலையம் உள்ளது. சின்னசேலம் தொகுதி, ஏ. வாசுதேவனூர் கிராமத்திற்கு அருகில் 6 கி.மீ. தூரத்தில் குரால் கால்நடை கிளை நிலையமும், 7 கி.மீ. தூரத்தில் சின்னசேலம் கால்நடை மருந்தகமும் உள்ளது. இதன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சைப் பணிகள் மூங்கில்துறைப்பட்டு நகர், இரங்கப்பனூர், பாலப்பட்டு மற்றும் ஏ. வாசுதேவனூர் கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளன. மேலும், தற்பொழுது துறையின் கீழ் செயல்பட்டு வரும் கால்நடைக் கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்பட்டு வருவதால், மூங்கில்துறைப்பட்டு நகர், இரங்கப்பனூர், பாலப்பட்டு மற்றும் ஏ. வாசுதேவனூர் ஆகிய ஊராட்சிகளில் நேரடியாக புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை.



**46—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 65466—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னங்குறிச்சி கிராமத்திற்கு 2 கி.மீ. தூரத்தில் மிட்டா அய்யம்பெருமாப்பட்டி கால்நடை கிளை நிலையம் உள்ளது. இதன்மூலம் அளிக்கப்பட்டு வரும் சிகிச்சைப் பணிகள் கன்னங்குறிச்சியில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளன. மேலும், இத்துறையின்கீழ் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதால், கன்னங்குறிச்சியில் நேரடியாக ஒரு புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

**47—**

**சிறுவன மகசூல்**

**வினா எண் 36542—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 22

(அ) வனப் பகுதிகளில் மலைவாழ் மக்கள் சங்கங்களுக்கு வழங்கப்படும் சிறுவன மகசூல் அனுமதி 2002-2003 ஆம் ஆண்டில் எத்தனை சங்கங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் வனப் பகுதிகளில் மலைவாழ் மக்கள் சங்கங்களுக்கு வழங்கப்படும் சிறுவன மகசூல் அனுமதி சத்தியமங்கலம் கோட்டத்திலுள்ள சத்தியமங்கலம் மலைவாழ் மலைஜாதி லேம்ப் கோ-ஆப்பரேடிவ் சங்கத்தினருக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளது. மற்ற வனப் பகுதிகளில் ஏதும் வழங்கப்படவில்லை.

(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் சத்தியமங்கலம் கோட்டத்திலுள்ள சத்தியமங்கலம், ஹசனூர், தாளவாடி, பவானிசாகர் மற்றும் டி.என். பாளையம் ஆகிய சரகங்களில் உள்ள சிறுவன மகசூல் யூனிட்டுகளான டேட் இலைகள், நெல்லிக்காய், பூஞ்சங்காய், கடுக்காய், புளி மற்றும் இதர இனங்களை அரசாணை (நிலை) எண் 286, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 5-9-2001-ன்படி சத்தியமங்கலம் மலைவாழ் மலைஜாதி லேம்ப் கோ-ஆப்பரேடிவ் சங்கத்தினருக்கு ரூ.25,83,850/-க்கு வழங்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 79, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 29-4-2003 மலைஜாதி மலைவாழ் மக்களால் நிறுவப்படும் கிராம வனக் குழுவுக்கு வனப் பகுதிகளிலுள்ள சிறுவனப்படு பொருட்கள் யூனிட்டுகளை இலவசமாக சேகரம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

**48—**

## குளங்கள் தூர்வாரும் பணி

**வினா எண் 65828—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை வட்டத்தில் உள்ள குளங்களில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் (Social Forestry) மூலம் வைத்த கருவேல் மரங்களை ஏலம் விட்டு குளங்களைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

பொதுவாக பொதுப் பணித் துறை மற்றும் பஞ்சாயத்துக்களைச் சார்ந்து அமைந்துள்ள ஏரி மற்றும் குளங்களில் வனத் துறை மூலம் உரிய நிர்வாகத்தினரது அனுமதி பெற்று அவ்விடங்களில் சமூகக் காடுகள் (கருவேல் போன்ற இன மரங்கள்) நடவு செய்யப்பட்டு பத்தாண்டு சுழற்சியில் வனத் துறை மூலம் பொது ஏலமிடப்பட்டு அறுவடை செய்யப்படுகிறது.

(2) குளங்களில் சமூகக் காடுகள் அமைப்பதன் மூலம் அப்பகுதியில் உள்ள நிலங்களில் ஆக்கிரமிப்பு ஏற்படாதவாறு வனத் துறை அப்பகுதிகளின் அரணாக உள்ளது. பஞ்சாயத்துக்களுக்குரிய வளர்ச்சிப் பணிகளான தூர்வாரும் பணியானது அந்தந்தத் துறைக்கு வழங்கப்படும் அரசின் மானியத் தொகையிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருவதால் உடுமலை வட்டத்தில் உள்ள குளங்களில் தூர்வாரும் பணி வனத் துறையினால் மேற்கொள்ளப்படுவதில்லை.

**49—**

## விற்பனை பத்திரங்கள் வழங்கல்

**வினா எண் 37854—திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய திட்டப் பகுதிகளான பெரம்பூர் திடீர் நகர் பகுதிக்கு பணம் செலுத்தி முடித்தவர்களுக்கு விற்பனை பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கை அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) கிரயப் பத்திரம் தற்போது வழங்கப்படவில்லை. ஆனால், வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) திடீர் நகர் திட்டப் பகுதி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமானது. மேற்படி நிலம் வீட்டுவசதி வாரியத்திடமிருந்து குடிசை

மாற்று வாரியத்திற்கு நில ஒப்படை பெற்ற பின்னர் கிரயப் பத்திரம் வழங்கப்படும்.

50—

## பொது ஒதுக்கீடு வீடுகள்

**வினா எண் 55719—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான பொது ஒதுக்கீடு வீடுகளை குடியிருப்பவர்களுக்கே விலைக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான பொது ஒதுக்கீடு வீடுகளை குடியிருப்பவர்களுக்கே விலைக்குக் கொடுக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

51—

## சூரிய ஒளி மின்விளக்கு வசதி

**வினா எண் 64786—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகக் கடலோரங்களில் மீன் பிடிக்க செல்கின்ற போது படகில் சூரிய ஒளியின் மூலம் (சோலார் லேம்ப்) மின்விளக்கு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகக் கடலோரங்களில் மீன் பிடிக்கச் செல்கின்ற போது மீன்பிடி படகுகளில் சூரிய ஒளி (சோலார் லேம்ப்) மூலம் மின்விளக்கு வழங்குவதற்கான திட்டம் ஏதும் இல்லை.

52—

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 65497—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதியிலுள்ள குருவம்பட்டி உயிரியல் பூங்காவை சுற்றுலாத் தலமாக அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் 2-வது தொகுதியிலுள்ள குருவம்பட்டி உயிரியல் பூங்காவை சுற்றுலாத் தலமாக அமைக்கும் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

53—

## மராமத்துப் பணி

**வினா எண் 10037—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், தெற்கு மடத்தூர் கிராமம், பூலான்குளத்தை மராமத்துப் பணி செய்ய அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சி, பூலாங்குளம் மராமத்துப் பணி சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் 2003-04 ஆம் ஆண்டில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டது.

**54—**

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 10660—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சி, ஆர்.சி. செட்டிப்பட்டி அருந்ததியர் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சி, ஆர்.சி. செட்டிப்பட்டி, அருந்ததியர் காலனி குடியிருப்பு, காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஓமலூர் (வடக்கு) ஒன்றியத்தைச் சேர்ந்த 102 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேற்படி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட்டவுடன் ஆர்.சி. செட்டிப்பட்டி, அருந்ததியர் காலனி குடியிருப்புக்கு குடிநீர் வழங்கப்படும்.



2005 செப்டம்பர் 22]

**55—**

### தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12056—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், வெங்கிடாம்பட்டி ஊராட்சி, வெங்கிடாம்பட்டி காமராஜ் நகருக்கு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வெங்கிடாம்பட்டி ஊராட்சியைச் சார்ந்த காமராஜ் நகருக்கு 31-8-2003-ல் ஒரு மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**56—**

### குடிநீர் வசதி

**வினா எண் 12139—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், பொட்டல் ஊராட்சிக்கு கூடுதல் குடிநீர், ஆழ்குழாய் அமைத்து அப்பகுதியிலுள்ள மக்களுடைய குறைகளைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொட்டல் கிராமக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு, 08/2003-ல் திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

[2005 செப்டம்பர் 22

57—

## குடிநீர் வசதி

**வினா எண் 12426–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம், மணியக்காரன் வளவு மற்றும் உப்பாரப்பட்டியில் மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம், மணியக்காரன் வளவு மற்றும் உப்பாரப்பட்டி பகுதிகளுக்கு கொங்கணாபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிகள் மூலம் காவிரி குடிநீர் மார்ச் 2003 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

58—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 12771–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சிக்குட்பட்ட இராசிக்கவுண்டனூர் பகுதியில் மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி இராசிக்கவுண்டனூர் குடியிருப்பு, மகுடஞ்சாவடி ஒன்றிய 175 குடியிருப்புகள் மற்றும் இடங்கணசாலை பேரூராட்சி அடங்கிய இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, அக்குடியிருப்பிற்கு காவிரி ஆற்றின் நீரை நீராதாரமாகக் கொண்டு ஜனவரி திங்கள் 2003 முதல் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

59—

## குடிநீர் வசதி

**வினா எண் 13192–திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பஞ்சாயத்து, அண்ணாநகர், ஜெ.ஜெ. நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் சரியாகக் கிடைக்காததால், மக்கள் மிகவும் கஷ்டப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு.கே.பி அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதியில் உள்ள வேட்டைக்காரன்புதூர், கோட்டூர் உடையகுளம் மற்றும் 38 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து வேட்டைக்காரன் புதூர் பேரூராட்சியைச் சேர்ந்த அண்ணாநகர், ஜெ.ஜெ. நகர் பகுதிகளுக்கு 01-12-2002 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் குடிநீர்ப் பிரச்சினை இல்லை.

60—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 13361–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, வடபுரத்துக்காடு கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியினைச் சார்ந்த வடபுரத்துக்காடு பகுதி, பெண்ணாகரம் ஒன்றியம்-பெரும்பாலை ஊராட்சி, பள்ளிப்பட்டி குடியிருப்பைச் சார்ந்ததாகும். இப்பகுதிக்கு பள்ளிப்பட்டி குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்புமூலம் தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

**61—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 13511–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவன அள்ளி ஊராட்சி, கோடுப்பட்டிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவன அள்ளி ஊராட்சி, கோடுப்பட்டி குடியிருப்பின் மக்கட்தொகை சுமார் 380 ஆகும். இக்குடியிருப்பில் ஆறு கையிறைப்பான்கள் உள்ளன. இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகைக்கு ஏற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் வரும் நிதியாண்டுகளில் வாரிய நிதி



நிலைமைக்கேற்ப தகுதி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்ற பரிசீலிக்கப்படும்.

**62—**

**புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 15624–திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், சிற்றம்பாக்கம் ஊராட்சி, தோப்பு காலனியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், புதிய மேல்நிலைத் தொட்டி எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடம்பத்தூர் ஒன்றியம், சிற்றம்பாக்கம் ஊராட்சி, தோப்பு காலனியில் ஒரு கையிறைப்பான், ஒரு மின்விசைத் திட்டம் மற்றும் குழாய் நீட்டிப்புமூலம் தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், மக்கள்தொகை மிகக் குறைவாக இருப்பதால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**63—**

**குடிநீர்த் தொட்டி**

**வினா எண் 15633–திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், கீழச்சேரியில் குடிநீர்த் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடம்பத்தூர் ஒன்றியம், கீழச்சேரி ஊராட்சியில் உள்ள கீழச்சேரி குடியிருப்பின் மக்கள்தொகைக்கு ஏற்ப 1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்குடியிருப்பின் குடிநீர் வழங்கும் அளவை மேம்படுத்துவதற்காக "சுவஜல்தாரா" திட்டத்தின்கீழ் புதிய குடிநீர்த் திட்டம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

64—

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 21206—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் கிராமம், ஆர்.சி. ரெட்டியூரில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி ஒன்று கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆர்.சி. ரெட்டியூர் பகுதிக்கு ஆடையூர் ஊராட்சி எல்லையில் உள்ள 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி மூலம் தற்பொழுது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தற்பொழுது செயலாக்கத்தில் உள்ள இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் காவிரி குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, மக்கள்தொகையின் அடிப்படையில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆர்.சி. ரெட்டியூர் பகுதிக்கு தற்போது அமைக்கத் தேவை இல்லை.



65—

## குடிநீர்க் குழாய் செப்பனிடுதல்

**வினா எண் 21629—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி-ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் பிரதான குடிநீர் விநியோகக் குழாயில் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அம்மாதிரி இடங்களில் வீணாகும் குடிநீரை அப்பகுதி மக்களுக்கும் பயன்படும் விதத்தில் பொது இணைப்பு அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி—ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் பிரதான குழாயில் சில சமயங்களில் இரப்பர் கேஸ்கெட் வெளியே தள்ளப்படுவதாலும், துண்டாவதாலும் குடிநீர் வெளியேறுகிறது. அவ்வாறு கசிவு ஏற்படும் சமயத்தில் அவை அடைக்கப்பட்டு கசிவு சரி செய்யப்படுகிறது. பிரதான குழாய் லைனிலுள்ள காற்றுப் போக்கி வால்வுகளைச் சேதப்படுத்தி, சிலர் தண்ணீரை வீணாக்குகின்றனர். இம்மாதிரி வெளியேறும் குடிநீரும் அவ்வப்போது அடைக்கப்பட்டு வருகிறது.

(ஆ) பிரதான குழாயில் மேற்குறிப்பிட்டவாறு சில சமயங்களில் கசிவு ஏற்பட்டாலும் அவை உடனுக்குடன் சரி செய்யப்படுவதால் பொது இணைப்பு அமைக்க இயலாது.

66—

## சிறிய குடிநீர்த் தொட்டி

**வினா எண் 21913—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாகல அள்ளி ஊராட்சி, குரும்பட்டியில் சிறிய தொட்டி (Mini Tank) அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பாகல அள்ளி ஊராட்சி, குரும்பட்டி குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 450 ஆகும். இக்குடியிருப்பில் மூன்று கையிறைப்பான் திட்டங்களும், 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் ஒன்றும் செயலில் உள்ளது. இக்குடியிருப்பிற்குத் தற்போது செயலில் உள்ள திட்டமே போதுமானதாகும்.

**67—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 22011—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கன் அள்ளி ஊராட்சி, எட்டிக்குழியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் ஒன்றியம், மஞ்சநாயக்கன் அள்ளி ஊராட்சி, எட்டிக்குழி குடியிருப்பிற்கு 2003-2004 ஆம் ஆண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அங்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அவசியம் எழவில்லை.



**68—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 22313—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் பஞ்சாயத்து, ஆர்.சி. ரெட்டியூர், ஏ.டி. தெருவில் ஆழ்துளைக் கிணறு மற்றும் பம்ப் அறை அமைத்தும்கூட மேல்நிலைத் தொட்டி கட்டவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக மேல்நிலைத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் ஊராட்சி, ஆர்.சி. ரெட்டியூர் குடியிருப்பின் ஒரு பகுதி, ஆர்.சி. ரெட்டியூர் ஏ.டி. தெரு ஆகும். ஆர்.சி. ரெட்டியூர் குடியிருப்பிற்கு காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் எடப்பாடி ஒன்றிய 97 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் அங்கு ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் 3/2003 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**69—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 22431—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், வெள்ளரிவெள்ளி ஊராட்சிப் பகுதிகளான புதுப்பட்டி அருந்ததியர் தெரு, ஊமைய கவுண்டனூர், காதாட்டியூர், முத்து கொட்டாய் ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

[2005 செப்டம்பர் 22

(ஆ) ஆம் எனில், அப்பகுதிகளுக்கு ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், வெள்ளரிவெள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட புதுப்பட்டி அருந்ததியர் தெரு, புதுப்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், புதுப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுடைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பகிர்மானக் குழாய் மூலம் இப்பகுதிக்கு 3/2000 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2. வெள்ளரிவெள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட ஊமையகவுண்டனூர், கொல்லப்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், கொல்லப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுடைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பகிர்மானக் குழாய் மூலம் இப்பகுதிக்கு 3/2000 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

3. காதாட்டியூர் மற்றும் முத்துக் கொட்டாய் பகுதி கல்லப்பாளையம் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் கல்லப்பாளையத்தில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுடைய மேல்நிலைத் தொட்டியிலிருந்து பகிர்மானக் குழாய் மூலம் இப்பகுதிக்கு 3/2000 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

4. இராசிபுரம்—எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் வாரிய பராமரிப்பில் உள்ளதால், உரிய பராமரிப்புத் தொகையை ஊராட்சி மன்றங்கள் வாரியத்திற்கு செலுத்தினால், பற்றாக்குறையின்றி குடிநீர் வழங்க ஏதுவாய் இருக்கும். எனவே, மேற்குறிப்பிட்ட பகுதிகளுக்குப் புதிய குடிநீர்த் திட்டம் தேவையில்லை.



2005 செப்டம்பர் 22]

**70—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 22446—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சிக்குட்பட்ட கோட்டமேடு, இட்டேரிவளவு ஆகிய பகுதிகளுக்கு ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சிக்கு உட்பட்ட குருவப்பன்வளவு குடியிருப்பின் ஒரு பகுதி கோட்டமேடு ஆகும். இப்பகுதிக்கு குருவப்பன்வளவு குடியிருப்பில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் காவிரி நீர் வழங்கப்பட்டு வருகிறது. இங்குள்ள ஒட்டப்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதி இட்டேரிவளவு ஆகும். இப்பகுதிக்கு, ஒட்டப்பட்டியில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம், இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் காவிரி நீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

**71—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 22447—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, கொத்தாபாளையம் மேல்நிலைத் தொட்டிக்கு குடிநீர் எடுத்து வந்த ஆழ்துளைக் கிணறு பழுதுபட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைச் செப்பனிட்டு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியத்தில் உள்ள செட்டிமாங்குறிச்சி ஊராட்சிக்கு உட்பட்ட கொத்தாபாளையம் குடியிருப்புக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுடைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் காவிரி நீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஆழ்துளைக் கிணற்றின் பழுதைச் சரி செய்யக் கருத்துரு இல்லை.

**72—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 22946—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஊராட்சியில் குடிநீர்ப் பற்றாக்குறையுள்ள மேல் தெரு, கீழ் தெரு, நாயக்கன் தெரு, நாவிதர் தெரு, சலவையாளர்கள் தெரு ஆகியவற்றிற்கு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஊராட்சிக்குட்பட்ட சித்தூர் குடியிருப்பில் மேல் தெரு, கீழ் தெரு, நாயக்கன் தெரு, நாவிதர் தெரு, சலவையாளர்கள் தெரு ஆகிய பகுதிகளுக்கு சித்தூரில் உள்ள 60,000 லிட்டர் மற்றும் புளியம்பட்டியில் உள்ள 60,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டிகள் மூலம் காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிதாக மேல்நிலைத் தொட்டி கட்டும் திட்டம் பரிசீலனையில் இல்லை.



**73—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 24342—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் ஆர்.சி. ரெட்டியூரில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் ஊராட்சிக்கு உட்பட்ட ஆர்.சி. ரெட்டியூரில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் 3/2003 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**74—**

## குடிநீர் வசதி

**வினா எண் 26049—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, ஆணைகுண்டு கிராமத்தில் போதுமான குடிநீர் வசதியில்லாமலிருப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி,

[2005 செப்டம்பர் 22

ஆணைகுண்டு குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 45. எனவே, இக்குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் அமைக்க ஊரகக் குடிநீர்த் திட்ட விதிமுறைகளின்படி சாத்தியக்கூறு இல்லை.

இப்பகுதிக்கு உள்ளாட்சி அமைப்பின் மூலம் கையிறைப்பான் அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது.

**75—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 26691—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மாங்கரை ஊராட்சியில் மாங்கரை கிராமம், கலப்பம்பாடி ஊராட்சியில் கோவள்ளிக்கோம்பை பகுதி, சென்னிமலைக்காடு ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

(1) **மாங்கரை**

இக்குடியிருப்பில் எட்டு (8) கையிறைப்பான்கள் மற்றும் 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் செயலில் உள்ளது. இக்குடியிருப்பின் மக்கட்தொகைக்கு செயலில் உள்ள திட்டமே போதுமானதாகும்.

(2) **கோவள்ளிக்கோம்பை**

இக்குடியிருப்பில் ஆறு (6) கையிறைப்பான்கள் மற்றும் சிறு மின்விசைத் திட்டம் ஆகியவை மூலம் தற்போது தேவையான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கத் தேவையில்லை.



2005 செப்டம்பர் 22]

(3) **சென்னிமலைக்காடு**

மக்கட்தொகை (25) மிகக் குறைவாக உள்ளதால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் நிறைவேற்ற சாத்தியக்கூறு இல்லை. இப்பகுதிக்கு உள்ளாட்சி அமைப்பின் மூலம் கையிறைப்பான் அமைக்கப்பட்டு தற்போது குடிநீர் வழங்கப்படுகிறது.

**76—**

**புதிய ஆழ்துளைக் கிணறு**

**வினா எண் 27282—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாலபுரம் ஊராட்சியிலுள்ள வீ. மேட்டுப்பாளையம் மேல்நிலைத் தொட்டி, ஆழ்துளைக் கிணறு வறண்டுவிட்டதால் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளாலபுரம் ஊராட்சியின் வீ. மேட்டுப்பாளையம் மேல்நிலைத் தொட்டிக்கு ஊராட்சி மூலம் மாற்று ஆழ்துளைக் கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆற்றுநீர் குடிநீர் விநியோகமும் செய்யப்பட்டு வருவதால் இப்பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு எதுவும் தற்போது இல்லை.

**77—**

**மேல்நிலைத் தொட்டி**

**வினா எண் 27291—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை ஊராட்சி, தெற்குமேடு மாரிகாட்டுவளவில் மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை ஊராட்சி, தெற்கு மேடு மாரிகாட்டுவளவு குடியிருப்பிற்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மகுடஞ்சாவடி ஒன்றியத்திலுள்ள 175 வழியோரக் குடியிருப்புகள் மற்றும் இடங்கணசாலை பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பகிர்மானக் குழாய்கள் மூலம் காவிரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**78—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 27297—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சியைச் சேர்ந்த நாச்சியப்பன் வளவு, உப்பாரப்பட்டி மற்றும் மொட்டையன்வளவு ஆகிய பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பகுதிக்கு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சியைச் சார்ந்த மனம்போக்கியான்வளவு குடியிருப்பின் ஒரு பகுதியே நாச்சியப்பன்வளவு ஆகும். அது போன்றே கொப்பவளவு குடியிருப்பின் ஒரு பகுதியே மொட்டையன்வளவு ஆகும். உப்பாரப்பட்டி தனிக் குடியிருப்பாகும். இம்மூன்று பகுதிகளுக்கும் கொங்கணாபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம், ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து காவிரி குடிநீர் வழங்கப்படுகிறது.





**79—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 27819—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியத்தில் பக்கநாடு கிராமம், ஆனைப்பள்ளம் வழியில் பாட்டாளி நகரில் அமைக்கப்பட்ட மினி வாட்டர் டேங்க் மூலம் குடிநீர் வழங்கப்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு குடிநீர் விநியோகத்திற்கான வசதிகளை அரசு செய்து தருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், பக்கநாடு ஊராட்சிக்கு உட்பட்ட பாட்டாளி நகரில் அமைக்கப்பட்டுள்ள சிறு மின்விசைத் திட்டத்தின் நீராதாரம் குறைந்துவிட்டதால், தற்பொழுது குடிநீர் விநியோகத்தில் பற்றாக்குறை உள்ளது. இருப்பினும், இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் சமாதி பாட்டப்பன் காட்டுவளவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டிமூலம் பாட்டாளி நகர் பகுதிக்கு 15-02-2003 முதல் காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**80—**

## குடிநீர் வசதி

**வினா எண் 28483—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஒன்றியம், இராமதேவம் கிராம மக்கள் குடிநீர் வசதியின்றி சிரமப்படுவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, இராமதேவம் ஊராட்சிக்கு உட்பட்ட இராமதேவம் குடியிருப்பு பரமத்தி ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். இக்குடியிருப்பிற்கு 2001 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டத்தின் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

**81—**

## ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 29173—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, காளியாபுரம் ஊராட்சியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் ஆழ்துளைக் கிணறு ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆனைமலை ஒன்றியம், காளியாபுரம் ஊராட்சி, காளியாபுரம் குடியிருப்பிற்கு இரு கையிறைப்பான்கள் மற்றும் இரு மின்னிறைப்பான்கள் மூலமும், ஆனைமலை-வேட்டைக்காரன்புதூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமும் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளதால் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.



**82—**

## பயிற்சி அளித்தல்

**வினா எண் 31289—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் எத்தனை வட்டாரங்களில் இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது?

(ஆ) எத்தனை நாட்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது? அவர்களுக்கு அரசு வழங்கிய உதவித் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் ஊரக படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு வழங்குவதற்கு ஏதுவாக 18 முதல் 35 வயது வரை உள்ள படித்த வேலையில்லாத 10,000 ஊரக இளைஞர்களுக்கு ரூ. 29.50 இலட்சத்தில் அனைத்து மாவட்டங்களிலும் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டது. அதன் அடிப்படையில் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டு பயிற்சிக்கு வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ள 10,000 இளைஞர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளித்து, சிறுதொழில் தொடங்குவதற்குத் தேவையான கடனுதவி பெறவும், தொழில் முனைவோர் பயிற்சி நடத்த மாவட்ட வாரியாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில், 7,327 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நபர் ஒருவருக்கு இந்தத் தொழில் முனைவோர் பயிற்சிக்காக நாளொன்றுக்கு ரூ. 40/- வீதம் பயிற்சி பெறுபவர்களுக்கும், ரூ. 15/- வீதம் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களுக்கும், பயிற்சியாளர்களுக்குத் தேவையான எழுதுபொருள் ரூ. 15/-ம், ஆக மொத்தம் ரூ. 70/- பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டப் பயிற்சி நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இப்பயிற்சி 7 நாட்கள் வரை அளிக்கப்படுகிறது.

[2005 செப்டம்பர் 22

83—

## குடிநீர் வசதி

**வினா எண் 39145–திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, உருளைக்குடி ஊராட்சி, பீக்கிலிபட்டி கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு, மின் விசை மோட்டார், குடிநீர்க் குழாய்கள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஒன்றியம், உருளைக்குடி ஊராட்சி, பீக்கிலிபட்டி குடியிருப்பில் 2000 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆதலால், இக்குடியிருப்பில் புதிய ஆழ்குழாய்க் கிணறு, மின்விசை மோட்டார், குடிநீர்க் குழாய்கள் அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

84—

## கட்டட வசதி

**வினா எண் 39781–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஊராட்சி ஒன்றியம், பெருமங்கலம் ஊராட்சி, வடக்குவெளியில் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், பெருமங்கலத்தில் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு (ஏற்கெனவே) கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு ஊராட்சிக்கு ஒரு மகளிர் சுய உதவிக் குழுவிற்கு மட்டுமே கட்டடம் கட்ட அனுமதிக்கப்படுவதால், பெருமங்கலம் வடக்குவெளியில், மகளிர் சுய உதவிக் குழுவிற்கு கட்டடம் கட்டித் தர இயலாது.

85—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 40034–டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், வளவம்பட்டி ஊராட்சி, சோழகம்பட்டியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து பெரிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில். எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், வளவம்பட்டி ஊராட்சியைச் சார்ந்த சோழகம்பட்டி குடியிருப்பில் 2002 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டில் இருந்து வரும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் உள்ளது. தற்போதைய மக்கள் தொகைக்கேற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கொள்ளளவு உள்ளதால், புதியதாகப் பெரிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் திட்டம் தேவை இல்லை.

[2005 செப்டம்பர் 22

86—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 40060—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், வாராப்பூர் ஊராட்சி, கீழ்புலவன்காட்டில் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், வாராப்பூர் ஊராட்சி, கீழ்புலவன்காட்டு குடியிருப்பிற்கு தற்போது பயனில் உள்ள 2 கையிறைப்பான்கள் மற்றும் தனி மின்விசைத் திட்டத்தின் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய திட்டம் செயல்படுத்தும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

87—

**நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 40080—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், பெருங்கொண்டான் விடுதி ஊராட்சி, காட்டுப்பட்டி கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், பெருங்கொண்டான் விடுதி ஊராட்சியைச் சார்ந்த



2005 செப்டம்பர் 22]

காட்டுப்பட்டி குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் 2002-2003 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

88—

**மேல்நிலைத் தொட்டி**

**வினா எண் 40081—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், வாகவாசல் ஊராட்சி, விஸ்வகர்மா நகருக்கு மேல்நிலைத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், வாகவாசல் ஊராட்சி, விஸ்வகர்மா நகர் குடியிருப்பிற்கு 1998-1999 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டத்தின்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

89—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 40086—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், அரியாளிப்பட்டி ஊராட்சி குடியிருப்புப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* புதுக்கோட்டை மாவட்டம், அரியாளிப்பட்டி ஊராட்சியைச் சார்ந்த அரியாளிப்பட்டி குடியிருப்பிற்கு தற்போது இரு கையிறைப்பான்கள், ஒரு சிறு மின்னிறைப்பான் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமாக அத்தியாவசியத் தேவைகளுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**90—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 40110—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், பல்லவராயன்பட்டி ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தந்திட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த பல்லவராயன்பட்டி குடியிருப்பிற்கு 2 கையிறைப்பான்கள் மற்றும் ஒரு தனி மின்விசைத் திட்டத்தின் மூலம் அத்தியாவசியத் தேவைகளுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் கருத்துரு இல்லை.



**91—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 41374—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அரூர் தொகுதி, புதுப்பட்டி ஊராட்சி, காட்டுகோயில்பட்டி பகுதியில் குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* அரூர் தொகுதி, ஊத்தங்கரை ஒன்றியம், காட்டேரி ஊராட்சியில் காட்டுகோயில்பட்டி குடியிருப்பு உள்ளது. இக்குடியிருப்பின் மக்கட் தொகை 380 ஆகும். இக்குடியிருப்பிற்கு ஒரு கையிறைப்பான் மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின் விசைத் திட்டம் ஆகியவை மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

**92—**

## திண்காரை சாலை

**வினா எண் 41910—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செங்கற்பட்டு நகரம், 7-வது வார்டில் கைலாசநாதர் கோயில் தெரு சாலையை திண்காரை சாலையாக மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு நகரம், 7-வது வார்டில் கைலாசநாதர் கோயில் தெரு சாலையை திண்காரை சாலையாக மாற்றும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**93—**

**மகளிர் மன்றங்கள்**

**வினா எண் 42970–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மொத்த மகளிர் மன்றங்கள் எத்தனை?

(ஆ) இவற்றில் எத்தனை மன்றங்களுக்கு அரசு சிறுதொழில் துவங்க கடன் வழங்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 65 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இந்த 65 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சிறு தொழில் துவங்க அரசு ரூ. 16.25 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

**94—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 43909–திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், செக்குப்பட்டியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைத்து



2005 செப்டம்பர் 22]

நான்கு வருடங்கள் ஆகியும் தண்ணீர் கிடைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கோதூர் ஊராட்சி, செக்குப்பட்டி குடியிருப்பிற்கு காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட ஆர்.புதுப்பாளையம் மற்றும் 18 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, நீரேற்றுக் குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்கள் 1996 ஆம் ஆண்டு ரூ. 2.120 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டது. ஆனால், செக்குப்பட்டி, குழந்தைபாளையம், தம்மநாயக்கன்பட்டி ஆகிய 3 குடியிருப்புகளும் மேடான பகுதியில் இருந்தபடியால் இங்குள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் சீராக குடிநீர் ஏற்றி விநியோகிக்க இயலவில்லை. எனவே, மேற்கண்ட மூன்று குடியிருப்புகளுக்கும் பிரதான நீரேற்றுக் குழாயில் ஒரு இடைப்பட்ட நீரேற்று நிலையம் அமைக்கப்பட்டு, 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்சேகரிப்புத் தொட்டி நீரேற்று அறை, நீர் உந்து நிலையம் ஆகியவை 9/2000-ல் கட்டி முடிக்கப்பட்டு மேற்குறிப்பிட்ட 3 குடியிருப்புகளுக்கும் குடிநீர் சீராக வழங்கப்படுகிறது.

**95—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 44347–திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, திருத்தியமலை ஊராட்சி, அய்யம்பாளையம் ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்து பாலப்பட்டி நீர்த்தேக்கத் தொட்டிவரை சுமார் 1,200 மீட்டர் தூரம் குழல் குழாய் பதித்து (பைப்லைன்) குடிநீர் வழங்க அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, திருத்தியமலை ஊராட்சி, பாலப்பட்டி குடியிருப்புகளுக்கு ஆமூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் போதுமான அளவு காவிரி நீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அய்யப்பாளையம் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து குழாய் பதித்து குடிநீர் வழங்கும் அவசியம் எழவில்லை.

**96—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 44349–திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, தளுதாளப்பட்டி ஊராட்சி, வடக்கு தளுதாளப்பட்டி மேல்நிலைத் தொட்டியிலிருந்து கருப்பண்ணபுரம் வரை குழல் குழாய் (பைப்லைன்) அமைத்து அப்பகுதி மக்களின் குடிநீர் தட்டுப்பாட்டைத் தீர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மண்ணச்சநல்லூர் ஒன்றியம், தளுதாளப்பட்டி ஊராட்சியைச் சார்ந்த கருப்பண்ணபுரம், தளுதாளப்பட்டி குடியிருப்பின் மேல்நிலைத் தொட்டியிலிருந்து கருப்பண்ணபுரம் பகுதிக்கு குழாய் நீட்டிப்பு செய்து கொடுக்கப்பட்டு போதுமான அளவு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகின்றது.

**97—**

**ஆழ்குழாய்க் கிணறு**

**வினா எண் 44571–திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 22]

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், தளுதாளப்பட்டி, வடக்கு தளுதாளப்பட்டி, சோலங்கநல்லூர், குருவம்பட்டி கிராமத்தில் தென்புறம், சென்னகரை ஆகிய இடங்களில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், தளுதாளப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த வடக்கு தளுதாளப்பட்டியில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், எண் 2 கரியமாணிக்கம் ஊராட்சியைச் சேர்ந்த சோழங்கநல்லூர், குருவம்பட்டி மற்றும் சென்னகரை ஆகிய குடியிருப்புகளுக்கு எண் 2 கரியமாணிக்கம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 60,000 லிட்டர் மற்றும் இரு 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு மேல்நிலைத் தொட்டிகளுடன் கூடிய திட்டம் செயல்படுத்தப்பட்டு, தற்போது இக்குடியிருப்புகளுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்காணும் குடியிருப்புகளுக்கு புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**98—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 45200–திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், கீழ்குடி—அம்மன் ஜாக்கி ஊராட்சி, மைவயல் கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டித்தர அரசு முன்வருமா?

[2005 செப்டம்பர் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி ஒன்றியம், கீழ்குடி—அம்மன் ஜாக்கி ஊராட்சியைச் சார்ந்த மைவயல் குடியிருப்பிற்கு ஒரு தனி மின்விசைத் திட்டத்தின் மூலம் அத்தியாவசியத் தேவைகளுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போது மேல்நிலைத் தொட்டி அமைக்கும் கருத்துரு இல்லை.

**99—**

**குடிநீர்த் தேக்கத் தொட்டி**

**வினா எண் 48385–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புங்கனூரில் குடிநீர் நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, புங்கனூர் ஊராட்சி, புங்கனூரில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, ஆழ்துளைக் கிணறு மற்றும் பகிர்மானக் குழாய் 2,100 மீட்டர், பொதுக் குழாய் மேடை 16 எண்களுடன் ஊராட்சி பராமரிப்பில் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. புங்கனூர் குடியிருப்பில் உள்ள மக்கள் தொகைக்கு இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி போதுமானதாக உள்ளது.



2005 செப்டம்பர் 22]

**100—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 53694–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், இருப்பாளி கிராமத்திற்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், இருப்பாளி ஊராட்சியின் அனைத்துப் பகுதி பொதுமக்களுக்கும், "இருப்பாளி கூட்டுக் குடிநீர்" திட்டத்தின் மூலம், இருப்பாளி ஊராட்சியில், புதூரில் பெரிய டேங்க் கட்டப்பட்டு, அதன்மூலம் இருப்பாளி ஊராட்சியில் எல்லா பகுதி பொதுமக்களுக்கும், காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் காவிரி குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி, என்ன?

(டாக்டர் க. பொன்முடி, திரு. எ.வ. வேலு, திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி.கே.மணி ஆகியோர் எழுந்து நின்றனர்.)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த மொழிக்கும் எதிராக அல்ல, எந்த இயக்கத்திற்கும்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, தன்னிலை விளக்கம் சொல்வதை எல்லாம் பத்திரிகையிலே சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### குடிநீருக்காக வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். குடிநீருக்காக வைகை அணையினைத் திறந்துவிட வேண்டிய அவசியம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே.கே. சிவசாமி அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பாகவும், திரு. க. பாரமலை அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானமாகவும், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் கவன ஈர்ப்பாகவும் எடுத்துக்கொள்ள அறிவிப்புகளைக் கொடுத்துள்ளார்கள். இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து சுருக்கமாகப் பேச முதலில் திரு. கே.கே. சிவசாமி அவர்களை அழைக்கிறேன். (குறுக்கீடு)

## 2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** ரேஷன் கார்டு விஷயமாக....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதையெல்லாம் பத்திரிகையிலே சொல்லுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கே.கே. சிவசாமி.



## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

### வைகை அணையிலிருந்து குடிநீர் திறந்துவிடல்—*தொடர்ச்சி*

**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர், தண்ணீர் என்று தவித்துக் கொண்டிருந்த சென்னை மாநகர மக்களின் தண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண புதிய வீராணம் குடிநீர்த் திட்டம் கொண்டுவந்து (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மக்களின் தாகம் தீர்த்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு முதற்கண் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி ஒன்றியத்தில் கட்டனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்பட்டு வருகிறது. இக்குடிநீர்த் திட்டத்திற்கு திருப்பாச்சேத்தி வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவரப்பட்டு 60-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகின்றது. வறட்சியின் காரணமாக குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே, வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாரமலை.

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக விவசாயிகளெல்லாம் விதைகளைப் பாவி, விவசாயத்தைத் தொடங்குவதற்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படும் என்று எதிர்பார்த்தார்கள். திறந்துவிடாத காரணத்தால், அந்த விவசாயம் பாதிக்கப்படுமோ என்ற அச்சம் விவசாயிகள் மத்தியிலே வந்திருக்கிறது. இதற்கிடையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குடிநீருக்காக இராமநாதபுரம் மாவட்டம் வரை தண்ணீர் திறந்துவிடுவதாக அறிவித்திருக்கின்றார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நான் கேட்டுக்கொள்வது, இதிலே ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், நிலத்தடி நீர் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அங்கு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அங்கு நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதற்குக் காரணம், வைகை ஆற்றில், மதுரையிலிருந்து மானாமதுரை வரை

[திரு. க. பாரமலை] [2005 செப்டம்பர் 22

மண்டிக் கிடக்கும் நாணல் புதர்களும், புதர்களும்தான் காரணம். அதை நீக்கினால் ஒழிய, நாம் அந்தத் தண்ணீரைத் திறந்துவிட்டாலும் அதை முழுமையாகப் பயன்படுத்த முடியாது. இதுபற்றி நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கூட கொண்டு வந்திருக்கின்றேன். இப்பொழுது குடிநீருக்காகத் தண்ணீர் திறந்துவிடுவதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். விவசாயத்திற்கும் தண்ணீர் திறந்துவிட வேண்டும். அதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினமே குடிநீருக்காக தண்ணீர் திறந்துவிட்டிருக்கின்றீர்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், இரண்டு மாதகாலமாக நாங்கள் அரசுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும், எங்களுடைய இயக்கங்கள் மூலமாகவும் மாறி, மாறி இரண்டு மாதகாலமாக அரசுக்கு கோரிக்கை விட்டு, நேற்றையதினம் நீங்கள் அதை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கின்றீர்கள். நேற்றையதினம் தண்ணீர் திறந்துவிட்டதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து வருகின்ற காலங்களில் — அந்தப் பகுதியில் Vaigai Dam-ல் இன்றைக்கு 55 அடி தண்ணீர் இருக்கின்றது. எங்களுடைய ஆட்சிக் காலத்தில் 32 அடி தண்ணீர் இருந்தபோதே, கேட்ட நேரத்தில் அன்றைக்குத் தண்ணீர் திறந்துவிட்டிருக்கின்றார்கள். ஆகவே, அப்படிப்பட்ட (குறுக்கீடு) குற்றம் சொல்லவில்லை. குற்றம் எதுவும் சொல்லவில்லை. அரசாங்கம் குடிநீருக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்தச் சந்தர்ப்பம் வருகின்ற நேரத்தில், உடனடியாக திறப்பதற்கு வேண்டிய வேலைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே கங்கைகொண்டான்....



2005 செப்டம்பர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், தனி அறிவிப்பாகக் கொடுங்கள். (குறுக்கீடு) தனி அறிவிப்பாகக் கொடுங்கள். இப்படி குறுக்கிட்டுப் பேசக் கூடாது. (குறுக்கீடு) ஹேமச்சந்திரன், சட்டமன்றத்தினுடைய விதிமுறைகளைக் கொஞ்சம் புரிந்துகொண்டு பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை நகரம், திருப்புவனம் பேரூராட்சி, பரமக்குடி நகராட்சி, இராமநாதபுரம் நகரம் ஆகிய பகுதிகளும் மற்றும் மதுரை, சிவகங்கை மாவட்டங்களில் வைகை ஆற்றுப் பகுதிகளிலுள்ள கிராமங்களின் குடிநீர் ஆதாரங்களும், நிலத்தடி நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வருவதாகவும், இதனால் அந்தக் கிராமங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுவதாகவும், அந்தப் பற்றாக்குறையைப் போக்க உடனடியாக வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடும்படி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து அரசுக்குக் கோரிக்கை வரப்பெற்றது. மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக மதுரை, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களின் குடிநீர்த் தேவைக்காக வைகை அணையிலிருந்து 21–9–2005 நேற்று மதியம் முதல் 1,157 மில்லியன் கன அடி தண்ணீரை 7 நாட்களுக்குத் திறந்துவிட ஆணையிட்டுள்ளார்கள் என்பதனை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரமலை அவர்கள், விவசாயப் பகுதிகளுக்கும் நீர் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையினை இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். மானாமதுரை வட்டத்தில் வைகை ஆற்றுப் பாசனம் பெறும் விவசாய நிலங்கள், விரகனூர் மதகு அணை, மற்றும் பார்த்திபனூர் மதகு அணைகளுக்கு இடையே உள்ளன. தண்ணீர் திறப்பு விதிகளின்படி, வைகை அணையில், வைகை பங்கீட்டு நீர் 500 முதல் 1,000 மில்லியன் கன அடி இருந்தால் மட்டுமே விரகனூர் மதகு அணைக்குக் கீழுள்ள வைகை ஆயக்கட்டுப் பகுதிகளுக்குப்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 செப்டம்பர் 22

பாசனத்திற்குத் தண்ணீர் திறக்க இயலும். மேலும் இப்பகுதியில் வழக்கமாக அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவ மழையால் வைகை அணைக்கு நீர் கிடைக்கப் பெறும்போது, பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்துவிடுவதுதான் நடைமுறையில் இருந்து வருகின்ற ஒரு வழக்கமாகும். 21–9–2005 அன்றைய நிலவரப்படி வைகை அணையில் வைகை பங்கீட்டு நீர் 547 மில்லியன் கன அடி மட்டுமே உள்ளது. மேலும், இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் மழை பொய்த்ததன் காரணமாக அப்பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டிய அவசியம் கருதி, 21–9–2005 அன்று முதல் 7 நாட்களுக்கு வைகை அணையிலிருந்து நீர் வழங்க, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்நிலையில் மானாமதுரைக்கு பாசனத்திற்கு தண்ணீர் வழங்க இயலாத சூழ்நிலை உள்ளது. வட கிழக்குப் பருவ மழை காலத்தில் வைகை அணைக்கு நீர் வரத்து வரப்பெற்று, வைகை பங்கீட்டு நீர் கிடைத்தவுடன், மானாமதுரை பகுதி விவசாயிகளுக்கு நீர் திறந்துவிட அரசு உரிய நடவடிக்கையைத் துரிதமாக மேற்கொள்ளும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–45

## 4. அறிவிப்பு

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)–ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் 11–வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்.

1. திரு. ப. இராஜரெத்தினம்
2. திரு. அ. அன்வர் ராஜா
3. திருமதி சி.எம். சூரியகலா
4. திரு. லா. சந்தானம்
5. டாக்டர் தே. குமாரதாஸ்
6. முனைவர் செ.கு. தமிழரசன்



2005 செப்டம்பர் 22]

## 5. கவன ஈர்ப்பு

### (அ) திருவண்ணாமலை—திருக்கோவிலூர் மற்றும் ஆரணி—விழுப்புரம் சாலைகளைப் புதுப்பித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலை – திருக்கோவிலூர் மற்றும் ஆரணி–விழுப்புரம் ஆகிய சாலைகளைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம்" குறித்த, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### அறிக்கை

திருவண்ணாமலை–திருக்கோவிலூர் சாலையானது ஆற்காடு, ஆரணி, போளூர், திருவண்ணாமலை–திருக்கோவிலூர் வழியாக திருவாரூர் வரை உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு சாலை மேம்பாடு திட்டத்தின் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இச்சாலைப் பகுதியின் மொத்த நீளம் 393 கி.மீ. ஆகும். இப்பணிக்கான கட்டுமானத் தொகை ரூ.611.7 கோடி. இப்பணிக்கான ஒப்பந்தக் காலம் அக்டோபர் 2004–லிருந்து 42 மாதங்கள் ஆகும். தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாலை மேம்பாட்டுப் பணிகள் 4 மைல் கல் பகுதிகளாக (mile stone) செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் திருவண்ணாமலை முதல் திருக்கோவிலூர் வரை (கி.மீ. 72/0–104/0) 32 கி.மீ. நீளம் இரண்டாம் மைல் கல் பணியில் இடம் பெற்றுள்ளது. 1–9–2005 அன்று இச்சாலைப் பகுதி ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது தார் நொடிகள் (Pot holes filling) போடப்படுகிறது. தற்சமயம் சாலை பராமரிப்புப்

பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இவற்றை உலகத்தரம் வாய்ந்த சாலைகளாக மேம்படுத்த முன்தகுதிபெற்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் சிறந்த இயந்திரங்களைப் பயன்படுத்தி பணிகளை மேற்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இப்பணி முடியும் தருவாயில் பொருளாதாரம் பெருமளவு உயர்வடைந்து மக்களுக்கு பலன்கள் கிடைக்க வழி வகுக்கப்பட்டுள்ளது. இதற்காக அனைத்து கட்டுமானப் பணிகள் முடுக்கி விடப்பட்டு சாலைப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதன் பயன்கள் வரும் சில மாதங்களில் கண்கூடாக மக்களுக்குச் சென்றடைவது தெரியவரும்.

ஆற்காடு–ஆரணி-விழுப்புரம் சாலை, ஒரு மாநில நெடுஞ்சாலை (SH-4) ஆகும். இச்சாலை ஆற்காட்டில் கி.மீ. 0/0–இல் தொடங்கி ஆரணி, சேத்துப்பட்டு மற்றும் செஞ்சி வழியாக கி.மீ. 114/6–இல் விழுப்புரத்தில் முடிவடைகிறது. இதில் ஆற்காடு முதல் – ஆரணி (கி.மீ. 0/0 – 25/0) வரையிலான சாலைப் பகுதி, தமிழ்நாடு சாலை மேம்பாடு திட்டத்தின்கீழ் மேம்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. கி.மீ. 25/0 முதல் 29/5 வரை ஆரணி நகரப் பகுதி நல்ல நிலையில் உள்ளது. ஆரணி முதல் – சேத்துப்பட்டு (கி.மீ. 29/5–53/9) வரையிலுள்ள 24 கி.மீ. சாலைப் பகுதி, மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் (CRF 2004-2005) அகலப்படுத்தி உறுதிப்படுத்த ரூபாய் 2.69 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. சேத்துப்பட்டில் இருந்து கி.மீ. 53/9 முதல் 61/0 வரை சாலை நல்ல நிலையில் உள்ளது. கி.மீ. 61/0 – 74/4 வரையிலுள்ள சாலைப் பகுதி ரூபாய் 2.80 கோடி மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (CRIDP) கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் துவங்கும் நிலையில் உள்ளன. மீதம் உள்ள கி.மீ. 74/4 முதல் 114/6-ல் விழுப்புரம் வரையிலுள்ள சாலைப் பகுதி நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். திருவண்ணாமலை மாவட்டத்தில், பொதுவாக எங்களுடைய மாவட்டத்தில், ஆற்காட்டிலிருந்து ஆரணி போகிற இடத்திலே பார்த்தோம் என்று சொன்னால், உப்புப்பேட்டை, விளாம்பாக்கம், திமிரி, தாமரைப்பாக்கம் போன்ற இடங்களிலே, பொதுவாக road களிலே நாம் பள்ளங்களைப் பார்த்திருப்போம். ஆனால், பள்ளங்களுக்குள்ளே இப்போது road மாட்டிக்கொண்டிருக்கக்கூடிய பகுதி நம்முடைய ஆற்காடு–ஆரணி என்கிற பகுதியாகும். அதுபோலவே, திருவண்ணாமலையிலிருந்து





திருக்கோவிலூர் போகக்கூடிய சில இடங்களிலே road கண்டுபிடிக்க முடியவில்லை. நம் அன்பு நண்பர் மாண்புமிகு உறுப்பினர் சிவராஜ் அவர்களுடைய மகன் அவர்களுடைய திருமணத்திற்கு நான் அந்த இடத்திலே இரவில் போகிறபோது road தெரியாமல் போய் மாட்டிக்கொண்டு, பிறகு அந்தப் பள்ளத்தில் விழுந்து எழுந்த எங்களுக்கு முதுகு வலி அன்று பிடித்தது இன்றுவரை... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் முதுகு வலிக்கு எல்லாம் வைத்தியம் பண்ண முடியாது. ஒரு கேள்வி கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அந்தப் பள்ளம் அந்த அளவிற்கு road தெரியாத அளவிற்கு இருக்கிறது. திருவண்ணாமலையிலிருந்து செல்வோம் என்று சொன்னால், குளத்தடி, வாழவெட்டி, அதேபோல வெரையூர், வன்னியநகரம் ஆகிய பகுதிகளிலே road இல்லை. இப்படி road இல்லாமல் road sector–லே மேம்பாட்டுத் திட்டத்திலே கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னாலே இந்த road எடுக்கப்பட்டுவிட்டது என்ற அறிவிப்பு வந்து அதற்காக tender எல்லாம் விடப்பட்டு, ஆனால் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, இன்று வரை அது நிறைவேற்றப்படாமல் இந்த road களில் பணியே செய்யாமல் நில எடுப்பு என்று பல ஆண்டுகளை ஓட்டிவிட்டார்கள். பிறகு நில மேம்பாட்டுத் திட்டத்திலே அந்த road வருகிறது என்கிற காரணத்தினாலே அங்கு இருக்கக்கூடிய அந்த road களில் at least மண்ணையாவது போட்டிருந்தாலும்கூட ஓரளவுக்கு road மாதிரியாவது தெரிந்திருக்கும். அதையும் செய்யாமல் விட்டுவிட்ட காரணத்தினாலே இன்று பொதுமக்கள் பல இடர்பாடுகளுக்கு உள்ளாகிறார்கள், அல்லல்படுகிறார்கள். ஆனால், இந்த விவர அறிக்கையிலே இப்போதுதான் பணி தொடங்கப்பட்டு அதிலே அந்த pot holes filling, அதாவது வெறும் பள்ளத்தை மட்டும் அவர்கள் மூடப்போகிறார்கள். road போடுவதாகத் தெரியவில்லை. பிறகு tender தனியாக விடப்பட்டு அந்தப் பணி நடைபெறும் என்று சொன்னால் அது எப்போது தொடங்கப்படும், எப்போது பணி முடிக்கப்படும் என்ற விவரம் இந்த அறிக்கையிலே இல்லை. அதைப்போல, ஆரணி–விழுப்புரம் road எடுத்துக்கொள்வோம் என்று சொன்னாலும்கூட இதிலேகூட... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை கேள்வியைக் கேளுங்கள். எப்போது எடுத்துக்கொள்ளப்படும், எப்போது முடிக்கப்படும் என்று கேளுங்கள். அவ்வளவுதான்.

**திரு. சி. ஞானசேகரன்:** இதில் முக்கியமான ஒன்று. Road sector-லே எடுக்கிறோம் என்ற ஒரே காரணத்தை மட்டும் சொல்லிக்கொண்டு பல ஆண்டுகளை இப்போது நாம் ஓட்டிக்கொண்டிருக்கிற காரணத்தினால் இன்று பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பணியில் pot holes filling மட்டும் செய்தால் போதாது. முழுமையாகச் செயல்படுத்தி road முழுக்கப் போடப்படவேண்டும். ஏனென்றால் ஓர் இடத்தில் முடிக்கிறார்கள். அடுத்த இடத்தில் பள்ளம் வந்து விடுகிறது. இதை தனித் தனியாக, reach, reach–ஆக போடுகிற காரணத்தால் அது தொடர்ந்து செய்யப்படாத நிலையிலே இன்னும் பெரிய பாதிப்புக்குள்ளாகிறோம். ஆகவே, தொடர்ந்து இந்தப் பாதைகள் எப்போது சரி செய்யப்படும், எப்போது தொடங்கப்படும், எப்போது முடிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற அந்தச் சாலையானது உலக வங்கியினுடைய நிதியினைப் பெற்று, ஆற்காட்டிலிருந்து திருவாரூர் வரை 393 கிலோ மீட்டர் சாலையை, உலகத் தரம் வாய்ந்த சாலைகளாகப் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதோடு, நாகப்பட்டினம் முதல் கட்டுமாவடி வரையில் 116 கிலோ மீட்டரும், கட்டுமாவடியிலிருந்து இராமநாதபுரம் வரை 100 கிலோ மீட்டர் வரையிலும், இராமநாதபுரத்திலிருந்து தூத்துக்குடி வரை 118 கிலோ மீட்டர் வரையிலும் இருக்கின்ற ஒட்டுமொத்தமாக 727 கிலோ மீட்டர் சாலைகளையும் உலகத் தரம்வாய்ந்த சாலைகளாகவும் இடையில் இருக்கின்ற பெருநகரங்களுக்கு புறவழிச் சாலைகளாகவும் அந்தச் சாலையை ஒட்டுமொத்த திட்ட மதிப்பீடாக, அதோடு 2,000 கிலோ மீட்டர் என்ற அளவிற்கு பல்வேறு மாநில, மாவட்ட மற்றும் இதர மாவட்டச் சாலைகளை மேம்படுத்துவதற்காகவும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் உலக வங்கியினுடைய 2,160 கோடி நிதியினைப் பெற்று, இவ்வகையான சாலைகளை உலகத்தரம் வாய்ந்த சாலைகளாகத் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 393 கிலோ மீட்டர் நீளமுள்ள, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற இந்தச் சாலை தற்போது K.M.C. Oriental Structural Engineering மற்றும் சீனயா என்ற இணைந்த



ஒப்பந்ததாரர்களுடன் 8–10–2000 அன்று ஒப்பந்தங்கள் முடிவாகி பணிகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 11–50

தற்போது அந்தப் பணிகள் யாவும் ஆரம்பிக்கப்பட்டு முழு வீச்சில், முழு வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பணிகள் முழுமையும் முடிப்பதற்கு அவர்களுக்கு 42 மாத காலங்கள் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கின்ற சாலையைப் பல்வேறு வகையில் தரம் உயர்த்தி அதை 60 சென்டி மீட்டர் கனத்திற்குத் தார் கலந்த கல்தடம் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டு, கிட்டத்தட்ட 2 அடி உயரம் அந்தச் சாலை வலுவுள்ள சாலையாக, உறுதியான சாலையாகத் தரம் உயர்த்தப்படும். தரம் உயர்த்தியதற்குப் பின்னால்—அந்தச் சாலையில் 1 கிலோ மீட்டர் தூரத்தைக் கடப்பதற்கு தற்போது 1.5 நிமிடங்கள் தேவைப்படுகிற நேரம் தரம் உயர்த்தியதற்குப் பின்னால்—0.75 நிமிடமாக பயண நேரம் குறைகின்ற ஒரு நல்ல வாய்ப்பு இருக்கின்றது.

இப்பணியை எடுக்கின்ற உலக வங்கியினுடைய சில விதிமுறைகளின்படி, வழிமுறைகளின்படி நிலங்கள் ஆர்ஜிதம் செய்து தக்க இழப்பீட்டுத் தொகை பாதிக்கப்பட்டோருக்கு முழுமையாக வழங்கிய பின்பும், இதன்படி நிலம் இழந்தோருடன் மாவட்ட ஆட்சியர் மூலம் நேரடிப் பேச்சுவார்த்தை வழியாக இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்து உடனடியாக இழப்பீட்டுத் தொகை அளிக்கப்பட்டு நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்பும், — நலிந்தோருக்கு — அந்தப் பகுதியில் வசிக்கின்ற நலிந்தோருக்கு வீடுகள், தொழிலில் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கடைகள் கட்டிக் கொடுத்த பின்பும், இச்சாலைகள் அகலப்படுத்தப்படுவதாலும் இடையூறாக உள்ள மின் கம்பங்கள், தொலைபேசிக் கம்பங்கள் அகற்றப்பட்டு மாற்று இடங்களில் அமைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருப்பதாலும், தண்ணீர்க் குழாய்கள் போன்ற குழாய்களை மாற்றி வேறு இடத்தில் அமைக்க வேண்டிய பணி இருப்பதாலும், இப்பணிகள் சாலையின் மத்தியில் உள்ள 6 மீட்டர் தூரத்திற்கு உள்ள மரங்கள் அகற்றப்பட்டு 4 பங்கு மரங்கள் புதிதாக வளர்க்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்பு இதன் பிறகு உலக வங்கி பார்வையிட்டு ஒப்புதல் பெற்று தேவையான முன்னேற்பாடுகள் யாவும் செய்யப்பட்டு முடிகின்ற தருவாயில் தற்போதைய சூழ்நிலை இருக்கிறது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 செப்டம்பர் 22

உலக வங்கியினுடைய இவ்வாறான வழிமுறைகளை எல்லாம் பூர்த்தி செய்த பின்புதான் நாம் அந்தப் பணியைத் தொடங்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலும், இருப்பினும் இந்த இடைப்பட்ட காலங்களில் ஏற்படுகின்ற தற்காலிக பழுதுகளை அவ்வப்போது சரி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பழுதுகள் தற்போது இருந்தாலும், அப்பழுதுகளும் உறுதியாக சரி செய்யப்படும் என்பதனையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு சாலையினுடைய நிலைகளை எடுத்துச் சொன்னார்கள். நான் இந்த அவைக்கு ஒன்றைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-ல் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டபோது சாலைகளுடைய தரம் என்னவாக இருந்தது என்பதனை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். 1996-லிருந்து 2001 வரை கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 5 ஆண்டுகளில் போடப்பட்ட மொத்தச் சாலையின் நீளமே 23,125 கிலோ மீட்டர்தான். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான்கே ஆண்டுகளில் கடந்த 2004 டிசம்பர் முடிய 27,771 (மேசையைத் தட்டும் ஒலி) கிலோ மீட்டர் சாலைகளைப் புதிய தார்ச் சாலைகளாகப் போட்டுத் தந்திருக்கின்றார்கள். அதோடு மட்டும் அல்லாமல், வரலாற்று நிகழ்ச்சியாக நடப்பு நிதியாண்டில் மட்டும் கிட்டத்தட்ட 22,752 கிலோ மீட்டர் (மேசையைத் தட்டும் ஒலி) சாலைகளைப் புதிய தார்ச் சாலைகளாகப் போடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இதுவரை 32 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகள் நல்ல தரமான சாலைகளாகப் பணிகள் முடிக்கப்பட்டு இருக்கின்றன.

முற்பகல் 11-55

வருகின்ற டிசம்பர் மாதத்திற்குள் 50,000 கிலோ மீட்டர் சாலைகளைப் (மேசையைத் தட்டும் ஒலி) புதிய தார்ச் சாலைகளாகப் போடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆக, கடந்த ஆட்சிக் காலத்தில் ஐந்து ஆண்டுகளில் 23,000 கிலோ மீட்டர் சாலைகள் போடப்பட்டன. மாண்புமிகு அம்மாவினுடைய நல்லாட்சியில் இரண்டு மடங்கிற்கு மேலாக (மேசையைத் தட்டும் ஒலி) 50,000 கிலோ மீட்டர் சாலைகள் போடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதனை மிக்கப் பணிவோடு தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.



2005 செப்டம்பர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், நன்றி சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் நன்றி சொல்லக் கூறுகிறீர்கள். நன்றி சொல்லுகிறோம். (சிரிப்பு) ஆனால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இந்தப் பணியைப் பார்த்தீர்கள் என்று சொன்னால், மாண்புமிகு அமைச்சருடைய கூற்று கடந்த காலத்தைவிட இன்னும் 3,000 அதிகமாகப் போட்டிருக்கிறீர்கள் இந்த ஆட்சியிலே. இன்னும் நிறைய போடப் போவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். இன்னும் நிறைய போட்டிருக்கிறது, இனிமேல் நீங்கள் (குறுக்கீடு) இப்பொழுது போட்டிருக்கிறது, இனிமேல் நீங்கள் போடப்போவதையும் சேர்த்துச் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலை இங்கே சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். இதுவரை 32,000 கிலோ மீட்டர் பணி முடிக்கப்பட்டிருக்கின்றது. பணி நடந்துகொண்டிருக்கின்ற பணியையும் சேர்த்து டிசம்பர் மாதத்திற்குள்ளாக 50,523 கிலோ மீட்டர் சாலை போட்டுத் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்டதொரு விளக்கத்தை அளித்திருக்கிறார்கள். நன்றி. ஆனால், நான் சொல்வது இந்தப் பாதையைப் பற்றித்தான் இப்பொழுது பேசிக்கொண்டிருக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதைத்தான் சொன்னார். (குறுக்கீடு) இல்லை, தெளிவாக விளக்கம் சொல்லிவிட்டார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இதோ கேட்டுவிட்டேன், கேட்டுவிட்டேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே வந்து..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அதாவது, road sector-லே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைக் கொடுத்தார்கள். இந்த Road sector-லே நான் அறிவதெல்லாம் இன்னும் இதை hand over பண்ணவில்லை என்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுவரை hand over பண்ணவில்லையென்றால் (குறுக்கீடு) சொல்கின்றேன். இப்பொழுது road பற்றி இந்த அளவிற்கு அதிகமாகச் சொன்னார் அமைச்சர். அதாவது திருப்பதியிலேயிருந்து திருவண்ணாமலை போகின்ற இந்த route-லே போகக்கூடிய, விழுப்புரம் போகக்கூடிய சாலையைக்கூட அதை NH-ஆக மாற்றுவதற்கு ஏற்கெனவே இங்கிருந்து NOC கொடுத்து அதை மத்திய அரசு உடனே செய்து கொடுப்பதாகக்கூடச் சொன்னார்கள். அதையும் நீங்கள் சேர்த்துச் செய்தீர்களேயானால், கிலோ மீட்டர் இன்னும் அதிகமாகும். ஆகவே, மத்திய அமைச்சகம் வந்து அதை உடனடியாகச் செய்யத் தயாராக இருக்கிறது. இப்பொழுதுகூட பாலாறு bridge ஒன்றுக்கு amount sanction பண்ணியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பணியை உடனடியாகச் செய்து, திருவண்ணாமலையிலே ring road வேறு வரவேண்டும். Ring road-க்கான பணிகள் இன்னும் சரியாக, அதுவும் முடியவில்லை. ஆகவே, ring road அமைப்பதற்கும், மற்ற road பணிகளைச் செய்வதற்கும் உடனடியாக எப்பொழுது இது hand over செய்யப்படும் road sector-க்கு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதல் கட்டப் பணி ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டு, பணி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விருப்பப்பட்டால் நானே அவரை அழைத்துச் சென்று அந்தப் பணிகளைக் காட்டுவதற்குத் தயாராக இருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஒப்பந்தக்காரருக்கு advance -ஆகக்கூட 10 சதவிகிதம், அறுபது கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது. அதையும் அவர் பெற்றுக்கொண்டிருக்கின்றார். ஆறு மாதங்களுக்கு முன்பாகவே பெற்றுக்கொண்டு, பணியை அவர் துறையில் துவங்கி, இரண்டு கட்டங்களாக அவர்கள் பிரித்துக்கொண்டு, பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.





## (ஆ) வியாசர்பாடி இரயில்வே கீழ்ப்பாலத்திற்கு மேல் ஒரு மேம்பாலம் கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த (குறுக்கீடு) ஒன்றும் இல்லை. பி.கே. சேகர்பாபு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை-கொல்கத்தா நெடுஞ்சாலையில் வியாசர்பாடி இரயில்வே பாலத்திற்கு மேல் ஒரு மேம்பாலம் கட்டவேண்டியதன் அவசியம்" குறித்த, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### அறிக்கை

சென்னை-கொல்கத்தா சாலை (தேசிய நெடுஞ்சாலை எண் 5)-ல் கி.மீ. 4/1-ல் வியாசர்பாடியில் அமைந்துள்ள சாலை கீழ்ப்பாலத்தில் (Railway underpass) ஓடுதளம் தொழில்நுட்ப ரீதியில், அருகில் உள்ள பகுதிகளைக் காட்டிலும் தாழ்வாக அமைக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் பருவமழைக் காலங்களில் இந்த கீழ்ப்பாலப் பகுதியில் பெருமளவு மழைநீர் சேர்ந்து போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவது வாடிக்கையான ஒரு நிகழ்வாக இருந்து வந்த நிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நவம்பர் 2002-ல் ஏற்பட்ட மழைச்சேதங்களைப் பார்வையிட்டபோது இந்த வியாசர்பாடி கீழ்ப்பாலம் பகுதியில் சேகரம் ஆகும் மழை நீரை அதிக அளவு விசைப் பம்புகளைக்கொண்டு வெளியேற்றிட வேண்டும் என உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில் தற்பொழுது 72.5 குதிரைத் திறன் கொண்ட 5 நீர் இறைப்பான்கள் விநாடிக்கு 133.5 லிட்டர் தண்ணீரை வெளியேற்றும் வகையில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. நீர் இறைப்பான்கள் அமைக்கப்பட்ட பின்பு எந்த ஒரு மழைக்காலத்திலும் தண்ணீர் தேங்குவது அறவே தவிர்க்கப்பட்டுள்ளது.

மேலும், ஆய்வின்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் "தற்போதுள்ள கீழ்ப்பாலத்தில் கனரக வாகனங்கள் சென்று வர சிரமமாக இருப்பதால் அடிக்கடி ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் களையும் வகையில் ஒரு மேம்பாலம் அமைக்கப்படும்" என அறிவிப்பு செய்தார்கள். இதுகுறித்து இரயில்வே துறையை அணுகியபோது, பொதுவாக இரயில்வே சட்ட விதிகளின்படி ஏற்கெனவே இருக்கும் சந்திக்கடவுகளில் மேம்பாலம்/கீழ்ப்பாலம் அமைக்கும் பணிகளுக்கு மட்டுமே திட்ட மதிப்பீட்டில் இரயில்வே பங்களிப்பு ஏற்கப்படும் என்பதால், தற்போது மேம்பாலம் அமைக்கக் கோரும் இடத்தில் ஏற்கெனவே கீழ்ப்பாலம் இருப்பதால், இப்பணியை இரயில்வே துறையின் திட்டச் செலவில் பங்கேற்க இயலாது என்று இரயில்வே துறை தெரிவித்துள்ளது. ஆனால், இந்தப் பகுதியிலுள்ள மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக, இப்பாலப் பணிக்கான மொத்தச் செலவாகிய ரூ.50.00 கோடியையும் மாநில அரசே ஏற்கும் வகையில் 2005–2006 ஆம் ஆண்டுக்கான சென்னைப் பெருநகர வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் செயல்படுத்தும் கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கூறியுள்ளதை முழுமையாகப் படித்துப் பார்த்தேன். 1688 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட சென்னை மாநகராட்சிக்கு இன்று 317 வயதாகிறது. பாரம்பரியமும், பழமையும் வாய்ந்த சென்னை மாநகரை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற இந்த ஒன்பது ஆண்டுகளில் என்றென்றும் சென்னை என்னும் எழிலார்ந்த திட்டத்தின் மூலம் (மேசையைத் தட்டும் ஒலி) இன்று சென்னை மாநகரை நவீனமயமாக்கிக் காட்டியிருக்கின்ற, நவீனச் சிற்பி மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) எழில் காத்த நாயகி எங்கள் அம்மா என்று எதிர்க் கட்சியினராலும் பாராட்டுகின்ற நிலை உருவாகியிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12–00

கடந்த 11–11–2002 அன்று சென்னையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினைப் பார்வையிட்டு சீர்கெட்டிருந்த அனைத்துப்





பணிகளையும் செப்பனிட்டு, சீர் செய்து, பூத்துக்குலுங்கும் பூங்காவாக அந்தப் பகுதிகளை மாற்றி, கடந்த 16–9–2005 ஆம் தேதியன்று அனைத்துப் பணிகளையும் திறந்து வைத்து பார்வையிட்டார். சொல்வதைச் சொல்லியபடியே செய்து காட்டுகின்ற தன்னிகரில்லா தலைவி எங்கள் அம்மா என்பதை மீண்டும் நிரூபித்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்டபோது மாநில அரசால் மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்துப் பணிகளையும் இன்றையதினம் நிறைவேற்றிக் காட்டியிருக்கின்றார்கள். மத்திய அரசின் நிதிப் பங்கோடு செய்ய வேண்டிய சென்னை–கொல்கத்தா நெடுஞ்சாலையில் வியாசர்பாடி இரயில்வே பாலத்திற்கு மேல், மேம்பாலம் கட்டும் பணிக்கு மத்திய அரசு ஒதுக்க வேண்டிய நிதியினை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு கடந்த மூன்று ஆண்டுகள் நிறுத்தியிருந்ததால் இந்தப் பணி தடைபட்டிருப்பதை அறிந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கேட்காமல் கொடுக்கின்ற மனம், கேட்டதெல்லாம் தருகின்ற குணம் படைத்த மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அந்தப் பாலம் கட்டுவதற்கு ஆகின்ற 50 கோடி ரூபாயையும் மாநில அரசே ஏற்க உள்ளதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அந்தப் பகுதிவாழ் மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் அந்தப் பணி விரைவில் முழுமை பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஆராதனைக்குரிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 117 மற்றும் 118–வது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

[2005 செப்டம்பர் 22

## (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 59–வது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

# 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

## (அ) மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2005 ஆம் ஆண்டு மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே நான் இதை எதிர்க்கிறேன் என்பதைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே நான் இந்தச் சட்டமுன்வடிவை எதிர்க்கிறேன்.



2005 செப்டம்பர் 22]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பல்கலைக்கழகம் குறித்த இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே பாட்டாளி மக்கள் கட்சி எதிர்க்கிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக மதராஸ் என்று அறிவித்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை எதிர்க்கிறோம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. சி.வி. சண்முகம்] [2005 செப்டம்பர் 22

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. அரசினர் தீர்மானம்

### பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2005 ஆம் ஆண்டு மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2005) மற்றும் தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2005) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்..



2005 செப்டம்பர் 22]

பிற்பகல் 12–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

**திரு. துரைமுருகன்:** ஒரு கருத்து. அதாவது, ஒரு சட்டமுன்வடிவு இப்போதுதான் அறிமுகம் ஆயிற்று. இதை உடனே இப்போதே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு அதி, அதி, அதி முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல இது. ஆகையால், இதற்காக விதியைத் தளர்த்தி இப்போது எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்வது நியாயமும் அல்ல. இதற்கு நீங்கள் அவகாசம் கொடுத்து இருக்கலாம். நாளைக்கு வேண்டுமானால் எடுத்துக்கொள்ளலாம். நாளை மறுநாள்கூட எடுத்துக்கொள்ளலாம். Bill-க்கு ஒரு நாள் இருக்கிறது. எப்படியும் கொண்டுவந்துவிட்டீர்கள். ஆகையால், பேசித்தான் ஆகவேண்டும். ஆகவேதான் பேசப் போகிறோம். இன்றைக்கு எடுத்துக்கொள்வது என்றால், இதிலே இன்னும் சரியாக விளக்கமாக இல்லை. என்ன கேட்டு இருக்கிறார்கள்? சிண்டிகேட் கேட்டுக்கொண்டது. ஆகையால்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நீங்கள் பேசும்போது பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** எப்போது கேட்டார்கள்? என்ன கேட்டார்கள்? எத்தகைய அடிப்படையிலே? (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், உங்களுடைய கருத்தைச் சொல்லும்போது நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** Statement of objects எல்லாம் ஒன்றுமே இல்லை. Statement of objects and reasons-ல் அதையெல்லாம் விளக்கி மறுபடியும் Bill -ஐ introduce பண்ணலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார்கள்.

**திரு. துரைமுருகன்:** அதனால் இன்றைக்கு எடுத்துக் கொள்ள வேண்டாம். மற்றொரு நாள் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறேன். இது முறையல்ல என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, தீர்மானம் நிறைவேறிவிட்டது.

**திரு. ஜி. பழனிசாமி:** நேற்று பேசும்போதுகூட, அலுவல் ஆய்வுக் குழுவில் இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவு எடுத்துக்கொள்வதாக நாம் பேசவில்லை. இதை கடைசி நாள் எடுத்துக்கொள்வதாகத்தான் பேசியிருக்கிறோம். அதனால் அவகாசம் கொடுத்துப் பேசலாம். இதற்கு பெரிய அவசியமே கிடையாது இப்போது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** அலுவல் ஆய்வுக் குழுவில் introduce பண்ணுவது என்று மட்டும்தான் பேசப்பட்டது. (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் :** ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவிற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாம் ஏற்கெனவே அரசினர் சட்டமுன்வடிவுகள் . . . (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. துரைமுருகன் கேட்டதற்குச் சொல்லிவிடுகிறேன். 22-9-2005 வியாழக்கிழமை அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும் என்பது நம்முடைய நிகழ்ச்சி நிரலிலே போடப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இருந்தாலும்கூட, நான் இவ்வளவு அவசரம் தேவையில்லை என்றுதான் கூறுகிறேன். நிகழ்ச்சி நிரலில் சட்டமுன்வடிவிற்கு எண்கூட கொடுக்கப்படவில்லை. அந்த இடத்தில் காலியாக விடப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் இனிமேல்தான் நீங்கள் எண் போடப்போகிறீர்கள். அவ்வளவு அவசரமாக இதை நிறைவேற்ற வேண்டிய அவசியம் என்ன? எப்படியும் நிறைவேற்றுவது என்று வந்துவிட்டால் எப்போது வேண்டுமானாலும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம், நிறைவேற்றலாம். இன்னும் 4, 5 நாட்கள்





சட்டமன்றம் நடைபெற இருக்கின்றது. பிறகு எடுத்துக்கொள்ளலாம். இப்போது எடுக்கவேண்டிய அவசியம் என்ன? இப்போது எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே, பிறிதொரு நாளில் இதை எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அமைச்சர் அவர்களுடைய விளக்கம் சொல்வார்கள். நீங்கள் பேசும்போது கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்து இன்றைக்கே எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கெனவே எதிர்க்கட்சி வரிசையில் சொன்னார்கள். அதையேதான் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் அவர்களும் அதையேதான் சொன்னார். அதையேதான் நீங்கள் உங்கள் தமிழிலே சொல்கிறீர்கள். சரி, சரி.

**திரு. ஜி.கே. மணி:** அதற்காக மட்டும் இல்லை. எங்கள் கருத்தை நாங்கள் சொல்லவேண்டும்தானே? பதிவு செய்யவேண்டும்தானே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி.

**திரு. ஜி.கே. மணி**: இன்றைக்கு அவசியம் தேவையில்லை. கட்டாயம் இதை ஒத்திவைத்து இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. நீங்கள் அப்போது எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானம் நிறைவேறிவிட்டது. இப்போது ஆய்வு செய்தல்.

## 9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள், ஆய்வு செய்தல். 2005 ஆம் ஆண்டு மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2005) மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2005)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே ordinance என்பது மிக அவசரமாக சட்டமன்றம் கூடாத காலத்தில் சட்டமன்றம் வருகிற வரையிலே பொறுத்திருந்தால் நாட்டு நிலைமை வேறாகப் போய்விடும் என்பதற்காக போடப்படுகிற ஒன்று. அவ்வளவு அவசரம். அதை delay பண்ண முடியாது. இல்லாவிட்டால் நாட்டிலே பெரிய பிரச்சினையாகிவிடும் என்பதற்காகத்தான் ordinance கொண்டுவருவார்கள். ஆனால், இது எப்படி என்று கேட்டீர்களானால், 1996-ல் Madras University என்று இருந்ததை சென்னைப் பல்கலைக்கழகம் என்று மாற்றியிருக்கிறார்கள். இதை மறுபடியும் Madras University என்று மாற்ற வேண்டும் என்ற ஒரு கோரிக்கை Syndicate-ல் இருந்து வந்திருக்கிறது. இதை இப்போதுகூட Bill கொண்டுவந்து introduce பண்ணி நிறைவேற்றியிருக்கலாம். இதற்கு ordinance போடவேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் time bar கிடையாது. Number one. இரண்டாவது, Syndicate-ல் resolution போட்டு இருப்பதாகச் சொல்கிறார்கள். அதை எந்த வருடம் போட்டார்கள்? யார், யார் எப்படி போட்டு இருக்கிறார்கள்? அந்த resolution copy என்ன என்ற விவரங்கள் எதுவுமே எங்களுக்குத் தெரியாது. என்ன காரணத்தைச் சொல்கிறார்கள் என்பதும் தெரியவில்லை. காரணமே இதில் இல்லை. Madras University Syndicate ஒரு தீர்மானம் போட்டார்கள். சென்னைப் பல்கலைக்கழகம் என்பதை Madras University என்று இருக்கலாம் என்று போட்டார்கள். அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் ...

**திரு. துரைமுருகன்** ஏன் போட்டார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், இது ordinance Bill இல்லை. சாதாரணமாக வந்த Bill.

---

@ 22-9-2005 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



**திரு. துரைமுருகன்:** சரிதான். நான் அதைத்தான் சொல்கிறேன். அது ஏன்? Ordinance-ல்தான் வந்திருக்கிறது. ஆனால், நான் கேட்கிறேன், resolution-னுடைய object-ல் என்ன சொல்கிறார்கள், என்ன reason சொல்கிறார்கள்? ஏன் மாற்றவேண்டும்? அதைப்பற்றி இதில் எதுவும் இல்லை. அவர்கள் கேட்டார்கள், நாங்கள் மாற்றுகிறோம் என்றால், அவர்கள் கேட்டதை நீங்கள் மாற்றுவதற்கு நாங்கள் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்? என்ன காரணம்? என்ன காரணம் சொல்லியிருக்கிறார்கள்? அந்தக் காரணத்தை எங்களுக்கு விவரித்து இருக்க வேண்டாமா? உலகம் பூராவும் இருப்பவர்களுக்கு Madras University என்றால் தெரியும், சென்னைப் பல்கலைக்கழகம் என்றால் தெரியாது என்று சொல்ல வரலாம். சொல்லி இருப்பார்களோ என்று நான் அனுமானிக்கிறேன். ஏனென்றால், இவர்கள் அதைச் சொல்லவில்லை. அதைச் சொல்லியிருந்தால் என்ன பண்ணுவது? இப்போது 9 வருடங்கள் ஆயிற்று; கிட்டத்தட்ட 10 வருடம் ஆகிவிட்டது என்று வைத்துக்கொள்வோம். இந்த பத்து வருடத்திலே சென்னைப் பல்கலைக்கழகம் Madras University என்று மாறி அதிலே படித்து degree வாங்கி F.L. வாங்கி, B.B.L. வாங்கி Doctorate வாங்கி போய்விட்டார்கள். 10 வருடங்கள் கழிந்ததற்குப் பிறகு திடீரென்று தூங்கி எழுந்து, சென்னைப் பல்கலைக்கழகம் வேண்டாம், Madras University-யே இருக்கட்டும் என்று சொல்லி யாரோ இரண்டு பேர் தீர்மானம் கொண்டுவந்து கொடுத்தால் அதை ஏற்றுக்கொள்வதா?

சரி, நான் கேட்கிறேன். 9 வருடம், 7 வருடம் நான் அந்த சிண்டிகேட்டில் இருந்தவன். சிண்டிகேட் போடுகின்ற தீர்மானங்கள் பூராவையும் அரசு ஏற்றுக்கொள்கிறதா? ஏற்றுக் கொண்டிருக்கிறதா இதுவரை போட்டதை எல்லாம்? இதிலே என்ன பெரிய பிரச்சினை இருக்கிறது? ஆகையினால், ஒரு பெயர் மாற்றம் வந்திருக்கிறது, தமிழிலே சென்னைப் பல்கலைக்கழகம் என்று இருக்கிறது. இப்போது எல்லா இடங்களிலும் தமிழ் இருக்க வேண்டும். பம்பாய் என்று இருந்தது. ஒரு காலத்தில் வெளி நாட்டிலே போய் கேட்டால் டெல்லி என்றால் தெரியாது அவர்களுக்கு. பம்பாய்தான் தெரியும், எந்தக் கார்னரில் போய்க் கேட்டாலும். எந்த ஊருக்குப் போனாலும் — நான் மியான்மர் போயிருந்தேன் — அங்கே ஒருவர் சொன்னார்; இந்தியாவில் எனக்கு ஒரு ஊரும் தெரியாது சார், பம்பாய்தான் எனக்குத் தெரியும் என்று சொன்னார். ஆக அப்படிப்பட்ட பம்பாய், மும்பையாக மாற்றப்பட்டது. ஏனென்றால் கல்கத்தா கொல்கத்தாவாக மாற்றப்பட்டது.

மாறிக்கொண்டு போகிறோம். ஆனால், அதையெல்லாம் விட்டுவிட்டு, 9 வருடத்திற்குப் பிறகு இன்றைக்கு வந்து அதை மாற்றுகிறோம் என்று சொன்னால் இது தேவையில்லாத ஒன்று. இதனாலே யாருக்கும் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஒரு காலத்திலே Guindy Engineering College என்பது ரொம்ப famous எங்கே போனாலும். இன்றைக்கு அது மாற்றப்பட்டு அண்ணா பல்கலைக்கழகம் என்று மாற்றப்படவில்லையா? Madras Medical College என்பது அப்போது இருந்தது. அது மாற்றப்படவில்லையா? ஒரு காலத்தில் சொன்னார்கள் — தமிழ்நாடு என்று பெயர் வைத்தால் உலகத்துக்குத் தெரியாது என்று இதே இடத்தில் வெங்கட்ராமன் சொன்னார். ஆனால், இன்றைக்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்த உடனே உலகத்துக்குத் தெரியாமலா போய்விட்டது? (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை, அந்தப் பிரச்சினை இல்லை.

**திரு. துரைமுருகன்:** பிரச்சினையே அதுதான். தமிழ்ப் பெயர் வைத்ததுதான், ஐயா சபாநாயகர் ஐயா அவர்களே, தமிழ்ப் பெயர் வைத்ததுதான் பிரச்சினை. Madras University என்ற ஆங்கிலப் பெயரை எடுத்துவிட்டு தமிழிலே Madras University என்று வைக்க வேண்டும். எனவே, சென்னை பல்கலைக்கழகம் என்ற தமிழ்ப் பெயரை எடுக்க வேண்டும் என்பதுதான் பிரச்சினை. இதிலே நான் கேட்பது, 10 ஆண்டுகாலம் வைக்கப்பட்ட ஒரு பெயரை எடுக்கப்போகிறோம் என்று சொல்கிறீர்களே நான் கேட்கிறேன், நூறு சங்கரலிங்க நாடார்கள் செத்தாலும்கூட இன்னும் தமிழ் உணர்வு நமக்கு வராதா? இதற்கு எத்தனை சங்கரலிங்க நாடார்கள் சாவது? அண்ணா சொன்னார், இந்த நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்தேன்; ஆனால், அதை மாற்றுவதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், சென்னை என்பதை ஒன்றும் மாற்றவில்லை. Madras High Court என்று இருக்கிறது அல்லவா, நீங்கள் சென்னை என்று மாற்றிய சமயத்தில்கூட Madras High Court என்பதை மாற்றவில்லை. (குறுக்கீடு)

**•மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் உணர்வைப் பற்றி பேசுபவர்களுக்கு 'சன் டி.வி.' என்ற பெயரை மாற்றும் தமிழ் உணர்வு வரவே வராதா? (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. துரைமுருகன்:** அது ஒரு பெயர். அது business-க்காக வைக்கிற பெயர். இல்லாவிட்டால் வைத்துக்கொள்ளலாம். அவர்கள் ஒரு business-க்காக பெயர் வைத்திருக்கிறார்கள். ஆகையினாலே, நீங்கள்கூட போயஸ் கார்டன் என்று வைத்திருக்கிறீர்கள். அதை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அவர்கள் வைக்கவில்லை. போயஸ் கார்டன் என்று அவர்கள் வைக்கவில்லை.

**திரு. துரைமுருகன்:** அவர்கள் பெயர் வைத்திருக்கிறார்கள். நான் கேட்பது, தனிப்பட்ட வகையிலே என்ன business-க்கு யார் என்ன பெயர் வைக்கலாம் என்பதல்ல. ஆனால், நீங்கள் ஒரு கேள்வி கேட்டீர்கள். (குறுக்கீடு) Madras High Court என்று இருக்கிறதே என்று கேட்டீர்கள். ஆனால், அன்றைக்கு அது இருக்க வேண்டும், தேவை என்று வைத்துக்கொண்டார்கள். ஆனால், இது அப்படியல்ல. காளிமுத்து நடைமுறைக்கு வந்து 10 ஆண்டு காலம் கழிந்ததற்குப் பிறகு, அவர்கள் தமிழ் அறிந்தவர்கள், சபாநாயகர் அவர்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்கிறாரா என்று தெரியவில்லை. இல்லை, தவறாகப் புரிந்துகொண்டு சொல்கிறாரா என்பது தெரியவில்லை. 10 ஆண்டுகாலமாக இருந்த சென்னைப் பல்கலைக்கழகம் என்ற பெயரை மாற்றுகிறோம் என்று சொல்கிறார். 1996-லே சென்னை என்று பெயர் மாற்றிய பிறகு Madras பல்கலைக்கழகம் இன்றுவரை University of Madras என்ற பெயரில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) சொல்வதை முழுமையாகக் கேட்டுக்கொள்ளுங்கள். இன்றுவரை University of Madras என்ற பெயரில்தான் இயங்கிக் கொண்டு வருகிறது. 2002-லே தினமலர் பத்திரிகையில் இது சென்னை பல்கலைக்கழகமா அல்லது Madras பல்கலைக்கழகமா என்று ஒரு செய்திக் குறிப்பு வந்த பிறகு அந்த Madras பல்கலைக்கழகத்திலே ஆட்சிமன்றக் குழு கூடி இதை Madras பல்கலைக்கழகம் என்றே நீங்கள் நீட்டித்துத் தரவேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை வைத்தார்களே தவிர, சென்னை பல்கலைக்கழகம் என்று இயங்கி வந்ததை நாங்கள் ஏதோ இன்றைக்கு Madras பல்கலைக்கழகம் என்று மாற்றுகிறோம் என்று தவறான தகவலைச் சொல்ல வேண்டாம். சென்னை என்று தமிழின்பேரில் அக்கறை கொண்டுள்ள இவர்கள் ஒரு பொது நோக்கிலே உலகத்திலேயே அந்தப் பெருமை வாய்ந்த, பழமை வாய்ந்த பல்கலைக்கழகம்

பெயரிலேயே இயங்க வேண்டும் என்ற கோரிக்கை, நியாயமான கோரிக்கை, கல்வி அறிவாளர்கள் எல்லாம் சேர்ந்து சொன்ன கோரிக்கையைத்தான் பரிசீலித்தோமே தவிர, ஒரு வியாபார நோக்கத்திற்காக, பணம் சம்பாதிப்பதற்காக நாங்கள் ஆங்கிலப் பெயரை வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிற நீங்கள், ஆனால் ஒரு பல்கலைக்கழகத்திற்கு ஒரு பாரம்பரியமான அந்தப் பெயரை வைத்துக்கொள்கிறோம் என்று சொல்கிற நீங்கள் அன்றைக்கு சட்டத்தை அமைத்திருக்கிற நீங்கள், அன்றைக்கு Madras உயர் நீதிமன்றத்தை சென்னை் உயர்நீதி மன்றமாக மாற்றுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சென்னைப் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கும் எந்த நடவடிக்கையும் இதுவரைக்கும் எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆக மாண்புமிகு அமைச்சருடைய கருத்திலிருந்து என்ன தெரிகிறது என்றால், இது Madras University என்றுதான் இருந்தது. தினமலர் பத்திரிகை எழுதியதற்காகத்தான் அதை மாற்றினார்கள் என்று சொன்னார். இதிலே என்ன போட்டிருக்கிறார்கள் என்று பாருங்கள்? மதராஸ் பல்கலைக்கழகம் என்று...

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** தவறு. தவறான கருத்து. தின மலர் நாளிதழ் செய்தியிலே ஒரு குறிப்பைப் போட்டார்கள், சென்னைப் பல்கலைக்கழகமா அல்லது Madras பல்கலைக்கழகமா என்று கேள்விக்குரிய ஒரு வினாவை எழுப்பிய பிறகு ஆட்சிமன்றக் குழு கூடி இதை நாங்கள் மதராஸ் பல்கலைக்கழகம் என்ற பெயரிலேயே நீட்டித்துத் தர வேண்டுமென்று ஒரு Resolution–ஐ pass செய்து அரசுக்கு அறிவித்திருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாகத்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** சார், இல்லை, இல்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே என்ன போட்டிருக்கிறார்கள் என்று கேட்டால், The University of Madras was established in the year 1923. Consequent on the coming into force of the City of Madras (Alteration of Name) Act, 1996 (Tamil Nadu Act 28 of 1996), the name of the University of Madras has also been changed as "University of Chennai".



ஆக, இதற்கு என்ன அர்த்தம்? அவர் என்ன சொல்கிறார் என்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) அது, சென்னைப் பல்கலைக்கழகம் Madras University என்றுதான் இருந்தது. தின மலர் பத்திரிகைக்காரர்கள் கேட்டதற்காக சென்னைப் பல்கலைக்கழகத்தை மறுபடியும் மாற்றுகிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. துரைமுருகன்:** நீங்களே பேசியிருக்கிறீர்கள் . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) துரைமுருகன், one minute, one minute. 1996 ஆம் ஆண்டைய சட்டம், எங்கெங்கு Madras என்ற சொல் வழக்கில் இருக்கிறதோ அவையெல்லாம் சென்னை என்று மாற்றப்பட வேண்டுமென்பது சட்டம். That should be notified. ஆனால், Madras University என்பதை சென்னைப் பல்கலைக்கழகம் என்று 1996–க்குப் பிறகு வந்த நீங்கள் மாற்றாமல் தொடர்ந்து Madras University என்றே நீங்கள் வைத்திருந்தீர்கள். அந்த நிலை இன்னும் தொடர்ந்து வருகிறது.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பிரச்சினையே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் ஒரேயொரு கேள்விதான் அமைச்சரிடம் கேட்கிறேன், இதற்கு என்ன என்று அவர்கள் சொல்லட்டும். முதலமைச்சர் அவர்கள்கூட சொல்லட்டும் இதற்கு என்ன அர்த்தம் என்று. The name of the University of Madras has also been changed as the University of Chennai என்று மாற்றப்பட்டது என்று இருக்கிறது. நீங்கள், மாற்றவில்லை, விட்டுவிட்டீர்கள், அப்படியே வைத்திருந்தீர்கள் என்றால், மாறிவிட்டது, அதை மாற்றிவிட்டோம் என்று எழுதியிருக்கிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) இது நீங்கள் கொடுத்த Statement of Objects and Reasons தானே?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபோது, சென்னை என்று பெயர் மாற்றிய சட்டம் கொண்டு வந்ததற்குப் பிறகு

[திரு. சி.வி. சண்முகம்] [2005 செப்டம்பர் 22

அதன் தொடர்ச்சியாக அனைத்துப் பெயர்களும் சென்னை என்றுதான் இருக்க வேண்டுமென்று சட்டத் துறை தன்னுடைய கருத்தைக் கூறியிருக்கின்றது. அப்போது சென்னைப் பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழுவிலே ஒரு Resolution போட்டதற்குப் பிறகு அதை மதராஸ் பல்கலைக்கழகம் என்றே தொடர வேண்டுமென்று சொன்ன பிறகு, அதை சட்டத் துறைக்கு அனுப்பி சட்டத் துறையின் கருத்து கேட்கப்பட்டபோது, என்றைக்கு சென்னை என்று பெயர் மாற்றப்பட்டதோ அப்போதே இதையும் சென்னை யூனிவர்சிட்டி என்றுதான் அழைக்கப்பட வேண்டுமென்று கூறினார்கள். அதற்காகத்தான், அந்த Resolution-க்கு இசைவு தரும் முகமாகத்தான் இந்த Bill-லே இன்று கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் உங்கள் கருத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையே இதுதான். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள். இதை சென்னைப் பல்கலைக்கழகம் என்று மாற்றவே இல்லை என்று சொல்கிறாரா? என்றைக்குமே மதராஸ் பல்கலைக்கழகம் என்றுதான் இருந்தது என்று சொல்கிறாரா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** ஆமாம்.

**திரு. துரைமுருகன்:** என்றைக்குமே Madras University என்ற சொல்தான் இருந்தது என்று சொல்கிறாரா? என்ன சொல்கிறார்?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** ஆமாம்.

**திரு. துரைமுருகன்:** என்ன சொல்கிறார்? இருங்கள் ஐயா, தமிழிலேயே படித்து விடுகிறேன் ஐயா. "இந்தப் பல்கலைக்கழகம் மதராஸ் நகர பெயர் மாற்றச் சட்டத்தின் மூலம் நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து மதராஸ் பல்கலைக்கழகத்தின் பெயரானது சென்னைப் பல்கலைக்கழகம் என மாற்றப்பட்டுள்ளது." மாற்றப்பட்டுள்ளது. முடிந்துபோய்விட்டதே சார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** நான் ஒன்றும் ஆப்பிரிக்காவில் போய் படித்துவிட்டு வரவில்லை. (குறுக்கீடுகள்)



2005 செப்டம்பர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்குச் சால் ஓட்டக் கூடாது. நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** ரொம்பப் படித்தது மாதிரி பேசாதீர்கள். நீங்கள் போய் படியுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Madras University என்பதில் Madras என்ற வார்த்தை சென்னை என்று மாற்றப்பட வேண்டும் என்பது சட்டம். சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது. ஆனால், சென்னைப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரைக்கும் அதை நடைமுறைப்படுத்தவில்லை. Madras University என்றே தொடருகிறது. The Act has come into force. But it has not been given effect to by the Madras University. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து (குறுக்கீடுகள்) நான் வேண்டுமென்றால் புரியாமல் பேசுவதாகவே ஒத்துக்கொள்கிறேன். நான் அப்படி ஒத்துக்கொள்கிறேன். எனக்கு விளக்கட்டும். Correct me, if I am erroneous. I am not convinced. நான் என்ன சொல்கிறேன் என்றால் திருப்பித் திருப்பி அதையே சொல்கிறார்கள். இதிலே என்ன சொல்கிறார்கள் என்றால் University of Madras என்பது சென்னைப் பல்கலைக்கழகம் என்று மாற்றப்பட்டது. மறுபடியும் நாங்கள் University of Madras என்று மாற்றுகிறோம் என்பதுதான் இதனுடைய theme. ஆனால், நம்முடைய அமைச்சர் அவர்கள் என்ன பண்ணுகிறார்கள் என்றால் மறுபடியும் அதையே திருப்பிவிட்டு, இரண்டு வாழைப் பழம், அதிலே இது ஒன்று, அது ஏது பழம், அதுதான் இது என்பது மாதிரி திருப்பித் திருப்பி அதையே சொல்கிறார்கள் என்றால், என்ன சார் அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்...

**திரு. துரைமுருகன்:** நீங்கள் சொல்லுங்கள் சார். தயவுசெய்து சபாநாயகர் படியுங்கள். அதிலே தவறு இருந்தால் சொல்லுங்கள், நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் சார். (குறுக்கீடு) நான் ஒன்றும் அவர்கள் பெரிய தவறு பண்ணிவிட்டார்கள் என்று சொல்லவில்லை.

[2005 செப்டம்பர் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** ஐயோ, இருப்பதைத் தவறாகப் போட்டிருக்கிறார்கள், மாற்றச் சொல்லுங்கள் என்று சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. (குறுக்கீடு) சரி. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–20

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாதத் திறமையால், திரும்பத் திரும்பச் சொன்னதையே சொல்லி குழப்பிக் கொண்டிருக்கிறார். நான் சொல்ல வந்தது, 1996–லே சென்னை என்று பெயர் மாற்றப்பட்ட பிறகு சட்டத் துறையிலே சொல்லப்பட்ட கருத்து என்னவென்றால், சென்னை என்ற பெயர் மாற்றப்பட்ட பிறகு, அனைத்துப் பெயர்களும், மதராஸ் என்று இருக்கின்ற பெயர்களெல்லாம் சென்னை என்று மாற்றப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்துரை கூறப்பட்டது. (குறுக்கீடு) அவசரம் என்ன? (குறுக்கீடு) அவசரம் என்ன? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள், கருத்தைச் சொல்லி முடியுங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) கல்வி அமைச்சர் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவர் சொல்வது என்னவென்று கேளுங்கள்?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** ஆனால், என்றைக்கு இந்தக் கருத்துரை சட்டத் துறையிலிருந்து வந்தது என்றால் 2002–லே, நாளிதழிலே வந்த பிறகு, மதராஸ் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றக் குழுக் கூட்டத்தைக் கூட்டி, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுகின்றார்கள். சென்னை என்று மாற்றாமல் மதராஸ் பல்கலைக்கழகம் என்று இருக்கின்ற பெயரையே எங்களுக்கு நீட்டித்துத் தர வேண்டும், retain பண்ண வேண்டும் என்றுதான் அந்த resolution-ல் இருக்கின்றது. மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று இல்லை. Retain as Madras University என்று தான் இருக்கிறதே தவிர, அதில் சென்னை என்பதை மதராஸ் என்று மாற்ற வேண்டும் என்று இல்லை. அதுமட்டுமல்ல, இன்று வரை உங்களுக்கு ஆவணம் காட்ட வேண்டும் என்றால் இதோ பாருங்கள்



2005 செப்டம்பர் 22] [திரு. சி.வி. சண்முகம்]

Registrar, University of Madras என்றுதான் இன்றைக்குக் கடிதப் போக்குவரத்து இருக்கிறதே தவிர...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996–ல் சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத்தின்படி எங்கெல்லாம் Madras என்ற பெயர் இருந்ததோ, அங்கெல்லாம் சென்னை என்று மாற்றப்பட வேண்டும் என்பது சட்டம். 1996–ல் அந்தச் சட்டம் வந்து விட்டது. அதைத்தான் இதில் the name of the University of Madras has also been changed as University of Chennai என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், University-ல் ஒரு resolution போட்டு அவர்கள் பெயரை மாற்றியிருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை. University of Madras என்றுதான் இருந்தது. இன்றைக்கும் அப்படித்தான் இருக்கிறது. ஆகவே, அந்தச் சட்டம் வந்து விட்டதால் நீங்கள் சட்டப்படியே University of Madras என்று retain செய்வதற்கு அனுமதி தாருங்கள் என்று கேட்கிறார்கள்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. அப்போது, அந்த இரண்டு ஆண்டு காலம் எப்படி இயங்கிக் கொண்டிருந்தது? சட்டம் 1996–ல் வந்தது. 2002–ல்தான் சட்டத் துறை கருத்துரை வந்தது. இதுவரைக்கும் என்ன பண்ணிக் கொண்டிருந்தீர்கள்?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறாகச் சொல்கிறார். 2 ஆண்டுகாலமாக இல்லை. 1996–லிருந்தே அப்படித்தான் இயங்கிக் கொண்டு வருகிறது.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது University–ல் நிறைவேற்றப்பட்ட Resolution–ல் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் "Resolved that the name 'University of Madras' be retained as the 'University of Madras' instead of renaming as 'University of Chennai' என்று கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, University of Madras என்ற பெயர் மாற்றப்படவேயில்லை. அவர்கள் rename செய்ய வேண்டும் என்று கூறவில்லை. அவர்கள் அந்த resolution-ல் கூறியிருப்பதே resolved that the name 'University of Madras' be retained. அந்தப் பெயர் அப்படியே இருக்க வேண்டும் என்று கேட்கிறார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) instead of renaming as the University of Chennai. University of Chennai என்ற பெயர் வைக்க வேண்டாம் என்றுதான் இந்தத் தீர்மானத்தில் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நீங்கள் உட்காருங்கள். இல்லை, துரைமுருகன். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** நீங்கள் கொடுத்த தீர்மானத்தில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெரிந்துகொள்ள விரும்புவது அந்த சிண்டிகேட் தீர்மானம் எந்தத் தேதியில் போடப்பட்டது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிண்டிகேட் கூட்டம் 6-9-2002 அன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்தான் இது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராவது ஒருவர் பேசுங்கள். அவர் பேசிக்கொண்டிருக்கிறார்.

**திரு. துரைமுருகன்:** அப்படியானால், 1996 ஆம் ஆண்டு சட்டம் வந்ததற்குப் பிறகும் அதிலிருந்து 2002-ல்தான் இதை retain பண்ண வேண்டும் என்று கேட்கிறார்கள். In between, இந்த இடைக்காலத்தில் அது சென்னைப் பல்கலைக்கழகம் என்று அழைக்கப்பட்டதா? University of Madras என்று அழைக்கப்பட்டதா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தைக் கொண்டு வந்து விட்டு, அதன் பிறகு 1996 முதல் 2001 வரை தி.மு.க. ஆட்சிக் காலம் முழுவதும் அது University of Madras என்ற பெயரில்தான் இயங்கியது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** அப்படியானால், முதலமைச்சர், இவ்வளவு விளக்கம் சொல்கிற முதலமைச்சர் அவர்கள், இந்த Statement of Objects-லே இவ்வளவு விவரம் போடாமல், 'மொட்டை தாத்தா குட்டையில் விழுந்தார்' என்று சொல்வார்களே, அது மாதிரி போட்டுவைத்திருக்கிறீர்களே, அது ஏன்? அதைத்தான் நாங்கள் கேட்கிறோம். இவ்வளவு விளக்கங்களை உங்களிடமிருந்து நாங்கள் வாங்கியிருக்கிறோம். இதற்குத்தான் சொன்னோம், கொஞ்சம் time கொடுங்கள், எடுத்து வைத்து விடுங்கள் என்று சொன்னோம். அதனால், எது எப்படியிருந்தாலும் இந்தத் தமிழ்ப் பெயர் சென்னைப் பல்கலைக்கழகம் இருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கருத்து. மாற்றக் கூடாது என்பது எங்களுடைய ஆணித்தரமான கருத்து.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றக்கூடிய பதவியில் அவர்கள் இருந்தபோது, அவர்களுடைய ஆட்சியே இங்கு தமிழ்நாட்டில் நடைபெற்றபோது அவர்கள் மாற்றத் தவறிவிட்டார்கள். அப்போதும் 5 ஆண்டு காலம் அவர்கள்தான் கோட்டை விட்டுவிட்டார்கள். University of Madras என்ற பெயரில்தான் இயங்கியது.

**திரு. துரைமுருகன்:** அப்போது சென்னைப் பல்கலைக்கழகம் என்றுதான் இயங்கியது. 2002-ல்தான் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ஆகையினால்...

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொடர்ந்து University of Madras என்றுதான் இயங்கியது. அடுத்தது யார்? திரு. லட்சுமணன் (குறுக்கீடு) உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள் ஒவ்வொருவராகப் பேசுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு விவாதம் செய்தாலும், எவ்வளவு சீக்கிரமாக இந்தச் சட்டமுன்வடிவை வாபஸ் பெறுகிறோமோ அதுதான் தமிழுக்கும், தமிழர்களுக்கும், தமிழ் நாட்டிற்கும் நல்லது. இந்தப் பல்கலைக்கழகத்தை என்ன பெயர் சொல்லி அழைக்கிறோம் என்பதல்ல முக்கியம். இந்தப் பல்கலைக்கழகத்தைத் தமிழிலே எப்படிச் சொல்லுகிறீர்கள்? இந்தப் பல்கலைக்கழகம் சொல்லுகிறது தமிழிலே சென்னைப் பல்கலைக்கழகம் அல்ல மதராஸ் பல்கலைக்கழகம் என்று அழைக்கவேண்டும் என்று சொல்லுகிறது. நான் அதற்குத் தயாராக இல்லை. இந்தப் பல்கலைக்கழகத்தை ஆங்கிலத்தில் எப்படியாவது சொல்லுங்கள். ஆனால், தமிழிலேயே மதராஸ் அல்ல, அது சென்னை என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ் நாட்டுக்கு வெளியிலே நமது மதராஸ்காரர்கள் சில மாநிலங்களில் இருக்கிறார்கள். இந்த நிலையில் நீங்கள் தயவுசெய்து இந்தப் பல்கலைக்கழகத்தை தமிழிலே சென்னை என்றுதான் சொல்ல வேண்டுமேயொழிய மதராஸ் என்று சொல்லக் கூடாது. அதுமட்டுமல்ல, இந்த நோக்கத்திலே நிறைய தவறுகள் மலிந்திருக்கின்றன. நான் ஒன்றைப் படிக்கிறேன். மதராஸ் பல்கலைக்கழகமானது 1923 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இந்தப் பல்கலைக்கழகம் வந்து

148 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆக, இந்த வயதைக் குறைத்து இதை 82 ஆண்டாக மாற்றியிருக்கிறீர்கள். இதை நாம் திருத்திக்கொள்ள வேண்டும். இரண்டாவது, 1923 ஆம் ஆண்டு இந்தப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டபொழுது இதற்கு மதராஸ் பல்கலைக்கழகம் என்று யாரும் பெயர் வைக்கவில்லை. ஆகையினால், இது ஆங்கிலத்தில் எப்படியிருந்தாலும் தமிழிலே சென்னை என்றுதான் சொல்ல வேண்டுமேயொழிய மதராஸ் என்று சொல்லக் கூடாது என்பதுதான் எங்களுடைய வாதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சி, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்த சென்னைப் பல்கலைக்கழகம் குறித்த சட்டமுன்வடிவிலே நீண்ட விவாதம் செய்யப்பட்டது. இதிலே கொடுத்திருப்பது, நோக்க காரண விளக்கவுரை என்பதிலே மதராஸ் பல்கலைக்கழகமானது 1923 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1996 ஆம் ஆண்டு மதராஸ் மாநகரப் பெயர்மாற்றுச் சட்டம் நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து, மதராஸ் பல்கலைக்கழகத்தின் பெயரானது சென்னைப் பல்கலைக்கழகம் என மாற்றப்பட்டுள்ளது. மேற்சொன்ன பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவானது மதராஸ் பல்கலைக்கழகத்தின் பெயரை எவ்வித மாற்றமும் இன்றி வைத்துக்கொள்வதற்கு அரசிடம் கோருகிற தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. ஆக இதில் தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பது ஏற்கெனவே சென்னைப் பல்கலைக்கழகம் என மாற்றப்பட்டுள்ளது என்று நீங்களே சொல்லிவிட்டு, முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது மாற்றவில்லை, தொடர்ந்து 1996–லே சட்டம் கொண்டு வரப்பட்டது. இதுவரையிலும் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை. மதராஸ் யூனிவர்சிட்டி என்று இருப்பதாகச் சொல்லுகிறீர்களே இது உண்மையா என்பதைத் தெரியப்படுத்த வேண்டும்.

அதுமட்டுமல்ல, தமிழ்நாடு சட்டமன்றத்திலே 1996–லே ஒரு சட்டம் கொண்டு வருகிறோம். அந்தச் சட்டத்தைப் பல்கலைக்கழகம் ஏன் நிறைவேற்றவில்லை? அப்படி 1996–லேயிருந்து நிறைவேற்றவில்லை என்று சொன்னால் இதுவரையிலும் பல்கலைக்கழகம் தூங்கிக் கொண்டிருந்ததா அல்லது சிண்டிகேட் என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதற்கும் அரசு விளக்கம் சொல்ல வேண்டும். அதுமட்டுமல்ல, இப்பொழுது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், கல்வி அமைச்சர் சொல்லுகிற நேரத்திலே மதராஸ் என்பது சென்னையாக மாற்றப்பட்டது. அதனால் எல்லாமே மாறிவிட்டது



என்று சொன்னார்கள். சரி, அப்படி நிதி அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். அப்படி ஒப்புக்கொண்டால் Madras High Court என்பது சென்னை உயர் நீதிமன்றம் என்று மாற்றப்பட்டிருக்க வேண்டுமா, வேண்டாமா? இது உங்களுடைய வாதத்தின் அடிப்படையில் – இல்லை, இல்லை, நீங்கள் சொல்வதைச் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** திரு. மணி, வேண்டாம், that comes under the Central Act.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்குள் போகவில்லை நீங்கள் சொன்னதனால். மதராஸ் என்பது சென்னை என்று மாறிவிட்டது என்று ஒரு சட்டத்திலே என்று சொன்னால் அப்போது எல்லா இடத்திலேயும் சென்னை என்று வரவேண்டுமா வேண்டாமா? ஏன் வரவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆக, இதுவரையிலே கொண்டு வந்த சட்டத்தை அமல்படுத்தாதது பல்கலைக்கழகத்தினுடைய குற்றம்.

அதுமட்டுமல்லாமல் இப்போது ஒரு பத்திரிகையில் செய்தி வந்தது. சிண்டிகேட் தீர்மானம் நிறைவேற்றியது. அரசு ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவரப் போகிறது, இது தேவையா? அதுமட்டுமல்ல 1956–லே பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் ஆட்சிமொழி சட்டம் கொண்டு வந்தார்கள், தமிழ்நாட்டிலே. 1956–லிருந்து இதுவரையிலும் நாம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட 2001–லே ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இன்றையவரையிலும் ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலேயும் ஆளுநர் உரையிலும் தொடர்ந்து சொல்லி வருவது, அன்றாட நிர்வாகத்தில் தமிழ்மொழியின் பயன்பாட்டை அதிகரிக்கவும், தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சிமொழி என்பதை அமல்படுத்தவும் நடவடிக்கை எடுப்போம் என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். நான் வரவேற்கிறேன். தமிழுக்கு முக்கியத்துவம், முன்னுரிமை என்று சொல்லிவிட்டு இப்பொழுது மதராஸ் என்று மீண்டும் இருக்கவேண்டும் என்று சொல்லுவது பொருத்தமாக இருக்குமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டிலே ஆங்கிலப் பெயர், இப்போது சேலம் மாவட்டத்தில் மெக்டுனால்டு சௌல்ட்ரி என்று ஓர் ஊர் இருக்கிறது. அது மகுடஞ்சாவடி. நம்முடைய மரியாதைக்குரிய திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னதுமாதிரி இந்தியாவில் ஆங்கிலப் பெயர் எங்கெல்லாம் இருந்ததோ அந்தப் பெயர்கள் எல்லாம் அந்த மாநிலத்தினுடைய மொழிக்கு ஏற்ப மாறிக் கொண்டிருக்கிற காலம்.

[2005 செப்டம்பர் 22

பிற்பகல் 12–30

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, —Madras University —இப்போது மாண்புமிகு உறுப்பினர் தமிழ் உணர்வு பற்றிப் பேசுகிறார். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள்கூட தமிழ் உணர்வு பற்றிப் பேசினார்கள். இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதே Syndicate. Syndicate ஆசிரியர்களுடைய பிரதிநிதித்துவம் உள்ள அமைப்பு. சென்னைப் பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற அமைப்பு அந்த Syndicate. அப்போது தமிழ் உணர்வு இல்லை என்று நீங்கள் யாரைச் சாடுகிறீர்கள்? சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தமிழ் உணர்வு இல்லை என்று நீங்கள் சாடுகிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு கோடி மக்களுடைய பிரதிநிதிகள்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலத்தில் . . .

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சிண்டிகேட் இல்லையென்றால் நம்முடைய சட்டமன்றம் எது supreme என்று தயவுசெய்து ஒரு தீர்ப்பு சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி, பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லிவிடட்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...



2005 செப்டம்பர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அமைச்சர் ஒரு விளக்கம் சொல்லிவிடட்டும்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வரலாற்று உண்மையை நான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். மதராஸ் என்பது ஆங்கிலச் சொல் அல்ல. சென்னையிலே வாழ்ந்த ஒரு மீனவக் குப்பத் தலைவன் மதரேசன். அவன் பெயராலே திரிந்த ஒன்றுதான் மதராஸ். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி. (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** உருதுவில் மதராஸா என்றால் பாடசாலை என்று பொருள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திற்குள்ளே....

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேண்டும் என்றால் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். வரலாற்று உண்மை இது.

***திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நடைபெறுகின்ற விவாதங்களுக்கு உள்ளேகூட நான் செல்ல விரும்பவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கல்வி அமைச்சர் அவர்களும் சென்னைப் பல்கலைக்கழகம் என்றே பெயர் சூட்டப்படவில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இது, என் கையிலே இருப்பது சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகம். நாள் 4–4–2003. அதிலே 535–வது பக்கத்தில் தலைப்பே, 'சென்னைப் பல்கலைக்கழகம்' என்று அச்சிடப்பட்டு — உங்கள் கையில் கொடுக்கிறேன் — அதாவது 3.2 — '1857 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம் உயர் கல்வித் துறையில் மிகப் பெரிய பணியை ஆற்றியுள்ளது. சமுதாயத் தேவைகளுக்கேற்றபடி புதிய பாடப் பிரிவுகளைப் புகுத்துவதில் அது ஒரு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் இருந்து வந்துள்ளது.' (மணியடிக்கப்பெற்றது)

[2005 செப்டம்பர் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர்கள் சொன்னது, அந்தப் பல்கலைக்கழகம் University of Madras என்றுதான் அழைத்துக்கொண்டது. நாம் சட்டமன்றத்திலே சொல்வது என்பது வேறு. சட்டமன்றக் குறிப்பேடுகளிலே குறிப்பிடுவது என்பது வேறு. (குறுக்கீடுகள்)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, இல்லை. அதைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். என்ன இங்கு வாதம் செய்யப்பட்டது என்றால், சென்னைப் பல்கலைக்கழகம் என்று பெயர் மாற்றம் செய்யவே இல்லை என்று சொல்லப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகம் என்று பெயர் மாற்றப்பட்டிருப்பதற்கென்ற ஆதாரத்தைத்தான் நான் உங்களிடத்திலே சொல்கிறேன். எனக்கு...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற நடவடிக்கைகளைக்காட்டி அதை ஆதாரம் என்று சொல்ல முடியாது. 1996–இல் இந்தச் சட்டம் கொண்டு வந்த பிறகு, University of Madras தன்னுடைய பெயரை ஒரு தீர்மானம்மூலம் மாற்றவில்லை. அதன் பிறகு இந்தச் சட்டம் வந்துவிட்டதால், சில பேர் சென்னைப் பல்கலைக்கழகம் என்று அழைத்தார்கள். இங்கே சட்டமன்றத்தில் பேசும்போதும் சிலர் சென்னைப் பல்கலைக்கழகம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், அந்தப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை, அவர்கள் University of Madras என்ற பெயரிலேயே இயங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில்கூட அவர்கள் முழுவதுமாக என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், "Resolved that the name 'University of Madras' be retained as the 'University of Madras' instead of renaming as 'University of Chennai' in view of the fact that the word Madras contained in the City of Madras (Alteration of Name) Act, 1996 (Tamil Nadu Act 28 of 1996), refers to the name of the City in particular and the expression 'University of Madras' did not refer to the name of the City. ஆகவே, என்ன காரணத்திற்காக அவர்கள் அந்தப் பெயர் மாற்றத்தை விரும்பவில்லை என்பதையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, University of Madras என்ற பெயரை அந்தப் பல்கலைக்கழகம் மாற்றிக்கொள்ளவே இல்லை என்பதுதான் உண்மை.



2005 செப்டம்பர் 22]

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பல்கலைக்கழகம் 'சென்னைப் பல்கலைக்கழகம்' என்று பெயர் மாற்றிக்கொள்ளவில்லை என்று சொல்கிறார்கள். நீங்கள் போய்ப் பாருங்கள் இப்போது. 'சென்னைப் பல்கலைக்கழகம்' என்றுதான் தமிழிலே போர்டு இருக்கிறது. போர்டு வைத்திருக்கிறார்கள். சென்னைப் பல்கலைக்கழகம் என்று போர்டு வைத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, சொல்லி முடியுங்கள். பேச்சை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, ஏதோ அங்கேயிருக்கின்ற மாணவர்களுக்கு எதிராக, தமிழ்த் துறைக்கு எதிராக இங்கே பேசுவதாகச் சொல்கிறார்கள். நாங்கள் அப்படிச் சொல்லவில்லை. ஒரு பொறுப்புள்ள அமைச்சர் திசை திருப்ப முயலக்கூடாது. ஒட்டுமொத்தமாக நீங்கள் அப்படி கருதுவீர்கள் என்று சொன்னால் இது தாய்த் தமிழ்நாட்டினுடைய சட்டமன்றம். தமிழ்நாடு மட்டுமல்ல, உலகமெங்கும் வாழக்கூடிய தமிழர்களெல்லாம் எதிர்பார்க்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் நாம் தமிழில் பெயர் வைக்க வேண்டுமே தவிர, மதராஸ் என்ற பெயர் எக்காரணத்தைக் கொண்டும் இடம்பெறக் கூடாது. (குறுக்கீடு) நான் சொல்லி முடித்து விடுகிறேன். ஆகவே, இன்னொன்றுகூட, நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே, ஏதோ இது பிற மொழி பெயர்ச்சொல் அல்ல என்று சொன்னார். இன்னொன்றையும் அவருக்கு விளக்கம் சொல்கிறேன். சென்னை மாநகர் என்பது மரியாதைக்குரிய புகழ்பெற்ற சென்னப்ப நாயக்கர் வாழ்ந்த மண் இது. சென்னப்ப நாயக்கர்பட்டினம், சென்னைப் பட்டினம் என்று இருந்தது. அப்புறம்தான் சென்னை என்று ஆகியது. ஆக, வரலாறு அதைத்தான் சொல்கிறது. சென்னப்ப நாயக்கர்பட்டினம் இது சென்னைப் பட்டினம் என்று ஆகி, பிறகு சென்னையாகியது. அதுதான் வரலாறு. அவர் சொல்வது மாதிரி அல்ல. ஆகவே...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் இங்கே பேசுகின்றபோது அந்தப் பல்கலைக்கழகத்திலேயே சென்னைப் பல்கலைக்கழகம் என்று

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 செப்டம்பர் 22

பெயர்ப் பலகை வைக்கப்பட்டிருக்கிறது என்கிறார். ஆனால், அந்தப் பல்கலைக்கழகம் கடிதப் போக்குவரத்துகளிலெல்லாம் University of Madras என்ற பெயரைத்தான் போடுகிறார்கள். யாருக்கு எந்தக் கடிதம் அனுப்பினாலும், அரசுக்குக் கடிதம் அனுப்பினாலும் University of Madras என்பதுதான் letter head-ல் உள்ளது. அதைத்தான் பயன்படுத்துகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Act pass பண்ணிவிட்டால் அதுதான் பெரியது. Act-தான் பெரியது. அதைத்தான் letter pad-ல் போட்டுக் கொள்கிறார்கள். அந்த Act pass பண்ணியதால்தான் நாமே இங்கே வந்து அண்ணா பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம் என்று பல்கலைக் கழகங்களின் பட்டியலைப் போடுகின்றபோது சென்னைப் பல்கலைக்கழகம் என்று Act போட்டதால்தான் நாம் ஒப்புக் கொண்டிருக்கிறோம். Act தான் பெரியது. அவர்கள் என்ன letter pad-ல் அடித்துக்கொள்கிறார்கள் என்பது பெரியது அல்ல. Act-தான் பெரியது.

*** மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கருத்தைச் சொன்னார்கள். அவர் சொல்லி விட்டுப் போகட்டும். ஆனால், வரலாற்று உண்மையைத்தான் நான் இங்கே சொன்னேன். 1640-ல் பிரிட்டிஷ்காரர்கள் சென்னைக்கு வருவதற்கு முன்பாக அதாவது Francis Day வந்து இந்த செக்ரடேரியட்டை கட்டுவதற்கு முன்பாக சென்னை ஒரு மீனவர் குப்பமாகத்தான் இருந்தது. இது ஒரு small fishing hamlet. அந்தக் குப்பத்தினுடைய தலைவன்தான் மதரேசன். எப்படி Hamilton Bridge என்பதை அம்பட்டன் வாராவதி என்று சொல்வார்களோ, அதேபோன்று காலப்போக்கிலே அந்தக் கருத்து திரிந்து மதரேசன் என்பது Madras என்று மாறியது. ஏனென்றால், Madras என்பது ஆங்கிலச் சொல் அல்ல. Madras University என்பதும் தவறு அல்ல.

**டாக்டர் க. பொன்முடி:** எனக்கும் கொஞ்சம் வாய்ப்பு கொடுங்கள். எனக்கும் history தெரியும். நானும் கொஞ்சம் சொல்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். எனக்கு அதெல்லாம் தெரியாது. நாங்கள் கேட்பது, அது உருதா? தமிழா? மதராஸ் என்பது, அது ஆள் பெயரா? ஊர்ப் பெயரா? இடத்தின் பெயரா? நாங்கள் அதற்குள் போகவில்லை. அதுவல்ல பிரச்சினை. இப்போது சென்னைப் பல்கலைக்கழகம் என்று இருப்பதை, அந்தத் தமிழ்ப் பெயரை எடுத்துவிட்டு, University of Madras என்று வைக்கிறீர்களே, ஏற்கெனவே இயங்கியதை ஏன் எடுக்க வேண்டும்? சட்டம் போட்டு இருக்கிறோமே நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். அதுதான் எங்கள் கேள்வியே தவிர, அது தமிழா, உருதா, அதுவா, இதுவா என்பதல்ல.



2005 செப்டம்பர் 22] [திரு. துரைமுருகன்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உங்கள் கருத்தைச் சொல்லி விட்டீர்கள். திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.. (குறுக்கீடு)

***திரு. எச்.எம். ராஜு:** Amendment of the Constitution of the University-ல் இதைக் கொண்டுவர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, 1996 ஆம் ஆண்டு சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, எங்கேயெல்லாம் மதராஸ் என்று இருக்கிறதோ அங்கேயெல்லாம் சென்னை என்று மாற்றப்பட வேண்டுமென்று சட்டம் தெளிவாக இருக்கிறது. எனவே, அவர்கள் தங்களை மதராஸ் பல்கலைக்கழகம் என்று அழைத்துக் கொண்டிருந்தாலும் சரி, அல்லது வேறு எப்படி அழைத்துக் கொண்டாலும் சரி, அது சென்னைப் பல்கலைக்கழகம் என்பது மட்டுமே சரியாக இருக்கும். மதராஸ் என்பது தமிழ் என்பதற்கு சர்ச்சை ஒன்று சொன்னார்கள். மதராஸ் என்பது தமிழ் பெயர் என்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இங்கே ஒரு மதராஸ் இருப்பதைப்போல பக்கத்திலே ஒரு சாட்ராஸ் இருக்கிறது. அதுவும் தமிழ் பெயரா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அது சதுரங்கப்பட்டினம் ஆகிவிட்டது. அதுபோல் இது மதராஸ், மதராஸ் என்றுதான் எல்லோரும் சொல்கிறார்கள். இது புதிய விளக்கமாக இருக்கிறது. எனவே, சென்னை என்பது தமிழ்ப் பெயர் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. எதுவாக இருந்தாலும் சென்னை என்று வைக்க வேண்டும் என்று சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நிறைவேற்றப்பட்ட பிறகு, அந்தப் பல்கலைக்கழகத்தின் பெயரும் அதுதான் என்று இறுதியாகிவிட்டது.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2005 செப்டம்பர் 22

இறுதியாகிவிட்ட பிறகு இன்று வேறு ஏதாவது ஒரு நல்ல காரணத்திற்காக மாற்ற வேண்டுமென்று சொன்னால், என்ன காரணம் என்று சொல்லலாமே தவிர, ஆனால் அதை மீண்டும் மதராஸ் என்று மாற்றுவது முறையாக இருக்காது. University of Madras என்பது தமிழில் மதராஸ் பல்கலைக்கழகம் என்று மாற்றுவது நிச்சயமாக முறையான ஒன்றாக இருக்க முடியாது. ஏற்கெனவே எங்கள் கட்சியின் சார்பில் சுட்டிக்காட்டியதுபோல, நோக்க-காரண விளக்க உரையிலே பல தவறுகள் இருக்கின்றன. 1957 ஆம் ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடிய பல்கலைக்கழகம் அது. டாக்டர் சர். வே. இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் துணைவேந்தராக இருந்த காலத்தில் நூற்றாண்டு விழா கொண்டாடியிருக்கிறோம். ஆனால், இதிலே என்ன சொல் வருகிறது? நிறுவப்பட்ட ஆண்டு 1923 ஆம் ஆண்டு. Established in the year of 1923 என்று இருக்கிறது. நிச்சயமாக, it was not established in 1923. It was established in 1857. இன்னும் சொல்லப்போனால், இன்று சென்னை நகரத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்ற பல கல்லூரிகள், பச்சையப்பன் கல்லூரி உட்பட 1842 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கல்லூரி, அதற்குப் பிறகு 15 ஆண்டுகள் கழித்து, இந்தப் பல்கலைக்கழகம் வந்தது. எனவே, அதுவும் ஒரு தவறான விளக்கம்; சரியான விளக்கம் ஆகாது. எனவே, ஒரு சட்டம் வந்த ஆண்டு 1923 ஆம் ஆண்டாக இருக்கலாம். அந்தச் சட்டம் போய், வேறு சட்டம் வந்திருக்கலாம். ஆனால், பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஆண்டு என்பது 1857 ஆம் ஆண்டு என்பதுதான் சரியே தவிர, நிச்சயமாக 1923 ஆம் ஆண்டு என்பது சரியல்ல.

*பிற்பகல் 12–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. எஸ்.ஆர்.பி., அந்தப் புள்ளிவிவரங்கள் எல்லாம் இப்போது முக்கியம் இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** புள்ளிவிவரங்கள்தான் முக்கியம். அதுதான் காரணம் என்று சொல்கிறார்கள். அது முக்கியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அவர் ஏற்கெனவே சொல்லிவிட்டார். பிறகு இதைப் பார்த்துக்கொள்ளலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தவறான தகவல்கள் தொடர்ந்து பதிவாகக் கூடாது. என்பதற்காகச் சொல்கிறேன். இது மிகவும் முக்கியம். அது அவ்வளவு முக்கியம் இல்லை என்று சொல்லாதீர்கள். ஏனென்றால், நூற்றாண்டு விழா கொண்டாடி, நூற்றாணடு விழா மண்டபம் ஒன்று அங்கே இருக்கிறது.



2005 செப்டம்பர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள் அல்லவா? பதிவு பண்ணிவிட்டீர்கள் அல்லவா?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்களே பல நிகழ்ச்சிகளிலே அங்கே கலந்துகொண்டிருக்கிறீர்கள். நூற்றாண்டு விழா மண்டபம் இருக்கிறது. நூற்றாண்டு விழா மண்டபம் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு 50 ஆண்டு, 60 ஆண்டு...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்றாண்டு விழா கண்ட பல்கலைக்கழகம்தான், அதை யாரும் மறுக்கவில்லை, ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், அந்தப் பல்கலைக்கழகத்திற்கு, இன்று அந்தப் பல்கலைக்கழகம் எந்தச் சட்டத்தின் அடிப்படையில் இயங்கிக்கொண்டிருக்கின்றதோ அந்தச் சட்டம் இயற்றப்பட்ட வருடம் 1923 ஆம் ஆண்டு. அதைத்தான் சொல்கின்றோமே தவிர, ஏதோ அந்தப் பல்கலைக்கழகம் 1923 ஆம் ஆண்டுதான் தொடங்கப்பட்டது என்று நாங்கள் சொல்லவில்லை என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மதராஸ் பல்கலைக்கழகமானது 1923 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது, இது தமிழில் உள்ள குறிப்பு. In English it is stated, 'The University of Madras established in the year' — it is not said 'by the Act', but University 'established in the year 1923'. தெளிவாகத் தமிழிலேயும் இருக்கிறது, ஆங்கிலத்திலேயும் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதற்குத்தான் அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 'நிறுவப்பட்ட ஆண்டு' என்றுதான் இருக்கிறதே தவிர — உண்மையும் அதுதான் — சட்டம் வந்த ஆண்டு 1923 ஆம் ஆண்டாக இருக்கும். சட்டம் 1923 ஆம் ஆண்டுதான் வந்தது. நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், பல்கலைக்கழகம் வந்தது 1857 ஆம் ஆண்டு என்பது மறுக்க முடியாத உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. திரு. மணி, பேச்சை முடித்துவிடுங்கள். உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அமைப்பு—establishing an organisation, it can be only by way of an Act. That is the intention of the legislation.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** There must have been a different Act earlier. இதற்கு முன்பு வேறு சட்டம் இருந்திருக்கலாம். அந்தச் சட்டத்தை மாற்றி 1923 ஆம் ஆண்டு புதிய சட்டம் வந்திருக்க வேண்டுமே தவிர, சட்டம் இல்லாமல் இருந்திருக்க முடியாது. கல்லூரிகளே இருந்தன. பல கல்லூரிகள் இருந்தன. அதிலே பச்சையப்பன் கல்லூரியும் ஒரு கல்லூரி என்று நான் சொன்னேன். அதேபோல மாநிலக் கல்லூரி அதற்கு முன்பே இருந்தது. வேறு கல்லூரிகளும் இருந்தன. ஆனால், அந்தக் கல்லூரிகளை எல்லாம் ஒன்றாக இணைத்து இந்தப் பல்கலைக்கழகம் வந்தது. இந்தப் பல்கலைக்கழகம் அந்தக் கல்லூரிகளை இணைத்துதான் வந்தது. எனவே, 1923 ஆம் ஆண்டுதான் இந்தப் பல்கலைக்கழகம் வந்தது என்று சொல்வது தவறான விளக்கம், சரியான விளக்கம் அல்ல. 1857 ஆம் ஆண்டே சென்னைப் பல்கலைக்கழகம் வந்துவிட்டது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, பேசி உரையை முடித்துவிடுங்கள். உங்களுடைய கருத்தைச் சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே அரசு கடிதப் போக்குவரத்தில் Madras University என இருக்கிறது என்றார்கள், ஆனால்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் இதையே ஒரு வாடிக்கையாக, வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.





நான் என்ன சொன்னாலும் அவர் அதைத் திரித்து தவறாகவே சொல்கிறார். அரசுக் கடிதப் போக்குவரத்து என்று நான் சொல்லவில்லை. பல்கலைக்கழகம் தனது கடிதப் போக்குவரத்தில் University of Madras என்ற பெயரைப் போட்டுக்கொள்கிறது என்றுதான் சொன்னேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் வாதப்படி பல்கலைக்கழகத்திலே கடிதப் போக்குவரத்து Madras University, அதாவது மதராஸ் பல்கலைக்கழகம் என இருக்கிறது, விளம்பரப் பலகையிலே சென்னைப் பல்கலைக்கழகம் என்று இருக்கிறது. இது என்ன கோளாறு? இந்தக் கோளாறுக்கு என்ன காரணம்? என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள்?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மேலும் தெளிவான ஒரு விளக்கத்தை நான் அளிக்க விரும்புகிறேன். 1996 முதல் இன்றுவரை இந்தப் பல்கலைக்கழகம் வழங்கியுள்ள பட்டங்களில் எல்லாம், அத்தனை degree–களிலும் University of Madras என்ற பெயரைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர, சென்னைப் பல்கலைக்கழகம் என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உங்கள் கருத்தைச் சொல்லி முடித்துவிட்டீர்கள், அல்லவா?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக இந்தப் பல்கலைக்கழகம் பெயர் மாற்றத்திலே நீண்ட நெடிய குழப்பம் இருக்கிறது என்பது தெளிவாகிவிட்டது. ஆகவே, இப்போது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்வது எல்லாம், தமிழ்நாடு என்பது, இந்தச் சட்டமன்றம் என்பது உலகெங்கும் வாழக்கூடிய தாய்த் தமிழகத்தினுடைய சட்டமன்றம், எல்லோரும் எதிர்பார்க்கிற சட்டமன்றம். இந்தப் பெயர் மாற்றம் என்பது மிக முக்கியமானது. ஆகவே, இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவது, தமிழாய்ந்த ஒருவர் சபாநாயகராக இருக்கிற இந்தக் காலத்தில் கேட்டுக்கொள்ள விரும்புவது, தொடர்ந்து சென்னைப் பல்கலைக்கழகம் என்ற பெயர் இருக்க வேண்டும். இந்தக் குழப்பத்திற்கு எல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தொடர்ந்து...

[2005 செப்டம்பர் 22

பிற்பகல் 12–45

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கோரிக்கையிலேயே ஒரு பிழை இருக்கிறது. தொடர்ந்து சென்னைப் பல்கலைக்கழகம் என்ற பெயர் இருக்க வேண்டும் என்கிறார். என்றைக்குமே சென்னைப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் அது இயங்கவில்லை. அது என்றைக்குமே University of Madras என்ற பெயரில்தான் இயங்கியுள்ளது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996–ல் சட்டம் வந்த பிறகு, அந்தப் பல்கலைக்கழகத்தில் எத்தனையோ பட்டமளிப்பு விழாக்கள் நடைபெற்றன. அப்போது தி.மு.க. ஆட்சிக் காலத்தின்போது அந்தப் பட்டமளிப்பு விழாக்களின்போது சென்னைப் பல்கலைக்கழகம் என்று போட்டிருக்கிறதா அல்லது மதராஸ் பல்கலைக்கழகம் என்று போட்டிருக்கிறதா என்று பார்க்கவேயில்லையா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, உங்களுடைய கருத்தைச் சொல்லி முடித்துவிடுங்கள். (குறுக்கீடுகள்) திரு. புகழேந்தி, உட்காருங்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, அமர்ந்து கொண்டே பேசக் கூடாது. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். 'மதராஸ்' என்பது ஆங்கிலச் சொல் அல்ல. 'மதரேசன்' என்ற நம்முடைய மீனவக் குப்பத் தலைவனுடைய பெயர். (குறுக்கீடுகள்) எனவே, நான் சொல்வது, மீனவக் குப்பத் தலைவனுடைய பெயர், (குறுக்கீடுகள்) மீனவக் குப்பத் தலைவனுடைய பெயர் 'மதரேசன்' என்று இருப்பதை நீங்கள் விரும்பவில்லையா? அதுதான் என்னுடைய கேள்வி. (குறுக்கீடுகள்)



2005 செப்டம்பர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி, பேசி முடித்துவிடுங்கள். உங்களுடைய கருத்தைச் சொல்லி முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி, பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1996–ல் தமிழ்நாடு சட்டமன்றத்தில்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இங்கே பல்கலைக்கழகம் நிறைவேற்றவில்லை என்று சொல்கிறீர்கள். ஆனால், அரசு ஒப்புக்கொண்டிருக்கிறதா, இல்லையா? எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. அரசு ஒப்புக்கொண்ட அச்சட்டத்தை, நிறைவேற்றிய சட்டத்தைப் பல்கலைக்கழகம் நிறைவேற்றவில்லை என்று நீங்களே சொல்கிறீர்கள். ஆகவே, ஏற்கெனவே இந்த அரசாங்கம் சென்னைப் பல்கலைக்கழகம் என்று சொல்லியிருக்கிறது. அதைத்தான் தொடர்ந்து சொல்கிறேன், நான் மாற்றிச் சொல்லவில்லை. ஆகவே, இது சென்னைப் பல்கலைக்கழகமாக இருக்கவேண்டும். இந்த அரசு அதை மாற்றக்கூடாது என்று நான் வேண்டுகோளாக வைக்கிறேன். அது தொடர்ந்து நீடிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, முடியுங்கள், முடியுங்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. என். நன்மாறன். (குறுக்கீடு) திரு. பொன்முடி, உட்காருங்கள், உட்காருங்கள். எல்லோரும் விளக்கம் சொல்லிவிட்டார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** நான் வரலாறு படித்திருக்கிறேன் சார். எனக்கும் வரலாறு தெரியும். என்னைக் கொஞ்சம் பேச விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன், பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் முடிக்கட்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** ஒரு நிமிடம் சார். வரலாற்றைத் திரும்பத் திரும்ப தப்பாகச் சொல்லக்கூடாது இல்லையா? ஒரு நிமிடம் கொடுங்களேன், ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1996 ஆம் ஆண்டு ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு, 'மதராஸ்' என்கிற சொல் 'சென்னை' என்றுதான் வழங்கப்பெற வேண்டுமென்று முடிவு செய்து அறிவிக்கப்பட்ட பிறகு, அதற்கு உட்படாத சென்னைப் பல்கலைக்கழகத்தை, Madras University என்பதை அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகம் என்று அப்போதே மாற்றியிருக்கவேண்டும். தமிழ்நாடு சட்டமன்றம் சொல்லியதை, சென்னைப் பல்கலைக் கழக ஆட்சி மன்றம் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றி இருக்கவேண்டும். அதை நிறைவேற்றாமல், அவர்களாக ஒரு certificate-ஐ அடித்து வைத்ததை அப்படியே கொடுத்து, யார் தவறு என்று நமக்குள்ளேயே பிரச்சினையை உண்டாக்குவதைப்போல செய்திருப்பது கல்வியாளர்களுக்கு அழகல்ல என்பதை நாம் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது அல்ல. இந்தச் சட்டமன்றம் தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்தச் சட்டமன்றத்தின் வழிகாட்டுதலை சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றம் ஏற்க வேண்டுமென்று தெரிவித்து, இனிமேல் அவர்கள் ஏற்கெனவே letter pad-ஐ 'மதராஸ்' என்று வைத்திருந்தாலும், தமிழ்நாடு அரசு நிறைவேற்றிய சட்டத்திற்குட்பட்டு, சென்னைப் பல்கலைக்கழகம் என்று அழைத்துக் கொள்ளவேண்டுமென்று தமிழ்நாடு சட்டமன்றம் ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இதனைத் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தைச் சொல்ல விழைகின்றேன். குறிப்பாக, சென்னைப் பல்கலைக்கழகமோ அல்லது இன்றைய அரசோ அல்லது இந்த சிண்டிகேட்டோ இதுவரையிலுமே ஆய்வு செய்யாமல் இருந்தது மிகப் பெரிய குற்றம். ஏதோ ஒரு பத்திரிகையிலே செய்தி வந்த பின்னால், அந்தப் பல்கலைக்கழகத்திற்கு ஒரு குழப்பம் வந்திருக்கிறது. அதற்குப் பிறகுதான் சிண்டிகேட் யோசித்திருக்கிறது, அதுவரையிலும் தூங்கிக் கொண்டுதான் இருந்திருக்கிறது. இது சென்னையா அல்லது மதராஸா என்பதே அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களே ஒரு குழப்பமான சூழ்நிலையில்தான், சரியாகத் தெரிந்து கொள்ளாததனுடைய



விளைவுதான் இந்தச் சட்டமுன்வடிவை அமைச்சரவையிலே இன்றையதினத்திலே கொண்டுவருவதற்கான ஒரு வாய்ப்பினை உருவாக்கியிருக்கிறது. ஆகையால், தமிழகத்தைப் பொறுத்தளவிலே, தமிழ்நாடு என்று பெயர் வைத்து, தமிழ்நாடு என்று ஒரு பெருமை வந்த பின்னாலும், இதைப்போய் இன்றையதினத்தில் 'மதராஸ்' என்று பெயர் மாற்றவேண்டிய அவசியமே இல்லை. இன்னும் அமைச்சர் அவர்கள் சில ** விஷயங்களைச் சொன்னார்கள். மீனவ மக்களுக்கு எதிர்ப்பாக இங்கேயிருக்கிற எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் இருப்பதாக ஒரு பிரச்சாரம் கிளப்புவதைப் போன்ற ஒரு போர்வையை... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அச்சமுதாயத்தை இழிவுபடுத்துகிற ஒரு செயலாக இருக்கிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, இல்லை. நீங்கள் சொன்னதால் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை, இல்லை. அதை எப்படி நீங்கள் ** விஷயம் என்று சொல்ல முடியும்.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, நீங்கள் சொன்னதால் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** நான் வரலாற்று உண்மையைச் சொல்கிறேன். நீங்கள் வரலாற்றை எடுத்துப் பார்த்துவிட்டு மறுக்க வேண்டும். அதை விட்டுவிட்டு ** விஷயம் என்று சொல்வதை அனுமதிக்க முடியாது.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, இல்லை. அமைச்சர் கூட்டத்தோடு கூட்டமாகப் பேசிவிட்டுப் போகிற விஷயத்தைப் பேசக்கூடாது.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** ** விஷயம் இல்லை அது.

*பிற்பகல் 12–50*

**திரு. ஜி. பழனிசாமி:** நான் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் ...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, நான் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை, இல்லை, நான் சொல்கிறேன், (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, உட்காருங்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுவது இம்மாமன்றத்தில், வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில். ஒரு தகவலைச் சொல்கிறேன் என்றால், தெரியாமல் சொல்லமாட்டேன். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன், நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். வரலாற்று உண்மையைத்தான் சொன்னேனேயொழிய வேறு எந்தத் தகவலையும் நான் சொல்லவில்லை. ஆனால், அதை விட்டுவிட்டு ஒரு ** சொல்வது என்பது (குறுக்கீடுகள்) மீனவ சமுதாயத்தை இழிவுபடுத்துகின்ற செயலாக அவர் சொன்னது கண்டிக்கத்தக்கது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி அவர்கள் சொன்ன ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று சொல்வதற்குப் பதிலாக – அநாகரிகமான வார்த்தை. இது அரசினுடைய மரபுக்கு மோசமான வார்த்தை. இது ஒரு அமைச்சர் வார்த்தையிலிருந்து வரக்கூடாது. நான் கேட்கின்றேன். அப்படிப்பட்ட ஒரு பொறுப்புள்ள அமைச்சர் ஒரு மீனவருடைய பெயரைக் கொண்டு வந்திருக்கலாம் அல்லவா Bill-லிலே. ஏன் கொண்டு வரத் தவறியிருக்கிறார் ?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்கின்றேன். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்ட அந்த ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எனக்குத் தெரிந்த வரலாறு, நான் படித்த வரலாறு, மீண்டும் இந்த அவைக்கு சொல்கின்றேன். 1640 ஆம் ஆண்டுக்குமுன், பிரிட்டிஷ்காரர்கள் வருவதற்கு முன்பாக சென்னையைப் பொறுத்தவரையில் ஒரு small fishing hamlet, ஒரு மீனவக் கிராமம். இந்தக் கிராமத்தினுடைய தலைவன் மதரேசன். எனவே, அவனுடைய பெயரிலேதான் மதராஸ் வந்தது என்பது வரலாறு. எப்படி காலப்போக்கிலே Hamilton bridge என்பது 'அம்பட்டன் வாராவதி' ஆனதோ, அதேபோன்று அந்த வார்த்தைகள் திரிந்து மதராஸ் என்று ஆனது. இதைத்தான் நான் சொன்னேன். நீங்கள் வேண்டுமானால் வரலாற்றை எடுத்துப் பார்த்துவிட்டு, மறுப்பதானால் மறுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டு முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இருங்கள் (குறுக்கீடுகள்) திரு. மணி, இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உட்காருங்கள், (குறுக்கீடு) ஒரு கட்சியின் சார்பாகக் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள், அவ்வளவுதான்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ மக்களுடைய தலைவர்களுக்குப் பெருமையைச் சேர்ப்பதிலே எந்தவிதத் தவறும் அல்ல. மா. சிங்காரவேலு அவர்கள் பெயரிலேயே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் இருக்கிறது. அவர் ஒரு மீனவத் தலைவர்தான், மீனவக் குப்பத்திலேதான் பிறந்தவர். முதன் முதலில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. பழனிசாமி, பிரச்சினையைத் திசை திருப்பி எங்கேயோ கொண்டுபோகிறீர்கள். சட்டமுன்வடிவு தொடர்பாக உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனாலே இதற்கு சென்னைப் பல்கலைக்கழகம் என்ற பெயர் மாற்றம் வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். அதை இந்த அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தின் பெயர் தமிழ்நாடு என்று அப்படியே இருக்கிறது. மாநகரத்தின் பெயர் சென்னை என்று அப்படியே இருக்கிறது. ஆனால், இந்தப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை ஒரு மீனவர் தலைவரின் பெயரில் மதராஸ் என்று சொல்லப்படுவதை ஏன் ஆட்சேபிக்க வேண்டும்? மதராஸ் என்ற பெயர் ஒன்றும் கெட்டச் சொல் இல்லையே? அதில் எந்தத் தவறும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், பேசி முடித்து விடுங்கள், துரைமுருகன், உட்காருங்கள், (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) மணி, உட்காருங்கள். திரு. ராஜா, (குறுக்கீடுகள்) திரு. ராஜா, பேசுங்கள் (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை உட்காருங்கள், திரு. பழனிசாமி, பேசி முடித்துவிட்டீர்கள். (குறுக்கீடு) இல்லை, முடித்துவிட்டீர்கள், இல்லை, திரு. ராஜா, பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. மணி உட்காருங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். திரு. ராஜா, நீங்கள் பேசுங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், Point of order ஒன்றும் இல்லை. எந்த Point of order-ம் இல்லை. (குறுக்கீடுகள்) திரு. ராஜா, பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order ஒன்றும் இல்லை, உட்காருங்கள். Point of order இல்லை. என்ன சொல்லப்போகிறீர்கள் என்று தெரியும். திரு. பழனிசாமி, பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...





**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவக் குப்பத் தலைவரின் பெயரை மாண்புமிகு அம்மா அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு சூட்டியிருக்கிறார்கள். அதை நீங்கள் விரும்பவில்லையா?

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திசை திருப்புகிறீர்கள் சார், பிரச்சினையைத் திசை திருப்புகிறீர்கள் நீங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், யாராவது ஒருவர் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதம் எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராவது ஒருவர் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சபாநாயகரிடம் தெரிவிப்பது இதுதான். விவாதம், சென்னைப் பல்கலைக்கழகமா, University of Madras-ஆ என்பதுதான் இருக்கிற பிரச்சினை. ஆனால், இந்த விவாதம் வேறு எங்கோ போய்க்கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து இப்போது என்னவென்று கேட்டால் 1996-லே Act போட்டிருக்கிறார்கள். ஆனால், சென்னைப் பல்கலைக்கழகம் அதை மதிக்காமல் இருந்திருக்கிறது என்று தெரியவருகிறது. ஆனால், பெயர் மட்டும் வைத்திருக்கிறார்கள். பிறகு நாம் மட்டும் சென்னைப் பல்கலைக்கழகம் என்கிறோம். அவர்கள் letter pad-லே Madras University என்று வைத்திருக்கிறார்கள். Degree-யிலும் அதையே போட்டிருக்கிறார்கள். இப்படி ஒரு குழப்பம். ஆனால், ஒன்றை நான் கேட்கிறேன். இந்த மன்றம் போட்ட ஒரு Act-ஐ, pass பண்ணியதை,

உரிமையை, சட்டமன்றத்தை அல்லது சட்டத்தை — சட்டம், Act, அது சட்டமாகிவிட்டது. அந்தச் சட்டத்தை சென்னைப் பல்கலைக்கழகம் மதித்திருக்கவேண்டும், Madras University என்று அழைக்கப்படுவதை. ஆனால், மதிக்காமல் இருந்திருந்தால் அது தண்டனை. இன்றைக்கு ஒரு சிண்டிகேட் போட்டு அனுப்புகின்ற தீர்மானத்திற்கு இந்த மன்றம் அதற்குத் தலை வணங்கி அதற்கு நாம் approval கொடுப்போமானால் இந்த மன்றத்தினுடைய உரிமை பறிபோகும்.

பிற்பகல் 12–55

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய விருப்பம் என்ன என்பதை அறிந்து அதற்கேற்ப செயல்படுவதுதான் ஒரு அரசின் கடமை. ஆகவே, ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தை, அதில் ஒரு பகுதியை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று பல்கலைக்கழகம் கோரியிருக்கிறதே தவிர, அவர்களுக்கு இந்தச் சட்டமன்றமோ, இந்த அரசோ தலை வணங்குகிறது என்ற பொருள் கொள்ள முடியாது. அப்படிச் சொல்லுவது தவறு.

**திரு. துரைமுருகன்:** இந்த மன்றத்தில் போட்ட சட்டத்தை, நிறைவேற்றிய சட்டத்தை ஒரு அமைப்பு மதிக்காமல் இருக்குமானால், அந்த அமைப்பை ஏன் என்று கேட்பதற்கு நமக்கு உரிமை இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்தைச் சொல்லி முடித்துவிட்டீர்கள்.

**திரு. துரைமுருகன்:** ஆகையினால், எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இதில் இப்படிப்பட்ட குளறுபடி இருக்கின்ற காரணத்தால், இன்னும் சொல்லப்போனால் பெயர் மாற்றத்திற்குப் பிரச்சினை வருகின்ற காரணத்தால், முதலமைச்சர் அவர்கள்மீது நம்பிக்கை இருக்கிறது. எனவே, இந்த மசோதாவை வாபஸ் வாங்கிக் கொண்டு சென்னைப் பல்கலைக்கழகம் என்று இருக்கட்டும் என்று தைரியமாகச் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். நான் அதை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, சொல்லுங்கள். ராஜா, பேசி முடியுங்கள்.





**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட மசோதாவிலே Statement of Objects and Reasons–லே contradiction இருக்கிறது, முதல் வரிக்கும் இரண்டாவது வரிக்குமே. ஏனென்றால், முதல் வரியிலே, அதனால்தான் இவ்வளவு குழப்பம் என்று நான் நினைக்கிறேன். முதல் வரியிலே "The University of Madras was established in the year 1923. Consequent on the coming into force of the City of Madras (Alteration of Name) Act, 1996 (Tamil Nadu Act 28 of 1996), the name of the University of Madras has also been changed as 'University of Chennai'." அதை ஏற்கெனவே மாற்றிவிட்டதாக இந்த Statement of Objects and Reasons–லே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அடுத்த வரியிலேயே என்ன சொல்கிறார்கள் என்றால், மாற்றாதது மாதிரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "The Syndicate of the said University has passed a resolution requesting the Government to retain the name of University of Madras without any change." என்று. அப்படிப் பார்த்தால் முதல் வரியிலே 'has also been changed' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது வரியிலே அதை retain பண்ணவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆகவே, இதிலே யார் தமிழர் எது தமிழ் என்ற விவாதத்திற்குள் போகாமல் சென்னைப் பல்கலைக்கழகம் என்பது வழக்கிலேயே வந்துவிட்டது. அவர்களும் அதை பெயர்ப் பலகையிலே உபயோகப்படுத்துகிறார்கள். மக்களுக்கும் பழகிவிட்டது. 1996-லேயே மாற்றியிருக்க வேண்டும். மாற்றவில்லை என்றால் இதை சென்னைப் பல்கலைக்கழகம் என்றே மாற்றுவதற்கு மக்களிடம் பழகிப்போன வார்த்தையே இருக்க வேண்டும் என்று அதை நமது அரசாங்கம் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு வலியுறுத்த வேண்டும். எனவே, இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும் என பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2005 செப்டம்பர் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள் திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு எதிர்க் கட்சிகள் ஒட்டுமொத்தமாக ஒரு கோரிக்கை வைத்தும், அவற்றையெல்லாம் கொஞ்சம்கூட எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் ஒரு தவறான சட்டத்தை, தவறான மசோதாவை, தவறான வழியிலே கொண்டு வந்து, தவறாக வைத்து, தமிழுக்கு எதிராக நிறைவேற்றுகிற காரணத்தால் அதைக் கண்டிக்கின்ற வகையில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எங்களுடைய நியாயமான கோரிக்கையை ஏற்று இந்தச் சட்டமுன்வடிவைக் கைவிட்டு மீண்டும் சென்னைப் பல்கலைக்கழகம் என்ற பெயரிலே அழைக்கப்பட வேண்டுமென்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாத காரணத்தைக் கண்டித்து காங்கிரஸ் கட்சி வெளிநடப்புச் செய்கிறது.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மதராஸ் என்று இருந்த நகரத்தினுடைய பெயரை தமிழாக்கம் செய்ய வேண்டுமென்று சென்னையாக மாற்றி எல்லா நடவடிக்கைகளிலும் சென்னை என்று இருந்து கொண்டிருக்கிறது. இப்போது ஏதோ ஒரு சின்ன பிரச்சினைக்காக சென்னை என்று மாற்ற முடியாது பழைய பெயருக்கே அந்த ஆங்கில வார்த்தைக்கே செல்வோம் என்று சொல்லக்கூடிய இந்த நிலையிலே இருக்கக்கூடிய இந்த மசோதாவை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(திருமதி வி. சிவகாமி மற்றும் திரு. க. முருகவேல் ராஜன் தவிர இதர பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சென்னைப் பல்கலைக்கழகம் குறித்த மசோதாவைக் கண்டித்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வெளிநடப்புச் செய்கிறோம்.



2005 செப்டம்பர் 22]

(இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இந்த மசோதாவைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைக் கண்டித்து பாரதிய ஜனதா கட்சி வெளிநடப்புச் செய்கிறது.

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2005 செப்டம்பர் 22

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–00

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2005 செப்டம்பர் 22]

## (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2005). மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2005) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

---

@ 22-9-2005 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23-09-2005) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.





## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் விதிகளில் 349-B-வது விதியில் திருத்தம் செய்தது குறித்து உள் (போக்குவரத்து- III) துறையின் 6-1-2005 ஆம் நாளிட்ட 18 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 59/1988) 212 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

2. 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள் மற்றும் நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்கள் (தேர்தல்கள்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 11-5-2005 ஆம் நாளிட்ட 58 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

3. மேன்மை தங்கிய ஆற்காடு இளவரசருக்குச் சொந்தமான டிஎன் 01 A 4449 என்கிற பதிவு எண் கொண்ட மோட்டார் வண்டிக்கு 8-10-1997 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்பட்ட உள் துறையின் II (2)/உள்/1989/97 ஆம் எண் அறிவிக்கையில் அளிக்கப்பட்ட வரி விலக்கினை இரத்து செய்தும் மற்றும் அவரது சொந்த பயன்பாட்டில் இருக்க வேண்டும் என்கிற நிபந்தனைக்குட்பட்டு டிஎன் 07 AK 0786 (டயோட்டா கரோலா 2005 மாடல்) என்கிற பதிவு எண் கொண்ட மோட்டார் வண்டிக்கு செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தும் உள் (போக்குவரத்து-1) துறையின் 29-3-2005 ஆம் நாளிட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

4. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் அட்டவணையில் திருத்தம் செய்தது குறித்தும், 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளின் அட்டவணை II-ல் திருத்தம் செய்தது குறித்தும் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 8-2-2005 ஆம் நாளிட்ட 10 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1983 ஆம் ஆண்டு

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

5. 1–1–1997 முதற்கொண்டு, திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூர்-அமிர்தி வழித்தடத்தில் இயக்கப்படுகின்ற ட்டிஎன் 25A 0238 ஆம் பதிவெண் கொண்ட சிற்றுந்து மற்றும் அமிர்தி – போளூர் வழித்தடத்தில் இயக்கப்படுகின்ற ட்டிஎன் 29N 0011 ஆம் பதிவெண் கொண்ட சிற்றுந்து ஆகியவற்றுக்கு செலுத்தத்தக்க வரிவீதத்தை சிற்றுந்து ஒன்றுக்கு இருபத்தைந்து இருக்கைகளுக்கு வரி வசூலிக்கப்பட வேண்டும் என்கிற நிபந்தனைக்கு உட்பட்டு, காலாண்டுக்கு பயண இருக்கை ஒன்றுக்கு ரூ.40/–ஆக குறைத்தும், செலுத்தத்தக்க வரித் தொகைக்கு ஒரு காலாண்டுக்கு இருக்கை ஒன்றுக்கு மேல் வரியாக ரூ.10/–ம் விதித்தும், உள் (போக்குவரத்து–I) துறையின் 2–3–2005 ஆம் நாளிட்ட 178 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

6. கோயம்புத்தூர் மற்றும் சென்னையில் உள்ள தமிழ்நாடு விற்பனை மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் கூடுதல் நீதி உறுப்பினர்களை நியமனம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 9–5–2005 ஆம் நாளிட்ட (2D) 53 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

7. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் (தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் மன்றத்தவர் பதவியேற்பு அல்லது உறுதியேற்பு) விதிகள் வெளியிட்டது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 24–6–2005 ஆம் நாளிட்ட 92 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

8. நான்காம் விவர அட்டவணையில் வகை 2–ன்கீழ் ஒப்பந்தப் பயண அனுமதி பெற்றிருந்து, வாடகை அல்லது வெகுமதிக்குப் பயணிகளை ஏற்றிச் செல்கின்றதும், பதிவு செய்து கொண்ட



நாளிலிருந்து 7 ஆண்டு கால அளவை முடித்துள்ளதுமான ஆட்டோ ரிக்‌ஷாக்களால் செலுத்தத்தக்க பசுமை வரி வீதத்தை ரூ.500/–லிருந்து ரூ.200/– ஆக குறைத்தது குறித்து உள் (போக்குவரத்து–I) துறையின் 8–6–2005 ஆம் நாளிட்ட 461 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

9. மதுரையிலுள்ள, தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் (கூடுதல் அமர்வு) தீர்ப்பாயத்தில் கூடுதல் நீதி உறுப்பினர் நியமனம் செய்தது குறித்து வணிக வரிகள் (2D) துறையின் 27–5–2005 ஆம் நாளிட்ட 75 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

10. திருவாளர்கள் கிர்லோஸ்கர் ஆயில் இன்ஜின்ஸ் லிமிடெட், சென்னை மற்றும் டெக்ஸ்மோ இண்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர் ஆகிய நிறுவனங்கள் 19–3–1993 முதல் 31–3–1993 வரையிலான கால அளவில் விற்பனை செய்த 3 குதிரைத் திறன் மற்றும் 5 குதிரைத் திறன் கொண்ட பம்ப் செட்டுகளுக்குச் செலுத்தத்தக்க வரி, மேல்வரி, கூடுதல் மேல் வரி, கூடுதல் வரி ஆகிய வகையில் ரூ.4,28,338/–க்கான தொகையினை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் (2D) துறையின் 8–6–2005 ஆம் நாளிட்ட 80 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவு, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) பிரிவு மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

11. 13–1–1997 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழ் சிறப்பிதழின்** பாகம்–III-ல் வெளியிடப்பட்ட வணிக வரிகள் துறையின் SRO A-7 (a)/97 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்யும் மற்றும் 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்க ஊர்திகளின் நுழைவின் மீதான வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 17–3–2005 ஆம் நாளிட்ட 26 ஆம் எண் அரசாணையில்

வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்க ஊர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

12. விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், தியாகதுர்கம் அஞ்சல், திருவாளர்கள் தொழுநோய் மிஷன் டிரஸ்ட் இந்தியா, தொழுநோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு இலவசமாக விநியோகிப்பதற்காக அந்நோய் குறித்த துண்டறிக்கை, விளம்பர தட்டிகள் மற்றும் ஏனைய பொருட்களை அச்சடிப்பதற்காக வாங்கப்படும் பொருட்களின்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்து வணிக வரிகள் துறையின் 31-3-2005 ஆம் நாளிட்ட 36 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

13. வருவாய் (NC-III) துறையின் 31–12–2004 ஆம் நாளிட்ட அரசாணை எண் 581–ல் குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அதிகாரம் அளித்த அதிகாரிகளால் அல்லது இயக்குநர், மீன்வளத் துறை, சென்னை, ஆகியோரால் உரியவாறு சான்றளிக்கப்பட்ட வணிகர் இந்த அறிவிக்கையுடன் இணைக்கப்பட்ட படிவங்களில் உறுதிமொழி அளிப்பதற்கு உட்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களின்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்து வணிக வரிகள் துறையின் 1–4–2005 ஆம் நாளிட்ட 38 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

14. கோயம்புத்தூரிலுள்ள திருவாளர்கள் விஸ்வகர்மா பாரம்பரிய பொற்கொல்லர் தொழில் கூட்டுறவுச் சங்கத்தாரால் தயாரிக்கப்படும் தங்க நகைகளின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்து வணிக வரிகள் துறையின் 28–4–2005 ஆம் நாளிட்ட 53 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].





15. பொதுநலன் கருதி பாதுகாப்புப் பணியிலுள்ள பணியாளர்களுக்கு வழங்குவதற்காக கேன்டீன் ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்டுக்கு (Canteen Stores Department) விற்பனை செய்யப்படுவதற்காக யாதொரு உள்ளாட்சிப் பகுதிக்குள் கொண்டுவரப்படும் கார்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களுக்கு அவற்றின் விற்பனைமீது யாதொரு இறக்குமதியாளர் செலுத்தத்தக்க வரி முழுவதும் விலக்களித்து வணிக வரிகள் துறையின் 6–5–2005 ஆம் நாளிட்ட 55 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்க ஊர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

16. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்காக சென்னையில் ஸ்ரீ இராமகிருஷ்ணா மடத்திற்கும் மற்றும் அனுமந்தபுத்தேரியில் அமைந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷனுக்கும் கிரிவ்ஸ் மரைன் என்ஜின் பொருத்தப்பட்ட 102 ஃபைபர் கிளாஸ் படகுகள் விற்பனை மீது இந்த அறிவிக்கையில் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உறுதிமொழி அளிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரால் அதிகாரம் அளிக்கப்பெற்ற அதிகாரிகள் அல்லது சென்னையில் உள்ள மீன்வளத் துறை இயக்குநரால் சான்றளிக்கப்படுவதற்கு உட்பட்டு யாதொரு வணிகரும் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்து வணிக வரிகள் துறையின் 30–5–2005 ஆம் நாளிட்ட 64 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

17. 9–2–2005 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம்–II பிரிவு 1–ல் வெளியிடப்பட்ட வணிக வரித் துறையின் II (1)/வணிக வரி/8/2005 ஆம் எண் அறிவிக்கையினை இரத்து செய்தும் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு, திருவாளர்கள் சேஷமா மறுவாழ்வு பயிற்சி நிலையம் அளிக்கும் பயிற்சியின்போது தயாரிக்கப்படும் பொருட்களின் விற்பனைக்கு 1–4–2003 முதல் 31–3–2006 வரையிலான கால அளவிற்கு செலுத்தத்தக்க வரியினை விலக்களித்தும் வணிக வரிகள் துறையின் 15–6–2005 ஆம் நாளிட்ட 70 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

[2005 செப்டம்பர் 22

18. 2000–2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம)

19. 2001–2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

20. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

21. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1972 ஆம ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

22. 2001–2002 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் இருபத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2005)

2. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2005)

3. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2005)

4. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2005)



2005 செப்டம்பர் 22]

5. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2005)

6. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்பு பொருளாதார மண்டலங்கள் (தனி வகைமுறைகள்) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2005)

7. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2005)

8. மனுக்கள் குழுவின் நூற்றிப் பதினேழாவது அறிக்கை (2003–2006)

9. மனுக்கள் குழுவின் நூற்றிப் பதினெட்டாவது அறிக்கை (2003–2006)

10. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்தி ஒன்பதாவது அறிக்கை (2003–2006)

11. உடுக்குறியிடாத வினாக்கள் – விடைகள் பட்டியல் (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

12. உடுக்குறியிடாத வினாக்கள் – விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

13. உடுக்குறியிடாத வினாக்கள் – விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

D V 21, 31 P05 P05 . 84.2
தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 186283

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.